
# சுயம்வரம்

மீரா



# சுயம்வரம்

தொகுப்பு
கவிஞர் மீரா

அன்னம்
மனை எண்.1, நிர்மலா நகர்
தஞ்சாவூர் - 613 007

சுயம்வரம் / © தொகுப்பு : மீரா / முதற் பதிப்பு: 2001 / இரண்டாம் பதிப்பு: மே 2006 / வெளியீடு: அன்னம், மனை எண்:1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-7 / அச்சாக்கம்: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி / விலை: ரூ.90/-

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Suyamvaram |
| Subject | : | Anthology |
| Author | : | Meera |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition Dec. 2001<br>Second Edition May 2006 |
| Size of the Book | : | Demy 1x8 |
| Printing Point | : | 10 Pt. |
| Paper | : | 14.4 SPB Book Print |
| Number of Pages | : | 160 |
| Number of Copies | : | 1000 |
| Printers | : | Hemamala Syndicate, Sivakasi |
| Publishers | : | **ANNAM**<br>Plot No: 1, Nirmala Nagar<br>Thanjavur - 613 007 |
| Price | : | **Rs. 90/-** |

# பொருளடக்கம்


## முன்னுரை

| | | |
|---|---|---|
| | மீரா | 5 |

## குறுநாவல்

| | | |
|---|---|---|
| கைத்தடி கேட்ட நூறு கேள்விகள் | கோணங்கி | 9 |

## மேடைநாடகம்

| | | |
|---|---|---|
| வேதாளம் சொன்ன கதை | தி.சு.இளஞ்செழியன் | 36 |

## சிறுகதைகள்

| | | |
|---|---|---|
| தூக்கம் | கந்தர்வன் | 69 |
| சேதாரம் | தனுஷ்கோடி ராமசாமி | 77 |
| இமைகளுக்கு நடுவே முள் | ராம் | 89 |

## கட்டுரை

| | | |
|---|---|---|
| சார்ல் போதலேர் | முருகுசுந்தரம் | 96 |
| கதைப்பாடல்களும் துன்பியலும் | அ. மார்க்ஸ் | 106 |
| புதுக்கோட்டைப் புரட்சியாளன் வெங்கண்ணன் | மீ. மனோகரன் | 112 |
| புரட்சிக் கவிஞன் லாங்ஸ்டன் ஹியூஸ் | என். கலைதாசன் | 142 |

## மொழிபெயர்ப்புக் கவிதை

| | | |
|---|---|---|
| காதலுக்குப் பல முகங்கள் | ஷெலன் ஷெப்பீல்டு தமிழில்: தமிழ்நாடன் | 119 |

## பேட்டி

| | | |
|---|---|---|
| புதுக்கவிதைக்கு இசையமைக்க முடியுமா? -அப்துல் ரகுமானுடன் ஒரு பேட்டி: | ராஜகுமாரன் | 132 |

## கவிதை

| | | |
|---|---|---|
| ஏழு கவிதைகள் | அபி மற்றும் ஐந்து கவிஞர்கள் | 152 |

# முன்னுரை

ஒரே ஒரு வருடம் பத்து இதழ்களை வெளியிட்டுவிட்டு 'அன்னம்' ஓய்வெடுத்துக் கொண்டுவிட்டது.

பத்திரிகை நிறுத்தப்பட்ட பிறகு, தேர்ந்தெடுத்து வைத்திருந்த சில படைப்புகளைத் திருப்பி அனுப்ப மனம் வரவில்லை. அவற்றை நூலாகக் கொண்டு வரலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே 'சுயம்வரம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

ஒவ்வொரு இலக்கிய வகைக்கும் உதாரணமாக -- இலக்கணமாக அமையும் படைப்புகள் சுயம்வரத்தில் இடம் பெற்றுள்ளன.

தமிழில் தொகுப்பு நூல்கள் அபூர்வம்; ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு நகுலனின் முயற்சியால் வெளிவந்த ஒரு சிறந்த தொகுப்பு 'குருக்ஷேத்திரம்'. இப்போது வெளிவரும் இத் தொகுப்பு, எண்பதுகளின் தமிழ் இலக்கியப் போக்கை ஓரளவு அடையாளம் காட்டும் என்று நம்பலாம்.

☆

இத்தொகுப்பில் உள்ள ஒரே குறுநாவல் கோணங்கியின் 'கைத்தடி கேட்ட நூறு கேள்விகள்.'

கி.ராஜநாராயணனின் 'கிடை' போல் இதுவும் என்றென்றும் குறிப்பிட்டுச் சொல்லும்படி அமைந்த குறுநாவல். இதுவும் கரிசல் காட்டுக் கதைதான்.

குறுநாவல் என்றாலும் இதிலும் இரண்டு பாகங்கள். முதல்பாகம் கரிசல் பூமியை மண் வாசனையுடன் படைத்துக் காட்டுகிறது.

> 'நெஞ்சுத் தடத்தை ஊணி தம்பிடிச்சு உழுங்கடா....
> அதாண்டா உழவு'

என்று உழவுக்கு இலக்கணம் கண்ட சமுசாரி சாவன்னா என்ற சாமி நாயக்கர் 'ஒத்த மாட்டுக்கு சோடி தேடி' பேரன் வேலுவுடன் ஊர் ஊராய்ப் போவது அந்தக்காலத்து மன்னாதிமன்னர்களின் 'அசுவமேத' பாணியை நினைவுபடுத்துகிறது.

'மேழி புடிச்சு உழுதால் கலப்பை திணறும்'. அப்பேர்ப்பட்ட சாவன்னா விவசாயக் கடன்கட்ட முடியாமல் சம்மன், கோர்ட்டு, சிறை என்று அவலநிலைகளுக்கு ஆளாக நேர்கிறது.

இரண்டாம் பாகத்தில் சாவன்னாவின் சோக சித்திரம் மனத்தை அதிரச் செய்கிறது. சிறைச்சாலை அவரை எப்படி வாட்டி எடுத்திருக்கிறது என்பதை சிரிப்பில் மீறிவரும் இருமல் உணர்த்து கிறது. 'பழைய பெட்போர்டு' மோட்டாரைப் போல் பெரிய ஹுங் காரத்துடன் உருமி சளியைத் துப்பினார்' என்கிறார் ஆசிரியர்.

ஒரு சமுசாரியை குற்றவாளியாய், நோயாளியாய், பிச்சைக் காரனாய் ஆக்கும் புண்ணியத்தைச் செய்கிறது இந்த நாடு.

'சமுசாரிய பொதிமாடா போட்டு வசக்கி அடிக்கிது நாடு' என்று கோணங்கி விவசாயிகளைச் சுரண்டும் இந்தச் சமூக அமைப்பைச் சித்திரித்துக் காட்டுகிறார்.

தி.சு. இளஞ்செழியனின் 'வேதாளம் சொன்ன கதை' பெங்களூரில் மேடை பல ஏறிப் பரிசும் பாராட்டும் பெற்ற நாடகம். பஞ்ச லட்சணங்களைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியம் மாதிரி, இது லஞ்ச லட்சணங்களை ஒரு மருத்துவமனையைக் களமாக வைத்து அரங்கேற்றிக் காட்டுகிறது.

இன்றைய இந்தியாவை -- இன்றைய நெருக்கடியான வாழ்க்கை யைப் பிரதிபலித்துக் காட்டும் மேற்சொன்ன இரண்டு படைப்புகளும் இலக்கியம் என்பது வாழ்க்கையை முன் கூட்டிச் சொல்வது (Literature always anticipates life. It does not copy it; but it moulds it to its purpose) என்ற ஆஸ்கார் வைல்டின் கருத்தை நயமாய் வலியுறுத்துகின்றன.

இத்தொகுப்பில் மூன்று சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. கவிதை உலகத்தில் மட்டுமின்றிச் சிறுகதை உலகத்திலும் கவனத்துக் குரியவராக விளங்கும் கந்தர்வனின் 'தூக்கம்' நடுத்தர வர்க்கத்து இளைஞன் ஒருவனின் ஆகாசக் கோட்டைகள் சீட்டுக்கட்டு வீடாய்ச் சிதறுவதையும் அவன் இளம்வயதிலேயே 'தூக்கம்' இழந்து தவிப்பதையும் வருணிக்கிறது.

சோகம் கொட்டிடும் கவிதைகளே சிறந்த கவிதைகள் என்றான் ஷெல்லி. அது சிறுகதைக்கும் பொருந்தும் என்றால் தனுஷ்கோடி ராமசாமியின் 'சேதாரம்' ஒரு சிறந்த சிறுகதை.

பார்வைகளில் பனி மலர்களைக் கண்ட அவன்--அவள் இமைகளுக்கு நடுவே முள் ஏன் வந்தது என்பதை அழகாய் ராம் தீட்டிக் காட்டுகிறார்.

இதில் உள்ள கட்டுரைகளில் இரண்டு, பிரெஞ்சுப் புதுக்கவிஞர் போதலேர் பற்றியும் அமெரிக்கப் புரட்சிக் கவிஞர் லாங்ஸ்டன் ஹியூஸ் பற்றியும் அறிமுகம் செய்வன.

'சிலநேரங்களில் சில கவிஞர்கள்' என்ற தொடருக்காக கவிஞர் முருகுசுந்தரம் எழுதியது போதலேர் பற்றிய கட்டுரை. போதலேர் பரமனைப் பாடவில்லை; பாமரனைப் பாடியிருக்கிறார் ஏழை, குடிகாரன், பிச்சைக்காரன், விபச்சாரி, அபலை போன்றோர் அவரைக் கவர்ந்த பாத்திரங்கள். சர்ரியலிசம், சிம்பலிசம் போன்ற இஸங்களுக்கு போதலேரே ஊற்றுக்கண் என்கிறார் முருகுசுந்தரம். போதலேரின் சில கவிதைகளையும் இடையிடையே தமிழாக்கித் தந்திருக்கிறார். வெளிநாட்டு இலக்கிய மேதைகளை இப்படி எளிமையாகவும் சுவையாகவும் அறிமுகப்படுத்தினால் தமிழ்ப் படைப்புலகில் பல மாறுதல்கள் நிகழக்கூடும்.

அமெரிக்க நீக்ரோக் கவிஞர் லாங்ஸ்டன் ஹியூஸின் அறிமுகக் கட்டுரை உயிர்த்துடிப்புடன் எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் கலைதாசன் ஈடுபாட்டோடும் உணர்ச்சிப் பரவசத்தோடும் ஹியூஸ் கவிதைகளையும் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

கட்டபொம்மன் கதை, கான்சாகிபு சண்டை முதலிய நாட்டார் கதைப்பாடல்களில் உள்ள துன்பியல் ஆய்வு செய்கிறார் அ.மார்க்ஸ், 'கதைப்பாடல்களும் துன்பியலும்' என்னுங்கட்டுரையில். நிலவுடைமைக்கும் மேலாதிக்கத்துக்கும் எதிராக ஆங்காங்கே கிளர்ந்தெழுந்தவர்கள் வலிமை குறைந்தவராயினும் வரலாற்றுக் கடமையைச் செய்தவர்கள் என்று மதிக்கப்பெறுகிறார்கள்; அவர்கள் மரணங்களும் வீழ்ச்சிகளும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுத் துன்பியல் நிகழ்ச்சிகளாக அமைந்தன' என்னும் மார்க்ஸின் முடிவு ஒப்புக் கொள்ளக்கூடியது. இதனைக் கதைப்பாடல்களில் மட்டுமல்ல. வட்டார வரலாற்றிலும் காண முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது மீ. மனோகரனின் 'புதுக்கோட்டைப் புரட்சியாளன் வீர வெங்கண்ணன்' கட்டுரை. 'கிழவன் சேதுபதி', 'தென் அமெரிக்காவின் சோழர்கள்' என்னும் வரலாற்று நூல்களை எழுதிய பெருமைக்குரியவர் இக்கட்டுரையாசிரியர்.

இத்தொகுப்பில் உள்ள நெடுங்கவிதை 'காதலுக்குப் பல முகங்கள்' ஆகும். இதை எழுதியவர் ஹெலன் ஷெப்பீல்டு என்னும் அமெரிக்கப் பெண்மணி. அவரைப் பற்றிய வேறு விவரங்களைத் திரட்டித் தர மொழிபெயர்ப்பாளர் தமிழ்நாடன் முயன்று பார்த்தார். போதிய தகவல்கள் கிடைக்கவில்லை. கவிஞரைக் காட்டிலும் கவிதைதான் நமக்கு முக்கியம். ஒரு நல்ல கவிதை; பழமைக்கும் பழமையான காதலைப் பற்றிய நவீன கவிதை....

இதில் தமிழ்ப்புதுக்கவிதைகள் சில இடம் பெற்றுள்ளன. அபி இரண்டு கவிதைகளை எழுதியுள்ளார். தேர்ந்தெடுத்தும் கூட இன்னும் வெளியிட முடியாமல் கைவசம் பல கவிதைகள் உள்ளன.

1984-இல் மலேசிய-சிங்கப்பூர்ப் பயணம் மேற்கொண்டபோது கவிஞர் அப்துல் ரகுமான் மலேசிய இதழ் 'தமிழ்ஓசை'க்கு அளித்த பேட்டி இதில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. ரகுமான் எந்தத் தயக்கமும் இல்லாமல் சுதந்திரமாக கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ளார். பயனுள்ள பேட்டி.

☆

தமயந்திக்காக அன்று ஒரு 'சுயம்வரம்' ஏற்பாடு செய்யப்பட்டது; போலி நளன்களுக்கிடையில் உண்மை நளனை அடையாளம் கண்டு மாலையிட்டாள் தமயந்தி.

வாசகர்களே! இதோ உங்களுக்காக ஒரு 'சுயம்வரம்'. நல்ல எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்துத் தருகிறது அன்னம்; மாலையிட வாருங்கள்.

**மீரா.**

# கைத்தடி கேட்ட நூறு கேள்விகள்

## கோணங்கி

ஊருக்குமேல் வெம்பரப்பான அபாந்திரம். தெற்கில் சரிந்து கிடக்கும் நட்சத்திரங்கள். சரிந்த நட்சத்திரங்களைப் பார்த்து வருகிறார்கள் ஒவ்வொரு காலமும்.

நம்ம காடுகளைக் கடந்து போகும் பூமத்திய ரேகை விளிம்புகளில் நம்மூர் சமுசாரி இன்னும் மேழிபுடித்து உழுதுகொண்டிருக்கிறான். மண்ணை வகுந்து கொண்டுபோன கொழு எரிகிறது. மானம் பார்த்த ஆன்மா தகிக்கிறது. உழவு மாடுகள் மூக்கந்தண்டு வலிக்க வெக்கையைக் குடிக்கின்றன.

பூமத்திய ரேகைக் காடுகளில் வகை வகையான மண்வாசிகள். கருப்பு, கக்கரை, எரிசெவல்கள், தேரிகள்; போடுமண்கள் மேவி மேவி நிறங்கள் பகிர்ந்து குணங்கள் புதுசாகி புது மண்ணுகளை அம்மை ஈனுகிறாள்.

இங்கு தண்ணிக்குத் தண்ணி பிணக்கு. தனித் தனி குணங்களில் தண்ணி சீறும். நூறு நூறு குணங்கள். காடை, வரிக்குயில் ஆக்காண்டி, கருங்குருவி, முயல் தட்டும் வல்லயத்தான் பட்சிகள்; எப்பேர்ப்பட்டதையும் ஒரே அடியில் விழுத்தாட்டும். வெக்கையை வாங்கி வாங்கி மண்ணுக்கு வீரியம் கூடுது. பஞ்சம் வந்தாலும் தோத்துப் போக மாட்டான் சமுசாரி. மண்ணு கொடுத்த வைராக்கியம் அவனுக்கு. எதுக்கும் பணிய மாட்டான். கம்மஞ்சோறு தின்ன கொழுப்பு இன்னும் விடவில்லை. போர்க்காளை மாதிரி கொம்புகளை ஆட்டி ஆட்டிப் போகிறான். முட்டி விடுறது மாதிரி பாய்ச்சல் போடும் காளைகள். குருமலை சமுசாரி தெருவில் நடக்கும் போது எத்தினை திருக்கு முருக்கு....

அடேய்யப்பா.... குருமலை சமுசாரிகள் அப்படி கம்மஞ்சோத் தோட என்னத்தைச் சேத்து திங்கான்னே தெரியலை.... என்று திகைப்பு. அசலூர்க்காரன் அசந்து போயிட்டான்.

இருபது யானைகள் வரிசையாக நின்ற தோற்றத்தில் குருமலை படுத்துக் கிடக்கிறது. கிழக்காமல் நீட்டிக் கிடக்கிறது. காட்டு மரங்கள் அப்படி அரளிப்பு. மேகத்தை கொண்டுவரத் தெம்பில்லாமல் போன குருமலை நரி ஓடுகிறது மலையில். ரொம்ப நாளாக மலைப் பார்த்துக் கொண்டிருக்கிறது குருமலை. சமுசாரி ஓயாமல் மண்ணைக் கிண்டி களிமண்ணை அறுத்து கன்வுக் கோட்டைகளைக் கட்டி இடித்துப் போட்டுக் கொண்டிருக்கிறான். ஒன்னுக்கும் அடைபடாத பொந்து கள். மண்ணைவச்சு அடைச்சாலும் இன்னொருபக்கம் பொந்து புடுங்குது. ஓட்டைகளை அடைக்க முடியலை. குருமலையில் ஓடும் நரிகள் வாலைத்தூக்கித் தூக்கி ஊளையிட்டு சிரிக்கிறது. தந்திரகார நரிகள். மகசூலைக் கெடுக்கும் நரிகள். கடலைத் தோட்டத்துக்குள் குழி பறிக்கின்றன. அவுட் வெடிகள் இல்லாமல் நரிகள் சொன்ன படிக்கு வராது.

பட்டத்துப்பூமி. பட்டம் பிந்தினால் மகசூலைப் பார்க்க முடியாது. ஆவணி புரட்டாசியில் குப்பை சிதறி உழுதாகணும். நம்ம ஊர் காடுகளில் அருகெடுப்பு நடந்து கொண்டிருந்தது. கூட்டம் கூட்டமாய் ஆம்பளைகள். காட்டில் தலை தெறிக்க வெயில் போடுகிறது. நம்ம ஊர் ஆட்கள் ஆழிகள் மாதிரி பெரிய பெரிய லகுடுகள். கடும் மொரடுகள்... இந்த ஆட்கள் உசுரைக் கொடுக்க வேண்டியதிருக்கு.

வானத்தில் மின்னல் வெட்டக் காணோம். பெரிய்ய அபாந்திர மாக இருக்கு. மழை பேயிறமாதிரி தெரியலை. காலையில் அடுக்கடுக்காய் மேகங்கள். கோபுரம் கட்டிவிட்ட மாதிரி உயரம். அவ்வளவு உயரம். கொட்டிவிடுவதுபோல் தோன்றியது. மத்தியானம் வரைக்கும் காற்று உளறியது. ஒன்னுக்குமேல் ஒன்னு அமுக்குற மாதிரி இருக்கு மேகங்கள். நம்ம பெருசுகள் சீராட்டி வளர்த்த மேகங்கள் கருக் கூடுகிறது. மும்முரம் தடபுடல்.

'மேலெ கெடந்தா மேகம்.... கீழ கெடந்தா தண்ணி... நம்ம உயிர் தான மேகம்....' என்று சாமிநாயக்கர் சொன்னார். சாவன்னா பழுத்த பழம். சமுசாரித்தனத்தில் கூடுன கை. மேகங்களை உற்று உற்று செம்பட்டை பாஞ்ச கண்கள். ஆலமரத்துப் பச்சை இலைக் கூட்டம்

போல் கண்களில் ஈரம். வாடாத சிரிப்பு. மின்னல் பாய்ச்சலில் வாக்கு அடிக்கும். சாவன்னா மேழி புடிச்சு உழுதால் கலப்பை திணறும். சாவன்னா உழுது விதைச்சாத்தான் இந்த வருஷம் விளையும். முதல் விதைப்பை சாமிநாயக்கர்தான் ஆரம்பிச்சு வைக்கணும்.

விடியக் கருக்கலில் பணஏர் அமர்த்தி 'அடே... அய்யா... உழுது விடுங்கப்பா.... ஒத்தமாட்டுக்காரனை.... கொஞ்சம்... கவனிச்சு... பாருங்கப்பா... என்றார். திம்முரெட்டி பேரம் பேசினான். முடியாது முடியாதென்று மண்டையை உலுப்பினான். உதட்டைப் பிதுக்கினான்.

'என்னப்பா அநியாயமா இருக்கு... இருக்கிறது ஒன்றை ஏக்கர். தேக்கங்குச்சிய வச்சு சீச்சிக்கிட்டு போறதுக்கு முப்பது ரூவாயா... பத்து வருஷத்து தீர்வை போட்டுரலா மேப்பா...' என்று வாயைத் திறந்தார் சாமிநாயக்கர்.

பனைமரங்களுக்கு இடுவலில் ஏர்க்கலப்பை நகர்ந்து கொண்டிருந்தது. ஓலைகள் சரசரத்தன. மே காத்து தரையை உரசியது. பனை உச்சியில்' சூரியன் ஆடிக்கொண்டிருந்தான். புஞ்சைக்குள் பச்சை லங்கோடு அசைந்தது.

உழவு மாடுகள் மூக்கந்தண்டு வலிக்க உழைத்து, நுங்கு நுரைதள்ளி நூல் நூலாய் வடிகிறது எச்சில். மாட்டை நிறுத்தி தடவிக் கொடுத்தான் திம்முரெட்டி.

சாமிநாயக்கர் குடைக் கம்போடு வந்து கொண்டிருந்தார்.

'என்னப்பா... திம்முரெட்டி... என்னப்பா இது... நடக்கமாட்டாத மாட்டுக்கு முப்பது ரூவா கேக்கயே. நான் எங்க போயி முட்ட...'

'அட என்ன பெருசு... ஊரான் மாட்டை பல்லப்புடிச்சு பாப்பயோ...' என்று மூக்கை சினந்தான் திம்முரெட்டி. எலே கொண்டாலே மாட்டெ. கூறுகெட்ட பிலே.'

'என்னலே இது உழவு. மாடு மோண்ட மாதிரி. எலே திம்முரெட்டி மேழிய இப்பிடி புடி... இப்பிடி புடி.... அழுத்திப் புடிலே...'

'நெஞ்சுத் தடத்தை ஊணி தம்பிடிச்சு உழுங்கடா... அதாண்ட உழவு. கருப்பக் காட்டத்தான உழுரீக. புடிச்சு மோளத் தெரியாத பயல்லாம் மேழி சுத்த வந்திட்டாம் பாரு...'

சாமிநாயக்கர் நெஞ்சு வலுவை எல்லாம் மேழியில் செலுத்தி மூச்சு விட்டு மூச்சுவிட்டு உழுதார். மண்ணை வகுத்துக் கொண்டுபோன கொளுமுனையில் திம்முரெட்டியின் கவனம்.

மண்ணாங்கட்டிகளை மிதித்து ஏறிக்கொண்டு தார்ப்பாச்சலுடன் போய்க் கொண்டிருந்தார் சாமிநாயக்கர். கலப்பை கிர்ர்ர்ர்ர் முர்ர்ர்ர்ர் ரென்று சாமிநாயக்கரை கண்டு மிரண்டது.

இந்த வருஷம் தரிசுபோடாமல் விதச்சாச்சு. நாத்து விதைச்சிருக்கு. நாத்துச் சோளம். விதைச்சது அரைப்பயிரு முளைச்சிருக்கு. வெயில் முருகி அடிக்கிறது. பச்சப்புள்ளை மாதிரி பயிரு. நுனிகருகி வெயிலில் கத்துகிறது. இலை உதிர்த்த மரங்கள் தளுத்து வருகிறது. காலத்தில் விழுந்த ஒரு மழைக்கு செத்துக்கிடந்த காடு அரும்பு கட்டி பச்சை பொங்கி நிற்கிறது. செல்லக்குருவிகள் ஏகமாய் கொண்டாடித் திரிகின்றன.

பச்சையைக்கண்டதும் நாலுகால் பட்ட உருப்படிகள் வாட்டம் இல்லாமல் குளுந்தமாதிரி மேய்ச்சல்போடுகிறது. வாலை ஆட்டி ஆட்டி துள்ளல் போடும் கன்னுக்குட்டி.

வெயில் ஏற ஏற வாட்டம் கொடுத்திடும். எங்கும் கருகல் வாடை-காடு கருகுவது வாயில்லா சீவன்களுக்கெல்லாம் வருத்தம். பச்சை காஞ்சு வருகிறது. சீவராசிகள் கண்ணுகளுக்கு காடெங்கும் உயிர் வாதையாய் இருக்கு. அனேக காடுகள் அவிஞ்சு கிடக்கு.

வருஷத்துக்கு வருஷம் அடியில் நீரோட்டம் மாறுகிறது. அடியில் வெக்கை பொங்கி, வேகிறது. பாளம் பாளமாய் வெடிப்பு. கருப்பு ஆன்மா வேனாத வெயிலில் அண்ணாந்த நிலையில் ஆழ்ந்து கிடக்கு. உடைமரங்கள் தலைவிரித்து முள்ளு முள்ளாய் மூளிக்கோலம் கொண்டு நிற்கிறது. மூளி மரங்களை வெட்டி வெட்டிக் காட்டுக்குள் கரிமூட்டம் யாவாரம் நடக்கு. காட்டுக்குள் பெரிய்ய விட்டத் தராசுகள் கையை விரித்து பாவ புண்ணியம் பாராமல் சமுசாரிகளுக்கு படி அளந்து கொண்டிருக்கிறது. தராசு வைத்து நிறுத்தல் போடும் காடுகளாகிவிட்டன. புகை மண்டுகிறது. மூச்சுவிட முடியாமல் திணறுகிறது. குருமலையில் இருக்கும் இருபது யானைகளை ஏலத்துக்கு விட்டது போல், அரளிப்பாய் இருந்த காட்டு மரங்கள் வஞ்சம் தீர்க்கப்பட்டு, வெட்ட வெளியாய் மலை கிடக்கிறது. எரிக்கலை முளைச்சுக் கிடக்கு. குத்துக் குத்தாய் முள்ளுச் செடிகள்

விளெஞ்ச காடுகளில் தளுத்து வருகிறது. ஒரு நாளைக்கு ஒரு நாள் சமுசாரி தொந்தி வாடுகிறது.

சாமிநாயக்கர் இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, ஊத்துக் கிடங்கில் முங்கி முங்கிக் குளித்தார். செல்லமாய் வளர்த்த வீட்டுக் காளையை தண்ணிக்குள் முங்கவைத்து, வைக்கோலை கொண்டு மாறி மாறித் தேய்க்கிறார். இடுப்புத் துண்டை அவுத்து குளித்த மாட்டை துவட்டி விட்டு 'என்ன மாதிரி ஆயிட்ட.... இப்டி எலும்பும் தோலுமா ஆயிப்போனயே... உன்ன எப்டி வச்சு காப்பாத்தப் போரனோ... என்று கழுத்தை கட்டிக்கொண்டு கொஞ்சினார். மாடு வரண்டு சூம்பிய முகத்தை நீட்டிப் பார்த்தது அவரை.

குத்துக் குத்தாய் முள்ளுச்செடிகள். மாடு வாய்வைக்க முடியாமல் முள்ளுகள். மார் மாராக முள்ளுக்காடு. முதுகைக் கிழிக்கிறது. நோஞ்ச மாட்டோடு காடெல்லாம் சுற்றி வந்தார் சாவன்னா. காஞ்ச கரடு ஏதாவது கிடைக்குமா இங்கு. வெயில் முறுகி முறுகி மண்ணில் ஈரம் செத்துக் கொண்டிருக்கிறது.

நாலு திசைகளில் எங்கு ஓடினாலும் குத்துச் செடியின் நிழலைக் கூட காணவில்லை. நடுக்காட்டில் தாகத்தால் அண்ணாந்து கத்தும் மாட்டின் வரண்ட குரல். காட்டு ஓடைகளில் அக்கினி ஓடையாய் அனல் உருண்டு ஓடுகிறது. மாட்டின் தாகக்குரல்கள் வெயிலின் மீது கதறுகின்றன.

மாடு உயிர் செத்து உறங்கி உறங்கி நடக்கிறது. மாடு துள்ளாமல் சமுசாரி உயிர் வச்சு இருக்க மாட்டான்.

முந்தி அப்படி இல்லை. வாட்டமில்லாமல் பால் குடித்தான் சமுசாரி. புது மாட்டோடு மனசுவிட்டு பேசியபடி சாமிநாயக்கர் கமலை இரைத்துக் கொண்டிருந்தார். வடக்கயறு க்கீய்ய்ய்ய்ய் யென்று வளைந்து அழுதது.

தோட்டத்தில் சோளம் கதிர்வாங்கி இருக்கு. குண்டு குண்டாய் கதிரு. சாமிநாயக்கர் தோட்டத்தில் கல்லுப்போல இருக்கு கதிரு. காற்று சுழித்து சுழித்து கதிரை அசைக்கிது. தோட்டத்து கடவுவழியே போன வேல்தேவன் பாளை அருவாளை வைத்து தீட்டிக் கொண்டிருந்தான்.

என்ன தாத்தா இது சோளக் கருதா.... என்று அருவாளை வைத்து ரெண்டு கதிரை சீவினான்.

சாவன்னா கமலையில் இருந்து கத்தினார். 'என்னடா... அருவாள வச்சு பதம்பாக்க... கோட்டிப்பயலே... கல்லா இருக்குன்னு பாத்தியா... நம்ம கருது ஆள மெரட்டுமுடா.'

'தாத்தா நீயி ஒன்னுன்னா ரெண்டும்பியே'

'போடா...போ... நம்ம தோட்டத்து கரம்பை போட்ட போடு பாத்துக்க. சிந்தாம தின்னு....'

பொக்கை ஊதி பால் சோளத்தை கடவாயில் ஏவியபடி நடந்து போகிறான் வேலு.

நம்ம கெழட்டு எளவு என்னமாதிரியா துள்ளுது... எளவட்டப் புள்ள மாதிரி...

திகைப்புடன் பனங்காட்டை பார்த்துப் போனான் வேல்தேவன்.

சோளப் பயிரு இடுப்புக்கு மேல் வளந்திட்டா அதுக்கு ஒரு துள்ளு துள்ளுவார் சாவன்னா. ரெண்டுச்சாண் வளர்ந்த மாதிரி சோள நாத்துக்குள் எக்கி எக்கி நடந்தார்.

தங்கமான தோட்டம். பயிர் பச்சைகள் கண்ணுக்கு குளிர்ச்சி தருது. கண்ணில் ஈரம் எப்பவும் வாடாமல் இரக்கம் கசியுது. பயிர் பச்சை செடி கொடி எல்லாம் மனசுவிட்டு தளுக்கும். சாவன்னா வீட்டுப் பந்தலில் கெங்கம்மா மனசு போல அவரைக்கொடி ஊர் சுற்றிப் படரும்.

காடி வண்டிக்கு நாலு வண்டி சோளம் விளைச்சல் ஆகி அடுக்கி இருக்கு வீட்டில்.

யாருக்கும் இல்லை என்று சொல்லாமல் ஆறுபடி சோளத்தை அளந்து கொடுப்பாள் கெங்கம்மா. வள்ளிக்குளத்து வம்சம். ராவணக் கோட்டை மாதிரி வாழ்ந்த வீட்டில் பிறந்தவள். தானிய மூடைகளுக்கு நடுவில் குத்துவிளக்காய் எரிகிறாள் கெங்கம்மா. மதகிரி கட்டில்ல கொர்ர்ர் கொர்ர்ர் ரென்று குறட்டை போட்டு உறங்குகிறாள் கெங்கம்மா. களங்கமில்லாத உறக்கம்.

ஒ கெங்கம்மா... கெங்கம்மா ரெய்யி... என்று கெங்கம்மாளை உசுப்பி ரகசியமாய் கூப்பிட்டு வீட்டுக் கூரையில் செல்லக் குருவிகள் சலம்புவதைக் காட்டி கெக்கே.... கெக்கே... என்று வெத்தலை எச்சி மூஞ்சியில் தெறிக்க கொஞ்சுகிறார் கெங்கம்மாளை.

அட.... கெழட்டு எழவே... உனக்கு இதுவேற கேக்கா... கேக்குங் கேக்கும்... மென்று எடக்குப் பண்ணுகிறாள். தள்ளிவிட்டு கிச்சணங் காட்டி உருட்டினாள்.

ஓ கெங்கம்மா... ஓ கெங்கம்மா.... விட்ரு... விட்டுரு... மூச்சுத் திணறியது. உருண்டு உருண்டு சிரித்தார்.

'நல்லாத்தான் கொஞ்சுரயா கொணந்தானா...' என்று பெருமூச்சு விட்டாள் கெங்கம்மாபாட்டி.

வீட்டுக்குள் எப்போதும் குருவி தின்னத் தானியம் சிந்திக் கிடக்கும். கெங்கம்மாளுக்குத் தெரியாமல் சக்கிலியக்குடி ஆட்களுக்கு சோளத்தை பெட்டியில் அள்ளிக் கொடுத்து... 'ஏலே... சம்மதம் தானலே. திருப்பி என்னக்கி கொண்டாரயோ.... சாமிநாயக்கன் வீடுதேடி கொண்டாலே.'

வேலு திருனையில் தூணைப்பிடித்துக்கொண்டு நின்றான். 'கோட்டி எளவுகளா உலகம் போற போக்கு தெரியலை. எம்புட்டு ஈகெ. கெழட்டு எளவுகளுக்கு தாணியத்த பூட்டி வக்க முடியல. சட்டி எடுக்கத்தான் போரெ. கெழவா....

வேலுத்தேவன் வாக்கு அரட்டியது.

'அடே.... சிருக்கி மகனே... என்னடா... உனக்கு... அருவாளக் காமிச்சிக்கிட்டே.... திரி.... சொன்னா கேப்பயா. எனக்கு புத்தி சொல்ல வந்திட்ட'.

'தாத்தா நீயிதானெ சொன்ன... கமலைத்தோட்டத்த எம்பேர்ல எழுதி வக்யப்போரேன்னு... நீ சொன்ன...' மண்டையை சிலுப்பிக் கொண்டு கூறாய் பேசினான்.

'என்னடா நீயி... நான் ஒன்று கேட்டா நீ ஒன்னு கேக்க..., அடே அய்யா... காயம் உள்ள வரைக்கும் தானலே ஆட்டம் பாட்டம் எல்லாம். போகும் போது என்னத்தலே அள்ளிட்டு போகப்போரெ. இல்லாததுக என்னடா செய்யும்.... வேலு.... இருக்கப்போயித்தான கொடுத்தேன்.'

வேலு கரண்டு போய் முழித்தான். 'தாத்தா பெரிய்ய கர்ண பரம்பரை மாதிரி பேசுரயே... என்ன கெதிக்க ஆகப் போரயோ!' தலையில் அடித்துக் கொண்டான் வேலு.

'பய எப்பிடி பேசுரான். எம்புட்டு லாயக்கா பேசுரான். மொளச்சி இலை விட முந்தி இந்த வரத்து வாரானே...'

சாவன்னா கையை நீட்டி அவனைப் பிடிக்க ஓடிவந்தார். வேலு வீட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். சாவன்னா வீட்டுக்குள் செல்லக் குருவிகள் சலம்புகின்றன. வீட்டை சுற்றி ஒன்னை ஒன்னு புர்ர்ர்ர்ர் ரென்று விரட்டுகின்றன.

சாவன்னாவுக்கு மாட்டை கண்டால் விழுந்து விழுந்து கொஞ்சணும். மாட்டுக்குப் பிரியம். வண்டியோட்டப் பிரியம்.

கம்புக்கூட்டில் குடையை மடக்கிப் பிடித்தபடி மாடுபிடிக்கப் போனார் சாமிநாயக்கர்.

'அடே ராசா... ங்கப்பா... என் வலது கை பெலம் நீ தாண்டா வேலு... சாதி மறவன்னாலும் சாமிநாயக்கன் பேரன்தான்டா நீயி. வாடா போவம். கழுகு மலை சந்தைக்கி...' என்று வேலுத்தேவன் தோளில் கையை போட்டுக்கொண்டு புறப்பட்டார். ஊடுகாட்டுப் பாதைகளில் தாத்தாவும் பேரனும் செல்லம் கொஞ்சிக் கொஞ்சி உருகினார்கள்.

ஊர் ஊரா போய் ஒத்தை மாட்டுக்கு சோடி தேடினார்கள். எங்கயும் அகப்படலை. ஊரான் மாட்டை எல்லாம் பல்லைப்புடிச்சுப் பார்த்தான் வேலுத்தேவன். 'என்னடா... முதுகுப்பூசை வேணுமா... அடவேலு... உன் மண்டக் கிரித்திரியத்த கொஞ்சம் மடக்கி வையிடா....' என்றார்.

மாட்டுக் கழுத்தை தடவிதடவி முகத்தோடு முகம் உரசி. 'சாதுக்குணம் தானா... நீயி...' என்று மாட்டுக் காதைக் கடித்தார். மாடு தலையை ஆட்டியது.

மாட்டுத் தரகன் பழுப்புநிறக் குடைக்குள் அருவாளும் கையுமாக வந்தான். வெத்தலையத் தடவித் தடவி சாமிநாயக்கரை வளைச்சுப் பிடித்தான்.

சாவன்னா பல ஊர் தண்ணி கண்ட கை. களிமண்ணா வழுக்கும் குணம். கடோர்க் கொம்பன். சுழி மாட்டக் கண்டதும் ஓடி ஒளிந்தார் சாவன்னா. எதற்கும் நம்ம வேலு இருக்கான். சமய சந்தர்ப்பத்துக்கு கையில் அருவாளை வைத்திருக்கான். அவனைக் கிண்டினார்.

'அட.... வேலு.... நல்லதுக்காலே... இப்பிடி... இரும்பைத் தூக்கிக்கிட்டு திரியிதே... நாஞ் சொல்ரன் கேளுடா....'

'தாத்தா உஞ்சோலி மயிரப்பாரு... சங்கிலி மகன் அருவா வேலு தான் நானு... வம்பு வந்தா பெறகு பாரு... தாத்தா...' என்று தலையை சாய்த்து ஆட்டினான்.

'போடு சக்கே... பெரிய்ய கொம்பன் பாரு... இந்த வயசிலயே... இப்பிடி மொளச்சிருக்க... வம்பா சீரழியப்போர பாரு....'

அவன் காதைப் பிடித்துத் திருகினார் சாவன்னா. வேல்தேவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

தாத்தா உங்கோளாறு... தெரியாதுண்ணு பாத்தியா... நான்சாமி நாயக்கரு பேரனாக்கும்...

சாவன்னா அவனைத் தலையோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். வேலு இடுப்பில் அருவாள் பளபளத்தது.

'அட வேலுத்தேவா மாடு என்னடா சொல்லுது... அந்தா பாருடா.. வடக்குத்திமாடுகள் எவ்வளவு சைசா, தலைய ஆட்டுது. காலில் கயிறு விழுந்தா தலையக்குனிஞ்சு... மெதுவா காலத்தூக்கி ஆளைக்கூப்பிடுது பாரு....'

ரெண்டு பேரும் ஒத்தை மாட்டை பிடித்துக்கொண்டு வந்தார்கள். சரியான போர்க்காளை.

'ஒன்னு மட்டும் தெரிஞ்சுக்கோ, நம்ம பெழப்பு நாறிக்கிடந்தாலும் மாடு வச்சு பிழைக்காதவன் என்னடா சமுசாரி.' வேலு மாடுமாதிரி தலையை உருட்டினான்.

'மாடுகளோட பந்தம் வேணும். பேச்சுத் துணைக்கு மாடு இல்லாட்டி மண்ணுல போயி முட்டவேண்டியதான் என்ன நாஞ்சொல்ரது.'

'சரிசரி.... நீ சொன்னா மெதமாவா இருக்கும்...' வேலு நமட்டுச் சிரிப்புடன் மாட்டுக்குப் பின்னால் நடந்தான். பக்கத்து ஊர்களில் தண்ணி வாங்கி குடித்தார்கள். அந்த ஊர் சம்சாரி முகத்தில் அருள் அத்துப் போய்க்கிடந்தான்.

'ஊருக்குள்ள சாராயம் கிடைக்குமா...' என்று சாடைமாடையாகக் கேட்டான் வேலு.

'எலே தடிப்பிலே... உன் அருவாள்தான் பதம்னு பாத்தியா. சும்மா இருக்க மாட்ட. மொளங்கைய ஒடிக்கப்போரன்பாரு... உன்ன. அவனே சாவாரச் செத்துகெடக்கான்... எடக்கு பண்ணுரயாடா...'

வேலு முகத்தை திருப்பிக் கொண்டு மாட்டு முதுகுக்குப் பின்னால் நின்றான்.

மாட்டை சுத்தி கூட்டம் கூடியது. ரெண்டு இடுப்பு ஒடிந்த சமுசாரிகள் பெறங்கையை கட்டிக்கொண்டு குனிந்து உற்றுப் பார்த்தார்கள் மாட்டை.

அவர்கள் முதுகைதட்டி 'என்னய்யா நீங்க சம்சாரி தானா... ஊக்கமா... இருங்க... என்ன குடி மூழிப்போச்சுன்னு... மனசு லொங்கு ரீக, சுதாரிப்பா இருங்கையா... என்றார் சாவன்னா..

ஒரே சிரிப்பாணிக்கூத்து. கூட்டம் வயிறு வலிக்கச் சிரித்தது.

'சாமிநாயக்கர் புடிச்ச மாட்டுக்கு கொப்புக்கட்டு என்ன சைசு... அடேயப்பா... கிளிக்கொம்பு.... என்னமா கொம்ப ஆட்டுது பாரு... கூட்டம் உருகியது. அந்த ஊர் சம்சாரி இன்னும் கொம்புக் கட்டை பார்த்து மயங்கிக்கிடக்கிறான். சாவன்னா விழுந்து விழுந்து சிரித்தார். மாடு கொம்பை ஆட்டி ஆட்டி மயக்கியது. வேல்தேவன் மாட்டை பத்திக் கொண்டு போகிறான். சாவன்னா குடைக்கம்புடன் பின் தொடர்ந்தார். ஊரின் எல்லைக்கு அப்பால் கதிரடிக்கிற பொட்டைக் களத்தின் விளிம்புகளுக்கு அடியில் நாயக்கமார்கள் காலடியில் விழுந்து கிடக்கிறது சக்கிலியக்குடி. கம்மந்தட்டை நெரசலுக்குள் புஸ்பவதியான சக்கிலியப்புள்ளை ஈஸ்வரியின் தலை தெரிகிறது. சண்முகம் மகள் ஈஸ்வரிக்கு சடங்கு வைபோகம்.

ஆட்டக்காரன் சண்முகம் சாராய நெடி பறக்க ஊதுற நாயணத்தில் ஊரில் இல்லாத சங்கீதம் கணைக்கிறது. துவைக்கிற கல்லுக்கடியில் சங்கீத மிசைக்கும் தவளைக்கு இணையாக நாயனகாரன் சண்முகத்தின் நாயனம் நூறு நூறு காலமாகி நாதம் ஏறி ஏறிச் சுற்றுகிறது. பச்சைக்கொடி ஈசுவரிப்புள்ளை மனசு தாங்கி வாத்தியம் விம்முகிறது.

களைக்குப்போகிற சக்கிலியப் பொம்பளைகள் காட்டுக்குப் போகவில்லை. சாதிகெட்ட சனங்களுக்கு கொண்டாட்டம். ஈசுவரியைச் சுற்றி கூட்டம்.

'சக்கிலியப் புள்ளை சமஞ்சிட்டாளா.... போடு சக்கே...' என்று நாயக்கமார் கூட்டம் எளக்காரமாய் சிரிக்கிறது.

வேலுத்தேவன் சக்கிலியக் குடியை சுத்தி சுத்தி வருகிறான். 'நம்ம ஈசுவரியா.... பொண்ணு என்னமா.... அரச்ச மஞ்சளா இருக்கு... அம்மா... தாய்மாருகளா.... நல்லா குலவை போடுங்க...' என்று வேலுத்தேவன் சாடையாய் சிரிக்கிறான். கூட்டம் குலவை போட்டு ஆராத்தி எடுக்கிறது.

அருவா வேலு கொட்டுக்குத் தக்கபடி தாளம் போட்டு நடந்து போகிறான்.

'அடேய் வேலுப்பயலே.... அங்க என்னலே... சோலி... கிறுக்குப்பய மாதிரி.... ஊட கூடி நொளையிரே, பொம்பளைக இருக்குற எடத்தில் உனக்கென்னடா வந்தது... வாடா இங்க...

சாவன்னா ஆலமரத்தடியில் நின்று கூப்பிட்டார். வேலு வருகிறான் அருவாளை வீசிக்கொண்டு.

'மண்டக் கிருத்திரியம் புடிச்சபயலா இருக்கானே... நம்மபய...' என்று முனங்கியபடி சாவன்னா வாசிப்பை கேட்டுக் கொண்டிருந்தார்.

கொட்டுமேளம் உருண்டு உருண்டு காதுச்சவ்வு கிழிய அரட்டுகிறது. ஜனங்கள் கூடி நிற்கிறார்கள்.

'நாயணம் வாசிப்பு என்ன மாதிரியா இருக்கு. ஆட்டக்காரஞ் சம்முகம் கூடுன ஆளா இருப்பான் போலருக்கு. அவன் புண்ணியமா மழை எரங்காதா....' என்று சாவன்னா கண் பட்டைக்கு மேல் கையை கூட்டி வைத்து மேகத்தைப் பார்த்தார்.

மேகம் மங்கலாய் இருந்தது. கண்பத்தலை. ரொம்ப நாள் பழகிய மேகங்கள். ஆலமரத்தை முட்டுவது போல இருக்கு. மோடங்கள் கீழ கொட்டிவிடுவது மாதிரி கூட்டம் கூட்டமாய் கர்ப்பமாய் இருக்கு.

'குருமலையில் மழை எறங்கிட்டது...' பாரு... என்று சாவன்னா கூவினார். தடவுட தடவுட தடவுட என்று கொட்டுக்காரனின் சத்தத்துடன் இடி உருண்டது. வானத்துக்கும் தரைக்குமாக ஏங்கி ஏங்கி நாயணம் தவிக்கிறது. சண்முகம் எடுத்து ஊதுகிறான். மழை எறங்கு எறங்கு... எறங்கிரு... எறங்கிரு... என்று உருமியில் தேய்ப்பு விம்முகிறது.

அனாதி மழைக்கு குறி உண்டாவது போல நாயணத்தில் தவளைகளின் வாத்தியம் திரண்டு திரண்டு உயருகிறது. ஆல மரத்து இலைக் கூட்டம் சரசரக்கிறது. மரங்களில் உரசல். பேயாட்டம் போடுகிறது மரங்கள்.

உப்பாங்காத்து அடித்து வீசி மோடங்கள் பரிப்போல சிதறி ஓடுகிறது. மூலைக்கி ரெண்டு தெளித்தது. மேகம் ஏமாத்துது. படுத்துவிட்டது மேகங்கள்.

மேகங்களை எழுப்ப வேண்டும். மண்ணை எழுப்பி அடிக்க வேண்டும். அவ்வளவு தெம்பு இருந்தது. ஊக்கம் இருந்தது. இன்னைக்கு அப்படி இல்லை.

☆

சாமிநாயக்கர் இன்னும் ஆலமரத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

துணைக்கு யாரும் இல்லாத அனாதையைப்போல் தோன்றிய ஆலமரத்தின் ஆழ்ந்த துயரத்துடன், விழுதுகளில் சாய்ந்த இருள் கவிந்து வருவதைப் பார்த்து நிற்கிறார்.

சாவன்னாவுக்கு நாதியில்லை. ஒண்டிக்கட்டை. பத்து ஏக்கர் புஞ்சையை பொறிச்சு வாயில போட்டாச்சு. இருப்பது ஒன்றரை ஏக்கர். செல்லமாய் வளர்ந்த மாடுகள் கண்தெரியாத தூரத்துக்குப் போய்விட்டன. சொந்த கலப்பை உறங்குகிறது. திரேதாயுகத்துக் கலப்பைகள் தொழுவில் சாத்தி இருக்கிறது. கலப்பைகள் மூச்சுத் திணறும், கிர்ர்ர்ர்ர் முர்ர்ர்ர்ர் ரென்ற அவல ஒலிகள். சமுசாரிகள் அழுத்து உறங்குகிறார்கள். நிச்சலனமான ராத்திரி மரங்களில் காற்று உரசுகிறது, இலைகளின் முனங்களுடன்.

சாமிநாயக்கர் புரண்டு புரண்டு படுத்தார். திருனையில் கெங்கம்மாளோடு படுத்துக் கிடந்த ஞாபகங்கள், கோலாகல வாழ்வைவிட்டு மறைந்துபோன கெங்கம்மா.

கெங்கம்மா இருந்தசமயம், குருமலை தடுத்து இறக்கிய ராத்திரி மோடங்கள். அடமழை கொட்டிய ஈரநாட்களில் சாம்பல் பழுப்பான இரவு. தரை எல்லாம் நீரூத்து அடித்தது. பொத்திக்கொள்ள போர்வை இல்லை. உழுதுவிதைத்த மண்ணுடன் கெங்கம்மாளை ஈண்டிக் கிடந்த மங்கல் கலங்கலான சாமம். அரிக்கேன் லாந்தரில் மஞ்சள் கரைந்த ஒளி தகிக்கிறது. அடி நெஞ்சில் இச்சை கலந்த உயிர்

துடி துடிக்கிது, கெங்கம்மாளின் முனங்கலுடன். இப்பதிண்டு முழுங்குன மாதிரி சஞ்சலம். சாமிநாயக்கர் நட்சத்திரங்களைப் பார்த்தார். குருமலைக்கு கிட்டத்தில் நட்சத்திரங்கள் சரிந்து கிடக்கின்றன.

இழுத்து மூச்சுவிட்டுக் கொண்டு மேலில் அழுக்குத்துண்டை போர்த்திக் கொண்டு குடைக் கம்போடு நடந்தார். சக்கிலியக் குடிக்குத் தெற்கில் வளைந்து நெளிந்து ஓடும் காட்டுப்பாதையில் சாவன்னாவின் கைத்தடி தள்ளாடுகிறது.

குருமலையில் இருக்கும் இருபது யானைகள் இன்னும் அப்படியே அசையாமல் அபாந்திரத்தைப் பார்த்தபடி ஆழ்ந்து கிடக்கின்றன. தெற்கில் சரிந்த நட்சத்திரங்களை உற்றுப் பார்த்தார். நெஞ்சுத் தடத்து நரைத்த முடிகள் புல்லரித்தன. கண்களின் ஏக்கம் உரத்த ஒளியுடன் காடுகளைப் பாத்து முட்டுகிறது. மனசு லொங்குது. மூசு மூசென்று நெஞ்சுத்தடம் இளைத்து நடுங்குகிறது. ஆள் அருவம் கேட்ட ஆக்காண்டிப் பட்சி உசார் உசார் குரல் கொடுத்து மறைகிறது. ஆக்காண்டிகள் தரையில் பம்மும் சத்தம்.

கட்டையில் போன கெங்கம்மா மனசுமாதிரி நட்சத்திரம் சிதறி அடிக்கும் வெளிச்சத்தில் சாவன்னா கம்பூணியபடி நின்று கொண்டிருக்கிறார்.

'கெழட்டு எளவே... உனக்கு ஆரு இருக்கா... நான் போயிரப் போரேன்... நான் போயிரப் போரேன் உனக்கு யாருமில்லையே. உனக்கு யாரு கஞ்சி ஊத்துவா... உனக்கு நாதியிருக்கா.' என்று கெங்கம்மா ஒப்பாரி வச்சு அழுத சாமத்தில் இதே நட்சத்திரங்கள் பசுவின் சாந்தத்துடன் சாவன்னாவைப் பார்த்துக் கொண்டிருந்தன.

கெங்கம்மாவின் ஒப்பாரி சன்னமாய் நீட்டி ஒலிக்க, 'ஏமி கெங்கம்மா... ஏமி கெங்கம்மா... சிறுபிள்ளைமாதிரி... நீபோயிட்டா...' வார்த்தைகள் விக்கி அழுதன. கை நடுங்க நடுங்க கெங்கம்மாளைத் தொட்டு துப்பட்டியால் போர்த்தி உறங்க வைத்தது. சாவன்னா ஏங்கிய மூச்சுடன் கெங்கம்மா... என்றார். நட்சத்திரங்கள் அருகில் கைக்கு எட்டும் தூரத்தில் எட்டிப்பிடித்து விடலாம் போல அசைகின்றன.

தனிமையும் சஞ்சலமும் கருக்கிருட்டாய் மங்கி மங்கி சரிந்து செல்லும் நொண்டிப்பாதையில் கைத்தடியுடன் நடந்து கொண்டிருக்கிறார் சாமிநாயக்கர்.

எங்கும் காரிருள் சூழ்ந்து மூடிவிட்டது கிராமத்தை. ஊருக்குள்ளே மையிருட்டு. அரக்கு நிறத்தில் லாந்தர் விளக்கு கசிகிறது. சாவன்னா திரியைத் தூண்டிவிட்டு வீட்டுக்குள் நோட்டம் பார்த்தார். ஒன்று விடாமல் காலியாகக்கிடந்த எல்லா இடங்களிலும் இருட்டு புகுந்து விட்டது. அடைக்கோழியைப் போல் அடைந்து கிடக்கிறது இருட்டு.

ஏதாவது சத்தம் கேட்காதா என்று காது கொடுத்துக் கேட்டார் சாவன்னா. குழந்தை அழுகிற சத்தம் கூட இல்லை. இருட்டு இலைகளுக்கு அடியில் பட்சி ஒன்று விசிலடிக்கிறது. அனேகமாய் விடிந்து விடும்.

பளாரென்று விடிய வெள்ளை வேனில் சொசைட்டி கடன்காரன் இறங்கி இருந்தான் ஊருக்குள்.

வீட்டைச் சுத்தி நிக்காங்க சட்டி போலீஸ்காரங்கள். ரிஸர்வ் பார்ட்டி அரட்டுகிறது ஊரை. கூட்டம் கசங்குகிறது.

சாவன்னா கைத்தடிக்கம்பை ரொம்ப விறைப்பா புடித்துக் கொண்டு வந்தார்.

வகுறு வத்திப்போன சம்சாரி வீட்டில் திருவிழாக் கூட்டமாய் நிற்கிறது ரிஸர்வ் பார்ட்டி.

'என்னய்யா... இங்க ஒரு திருழா நடக்கா... நீங்க ஊட கூடி பானை சட்டிய பெறக்க வந்தீகளா...

எப்பிடி பூமி செழிச்சிருக்கு... போட்ட விதை மொளைக்காம கெடக்கு. லத்திக் கம்பை காட்டி காட்டை எழுப்ப வந்தீகளாய்யா...

எங்க இருக்கு துரோகம். இங்கெ இருக்கு. ஊட கூடி வெள்ளம் வந்த மாதிரி காக்கி சட்டைகள் வரிசிக்க நிக்கிதே...

சம்சாரிக்கு இந்த எடஞ்சலாய்யா...'

சாமிநாயக்கருக்கு திண்டு முழுங்குன மாதிரி சஞ்சலம். வாசலுக்கு குறுக்க போய் கைத்தடியை தடுப்புச் சுவராய் மறித்து நின்றார்.

சாமிநாயக்கர் மேல் விசாரணை கமிஷன் போட்டு கோர்ட்டுக்கு இழுத்தார்கள் சட்டம் தெரிந்த அதிகாரிகள்.

1954 ஆம் வருஷத்திய 53 வது தமிழ்நாடு சட்டத்தின் 73வது பிரிவின் கீழ் விசாரணை.

*வாதி: 0997 குருமலை கோவாப் ரேட்டிவ் சொசைட்டி காரியதரிசி ஆனந்தகிருஷ்ணன்.*

*பிரதிவாதிகள்: (1) குருமலையில் இருக்கும் ராமசாமி நாயக்கர் குமாரர் சாமிநாயக்கர்.*

*(2) குருமலையில் இருக்கும் கருப்பையா ஆசாரி குமாரர் செல்லையா ஆசாரி*

*தாவா நெம்பர் 303/1984-85*

***குற்றச்சாட்டுகள்:***

*1956 வது வருஷம் விஜய வருஷம் புரட்டாசி பட்டத்து விதைப்புக்கு மானாவாரிப்பருத்தி சாகுபடிக்கு வாங்கிய கடன் ரூபாய் நூற்று ஐம்பது. மேல்படி பிரதிவாதிகள் (2) செல்லையா ஆசாரி ஜாமீன் போட்டு எழுதிக் கொடுத்த வெற்றிலைக்கடன் பத்திரத்தில் சாமிநாயக்கர் பேரில் உள்ள பாக்கித்துகை ரூபாய் 907-03ந.பை. இந்ததுகை தண்டவட்டி நோட்டீஸ் சார்ஜ் உள்பட.*

*சொத்து விபரம் வில்லங்கம்.*

*பிரதி வாதிகள்: (1) சாமிநாயக்கருக்கு இருந்த மானாவாரிக் கரிசல் பனிரண்டு ஏக்கர். தோட்டம் பொய்த்த கிணறு சேர்ந்து ஒரு ஏக்கர் ஐம்பது செண்டு. மேல்படி நில விஸ்தீரணத்தின் பேரில் முன் கடன் நிலுவை இருந்தும் பனிரெண்டு ஏக்கர் நயம் கரிசல் கிரயம்.*

*நாளது பசலி 88க்கு நிலம் ஒரு ஏக்கர் ஐம்பது செண்டு. வறண்ட தோட்டம். நாளது தேதியில் தரிசு. அசையாச் சொத்தாக உள்ளன. தபசில் சொத்து விபரம்சரி.*

*பிரதிவாதிகள்: (2) செல்லையா ஆசாரிக்கு நிலம் இல்லை. குருமலையில் வடக்குத்தெருவில் தெற்கே பார்த்த தட்டி அடைத்த ஓட்டடுக்கு வீடு க்ஷீண தசையில் உள்ளது. வீட்டின் பேரில் அடமானம், தெற்குத் தெரு கிருஷ்ணஞ்செட்டியாருக்கு ரூபாய் ஐம்பதுக்கு வீட்டு மனை உள்ளது. தபசில் சொத்து விபரம் சரி.*

*1 வது பிரதிவாதி சாமிநாயக்கர் வேகாரியாய் அலைந்து திரிவதாய் ரிப்போர்ட்.*

*கோர்ட் மூலம் ஆள் அனுப்பி சம்மன் கொடுக்க முயற்சித்தபோது சாமிநாயக்கர் சம்மனை வாங்கிக் கிழித்துப் போட்டுக் கோர்ட்டை அவமதித்துள்ளார்.*

2 வது பிரதிவாதி செல்லையா ஆசாரி ஊரில் இல்லாததாலும் போன இடம் தெரியாததாலும் மேல்படியார் வீடு, தெற்கே பார்த்த ஓட்டடுக்கு வீட்டு தட்டிக் கதவில் ஒட்டி சம்மன் சாரி செய்யப்பட்டது.

மேல்படி பிரதிவாதிகள் (1)(2) ல் சாமிநாயக்கர் நேரில் எமது முன்பு ஆஜராகியும் பிரதிவாதி (2) செல்லையா ஆசாரி நேரில் ஆஜராகாமல் இருக்கும் பட்சத்தில் விசாரணை.

1985 - ஆம் வருஷம் ஜனவரி மாதம் 2-ஆம் தேதி காலை 10-00 மணியளவில் கூடிய விசேச நீதிமன்றத்தின் பகிரங்க விசாரணை நடவடிக்கைகள்:

ஆஜர்: நீதிபதி மேதகு ஐசக் பாண்டியன் M.A. B.L., மற்றும் 51 பார்வையாளர்களும் கோபால் அய்யங்கார் B.A. B.L., கணபதியா பிள்ளை B.A. B.L., குமாரசாமி முதலியார் B.A. B.L., ஒன்பது ஜூனியர் வக்கீல்களும் பிரதிவாதிகள்: (1) சாமிநாயக்கர், வாதி: ஆனந்த கிருஷ்ணன் இத்யாதி இத்யாதிகள்:

சாமிநாயக்கர் கோர்ட் வாசலில் நின்றிருந்தார். ஈரக்குலை பதறியது. குடைக் கம்பை வைத்துத் தரையில் கோடு கிழித்துக் கொண்டிருந்தார். பெசல் கோர்ட்டில் ஏகப்பட்ட கூட்டம். கவுன் போட்ட வக்கீல்மார்கள் இருள் அடிச்ச மாதிரி சிரிக்கிறார்கள். கோர்ட் சுவர் அலறியது. வெள்ளைக்காரன் காலத்து கல் தூண்கள்; ஜன்னல்கள்; கருப்புக் கதவுகள்; கருப்புக் கோட்டுகள்; நீள வராண்டா, வராண்டாவைப் பார்க்க ஜெயில் மாதிரி இருக்கு.

வராண்டாவில் சிகப்பு டவாலி போட்ட வெத்தலை குதப்பிய தடியன் விழுந்து விழுந்து கத்துகிறான். கிணத்துக் குரல். பேர்கள் ஒப்பிக்கப் படுகிறது. கையில் விலங்கு பூட்டிய இளவட்டங்கள் சிரிக்கிறார்கள். என்ன தாவா நடக்கோ. காலம் எப்பிடி எப்பிடியோ போகுது. வங்கொலை செய்த வேல்த்தேவனுக்கு எதிரா சாட்சி சொன்னவன் கீழக் காட்டில் விரட்டி விரட்டி செத்தான்.

பொம்பளைகள் குனிஞ்சு களை எடுத்துக்கிட்டு இருக்கு. சங்கை அறுத்திட்டான். திகில் பறக்க அருவாளில் ரத்தம் வடிந்தது. சாமிநாயக்கர் கமலை இறைத்துக் கொண்டிருந்தார். வாய்க்கால் தண்ணியில் அருவாளை கழுவிக்கிட்டு இருக்கான் வேல்த்தேவன். கழுவக் கழுவ ரத்தம். வாய்க்கால் தண்ணியில் சளப்சளப்பென்று

வேலு நடந்துபோகிறான். சாமி நாயக்கரை கிணத்துக்குரல் கூப்பிட்ட சத்தம். குலைபதறியது. துண்டை அவுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு ஓடினார். கோர்ட் வராண்டா மறித்தது. கூண்டுக்குள் சாமிநாயக்கர் ஒடுங்க நடுங்க நின்றார். குளிர் காச்சல் ஆட்டுது. வடக்க பார்த்து நின்றார்.

'ஏ கெழவா... இங்கிட்டு திரும்பு. இப்பிடித் திரும்பு. உன் மூஞ்சிய பாப்பம்...' கிழக்காமல் இருந்த பீடத்தின் மேல் கருப்புக் கோட்டு சாமிநாயக்கரைப் பார்த்துச் சிரித்தது.

சாமிநாயக்கர் நடுங்கியபடி கும்பிடுபோட்டார். ஒரே கருப்பு அம்பலமாய் இருக்கு. கோட்டு மிரட்டுது ஆளை.

பனை உயரத்துக்கு வளர்ந்த கோர்ட் கிளார்க்கு சோடாப்புட்டிக் கண்ணாடி வழியே சாமிநாயக்கரை உற்றுப் பார்த்தான். புஸ்தகத்தில் சத்தியம் வாங்கிவிட்டு அமர்ந்தான்.

கருப்புக்கோட்டு: சாமிநாயக்கரே நீரு கடன்வாங்கினது உண்மைதானா?

'ஆமாய்யா... ஆமா.'

'உம்மீது ஏற்கெனவே டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒத்துக் கொள்கிறீரா...'

சாமிநாயக்கர் பதறியபடி மரச்சட்டத்தில் சாய்ந்து நின்றார்.

'யோவ் பெரியவரே... கூசாம பதில் சொல்லு' பீடத்திலிருந்து குரல்.

'எசமான்.... எம்பேர்ல டிக்கிரியா. இல்ல எசமா... நான் வாங்குனது நூத்தம்பது ரூவா. சமுத்திரமா பெருக்கி வச்சிருக்காக. எசமா, பருத்தி மாசூலுக்கு வாங்குனது. அன்னயில் இருந்தே காடு அவிஞ்சு கெடக்கு. மழை பேயலை. நான் எங்கேபோயி முட்ட...'

'சாமி நாயக்கரே... கோர்ட்டை அவமதித்துப் பேசக்கூடாது. அவமதிக்கும் படியாக நடந்த குற்றம் உம்மீது பதிவாகி உள்ளது. சம்மனை கிழித்துப் போட்டிருக்கிறீர்.... உம்மீது கடும் நடவடிக்கை எடுக்க கோர்ட் விரும்புகிறது....'

சாமிநாயக்கர் பவ்யமாகச் சிரித்தார். 'என்னமோ ஏதோன்னு கிழிச்சுப் போட்டேன். எனக்கு தன்மதி இல்லை எசமான்....'

கோர்ட் சிரித்தது, ஜன்னல்கள் உற்றுப்பார்த்தன. 'நீர் சட்டத்துக்குப் புறம்பான முறையில் ஜப்தி செய்ய வந்த இடத்தில் அதிகாரிகளை மறித்தது உண்மையா....'

'எல்லாம் அருள் வாங்கிப் போச்சு... விளைஞ்ச காடெல்லாம் தரிசா கெடக்கு... மாசூல் எடுக்க முடியல... வேலிக்கருவல் போட்டு வீட்டு ஒசரத்துக்கு நிக்கி... எல்லாத்தையும் வித்து வாயில போட்டாச்சு... எல்லாம் ஆண்டி ஆயிட்டான். ஆண்டிய அடிச்சா கந்தல் பறக்கும். நம்மல மாதிரி இல்லாத பயல். சப்தி வந்தா அர்ணாக் கயித்த அத்து நாண்டுக்கிருவான் சம்சாரி...'

கொஞ்ச நேரம் சாமிநாயக்கர் வாய்க்குள் புலம்பினார். வார்த்தை நெஞ்சை அடைத்தது. மண்டைய முட்டி முட்டி சாகணும் போல படபடப்பு.

கோர்ட் வாய் அடைத்துக்கிடந்தது.

கிளார்க்கு தலை குனிந்து கோர்ட்டாரிடம் காதைக் கொடுத்துக் கிசு கிசுத்தான்.

'கிராம அதிகாரியின் பயிர் எடுப்பு ரிக்கார்டுபடி வருஷா வருஷம் மகசூல் வருதாமே உமக்கு. ரிக்கார்டு பேசுது... நீர் என்ன சொல்கிறீர்...?'

'அதை என்ன சொல்ல... எசமான் நேர்ல வந்து பாக்கணும் அதை. கழுத மேயிது... எரிக்களை மொளச்சிக் கிடக்கு... பெழச்சுப் பெழச்சு இந்த லெச்சத்தில இருக்கு...'

சாமிநாயக்கருக்கு குளிர் காச்சல் விட்டுப்போயி வாக்கு சாதுர்யம் கோர்ட்டையே அரட்டியது. சாமிநாயக்கர் வாக்கு அவரது கைக்குடை போன்றது. வெந்து அவிந்துபோன காட்டையே கோர்ட்டுக்குள் குடையாக விரித்தார். சபையே கட்டுண்டது. கருப்புக் கவுன்களை எல்லாம் மடக்கிப் பிடித்தார் கைக்குடையாக. பிடித்த பிடியை விடாமல் குடையை கக்கத்தில் இடுக்கிய மாதிரி கூண்டுக்குள் சாமிநாயக்கர் நின்று கொண்டிருந்தார். வாக்கு அடித்தது. யார் முகத்திலும் ஈயாடலை, அசைவில்லை. கலிக்கோ பைண்ட் போட்ட புஸ்தகங்கள் கண்ணாடிப் பீரோவுக்குள்ளிருந்து சாமிநாயக்கரை எட்டிப்பார்த்தன. சுவர்கள் கதறின. கருப்புக் கவுன்கள் அசையவில்லை. வழக்கமான உணர்ச்சிகளற்ற

முகங்களில் மொந்தையான அசடு வழிந்து கொண்டிருந்தது. கோர்ட் ஜன்னல்களில் தலைகள் தொங்கின.

விசாரணை முடிவான பைசலுக்கு வந்துவிட்டது. சாமிநாயக்கர் பீடத்தின் மேலிருந்த கருப்பு கோட்டை புதிராகப் பார்த்தார். வினோத பாவத்துடன் அழுத்தமான சிரிப்பை அடக்கியபடி கை விலங்கை உற்றுக் கவனித்தார்.

தாயோளி..... நம்மள களி திங்க வச்சிட்டானே... என்று நமட்டுச் சிரிப்புடன் கம்பி எண்ணிக் கொண்டிருந்தார் சாமிநாயக்கர்.

பாளையங் கோட்டையில் இருண்ட சிறைக்குள் சின்னச் சின்ன ஓட்டைகள் வழியாக சன்னஞ் சன்னமாக வியப்பூட்டும் ஒளி. வெளியில் மரங்களில் குருவிகள் சலம்புகிறது. கீறல் விழுந்த மரக்கதவின் இடுக்குகளில் நுழைந்து வருகிறது செல்லக் குருவி. ஜெயில் வராண்டாவில் கிரிமினல் குற்றவாளிகள் அணில் குஞ்சை கொஞ்சிக் கூத்தாடுகிறார்கள்.

நம்ம வேலுத்தேவன் இருக்கானா... என்று சற்றுப் பார்த்தார். வீச் வீச் சென்று அணில் குஞ்சி இந்தப் பக்கமாக ஓடிவந்து வாலை ஆட்டுகிறது.

அனாதப்பயல் வேலு சின்னஞ் சிறு கால்களுடன் சாமித் தாத்தாவுக்கு பின்பக்கமாக பதுங்கிப் பதுங்கி வந்து கண்ணைப் பொத்துகிறான்.

கெக்கே கெக்கே என்று சாவன்னா அவனை முதுகில் தூக்கிச் சிரிக்கிறார். ஓட்டமாய் ஓடுகிறான். அவனைப் பிடிக்கக் கையை நீட்டினார். அடே வேலு.

நெர அம்மணத்தோடு கம்மாக்கரைமேல் ஓடிக்கொண்டிருந்தான் வேலு.

அவனைத் துரத்திக் கொண்டு ஓடினாள் சக்கிலியப்புள்ளை ஈஸ்வரி. ஆட்டுக்குட்டீ. ஆட்டுக்குட்டீ... அம்மணக் குண்டித் தாத்தா. என்று கத்துகிறாள்.

சாமித்தாத்தா, அவன் இடுப்பில் கட்டி விட்ட ஆட்டு மணி, அருணாக்கயித்தில் கிடக்கும். ஆட்டுமணி ஓயாமல் கத்துகிறது. கிணு கிணு வென்று கரையெல்லாம் சத்தம் சிதறிக் கொண்டே ஓடினான்.

நாத்துக்காட்டில் நாயக்கமார் வீட்டு மாடுகளோடு நின்றிருந்தாள் ஈஸ்வரி. வேலுப்பயல் ஆடு மேய்க்க தாத்தாக் குதிரையில் வந்து கொண்டிருந்தான்.

தெருவில் உள்ளவரெல்லாம் 'வாங்கய்யா. மகராசா. கொம்பனான குதிரை போல இக்கே.' என்று கேலிப் புன்னகையுடன் போனார்கள்.

வேலுப்பயல் சாமித்தாத்தா தோள் பட்டையில் உட்கார்ந்து தாத்தா தலை மயிரை இறுக்கிப் பிடித்து டக்கட்டீ... டக்கட்டீ. என்று சத்தம் கொடுத்தான்.

தாத்தாக்குதிரை மெல்லத்தான் ஓடும் ஆடுகளுக்குப் பின்னால்.

காட்டில் மகாராணி ஈஸ்வரியம்மா காத்துக் கிடந்தாள், காட்டை இருட்டிக்கொண்டு.

அவளைப்பார்த்ததும் தாத்தாக் குதிரையில் இருந்தபடி அலட்சிய மாய் பார்த்தான். அவளுக்குப் பொறாமை தாங்கவில்லை.

ஆட்டுக்குட்டீ. ஆட்டுக் கிடாயீ... அமணக்குண்டீ... ம்மே.ப்பே. என்று ஆடு மாதிரி கத்தி வக்கணை காட்டிவிட்டு நாத்துக்குள் ஓடி விட்டாள்.

அவன் தாத்தாக் குதிரையிலிருந்து குதித்தான். ஆட்டுக்கு கோபம். ஆட்டுக்கிடா மாதிரி விரல்களை தலைக்கு மேல் கொம்பு வைத்துக் கொண்டு முட்ட ஓடினான்.

அவள் தப்பி ஓடினாள். கிடா விரட்டியது. நாத்துக்குள் பாய்ந்து அவளை நெருங்கி விட்டது. சதக், சதக்சதக்கென்று முட்டியது கிடா. கிடா முட்டிறிச்சி. கிடா முட்டிறிச்சி... ஹைய்ய்ய் என்று தாத்தாக் குதிரை கனைத்தது.

அவளுக்குத் தோல்வி தாங்கவில்லை. வாய்விட்டு அழுது விட்டாள்.

ஈஸ்வரியிடம் வெற்றிவாகை சூடிய கிடா மணிச்சத்தம் கேட்க நாத்துக் குள்ளிருந்து ஓடிவரும். தாத்தாவை முட்டவரும். சாமி தாத்தா பயந்த மாதிரி பாசாங்கு செய்தார். தாத்தாவை முட்டிவிட்டது.

அய்யோ.... ஆடு முட்டிறிச்சே... முட்டிறிச்சே... என்று கீழே விழுந்து பாவலா செய்தார் தாத்தா.

வேலுப்பயல் தெருவெல்லாம் ஓடித்திரிந்தான். அவன் தெரு முனையில் ஓடி வரும்போது தூரத்திலிருந்தே மணிச்சத்தம் கிணு கிணுக்கும். வீட்டுக்குள்ளிருந்து குதியாளம் போட்டு தெருவுக்கு வந்தார் சாமித் தாத்தா. நம்ம... பய வாராண்டோய்.... நம்ம கிடாவுக்கு சோடியுண்டா... இந்த ஊருள... ஆரு இருக்கா.. கூடுன கிடா... நம்ம கிடாதான்.... பாரு....

சாமித்தாத்தாவைச் சுற்றிச் சுற்றி மணிச்சத்தம் கிணு கிணுத்தது.

குருமலையில் குழிபறிக்கும் நரிகளால் கந்தல் கந்தலாய் வெட்டுப் பட்டு செத்துப்போன சங்கிலித்தேவன் மகன்.... தாத்தாவை சுத்தி சுத்தி ஓடிவருகிறான்.

'அடே.... வேலுத்தேவா... நீதாண்டா... என் பேரன்... குருமலைக்குள் நரிகள் வாலை ஆட்டுது பாரு... நான் உனக்கு மம்பட்டி புடிக்கச் சொல்லித்தர மாட்டன்டா... பேரப்புள்ள...'

தாத்தாவும் வேல்தேவனும் சிந்தி விட்டுப்போன சிரிப்பரவம் ஊர் முழுவதும் தீரவே தீராமல் கேட்டுக் கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் இழுந்தவராக சாமிநாயக்கர் வார்டு எண் 19-ல் பழுத்து வங்கு ஓடிய முகச்சுருக்கங்களுடன் மரச் சட்டத்தில் சாய்ந்து கொண்டிருந்தார்.

ஈரப்பெயிண்ட் அடித்தகம்பிகளுக்கு இடையில் முகத்தை ஒட்ட வைத்து இரும்புக்கம்பியின் குளிர்ச்சியை உணர்ந்தவராக வராண்டாவைப் பார்க்கிறார்.

வார்டுக்கு வெளியில் போன நூற்றாண்டுகளில் இருந்த கோட்டைச் சுவர்கள். கருப்பு படிந்த சுவர்களில் வெகு நாளைய வரிகள். வடக்குச் சுவர் ஓரங்களில் அரசுகள் இச்சி மரங்கள் தண்டு வளைந்த வேம்புகள். நடு மைதானத்தின் ஆலமரம். பறவைகள் தடம்பட்டது. எச்சம்பட்டு பழுத்த கிழடு. வங்கிழடு. தளர்ந்த அசைவில் சாமித்தாத்தாவைப் போல் மொடு மொடுத்து ஆடுகிறது. வரி வரியாக தடிப்பு. கீறல்கள். முதிர்ந்த கூனல் வளைவுகள். திணறும் பெருமூச்சுகள். மரத்தில் ஆணியை வைத்து தாறுமாறாகக் கோடுகள். இறந்து போனவர்களின் பேர் வெட்டப்பட்டிருக்கிறது. தண்டுகள் எல்லாம் மனிதர்கள் உண்டாக்கிய புண்களுடன் வாதையில் ஆழ்ந்திருக்கிறது ஆலமரம்.

யாருமற்ற அனாதையான ஆலமரம் விழுத விட்டு கீழிறங்கி சரிந்து ஒடிந்து கிடக்கிறது. கோட்டைச் சுவர்களுக்குமேல் பொங்கி வளர்ந்த மரங்களின் கும்பலான இலைக்கூட்டங்களுக்குள் நூறு நூறு பறவைகள். திரேதாயுகத்துப் பறவைகள் வந்து வந்து மறைந்து போன சலம்பல்கள் கேட்கிறது.

பச்சை இலைகளைப் பார்த்துப் பார்த்து கம்பிகளுக்கு இடுவலில் இருக்கும் கண்களில் ஈர ஒளி கசிகிறது. சன்ன வெளிச்சம் கம்பிகளுக்கு ஊடே பாய்ந்து கொண்டிருக்கிறது.

பாதி ஒடிந்த நிலையில் விழுதுகளையே சார்ந்து சாமித்தாத்தாவைப் போல் கிழட்டு மூச்சு விட்டு நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மரம் அண்ணாந்த நிலையில் ஆழ்ந்திருக்கும். இலைகளுக்கு அடியில் பேடையின் விசிலடிப்பு. யாராலும் தீர்க்க முடியாத துக்கத்துடன் தகிக்கிறது பேடையின் அலறல்.

## ரெண்டாம் பாகம்

குருமலையில் இடி விழுந்து முதல்க்கல் உருண்டது, சாமிநாயக்கர் என்ற முரட்டுச் சமுசாரி ரூபத்தில். காடே கிடையாகக் கிடக்க விதித்திருந்த விதியை உடைத்துக் கொண்டு டவுனைப் பார்த்து வந்து கொண்டிருந்தார் சாமிநாயக்கர்.

வெயிலும் மழைகளும் உளறும் மே காத்தும் அடித்துத் திரட்டிய திரள் மாதிரி திரேகம். பசித்து வெளுத்துப் போன கருசல் தரையைப் போல் சாம்பல் ஓடிய முகம். சாவன்னாவைப் பார்த்தால் தரிசுதான் ஞாபகம் வரும். வெட்டித்தரிசு.

பளாரென்று விடிய்ய கோவில்பட்டி டவுனில் தெட்சிணாமூர்த்தி தெருமுடுக்கில் நின்று கொண்டிருந்தார். அட்டுப் பிடித்த கைத்தடியை ஊன்றி பெண்டு ஒடிந்த முதுகை நிமுத்தினார். நிமுரவில்லை. தலையைச் சாய்த்துக் கொண்டு தெருவை நோட்டம் பார்த்தார், யார் வீட்டிலாவது விடிந்திருக்கிறதா என்று.

அடத் தாயளி விடிஞ்ச வீட்டக்காணமே... தெருவில் எழுந்த முதல் மனிதர்கள் மாதிரி தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

சாமி நாயக்கரைப் பார்த்ததும் தெருவிளக்குகள் ஏககாலத்தில் அணைந்து கண்ணை மூடிக்கொண்டன.

கிஹீ கிஹீ கிஹீ.... என்று ஆக்கங் கெட்ட கூகையாட்டம் சிரித்தார். சிரிப்பில் அனல் அடித்தது. சுவர்கள் எதிரொலித்தன. சிரிப்பு இருமியது, பழைய பெட்போர்டு மோட்டாரைப் போல் பெரிய ஹீங்காரத்துடன் உருமி சளியைத் துப்பினார்.

தெரு உறங்கியது அழுப்புடன். முதல் கதவு திறந்தது. கிர்ர்ர்ர்ர்ர்ர் ரென்று நெளித்து நீட்டி கொட்டாவிவிட்டு சொடுக்கியது. பிளாஸ்டிக் வாளியும் கையில் விளக்கமாறுமாக இருட்டு மூஞ்சி நின்றது வாசலில்.

சாமிநாயக்கனுக்கு விடிஞ்சிரிச்சி டோய்... என்ற எகத்தாளத் துடன் கைத்தடி துள்ளியது. கைத்தடித் தோழன் சாமிநாயக்கரை வரவேற்று அழைத்துக்கொண்டு போனான், திறந்த வீட்டு வாசலுக்கு.

வாசல் தொளிக்க முந்தி கெழட்டு எளவு நிக்கிதே. மூதேவி மூஞ்சியில விடியணுமா...

பச்சை பிளாஸ்டிக் வாளி சிடு சிடுப்புடன் திட்டியது மனசுக்குள்.

எம்மா... என்னம்மா... என்னத்த கேக்கப் போரன். கிழவனுக்கு கீழ கொட்டுரத போடுங்கம்மா... இல்லேங்காம போடுங்கம்மா... நைசாக சிடு மூஞ்சிக்கு நேராக ஈயத்தூக்கு வாளியை ஏந்தினார் சாமிநாயக்கர். விடிஞ்ச மூஞ்சி மாதிரி தெரியலை. முகம் சுண்டிச் சுருங்கி இருட்டியது.

ஏம்மா...அப்பிடி பாக்குரே.... சமுசாரிதான்மா... சாமிநாயக்கன் சமுதாரிதான்மா...

பெழச்சு பெழச்சு இந்த லெட்சனத்தில இருக்கு... அங்குட்டு போயிட்டுவா... வாசல் தெளிக்க விடமாட்டியோ போ போ...

சரி சரிம்மா சரிம்மா சரிசரி....

முனங்களுடன் கைத்தடி நகர்ந்தது.

வாசலிலும் ஏகமாய் தண்ணி சலம்பியது வசவுகளுடன். எல்லா வாசலிலும் ஏகமாய் தண்ணி கொட்டப்படுவதும் திட்டுவதும் சாமி நாயக்கரை நெடுக விரட்டியது, தண்டவாளங்களை நோக்கி.

புதிதாக விடிந்திருந்த காலை. வாசல் படிகளை ஒட்டி ஓடும் சாக்கடை ஒட்டத்துடன் பருப்பு ரசம் கலந்த வெஞ்சனத்தின் மணம் தெரு மணத்து பசியைக் கிண்டியது.

கீழ போடுரதுக்கு கையில குடுத்துட்டா என்ன. அநியாயமா கீழ கொட்டுராகளே. என்ன பொம்பளைக... வீணப்பிறவிக...

வயிற்றெரிச்சலுடன் கைத்தடி புலம்பியது. காலை வெளியில் வீட்டு உசரம் வேலிச் செடிகளைக் கண்டார்.

அடத்தாயளி.... நாட்டுக் கருவல் நம்மளை விடாதோ. வேலிச் செடி மறசலில் பன்றிகளின் உறுமல். தண்டவாளங்கள் வடக்கும் தெற்குமாக நீட்டிக்கிடந்தது. பனியில் நனைந்த தண்டவாளங்களைத் தாண்டி சாமிநாயக்கர்போய்க் கொண்டிருந்தார்.

சூரியனின் படுக்கைவசக் கதிர்கள் கண்களைக் கூசின. தண்டவாளங்கள் நெடுகில் ஆட்கள் உட்கார்ந்து பன்றிகளை விரட்டினார்கள். பன்றிகள் உறுமின. ஊசி மூஞ்சியை நீட்டிக் கொண்டிருந்தன பன்றிகள்.

தண்டவாளங்களைக் கடந்து தெட்சிணா மூர்த்தித் தெருவுக்குள் சைக்கிள்களும் தீப்பெட்டி ஆபீஸ் கும்பலும் நகர்ந்தது.

சாமிநாயக்கரின் கைத்தடி கவாத்து கவாத்தென்று சத்தம் உண்டாகியபடி கூட்டத்தோடு கூட்டமாய் மறைந்தது.

ரயிலில் அடிபட்டுக் கிடந்த யாரோ அனாதைப் பிணத்தைப் பார்த்து சாமிநாயக்கர்தான் என்று முடிவானது. உக்கிரமான நடுமதிய வேளை. உடைந்து கூழாகிப்போன சாமிநாயக்கருக்காக, தெட்சிணா மூர்த்தித் தெருக்காரர்களும் தண்டவாளங்களுக்கு அந்தப்பக்கம் பிரிந்து கிடந்த காந்தி நகர் வாசிகளும் துக்கப்பட்டார்கள்.

தண்டவாளங்களுக்கு அருகில் சாமிநாயக்கரைப்போல் அனாதையாக விடப்பட்ட அவரது அருமை நண்பன் கைத்தடி இடுப்பு ஒடிந்து கிடந்தது. கைத்தடியைப் பார்த்ததும் சாமிநாயக்கர் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார் டீக்கடை வெங்கிடு.

உடனே டீக்கடை வெங்கிடு சார்பில் சாமிநாயக்கரின் பூத உடலுக்கு கோடித்துணி போர்த்தப்பட்டது. வெங்கிடு டீக்கடையில் இரங்கல் கூட்டம். சாமிநாயக்கரைப்பற்றி அறியாதவர்கள் சாமிநாயக்கரின் பெருமைகளை டீக்குடித்தபடி பேசிக்கொண்டிருந் தார்கள்.

அடேயப்பா... சாவன்னா எப்பேர்ப்பட்ட மனுசன்... சாமான்ய ஆளா.... சாமிநாயக்கர் போயி சேந்துட்டாரே....

தடுமாறி விழுந்திருப்பாரோ....

சமுசாரிய்யா நான் சமுசாரிய்யான்னு என்னமா சொல்லிச் சொல்லி பிச்சை எடுத்தாரே.... மனசு இடிஞ்சு போயி ரயில்ல விழுந்திட்டாரே...

இல்ல.... இல்ல.... சாமிநாயக்கர் பேரனுக்கு கிறுக்கு புடிச்சு ரோட்டுல அலையிரானாம். அதப்பாத்து மனசு பொறுக்காம ரயில்ல விழுந்திட்டாரு... என்ன பெரிய மனசு... பாருங்க....

சாமிநாயக்கரின் சுய புராண ஒப்பித்தலை ஆளுக்கு ஆள் விடாமல் பொழிந்தார்கள். ஆனால் குருமலை சொசைட்டி கிளார்க்கு ஆனந்த கிருஷ்ணன் கட்டன்கரெக்டா சாமிநாயக்கரின் வில்லங்கத்தை அவுத்து வைத்தான். அதைச் சொல்லும்போது மர்மத்துடன் கண்களை உருட்டினான்.

சாவன்னாவுக்கு ஏகப்பட்ட கடன் பாக்கி. ஜெயில்ல களி தின்னுக்கிட்டு கெடந்தாரு... அங்கயும் கடன்காரன் விடல... இப்ப சட்டி எடுத்து அளஞ்சாலும் கடன்காரன் விடுவானா... கொண்டுபோயி தண்டவாளத்துல தள்ளிட்டானே... எல்லாரும் கடனைக் கட்டாம வாழவே முடியாது என்று தீர்வு சொன்னான்.

கூட்டம் மைனாக்குஞ்சுமாதிரி வாயை வாயைத் திறந்து உளறியது. தெரு முழுவதும் துக்கம் கசிந்து வழிந்தது. வெயில் துக்கத்துடன் சாய்ந்து கிடந்தது.

வெள்ளைத் துணி போர்த்திய பிரேதம்... அருகில் கைத்தடி... டீக்கடை பெஞ்சியில் போலீஸ்காரர்கள் தூங்கி வழிந்தார்கள். பிரேதம் போர்த்தி இருந்த துணியில் எங்கும் திட்டுத் திட்டாய் ரத்தம். தண்ட வாளங்களைக்கடந்து போகிறவர்களுக்கு இத்தனையும் பயத்தை உண்டாக்கியது. தெட்சிணாமூர்த்தி தெருப்பாதை இருட்டியது. பாதை மறித்தது.

ராத்திரி எல்லாம் சாவு வாடை. மேகாத்து பயந்து உளறியது, தெட்சிணாமூர்த்தி தெருவில் சாமிநாயக்கரின் கைத்தடி சத்தம் எழுப்பியது. கவாத்து கவாத்தென்று. சாமிநாயக்கர் பாதங்கள் தரையில் உரசும் சத்தம். நாய்கள் பயந்து ஊளையிடவில்லை. இரவின் உருவம் சாமிநாயக்கரின் முகத்தைப்போல் செத்துக் கிடந்தது.

இருட்டுக் குடை மடங்கி மறுநாள் விடிந்தது. தண்டவாளங்களில் முன்போல் பனி விழுந்திருந்தது. கட்டடங்களுக்கு இடுவலில் சூரியன் எழுந்து, தண்டவாளங்களில் வெட்ட வெளிச்சமான ஒளியடிக்க, தண்டவாளங்களைத் தாண்டி சாமிநாயக்கர் வந்து கொண்டிருந்தார்.

பல்லுப்போன பொக்கை வாயில் கிஹி கிஹி கிஹி என்று சிரித்தார். சாமித்தாத்தாவைச் சுற்றி ஒரே கூட்டம். சாமித் தாத்தாவோடு சேர்ந்து நகர்ந்தது. வெங்கிடு டீக்கடைக்குள் பாத்திரங் கள் அலறி உருண்டன.

சாமிநாயக்கர் பெஞ்சியில் உட்கார்ந்தார். கைத்தடி நழுவி விழும் சத்தம். மெதுவாக இடுப்பிலிருந்த கோழி ரோமத்தை எடுத்து இறகை வகுந்து ஒட்டடைக் கம்பாக நீட்டி காதுக்குள் கொடுத்துக் குடைந்தார். கூட்டம் உசாராய்ப் பார்த்தது. கழுத்தைச் சாய்த்து மேல்காதை குடைந்து கொண்டே சுகத்தில் ஆழ்ந்த நிலையில் வாயைக் கோணிக் கொண்டு எல்லாரையும் பார்த்தார். மர்மப்புன்னகை கன்னச் சுருக்கங்களில் நெளிய ஒளி மிகுந்த கண்களால் எல்லாரையும் நோட்டம் பார்த்தார் சாமிநாயக்கர்.

கல்லாப்பெட்டியிலிருந்து தலையை நீட்டி தொந்திவயிறு குலுங்கக் குலுங்க வெங்கிடு சிரித்தார்.

ஓய். சாவன்னா. எல்லாரையும் பயித்தியாரன் ஆக்கிட்டீரே. ஓய். நல்லாச் செஞ்சீரு.... நல்லாச் செஞ்சீரு.

சாவன்னா ஒமக்கு ஆயிசு நூறு எரநூறு சாவன்னா... ஒரே சிரிப்பாணிக் கூத்து. டீக்கடை சிரித்து உருண்டது. கூப்பாடுகளை எல்லாம் காதில் வாங்காதவர்போல் முகபாவத்தை மறைத்துக் கொண்டு ரொம்ப அக்கறையாய்க் காதைக் குடைந்து கொண்டிருந்தார் சாமிநாயக்கர்.

கடையில் தலைகீழாகத் தொங்கிய வாழைப்பழத்தார்கள் அசைந்தன. வேடிக்கை. ஒரே வேடிக்கை. பொறுக்கப் பொறுக்க வேடிக்கை பார்த்தது கூட்டம். சாவன்னா முகம் சுண்டிச் சுருங்கியது.

திடுதிப்பென்று முகபாவம் உணர்ச்சி பொங்கிச் சிரித்தது. விழுந்து விழுந்து சிரித்தார் சாமிநாயக்கர்.

'சாமிநாயக்கனுக்கு சாவு ஏது. என்ன என்ன நடக்கு... இன்னும் சாமிநாயக்கன் பாக்க வேண்டியது நெறய்யா இருக்கு பேரப்புள்ள...

ஏம் பாவத்துல போக. எனக்குத்துட்டி கொண்டாடிட்டீகளா. என்ன அநியாயம் பாருங்க. இன்னொரு பொண்ணு தேடி அலையிரேன். ஒருத்தியும் எனக்கு வாக்கப்பட மாட்டிங்காளே. வருத்தம்.... வருத்தத்துல திரியரேன், பேரப்புள்ள....

முகத்தில் அமுத்தலான சிரிப்புடன் பொம்பளைகளைப் பார்த்தார். கள்ளச் சிரிப்பு. எக்கண்டம். எகடாசி.

கெழட்டு எளவுக்கு பொண்ணு கேக்காமே. வெட்கம் புடுங்கித் தின்ன பொம்பளைகள் வீட்டைப் பார்த்து ஓடினார்கள்.

வெங்கிடு உடம்பை நெளித்துக்கொண்டு கொஞ்சினார். சாவன்னா நீரு. கூடுன ஆளு... ஆனா.... காட்டை போட்டுட்டு... பிச்சை எடுக்க வந்திட்டீரே. சாவன்னா இம்புட்டுத்தான கெட்டிக் காரத்தனம். உம்ம கிம்பிரியம் இவளவுக்குத்தானா..

வெங்கிடுவின் புத்திசாலித்தனம் சாவன்னாவைக் குத்திக்குத்தி புகை கிளம்பியது.

சாவன்னா திண்டு முழுங்குன மாதிரி திணறினார்.

'என்ன சொன்ன... என்ன சொன்ன.. எம்பேர்ல என்னப்பா இருக்கு. எம்மனசு கலங்கமில்ல. பால்போல இருக்கு. நிலாப்போல வெளிச்சம் அடிக்கி. கோமணத்துணிய ஏத்தி ஏத்திக்கட்டிக்கிட்டு நிக்காம்பாரு சமுசாரி. முகத்தில அருள் இல்ல. சமுசாரி முதுகுல கல்வச்ச மாதிரி இருக்கு. மனசு ஒத்துக்கிரலை. என் திரேகம் நடுங்குது. எல்லாருமா சேந்து அவன் மேல பாரத்தை ஏத்திட்டிங்க. சாமிநாயக்கன் மனசு லொங்குது. சமுசாரிய பொதிமாடா போட்டு வசக்கி அடிக்கிது நாடு. தாயோளி செம்பிரி ஆட்டும் பெறவிநாடு... நாடு'...

வாக்கு அனல் அடித்தது. சாமிநாயக்கர் உருண்டு உருண்டு சிரித்தார். இடிவிழுந்த மாதிரி தரை நடுங்கியது.

வேகவேகமாய் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு போனார். தெட்சிணாமூர்த்தித் தெரு வழியாக கப்பக்கால்களைச் சரித்து சரித்து நடந்து போய்க் கொண்டிருந்தார். பாதை மறித்தது. சாமிநாயக்கரின் கைத்தடி என்ன என்ன, என்று சத்தம் போட்டது. கைத்தடி சத்தம் நூறு நூறு கேள்விகளாய்ச் சிதறியது.

தண்டவாளங்களில் வெயில் முறுகிக் கனகனக்க தண்டவாளங் களைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தார் சாமிநாயக்கர்.

# வேதாளம் சொன்ன கதைகள்

தி.சு. இளஞ்செழியன்

*(மரத்தடியில் ஒரு இளைஞன் அமர்ந்து கொண்டிருக்கிறான். பயங்கரமான சிரிப்பொலியைத் தொடர்ந்து வேதாளம் ஒன்று மரத்திற்குப் பின்புறமிருந்து வெளிப்படுகிறது. இளைஞன் திரும்பிப் பார்த்துவிட்டு அலட்சிய பாவத்துடன் மீண்டும் எழுதத் தொடங்குகிறான்.)*

**வேதாளம்:-** ஏ! மானிடப்பதரே! உனக்கு அவ்வளவு அலட்சியமா? நான் யார் தெரியுமா?

**இளைஞன்:-** சே! கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்கலாமின்னா அதையும் கெடுக்க யாராவது வந்துடறாக! இப்ப ஒனக்கு என்ன வேணும்? (பையைத் துழாவிவிட்டு இரண்டு பத்துப் பைசா நாணயங்களை எடுத்து வீசுகிறான்) இந்தா இத எடுத்துக்கிட்டு எடத்தைக் காலிபண்ணு!

**வேதாளம்:-** (காசை எடுத்துப் பார்த்து விட்டு) இது என்ன? எதற்காக இதை என்னிடம் கொடுக்கிறாய்?

**இளைஞன்:-** எங்கிட்ட இதெவிட்டா வேறே காசு கெடையாது! திருவிழா வந்துடிச்சின்னா இவுங்கபாடு கொண்டாட்டம் தான்! ஏதாவது ஒரு வேஷம் கட்டிக்கிட்டு இருக்கறவுங்க உயிரை எடுக்கறாங்க! காசு குடுத்தாலும் வேணாங்கறே! வேறே என்ன தான் வேணும்?

**வேதாளம்:-** (பெரிதாகச் சிரிக்கிறது) பிள்ளாய்! என்னை வேஷக்காரன் என்றா எண்ணிக்கொண்டிருக்கிறாய்? நான் யார் தெரியுமா? நான் விக்ரமாதித்தன் காலத்து வேதாளம்!

**இளைஞன்:-** அடச்சீ! புளுகறதுக்கும் ஒரு அளவேயில்லாமல்ல போயிடிச்சி! நீ விக்ரமாதித்தன் காலத்து வேதாளம்னா அத நம்ப நான் என்ன முட்டாளா? வேதாளம்னா ஒரு முருங்கமரம் இருக்கும், அதுமேல ஒரு பிணம் தொங்கும், அதை எடுத்துக்கிட்டு

விக்ரமாதித்தன், எறங்கினஒடனே வேதாளம் பேச ஆரம்பிக்கும். அது தான் எனக்கு தெரிஞ்ச விக்ரமாதித்தன் கதை. நீ என்னடான்னா ஏதோ ஒருகாட்டு மரத்துலே ஏறிக்கிட்டு நாடகத்துக்கு வேஷம் கட்டிக்கிற மாதிரி கட்டிக்கிட்டு, நான் வேதாளம்னு சொன்னா நம்ப நான் என்ன முட்டாளா?

**வேதாளம்:-** இதையெல்லாம் விளக்கமாச் சொல்ல இப்ப நேரம் இல்லே! இந்த முருங்கமரம், முருங்கக்காயி சமாச்சாரம் எல்லாம் இப்ப அவுட்டேட் ஆயிடிச்சி! அதுனால ஒங்க கண்ணுக்குத் தெரியற மாதிரி ஏதாவது ஒரு உருவம் வேணுமே! இல்லாதபோனா நம்ப மாட்டீங்களே! அதுனால...

**இளைஞன்:-** சரி! சரி! போதும் நிறுத்து. ஒன் கதையெல்லாம் கேக்கற நெலையிலே இப்பநான் இல்லே! எனக்கு என் பிரச்னை தலையை ஒடைக்குது. காசு குடுத்தாலும் வேணாங்கறே! பின்ன என்னதான் வேணும்! என் உயிரை எடுக்கறியா? எடுத்துக்க.. நிம்மதியாப் போயிடும்.

**வேதாளம்:-** ஒன் உயிர் எனக்கு எதுக்கு? இப்ப நான் ஒனக்கு ஒரு கதை சொல்லப்போறேன்! அதைக் கேட்டுப்பிட்டு ஏன் இப்பிடி யெல்லாம் நடக்குது, இதுக்கு யார் காரணம்னு சொல்லணும்! சரியான பதில் சொல்லல்லேன்னா ஒன் தலை சுக்கு நூறா வெடிச்சுப் போயிடும்....!

**இளைஞன்:-** அதுசரி! நீ எதுக்கு எனக்குக் கதை சொல்லணும்! அதெக் கேட்டுப்புட்டு சரியான பதில் சொல்லலைனா என் தலை ஏன் வெடிக்கணும்? இது என்ன தலை எழுத்தா?

**வேதாளம்:-** அதெல்லாம் எனக்குத் தெரியாது! அது என்னோட பழக்கம்! ஆனானப்பட்ட விக்கிரமாதித்தனையே விட்டு வைக்கல்லே. நீ எம்மாத்திரம்! நான் நெனச்சா ஒன்னைக் கொசுவை நசுக்கற மாதிரி நசுக்கிப்பிடுவேன். இருந்தாலும் ஒன்னோட புத்திக் கூர்மையையும் சோதிச்சுப் பாக்கலாமேன்னு ஒரு ஆசை!....

**இளைஞன்:-** சரி! ஒன்னோட ஆசையையும் கெடுப்பானேன்! ஆனா ஒரு கண்டிஷன்!

**வேதாளம்:-** என்ன? என்கிட்டயே கண்டிஷனா? அதெல்லாம் நடக்காது!

**இளைஞன்:-** போனாப் போகுதுன்னா மேலே மேல போறியே! என் கண்டிஷனை ஒத்துக்க முடியாதுன்னா ஒன்பாட்டைப் பார்த்துக் கிட்டு நீபோ! என் பாட்டைப் பாத்துக்கிட்டு நான் போறேன். ஆமாம். கேவலம் ஒரு மனுசன் என்ன கண்டிஷன் போட்டுடப் போறேன்? ஒத்துக்கயேன்?

**வேதாளம்:-** ம்... இந்தக் கேவலமான மனுசங்ககிட்டே யெல்லாம் கண்டிஷன் வாங்கணும்னு என் தலையெழுத்து. சரி சொல்லு...

**இளைஞன்:-** எனக்கு எவ்வளவோ பிரச்சனைங்க! அந்தக் கவலையிலே நிம்மதியை நாடி இங்கே வந்தேன். அதையும் கெடுக்க நீ வந்துட்டே! சரி! ஒன் கதைக்கி நான் சரியான பதிலைச் சொல்லிப் புட்டா. என் பிரச்சனைகள் மூணைச் சொல்லுவேன். அதைத் தீத்து வைக்கணும்... என்ன சொல்றே....?

**வேதாளம்:-** பூ. இவ்வளவுதானா? நா என்னவோன்னு நெனச்சேன்....

**இளைஞன்:-** இப்ப இவ்வளவுதானாங்கறே! அப்பறம் பின்வாங்கக் கூடாது. கண்டிப்பாகச் சொல்லிட்டேன்!

**வேதாளம்:-** ஏன் ஒங்களுக்கெல்லாம் நம்பிக்கைங்கறதே இல்லாம போயிடிச்சி!

**இளைஞன்:-** இப்பல்லாம் யாரை நம்பறதுன்னே தெரியல்லே! நம்பிக்கைத் துரோகம் ரொம்ப சல்லிசாப் போயிடிச்சி!... எங்க அரசியல்வாதிங்க மாதிரி வாக்குறுதிங்களை அள்ளி வீசிப்பிட்டு எலக்ஷன் முடிஞ்சதுக்கப்பறம் எங்களையெல்லாம் திரும்பியே பாக்காதமாதிரி... அம்போன்னு தெருவில விட்டுட்டுப் போயிடக் கூடாது!

**வேதாளம்:-** ஓகோ!.. அப்பிடியெல்லாம் கூட நடக்குதா? எனக்கெதுக்கு அதெல்லாம்? நான் சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட வேதாளம். வார்த்தையின்னா வார்த்தைதான்... என் வார்த்தைதான் எனக்கு உயிர்!

**இளைஞன்:-** சரி! விதி யாரை வுட்டுது.. ஒன் கதையைச் சொல்லு.

**வேதாளம்:-** கதையை நல்லாக் கேட்டுக்க... சரியான பதிலைச் சொல்லல்லேன்னா ஒன்தலை வெடிச்சுப் போயிடும்.

*(வேதாளம் சிரித்துக்கொண்டே மரத்திற்குப் பின்னால் போகிறது. வேதாளத்தின் குரல் மட்டும் ஒலிக்கிறது.)*

**வேதாளம்:-** பாரத தேசத்துல, தமிழ் நாட்டிலே, இராமநாதபுரம், இராமநாதபுரம்னு ஒரு ஊரு. தண்ணியின்னா என்னனு தெரியாத அந்த ஊருலேருந்து, எங்கேயோ பேர் தெரியாத ஒரு சின்ன கிராமத்துலேருந்து, பூமி வெளையாம போன நெலமையிலே வயித்துப் பொழைப்புக்காக, கடுங்குளிரையும் பொருட்படுத்தாம இந்த மலைப் பிரதேசத்துல பல வருஷங்களுக்கு முன்னால் குடியேறினவன் கருப்பண்ணன். வயித்தைச் சுருட்டிப் பிடிக்கும் குளிரா பசியாங்கற போராட்டத்துல வெற்றியடஞ்சது வயித்துப்பசி. மஞ்சள் மலை எஸ்டேட்டிலே டீ இலை பறிக்கும் தினசரிக் கூலியா வேலைக்குச் சேந்தான் கருப்பண்ணன். அன்னிலேருந்து இன்னிக்கி வரைக்கும் அவனோட வாழ்க்கைத் தரத்துலேயோ, வேலையிலேயோ எந்தவிதமான முன்னேற்றமும் இல்லே! ஆனா குடும்பம் மட்டும் அரசாங்கத்தோட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு அடங்காத குடும்பமாப் பெருகிச்சு...

*(இளைஞனின் மீது ஒளி மங்குகிறது. மேடையின் மறுபுறம் ஒளி பரவுகிறது. ஒரு குடிசைக்குள் கருப்பண்ணன் கிழிந்த கம்பளியைப் போர்த்திக்கொண்டு குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான். மழை இடி, மின்னலுடன் பெய்து கொண்டிருக்கிறது. அருகில் மூலைக்கு ஒன்றாக குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அரிக்கன் விளக்கைப் பெரிது செய்துவிட்டு குழந்தைகளைச் சரியாகப்படுக்க வைக்கின்றான். விளக்கில் பீடியைப் பற்ற வைக்கிறான், முகத்தில் பசிக்களைப்பும் கவலையும் தென்படுகிறது.)*

....கருப்பண்ணனின் வழியைப் பின்பற்றினவன் அவன் மருமகன் சின்னான். சென்ற வருடம் பிரசவத்தின் போதுதான் மனைவியையும் பறிகொடுத்திருந்தான் சின்னான். டீ எஸ்டேட்டில் நல்ல மழைக்காலம். தொடர்ந்த, இடைவிடாத மழையின் காரணமாக, இலைபறிக்கும் தொழில் பெரிதும் பாதிக்கப்படுகிறது. பாதிக்கப் பட்டவர்கள் இலை பறிக்கும் தினசரிக் கூலிகள் மட்டுமே. அவர்களில் கருப்பண்ணனின் குடும்பமும் ஒன்று... ஒரு நாள்...

*(தூக்கத்திலிருந்து ஒருசிறுவன் எழுந்து கருப்பண்ணனிடம் வருகிறான்)*

**சிறுவன்:-** தாத்தா...! தாத்தா..! தாத்தாவ்

**கருப்:-** (திடுக்கிட்டு) என்னடா கண்ணா?

**சிறுவன்:-** பசிக்குது தாத்தா....! சாப்பிட ஏதாவது குடேன்!

*கருப்:-* வாடாராஜா! இப்பிடி வந்து படுத்துக்க! ஒங்கப்பன் இதோ வந்துடுவான்! ஏதாவது வாங்கிட்டு வருவான்.

**சிறுவன்:-** போ தாத்தா! காலையிலேருந்து இப்பிடித்தான் ஏதாவது சொல்லி தண்ணியக் குடுத்தே தூங்க வைக்கறே!

*கருப்:-* என்னடா செய்யறது? இன்னிக்காவது எப்பிடி யாவது வேலைபாத்துக் கூலி வாங்கிட்டு வரேன்னு போனான். காலையிலே போனவன இன்னுங் காணமே?

**சிறுவன்:-** வெளியில போயி அப்பா வருதான்னு நான் பாக்கட்டுமா?

*கருப்:-* வேணாம்டா! வெளிலே ஒரே இருட்டு, மழை வேற பேயுது. இங்கே வந்து படுத்துக்கடா!

*(கருப்பண்ணன் கூப்பிடுவதைக் கவனிக்காமல் சிறுவன் வெளியில் போகிறான். அதற்குள் இன்னொரு சிறுவன் விழித்துக் கொண்டு பசிக்கிறது என்கிறான்.)*

*கருப்:-* அடக்கடவுளே! இது என்ன சோதனை? இன்னும் எத்தனை நாளைக்கி இப்பிடிப் பசிபட்டினின்னு அவதிப் படறது? பாழாப்போன மழை இன்னும் விட்டபாடில்லை. மவராசிங்க! அம்மாவும், மகளுமா, இதுங்கள எங்க கால்லே கட்டிப்புட்டு நிம்மதியாப் போய்ச் சேந்துட்டாளுங்க!.... காலையில போன சின்னான் இன்னுங் காணமே!... (இளைஞன் வயிற்று வலியால் துடிக்கிறான்) போதாக் கொறைக்கி இந்த நோக்காட்டுப் புள்ளை வேறே!

*இளைஞன்:-* தாத்தா வலி உயிர் போகுது!... தாங்க முடியல்லி யே! அப்பா இன்னும் வரல்லியா? சின்னவன் முத்து இருட்டுல எங்கியாவது போயிடப்போறான்!... அவனைக் கொஞ்சம் கூப்புடுங்க தாத்தா...!

*கருப்:-* எலேய் முத்து...! முத்து....! எங்கடா போனே? இதைத் தேடவாவது ஒடம்புல தெம்பு இருக்கா? டேய்! முத்து! ஒங்கப்பன் வர்ரப்போ வரட்டும்! உள்ளற வாடா?

*(முத்து அழுதுகொண்டே கையில் இலையுடன் வருகிறான். பின்னால் சின்னான் வருகிறான்.)*

**சின்னான்:-** ஏம்மாமா! தூங்கிட்டீங்களா? இவன வெளியிலே வுட்டுப் போட்டு உள்ளற என்ன செய்யறீங்க?

*கருப்:-* தூக்கமா? ஏதுடா தூக்கம்... ஒரேயடியாத் தூங்கினாத்தான் உண்டு! இவன் ஏன்டா அழுவறான்?

***சின்னான்:-*** எதுத்தவூட்டுல சாப்பிட்டுப் போட்ட எச்சல் எலையை எடுத்து நக்கிட்டு இருக்கான். தூக்கி எறிடான்னா கேக்காம கொண்டு வந்திருக்கான் பாரு (அடித்துப் பிடுங்கி எறிகிறான்.)

*கருப்:-* நம்மளோட இல்லாத கொடுமைக்கி அதுகள ஏன்டா அடிச்சுக் கொல்றே? ஏன்டா சின்னா! இன்னிக்காவது ஏதாவது வேலை... கூலி... கெடச்சுதா?

***சின்னான்:-*** வேலை எங்க மாமா கெடைக்கப் போகுது? படிச்சுப்பட்டம் வாங்கினவுங்களுக்கே வேலைகெடைக்காத இந்தக் காலத்துல எனக்குமட்டும் வேலை அவ்வளவு சுலபமாவா கெடைக்கப் போகுது?... பாழாப்போன இந்த மழையும் விட்ட பாடில்லே!.... மூட்டை தூக்கப் போகலாமின்னா வழக்கமா மூட்டை தூக்கறவுங்களுக்குப் போட்டியா நான் வந்துடறேன்னு என்னை வெரட்டறாங்க...! இந்தா இந்த ரொட்டியைப் புள்ளைங் களுக்கு குடு....

*(இளைஞன் வயிற்றுவலியால் துடிக்கிறான்)*

***சின்னான்:-*** என்ன மாமா! இதுவேறே புதுசா!

*கருப்:-* காலையிலேருந்து வயித்து வலின்னு துடிக்கிறான். நானும் என்னவோ பண்ணிப்பாத்துட்டேன். ஒண்ணுக்கும் சரியாகல்லே! காலையிலேருந்து இந்தப் புள்ளைங்க வேறே பசி, பசின்னு துடிக்குதுங்க, ஒருவளியா அதுகள சமாதானம் பண்ணித்தூங்க வைக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சி! டேய்ராசா பசியா இருந்தாலும் இருக்கும்! இதைக்கொஞ்சம் சாப்பிட்டு பாருடா!

*(ரொட்டியை எடுத்துக் கொடுக்க சாப்பிட்டுப் பார்த்து விட்டு வாந்தி எடுக்கிறான். மற்ற குழந்தைகள் விழித்துக்கொண்டு ரொட்டிக்காகப் போட்டி போட்டுக்கொண்டு போட்டியிடுகின்றன)*

***இளைஞன்:-*** தாத்தா! வலி உயிர் போகுது! ஒரேயடியா உயிர் போயிட்டாலும் பரவாயில்லே! ஒங்களுக்கு ஒருபாரமாவது கொறையும்!

*சின்னான்:-* இப்ப இந்த ராத்திரியிலே என்ன மாமா செய்யறது. எப்பவும் இவ்வளவு மோசமா இருந்தது இல்லியே!

*கருப்:-* டவுன்லே ஆஸ்பத்திரிக்கிக் கூட்டிக்கிட்டுப் போகலாமா?

*சின்னான்:-* ஆசுப்பத்திரிக்கா? வயித்துப் பொளப்பே பெரிசா இருக்கறப்போ, ஆசுப்பத்திரிக்கி எங்க மாமா கூட்டிக்கிட்டுப் போறது? அதுக்குப் பணம் வேணுமே!

*கருப்:-* அதுக்குன்னு...? இவன துடிக்கத் துடிக்க இப்பிடியே விட்டுட முடியுமா? தாலிய அடமானம் வெச்சாவது பாக்க வேண்டியதுதான். தாலி கூட இல்லியே! (கருப்பண்ணன் அழுகிறான்.)

*சின்னான்:-* தாலியத்தான் அடமானம் வைக்கணும்! அஞ்சலை ஞாபகமா அவளோட தாலி எங்கிட்ட இருக்கு. அதை அடமானம் வெச்சு பணம் வாங்கிட்டு வரேன். மெதுவா ஒரு கை புடிங்க கூட்டிக்கிட்டுப் போகலாம்.

*முத்து:-* எங்கே! தாத்தா!.... நானும் வரேன் தாத்தா!

*கருப்:-* டேய்! போறபோது எங்கே போறேன்னு கேக்கக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். அண்ணனுக்கு உடம்பு சரியில்லே! ஆசுப்பத்திரிக்கிக் கூட்டிக்கிட்டுப் போறோம்! நீ தம்பி தங்கச்சிகளைப் பாத்துக்கிட்டு வூட்டுல இருக்கியா?

*முத்து:-* ஆசுப்பத்திரிக்கி நானும் வரேன் தாத்தா!

*கருப்:-* நீ எதுக்குடா! ஆசுபத்திரிக்கெல்லாம் வரக் கூடாது. வந்தா ஊசி போட்டுடுவாங்க!

*முத்து:-* போ! தாத்தா! பொய் சொல்ற! நீ இங்கதான் சாப்பிட ஒண்ணுங் குடுக்க மாட்டேங்கறே! ஆசுப்பத்திரியிலே ரொட்டி, பாலெல்லாம் குடுப்பாங்களாமே!....

(கருப்பண்ணன் சிறுவனை அணைத்துக்கொண்டு அழுகிறான்)

*பின்குரல்:-* (பெரிய சிரிப்புடன்) தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றான் மகாகவிபாரதி!.... இங்கு தனி ஒருவனுக்கில்லை. ஒரு ஜகத்திற்கே உணவில்லை என்ற நிலை உருவாகி இருக்கிறது. அப்படியென்றால்

யாரை அழிப்பது? தனி ஒருவனையா? அல்லது ஜகத்தினையா? 'கரீபி ஹட்டாவ்' என்று முழக்கமிட்டு விட்டு ஒழிக்கப்போவது ஏழ்மையையா அல்லது ஏழைகளையா?

(ஒளி மங்குகிறது. இருட்டு)

## காட்சி 2

(ஆஸ்பத்திரி. வியாபாரி ஒருவர் வருகிறார். எதிரில் வார்டுபாய் வருகிறான்)

வியாபாரி:- ஏம்பா தம்பி! நல்லா இருக்கியா?

வார்டுபாய்:- யாரை, யாரு என்ன கேள்விகேக்றதுன்னு வெவஸ்தையே இல்லாம போயிடிச்சி!...ம்.... செட்டியாரே! நல்லா இருந்தாலும், இல்லேன்னாலும் நாங்கமட்டும் இங்கதான் இருப்போம்....! ஆமா! நீங்க எப்பிடி?

வியாபாரி:- (உடனே ஞாபகம் வந்தவராக) தம்பி.... அந்த வயித்து வலி போகவே மாட்டேங்குது. டாக்டர் இருக்காரா?

வார்டுபாய்:- அவரா?... அவர் போயிட்டாரே!

வியாபாரி:- அய்யய்யோ! போயிட்டாரா! எனக்கு முன்னால அவரே போயிட்டாரே! (அழுகை. ஒரே கூச்சல்)

(நர்ஸ் வருகிறாள் வார்டுபாயிடம்)

நர்ஸ்:- வார்டுபாய்! இது என்னய்யா கூச்சல்! இது என்ன ஆஸ்பத்திரியா இல்ல சந்தைக் கடையா?... ஓ! செட்டியாரா...! ஏன்யா இப்பிடிக் கத்தறீங்க?

வியாபாரி:- நர்சம்மா! நீங்க கூட இருக்கீங்க... என் வயித்துவலி இருக்கு... அவரு போயிட்டாராமே?

நர்ஸ்:- யாருய்யா போயிட்டா? எதுக்குய்யா ஒப்பாரி வெக்கறே?

வியாபாரி:- அதான்....டாக்டரு...அவரு செத்துப் போயிட்டாராமா?

வார்டுபாய்:- யோவ் கிறாக்கி! இதுயாருய்யா! டாக்டரு

வெளியிலே போயிட்டாருன்னு தானே சொன்னேன். ஒலகத்தை வுட்டே போயிட்டாருன்னா சொன்னேன்! ஏன்யா, ஒன் வாயிலே நல்ல வார்த்தையே வராதா?

**வியாபாரி:-** அது தானே பாத்தேன்.! அவரு எப்பிடிப் போவாரு? நான் இருக்கறப்போ! என் வயித்துவலி இருக்க, நீ இருக்க, நம்ப நர்சம்மா இருக்க அவருமட்டும் எப்பிடிப் போவாருன்னு எனக்கு அப்பவே சந்தேகம்!

**நர்ஸ்:-** காலங்காத்தால இது வந்திடிச்சா! செட்டியாரே! வயிறு இருக்கற வரைக்கும் வலின்னு ஒண்ணு இருக்கத்தான் செய்யும்! இப்ப இது என்ன புதுசா? இந்த ஆஸ்பத்திரி ஆரம்பிச்ச நாள்ளேருந்து இருக்கு!

**வார்டுபாய்:-** டாக்டர் ஏதாவது சொன்னா அதைக் கேக்கணும்! வயிறு தான் பெரிசா இருக்குன்னு, நெனச்ச நேரத்துல கெடச்சதை வளைச்சு மாட்டினா, வலிவராம என்ன பண்ணும்?

(டாக்டர் வருகிறார்)

**டாக்டர்:-** நர்ஸ்! இங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க? மெட்டர்னிடி வார்டுல ஒரு அர்ஜண்ட் சிசேரியன் கேஸ். அங்க ஆளு இல்லாம திண்டாடிக்கிட்டு இருக்காங்க! இங்கே கதை அடிச்சுக்கிட்டு இருக்கீங்க? ஓ! செட்டியாரா? வாங்க... வாங்க...! என்ன இவ்வளவு தூரம்?

**வியாபாரி:-** நீங்க எங்கியோ வெளியில போயிட்டீங்கன்னாங்க?

**டாக்டர்:-** என்னங்க செய்யறது? இருக்கறது நான் ஒருத்தன் தான்! மத்த எல்லா டாக்டருங்களும் ஸ்டிரைக்! நானும்சேந்து இருப்பேன். ஏதோ ஒரு சின்ன புரொமோஷன் வர்ர மாதிரி இருக்கு. எதுக்கு இந்த நேரத்துல ஸ்டிரைக், அது இதுன்னு கெடுத்துப் பானேன்னு! ஆமா அது கெடக்கட்டும் ஒங்க விசயம் என்ன?

**வியாபாரி:-** அதாங்க! வயித்துவலி! போகவே மாட்டேங்குதுங்க!

**டாக்டர்:-** அது என்ன பண்ணுது? அது பாட்டுக்கு இருந்திட்டுப் போகட்டும். ஆமா? எங்க தான் வலிக்குது?

**வியாபாரி:-** வயித்துல தாங்க!

*டாக்டர்:-* பாத்திங்களா? இப்புடி மொட்டையா சொன்னா? ஒங்க ஒடம்புல வயிறு எது? ஒடம்பு எது? ஒடம்பு பூரா ஒரே வயிறாத்தானெ இருக்கு?

**வியாபாரி:-** இங்க தாங்க! நேத்தக்கி இங்கவலிச்சுது, இப்ப இங்க வலிக்குது, சுத்திச் சுத்தி வலிக்குதுங்க!

*டாக்டர்:-* அது என்ன உள்ள ஓடிப்புடிச்சு வெளையாடுது போல இருக்கு! ஆமா நான் குடுத்த மருந்தெல்லாம் ஒழுங்கா சாப்ட்டீங்களா?

**வியாபாரி:-** சாப்புட்டேங்க!

*டாக்டர்:-* பின்னே சரியாப்போயி இருக்கணுமே? கன்னா பின்னான்னு கண்டத சாப்புட்டு இருப்பீங்க!

**வியாபாரி:-** இல்லிங்க! நேத்தக்கிக் கூட உபவாசம்ங்க!

*டாக்டர்:-* ஊக்கும்... அதான கேட்டேன்!... அந்த கேர் ஆப்லே கெடச்சதை வளைச்சு மாட்டி இருப்பீங்க! என்ன தோசையிலே ஒரு இருபது, சாப்பாத்தியிலே ஒரு பத்து, பழம், பாலு ஒரு லிட்டர் இவ்வளவு தான் சாப்புட்டு இருப்பீங்க!

**வியாபாரி:-** சேச்சே! அதெல்லாம் ஒண்ணும் இல்லிங்க! முழுப் பட்டினி? கிருத்திகை விரதம் வேறே! அப்பிடி எல்லாம் சாப்பிட முடியுங்களா? ஒரே ஒரு பழந்தாங்க சாப்புட்டேன். அதுக்கப்பறம் தாங்க ரொம்ப வலிக்குதுங்க!

*டாக்டர்:-* என்னது? ஒரே பழந்தானா? இந்த ஒடம்புக்கு? பின்னே ஏன் வலிக்குது?ஆமா என்ன பழம் சாப்பிட்டீங்க?

**வியாபாரி:-** கேரளாவுலேருந்து என் சகலை வந்திருந்தாரா! எனக்கு ரொம்பப் புடிக்குமேன்னு ஒரே ஒரு பழம் வாங்கிட்டு வந்தாரு! பிரியமா வாங்கிட்டு வந்து இருக்காரே! அதுவும் விரதம் வேறே! பழந்தானே பரவாயில்லேன்னு ஒரே ஒரு பலாப்பழந்தாங்க சாப்புட்டேன்.

*டாக்டர்:-* அதானே பார்த்தேன்! ஒரே ஒரு பலாப்பழம்..! செட்டியாரே! நமக்கெல்லாம் வைத்தியம் பார்க்க இங்க முடியாதுங்க!... எங்கியாவது ஒரு வெடர்னரி டாக்டராத்தான் பாக்கணும்!

*வியாபாரி:-* அது யாருங்க? பெரிய ஸ்பெஷலிஸ்டா? கொஞ்சம் ஏற்பாடு பண்ணுங்களேன்!

*டாக்டர்:-* ஆமாம்..... பெரிய உருப்படிங்களுக்கு வைத்தியம் பாக்கற ஸ்பெஷலிஸ்ட்! நான் இப்ப அவசரமா வார்டுக்குப் போயிக்கிட்டு இருக்கேன்.... ஒங்களோட பேச நேரம் இல்லே!

*வியாபாரி:-* போங்க! போங்க! எப்பிடியோ அந்த ஸ்பெஷலிஸ்ட் பாத்தாவது என் வயித்து வலி சரியானாச் சரி!

(போகிறார். காட்சி முடிவு)

## காட்சி 3

(ஆஸ்பத்திரி டாக்டரிடம் கருப்பண்ணனும், சின்னானும் இளைஞர்களை அழைத்துக் கொண்டு வருகிறார்கள்)

*கருப்:-* அய்யா! நேத்துக் காலைலேருந்து என்பேரன் வயித்து வலி, வயித்து வலின்னு துடியாத் துடிக்கறான்யா!

*டாக்டர்:-* ஆஸ்பத்திரிக்கிக் கொண்டு வந்துட்டே இல்லே! நாங்க பாத்துக்கறோம்... மேலே இருக்கிற துணிய எடுய்யா? ஏப்பா குளிறா; மழைவேறே! ஒரு சட்டைகிட்டை போட்டுக்கிட்டு வந்திருக்கக் கூடாது? வெறும் ஒடம்போட கூட்டிக்கிட்டு வந்திருக்கே (சோதனை செய்கிறார்) ஆமா... என்ன சாப்பிட்டான்...?

*சின்னான்:-* என்னத்தங்க சாப்பிடறது? சாப்பிட்டு மூணு நாளாச்சுங்க?

*டாக்டர்:-* ரொம்ப சீரியஸாத்தான் இருக்கு! சாயந்தரம் என்னோட கிளீனிக்குக்கு கூட்டிக்கிட்டு வரியா? (கருப்பண்ணன் சின்னானைப் பார்க்கிறான்) என்ன முழிக்கிறே! முடியாதா? சரி! அட்மிட் பண்ணணும்னு எழுதித்தரேன். கொண்டு போயி அட்மிட் பண்ணு! வார்டுல வேற டாக்டர் வந்து பாப்பாரு! கூட்டிக்கிட்டுப் போ!

(காட்சி முடிகிறது)

## காட்சி 4

*(கருப்பண்ணன் சீட்டை வார்டுபாயிடம் கொடுக்கிறான்.)*

**சின்னான்:-** தம்பி..... இதக்கொஞ்சம் பாரு! என் மகனை அட்மிட் பண்ணனுமாம்! எழுதிக் குடுத்திருக்காங்க! எங்ககூட்டிக் கிட்டுப் போகனும்னு சொல்லுப்பா!

*(வார்டுபாய் சீட்டைவாங்கிப் பார்த்துவிட்டுப் பொடியை உறிஞ்சிக்கொண்டே)*

**வார்டுபாய்:-** இப்ப நீ என்ன பண்றே! இங்கேயிருந்து நேர லெப்டுல போ! அங்கேயிருந்து ரைட்டுல திரும்பினா கேஷுவாலிடி வார்டு வரும். அங்கேருந்து கொஞ்சதூரம் போயி பீச்சாங்கைப் பக்கம் திரும்பினா ஒரு மெடர்னிடிவார்டு வரும். அங்கேருந்து போனா ஒரு லாபர்ட்டி வரும். அங்கேயிருந்து ரைட்லேபோயி, லெப்டுல திரும்பி, நேராப்போனா. இருப்பா எனக்கு மூச்சு வாங்குது... எங்க வுட்டேன்... லாபர்ட்ரிலேருந்து நேரேப் போனா சர்ஜிகல் வார்டு பக்கத்துல, அங்கே போயிவிசாரி....

*(நர்ஸிடம் வருகிறார்கள்)*

**கருப்:-** ஏம்மா இவன அட்மிட்பண்ணனும். எங்கம்மா கூட்டிக்கிட்டு போகனும். ஆஸ்பத்திரி முழுக்க சுத்தியாச்சு. எங்கேன்னு தெரியல்லே!

**நர்ஸ்:-** யோவ்! இது ஸ்பெஷல் வார்டுயா? ஒங்களையெல்லாம் இங்க யாருய்யாவிட்டது? ஜெனரல்வார்டுக்குப் போய்யா அங்க வாரேன்... சோத்துக்கு வழியில்லேன்னா தர்ம ஆஸ்பத்திரிக்கி வந்து எங்க கழுத்த அறுக்க வேண்டியது.

*(மீண்டும் நர்ஸிடம் வருகிறார்கள்)*

**நர்ஸ்:-** (சீட்டை வாங்கிப்பார்த்துவிட்டு) புது அட்மிஷனா? இருக்கற வியாதிக்காரங்களுக்குப் புரொவைட் பண்றதுக்கே எடத்தைக் காணம்! இதுல புது அட்மிஷன் வேறே! இங்கே பெட் ஒண்ணும் காலியில்லே! இங்கே கீழேயே படுக்கவை! வார்டுபாய்!.. இந்த ஆளுக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ணி படுக்க வை! (போகிறாள்)

(இளைஞன் வயிற்று வலியால் துடிக்கிறான். சிறிது நேரம் கழித்து வார்டுபாய் வருகிறான்)

*கருப்:-* ஏம்பா தம்பி! வந்து ரெண்டு மணிநேரம் ஆச்சி! எம் பேரன் வயித்து வலியால துடியாத் துடிக்கிறான். டாக்டருங்க யாருமே வந்து பாக்கல்லியே! எப்ப வந்து பாத்து மருந்து கொடுப்பாங்க?

*வார்டுபாய்:-* ஏன்யா சாவுகிராக்கி! ஒனக்கு ஒண்ணுமே தெரியாதா? என் உயிரை ஏன்யா வாங்கறே? இங்கே இருக்கற டாக்டருங்க எல்லாம் சம்பளம் சாஸ்தி வேணும்னு ஸ்டிரைக் பண்ணிக்கிட்டு இருக்காங்க! இருக்கறது ஒண்னு ரெண்டு டாக்டருங்கதான். அவுங்களும் எப்ப வருவாங்களோ தெரியாது!

*கருப்:-* அப்போ என் பேரனோட கதி?

*வார்டுபாய்:-* அதோகதி! ஒன்னோட பெரிய்ய ரோதனையா யில்ல போயிடிச்சி! இங்கேவா! (கையைச் சுண்டிக் காட்டி) வெவரம் தெரியாம இருக்கியே! இது இருக்கா?... இது இருந்தாத்தான் இங்க எல்லாமே நடக்கும்... நீ எங்களைக் கவனிச்சா நாங்க ஒங்களைக் கவனிப்போம்! ம்... அதுக்கு வழியில்லியா... பின்னே என்ன செய்யறது?... இங்கே ஒரு சிஸ்டர் வரும். அது தான் இங்க எல்லாம்! அதெக் கேளு அது எல்லாம் சொல்லும்....!

(போகிறான்)

(ஒரு அரசியல்வாதி, செயலாளருடன் வருகிறார். நர்ஸ் எதிரில் வருகிறாள்)

*அரசியல்வாதி:-* தங்கச்சி! தங்கச்சி! மருத்துவர் இருக்கிறாரா?

*நர்ஸ்:-* (அதிர்ச்சியுடன்) என்னது? தங்கச்சியா?

*செயலாளர்:-* யக்கா! தப்பாநெனச்சுக்காதீங்க! சிஸ்டருங் கறதைத்தான் எங்க அண்ணன் பாசத்தோட தங்கச்சிங்கறாரு!

*நர்ஸ்:-* (தலையில் அடித்துக்கொண்டு) அக்காவும் வேணாம்! தங்கச்சியும் வேணாம்! ஒழுங்கா சிஸ்டருன்னே கூப்புடுங்க போதும்! டாக்டரைத்தானே பாக்கணும்? வெளியிலே போயிருக்காரு. இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாரு! போயி அவர் ரூம்லே ஒக்காருங்க! (போகிறார்கள்)

**வார்டுபாய்:**-என்ன சிஸ்டர்! காலையிலேயே வந்துட்டா னுங்க போல இருக்கு? என்ன வேணுமாம்? இன்னிக்கி நம்ப வேலை உருப்பட்ட மாதிரிதான்....!

**நர்ஸ்:**-டாக்டரைப் பாக்கணுமாம்! வேறே வேலை இல்லே! கூட ஒருத்தன் போறானே! நல்லா ஏத்த எறக்கமாப் பேசுவான். அங்க வேலை வாங்கித் தரேன், இங்கே அட்மிஷன் வாங்கித் தரேன்னு கண்ட எடத்துல காசு வாங்கி, சாப்பிட்டுடுவான். கடைசியிலே ஒண்ணும் செய்யறது இல்லே! கையால ஆகாதவன்! கிட்டிமுட்டி வெவரம் தெரிஞ்சு பணத்தை ஒதைச்சுக் கேட்டா அய்யா நான் பொது வாழ்விலே இருக்கறவன்... நான் பணம் வாங்கவே இல்லேன்னு ஒரேயடியா சாதிச்சுப் புடுவான். அதோ போட்டுக்கிட்டுப் போறானே புதுசாவேட்டி சட்டை அதுகூட யாரை ஏமாத்தி வாங்கினதோ தெரியல்லே! அவனையும் நம்பி புதுசு புதுசா யாராவது ஏமாந்துக்கிட்டுதான் இருக்காங்க!

**வார்டுபாய்:**-அதெவுடும்மா! ஏமாறறதுக்கு ஆளுங்க இருக்கற வரைக்கும் ஏமாத்தறவுங்க பாடு சல்லிசுதானே?

**நர்ஸ்:**- ஆமாய்யா கதையைக் கேட்டுப்புட்டு சிரிச்சுக் கிட்டு நில்லு... போய்யா போயி வேலையைப்பாரு....

**கருப்:**- அம்மா! காலையிலிருந்து எம்பேரன் வயித்து வலியினால துடிக்கிறான். டாக்டருங்க யாருமே வரல்லே! இங்கே வந்து நாலு மணிநேரம் ஆயிடிச்சி! கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங் கம்மா!

**நர்ஸ்:**- ஏன்யா! நான் இங்க என்ன கதையா பேசிக்கிட்டு இருக்கேன்? நான் ஒருத்தி என்னய்யா செய்ய முடியும்? எல்லாம் எங்களுக்குத் தெரியும் நாங்க பாத்துக்கறோம்!

**வார்டுபாய்:**- சிஸ்டர்! காலையிலேருந்து இந்த ஆளுகூட பெரிய்ய தொந்தரவு, என்னமோ இவனுக்காக மட்டுந்தான்னு இவனுக்கு நெனப்பு! டாக்டருங்க யாரும் இல்லேன்னாலும் புரியல்லே! அட! கையில காசு ஏதாவது வெச்சிருக்கானான்னா அதுவும் இல்லே... ஒரு பீடிக்கிக் கூட வழியில்லேன்னா பாத்துக்கயேன்... சரியான சாவுகிராக்கி!

**நர்ஸ்:**- ஒம்பாடு ஒனக்கு! ஏன்யா இப்பிடி துட்டு, துட்டுன்னு அலையறே?

*வார்டுபாய்:-* சர்தாம் போம்மா! இல்லாங்காட்சி ஒன் ஒழுங்கு தெரியாது? இங்கே இருக்கற மருந்தை எல்லாம் வெளியிலே எடுத்துக்கிட்டுப்போய் விக்கறே! எனக்கு இந்த மாதிரி ஏதாவது சாவுகிராக்கி கெடச்சாத்தானே உண்டு!

*கருப்:-* அம்மா! அய்யா! நீங்க ரெண்டு பேரும் இப்பிடி அடிச்சுக்கற நேரத்துல என் பேரனைக் கொஞ்சம் கவனிக்கக் கூடாதா? கொஞ்சம் பெரியமனசு பண்ணுங்கய்யா!

*நர்ஸ்:-* சொன்னாக் கேக்க மாட்டே? போய்யா நான் வரேன்!

*இளைஞன்:-* தாத்தா! அவுங்கக்கிட்டே ஏந்தாத்தா பேச்சு வாங்கறீங்க? பேசாம வீட்டோட இருந்திருந்தா இந்தப் பேச்சு வாங்கறதாவது மிஞ்சியிருக்குமே?

(நர்ஸ் கையில் மருந்துடன் வருகிறாள்)

*நர்ஸ்:-* என்னய்யா ஒன் கூட பெரிய ரோதனையாப் போச்சி! ஏன் இப்படிக் கத்தி கூச்சல் போடறே? இது ஆஸ்பத்திரி! ஒங்கவூடு இல்லே! இந்தா இத சாப்பிட்டுப்புட்டு கம்னுகெட! ஏய் கௌவா! நீ மூட்டையைக் கட்டு! ஆசுபத்திரிக்கி கொண்டு வந்துட்டே இல்லே. எங்களுக்கு எல்லாம் தெரியும். ஆசுப்பத்திரிக்கி வந்தா அவுங்க அவுங்க டாக்டர் ஆயிடறாங்க! இது தர்ம ஆஸ்பத்திரியா இல்லே தர்மசத்திரமான்னு தெரியல்லே. குடும்பத்தோட இங்க வந்து டேரா அடிச்சுடறாங்க. ம்....ம்...மூட்டையைக் கட்டுங்க. விசிட்டிங் அவர்ஸ் நாலுலேருந்து ஆறு அதுக்குள்ள இங்க வரக்கூடாது!

(காட்சி முடிவு)

## காட்சி 5

*(ஆஸ்பத்திரி. வியாபாரியும் அரசு ஊழியரும் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.)*

*அரசு:-* என்ன செட்டியாரே! ஒடம்புக்கு என்ன? ரொம்ப நேரமா டாக்டருக்காகக் காத்துக்கிட்டிருக்கீங்க போல இருக்கு?

***வியாபாரி:-*** காலையிலேருந்து இங்கதான் இருக்கேன். இதா வரேன்னு டாக்டர் வெளியிலே போனாரு இன்னும் வரல்லே! எனக்கு வயித்துவலி போவேனாங்குது!

***அரசு:-*** ஏன் சாயந்தரம் டாக்டரோட கிளீனிக்குல போயிப் பாக்குறது? நல்லா கவனிப்பாரே?

***வியாபாரி:-*** போகலாம்! அங்க போனா பணம் குடுக்கணுமே? தர்ம ஆசுப்பத்திரி நமக்கு இல்லாம வேறே எதுக்கு இருக்கு? ஏன் நீ போறது?

***அரசு:-*** என்ன வியாபாரி நீ செட்டியாரே! இங்க டாக்டருக்கு நூறு ரூபாய் தள்ளினா இரண்டாயிரம் ரூபாய் இலவசமாப் பாத்துக்கலாம். மருந்து வாங்காமயே நீ இம்பர்ஸ்மெண்ட் வாங்கலாம்! இந்த சவுகரியம் எங்கே வரும்?

*(அரசியல்வாதி நுழைகிறார்)*

***வியாபாரி:-*** அது சரி! இதுக்குத்தான் ஒரு கவர்மெண்ட் உத்தியோகம் வேணுங்கறது!.... இதோ காலங்காத்தால பரிவட்டம் சூழ வந்துட்டானுங்க! தொறந்த வூட்டுல நாய் நொழையற மாதிரி! (பலமாக) அய்யா... வாங்க... வாங்க! ஏது இவ்வளவு தூரம் வணக்கமுங்க (எழுந்து கும்பிடுகிறார்கள்)

***அரசியல்:-*** என்ன செட்டியாரே! எப்பிடி இருக்கீங்க? நலந்தானே?

***வியாபாரி:-*** என்னமோ இருக்கேங்க! இந்த வயித்துவலி போவேனாங்குது. டாக்டரைப் பாக்கலாமின்னு வந்தேன்.

***அரசு:-*** அவருக்கே எங்க வலிக்குதுன்னு தெரியாது! ஒடம்பு பூறா வயிறு! வயிறு வலிக்குதுன்னு மொத்தமாகச் சொன்னாப் போதுமா?

***வியாபாரி:-*** பின்னே எதுக்கு டாக்டர் இருக்காரு? ஒடம்புக்கு என்னன்னு நாம சொல்லி அவரு என்ன வைத்தியம் பாக்கறது? என்னங்க நான் சொல்றது? மாடு, ஆடு, கோழி இதெல்லாம் ஒடம்புக்கு என்னன்னு சொல்லியா வைத்தியம் பாக்கறாங்க! நாம வாயினால சொல்லியே வைத்தியம் பாக்றது இல்லே! என்ன படிப்பு படிச்சிட்டு வராங்கன்னு தெரியல்ல!

*அரசு:-* நீங்க சொல்றது ரொம்ப சரிங்க! இனிமே நீங்க இங்க வராதீங்க! நீங்க கடசீயாப்பாக்க வேண்டிய வைத்தியம் அங்க தான்.... மாட்டு வைத்தியம்...!

*அரசியல்:-* அதுபோகட்டும் செட்டியாரே! வியாபாரம் எல்லாம் எப்பிடி நடக்குது?

*வியாபாரி:-* ஏதோ ஒங்க புண்ணியத்துல நல்லாவே நடக்குதுங்க! எப்பிடியோ அய்யா கொஞ்சம் மனசு வெச்சு அந்த பர்மிட் விசயத்தையும் எனக்கே முடிச்சுக் குடுத்துட்டீங்கன்னா....! ஏதோ என் ஆயிசு இருக்கறவரைக்கும் அய்யா பேரைச் சொல்லி கஞ்சி குடிச்சிக்கிட்டு இருப்பேன்!

*அரசியல்:-* அதுக்கென்ன செஞ்சிட்டாப் போச்சு! (செயலாள ரிடம்) இந்தாப்பா! அடுத்த தடவை டெல்லிக்கீப் போறப்போ இதெ ஞாபகப்படுத்து! செஞ்சிடலாம்! எந்தக்கட்சி ஆண்டா நமக்கு என்ன? நம்பகையில நாப்பது எம்பிங்க இல்லே! அதுபோகட்டும் செட்டியாரே. சாயந்தரம் நம்ப வட்டச் செயலாளர் வருவாரு. இந்த வருசம் செயற்குழுக்கூட்டம் நம்ப ஊர்லதான் போடறதா கட்சி மேலிடம் முடிவு பண்ணியிருக்கு. எலக்சன்வேற வருது பாருங்க. அவுங்க வந்தா நல்லா கவனிச்சு அனுப்புங்க! ஒங்களுக்கெல்லாம் சொல்லணுமா!

*வியாபாரி:-* என்ன அப்பிடிச் சொல்றீங்க! ஒங்களுக்கு இல்லாததா?

*அரசியல்:-* (அரசு ஊழியரிடம்) என்னப்பா! எப்பிடி இருக்கே? வேலையிலே சேர்ந்ததுக்கப்பறம் இந்தப் பக்கமே காணம்? என்ன விஷயம்?

*அரசு:-* அப்பிடியெல்லாம் ஒண்ணும் இல்லீங்க! புதுசா ஆபீஸர் ஒருத்தன் வந்துருக்கான்? சும்மாத் தொல்லை குடுக்கறாங்க! அங்க இங்கே அசையவுடமாட்டேங்கறாங்க! ஒருநாள் லீவு போட்டா மெமோக் குடுத்துடறாங்க! என்னமோ இவன்தான் இந்த கவர்மெண்ட் ஆபீஸையே தாங்கறமாதிரி; இவன மாதிரி எத்தனை பேரைப் பாத்திருப்போம்... அட நிம்மதியாத் தூங்க முடியல்லீங்க.

*வியாபாரி:-* எங்க ஆபீசிலேயே?

*அரசு:-* சட்! சும்மா இருய்யா, நீ வேறே வேதனை!

*அரசியல்:-* ஆமாம். நானுங் கேள்விப்பட்டேன். என்ன ரொம்பத் துள்ரானாமே. அன்னிக்கி அப்பிடித்தான் நமக்கு வேண்டிய ஒருத்தருக்கு வேலை போட்டுக் குடுன்னு சிபாரிசுக் கடிதம் குடுத்தனுப்பிச்சா, அதெல்லாம் முடியாது, எல்லாம் மொறைப்படிதான் நடக்குமின்னு வேறை வேலையைப் பாருன்னு திருப்பியனுப்பிச்சிட்டானாம். என்ன திமிர் அவனுக்கு. என்ன யாருன்னு அவனுக்குத் தெரியாததுபோல இருக்கு. தண்ணியில்லாத காட்டுக்கு மாத்திடுவேன்னு சொல்லிவை.

*வியாபாரி:-* அது கெடக்கட்டுங்க! நீங்க போயி டாக்டரைப் பாருங்க.

*அரசியல்:-* அப்ப நான் வரேன் செட்டியாரே. (போகிறார்கள்)

*வியாபாரி:-* (போனபின்) யோவ்! இதோ போறானே இவன ஒனக்குத் தெரியுமா? எட்டு வருசத்துக்கு முன்னால என் கடையிலே பொட்டலம் கட்டிக்கிட்டு இருந்தான்....ம்... இப்பப்பாரு இவன் தயவுல என் காரியம் ஆகறமாதிரி என்தலை எழுத்து ஆயிப் போயிடிச்சி!... ஏன் ஒம்பொழைப்பு மட்டும் என்னவாம்? பெரிசா என்னமோ எம்.எஸ்.ஸியாமே! அதெப் படிச்சுப்புட்டு கடைசிலே இவன் தயவுலதானே ஒரு குமாஸ்தா வேலை கெடச்சது!

*அரசு:-* தயவு என்ன? சும்மாவா வாங்கிக் குடுத்தான்? சொளையாப் பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் வெச்சுத்தானே அந்த குமாஸ்தா வேலையும் கெடச்சுது? அதைப்பொரட்ட எவ்வளவு கஷ்டப்பட்டேன்னு எனக்குத்தானே தெரியும்?

*வியாபாரி:-* ஓகோ! அதுவும் அப்பிடியா? நானுந்தான் லசலட்சமாய் மொதல் போட்டு வியாபாரம் பண்றேன். இருந்தாலும் இவனுங்களோட தயவு வேண்டியிருக்கு! எந்த ஒரு வேலையினாலும் ஒரு தகுதி வேணும்! எந்த ஒரு தகுதியும் இல்லாம வெறும் வாய் பேச்சை மட்டுமே வெச்சுக்கிட்டுக் காலம்தள்றது இவனுங்களால மட்டுந்தான் முடியும்....ம்.... அவன் அதிருஷ்டம்....! சர்னு மேல போயிட்டான்!

*அரசு:-* நீங்க என்ன புதுசாச் சொல்லிப்புட்டீங்க? இதையே தான் பேரறிஞர் பெர்னாட்ஷான்னு ஒருத்தர் சொல்லியிருக்கார்?

*வியாபாரி:-* என்ன ஷா?

அரசு:- பெர்னாட்ஷா! என்ன சொன்னார் தெரியுமா? Politics is the last refuge for fools & scoundrels! னு.!

வியாபாரி:- ம்... இருக்கட்டும். இருக்கட்டும். என்னமோ இங்கிலீசுல சொல்லியிருக்கார்... அது கெடக்கட்டும். இப்ப இவன் உள்ள போயிட்டான். இப்போதிக்கி வெளியில வரமாட்டான். எனக்கு வயித்தக் கலக்குது. நான் கொஞ்சம்.... போயிட்டு வரேன்.

அரசு:- அய்யய்யோ! அவசியம் செய்யுங்க! கட்டாயம் போங்க! (செட்டியார் போகிறார்)

அரசு:- அய்யய்யோ! இந்த ஆஸ்பத்திரியிலே பாத்ரூம்லே தண்ணியே வராதுன்னு செட்டியாருக்குத் தெரியாதே! இனிமே செட்டியார் வந்தா... பத்து அடி தள்ளியே நிக்கணும்.

## காட்சி 6

(வார்டு. இளைஞன் வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருக்கி றான்)

இளைஞன்:- தாத்தா!... வயித்த ரொம்ப வலிக்குது தாத்தா! உள்ளே என்னமோ ஒடைஞ்ச மாதிரி இருக்கு தாத்தா! என்னால மூச்சு விடமுடியல்லே! என்னப் புடிச்சுக்க தாத்தா! (அலறுகிறான்... கருப்பண்ணனும், சின்னானும் அமுக்கிப் பிடிக்க இளைஞனின் உயிர் பிரிகிறது.)

கருப்:- சின்னா! என்னடாது? இவ்வளவு நேரம் மூச்சு விடாம சுத்திக்கிட்டிருந்தான்... இப்பப் பேசாம கெடக்கானே? எனக்கு பயமா இருக்குடா! அந்த நர்சம்மாவையாவது கூட்டிக்கிட்டு வாடா!

(சின்னான் நர்ஸை அழைத்துக்கொண்டு வருகிறான். நர்ஸ் இஞ்சக்ஷன் டிரேயுடன் வந்து ஊசிபோட முயற்சிக்கிறாள். உடல் சில்லிட்டிருப்பதைப் பார்த்துவிட்டு டாக்டரைக் கூப்பிட ஓடுகிறாள்.)

காட்சி முடிவு

# காட்சி 7

*(அரசியல்வாதி செயலாளருடன் டாக்டர் ரூமில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். டாக்டர்களைப்புடன் உள்ளே நுழைகிறார்)*

*டாக்டர்:-* சே! என்ன வேலை?... பேசாம நானும் ஸ்டிரைக்கிலே சேந்து இருக்கலாம்! (அரசியல்வாதியை நோக்கி) வாங்க! வாங்க! ஏது இவ்வளவு தூரம்?

*அரசியல்:-* கொஞ்ச நாளா ஒடம்பு சரியில்லீங்க! தலை சுத்துது. எதைப் பாத்தாலும் ரெண்டு ரெண்டாத் தெரியுது.

*டாக்டர்:-* அப்பிடியா? மொதல்லே பாத்துட வேண்டியது தான். (பரிசோதனை செய்துவிட்டு) ... ம்...அப்புறம்! ஒடம்புக்கு ஒண்ணும் இல்லீங்க! நல்லாதான் இருக்கீங்க, நீங்க அனாவசியமா அலையக்கூடாது! மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டியதுதான். அதுக்குன்னு ஒடம்பைக் கெடுத்துக்கக் கூடாது.

*அரசியல்:-* என்ன மருத்துவரே! இந்த உடலா முக்கியம்? மக்களுக்குத் தொண்டு செய்ய இல்லாத உடம்பு எதுக்குன்னு அன்னிக்கே எங்க தலைவர் சொன்னார்.

*டாக்டர்:-* எந்தத் தலைவர்? போன மாசத் தலைவரா, இல்லே இந்த மாசப் புதுத்தலைவரா? நீங்க தப்பா நெனச்சுக்கப் படாது. விவரம் தெரியாமதான் கேக்கறேன். நான் பாட்டுக்கு ஒங்க பழைய தலைவரைப் பத்திப் பேசிப்புட்டு ஒங்ககிட்ட மாட்டிக்கக் கூடாது. பாருங்க அதுதான்.

*அரசியல்:-* ஓ! அந்த அருமை நாயகத்தைச் சொல்றீங்களா? அவனெல்லாம் ஒரு தலைவனா? எங்க தலைவர் ஆடிய பாதத்தோட பாதத்தூசிக்கிச் சமம் ஆவானா?

*டாக்டர்:-* ஓ! இப்ப ஆடிய பாதமா? இருக்கட்டும்... இருக்கட்டும்...

*அரசியல்:-* அருமை நாயகத்துக்கு மக்கள கவனிக்க எங்கங்க நேரம் இருக்கு! ஒங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? அவனோட அந்தரங்க விசயங்களப்பத்தி நெறய விசயம் கெடச்சிருக்கு! அடுத்த வாரம் நடக்கப்போற கூட்டத்துல இதை வெட்ட வெளிச்சமாக்கி

அவனை மானத்தை வாங்கல்லே... (ஆவேசமாக மேசையைத் தட்டுகிறார்.)

*டாக்டர்:-* என்ன நீங்க? ரொம்ப உணர்ச்சிவசப்படறீங்க? இது சட்டசபை இல்லீங்க! இது ஆஸ்பத்திரி. காலுல செருப்பு வேறே போட்டுக்கிட்டு வந்திருக்கீங்க. எதுக்கும் இனிமே ஆஸ்பத்திரிக்கி வரப்போ இதெல்லாம் வேணாங்க! எனக்கும் பயமா இருக்கு.

*அரசியல்:-* என்ன நீங்க? எவ்வளவு முக்கியமான விசயத்தைப் பத்திப் பேசிக்கிட்டு இருக்கேன். நீங்க தமாஷ் பண்றீங்க! இது எவ்வளவு முக்கியமான விசயம்?

*டாக்டர்:-* ஆமாமாம்! இது ரொம்ப முக்கியமான விசயம். இதைத் தெரிஞ்சுக்கல்லேன்னா ஜனங்களுக்குத் தலை வெடிச்சுப் போயிடும். தெரிஞ்ச ஒடனே பாருங்க! வெலைவாசிகள் எல்லாம் எறங்கிப் போயிடும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிஞ்சிடும். எவ்வளவு முக்கியமான பாயிண்டைச் சொல்லிப்புட்டீங்க? அதுக்காக ஒங்களுக்குப் பொன்னாடையே போத்தணும். அதுக்கு நமக்கு வசதி இல்லீங்க. மொதல்ல கையைக் குடுங்க.

*அரசியல்:-* அடப் போங்க நீங்க! நான் சொல்றதுல இருக்கற உண்மையான பாயிண்டு என்னன்னு ஒங்களுக்குப் புரியல்லீங்க. நான் எதுக்குச் சொல்லவரேன்னா நேத்திக்குப் புதுசாக் கட்சி ஆரம்பிச்சவுங்களுக்கெல்லாம் பதவி குடுத்து கவுரவம் குடுக்க ஆரம்பிச்சா! என்னமாதிரி பழுத்த பழைய அரசியல்வாதி, கட்சித் தொண்டர்களோட மரியாதை இதெல்லாம் என்னங்க ஆகறது? அதுக்குன்னு ஒரு பாரம்பரியம் வேணாம்?

*டாக்டர்:-* இப்பதாங்க நீங்க சொல்றதுல இருக்கற உண்மையான பாயிண்டு புரியுது. அதாவது ஒங்களுக்கெல்லாம் பதவி குடுக்கல்லே! மக்களுக்குச் சேவை செய்ய வாய்ப்புக் குடுக்கல்லேன்னு வெளியில வந்துட்டீங்க. அது தானுங்களே?

*அரசியல்:-* அதெல்லாம் விடுங்க. ஒங்களுக்குப் புரியாது! எனக்கு அடிக்கடி தலை சுத்துதுங்க, ஒருவேளை பி.பி.யா இருக்குமோன்னு சந்தேகமாயிருக்கு. கொஞ்சம் பாக்கறீங்களா?

*டாக்டர்:-* அவசியம் பாத்துடலாம். அவனவன் கட்சி மாறற வேகத்தைப் பாத்தா நியாயமா எங்களுக்குத்தான் தலை சுத்தணும்.

ஒங்களுக்கே தலை சுத்துதுன்னா கவனிக்க வேண்டிய விஷயம் தான்!... பாத்ரூம் போயிட்டு வரதுக்குள்ளே கட்சி மாறிடறான்னாப் பாத்துக்கங்களேன்.... நான் ஒங்களைச் சொல்லல்லே...! பொதுவாச் சொல்றேன்.

(நர்ஸ் அவசரமாக வருகிறாள். அவள் குரலிலும், முகத்திலும் பதற்றம் தெரிகிறது.)

நர்ஸ்:- டாக்டர்! அந்தப் பதிமூணாம் நம்பர் பேஷண்ட்...

டாக்டர்:- பிளீஸ் வெயிட்! நான் பேஷண்டைக் கவனிக் கட்டுமா இல்லே நீங்க சொல்றதைக் கேக்கட்டுமா? (அரசியல் வாதியிடம்) பி.பி. எல்லாம் நார்மலாத்தாங்க இருக்கு.

செயலாளர்:- அதான் ஒண்ணுமில்லேன்னு டாக்டர் சொல்லிப் புட்டாரே! வாங்க தலைவரே போகலாம்!

டாக்டர்:- வந்ததுலேருந்து ஒங்களக் கேக்கணுமின்னு நெனைக்கறேன் ஆமா. இது யாருங்க புதுசா?

அரசியல்:- இவரத் தெரியாதுங்களா? இது நம்ப பதினெட் டாம் வட்ட செயலாளருங்க! எனக்கு வலதுகை மாதிரி அதோட... ஹி...ஹி.... எனக்கும் செயலாளர் மாதிரி.

டாக்டர்:- அப்போ அந்த ஒம்பது இப்ப இல்லீங்களா? நல்லாவே வளத்து விட்டிருக்கீங்க!

அரசியல்:- இன்னும் வளர வேண்டியவருங்க! இப்பதான் அரசியல் அரிச்சுவடியே படிச்சுக்கிட்டு இருக்காரு! ரொம்ப நல்லவருங்க!

டாக்டர்:- இருக்கட்டும்... இருக்கட்டும்...

செயலாளர்:- அப்படியே நம்ம தலைவருக்கு ஒரு டானிக் ஆஸ்பத்திரியிலேருந்து குடுத்தீங்கன்னா...

அரசியல்:- நீங்க ஒண்ணும் தப்பா நெனச்சுக்காதீங்க!.... என் மேல் அவருக்கு எவ்வளவு பாசம் பாத்தீங்களா? அதான் சொல்றாரு!

டாக்டர்:- அதுனால என்னங்க... பரவாயில்லே! ஒரு டானிக் எழுதிக் குடுக்கறேன்... அதைத் தண்ணியிலே கலந்து... சேச்சே! அது இல்லேப்போ! இது வெறும் குடிக்கற பச்சைத் தண்ணியில கலந்து... ஏங்க அதுவேற உண்டா?

*அரசியல்:-* என்னங்க செய்யறது? பொது வாழ்வுல இதெல்லாம் சகஜம்! எதிர்காலத்துல மது விலக்கு அது இதுன்னு வந்துட்டா எப்பிடியிருக்குமின்னு சொல்ல முடியாது பாருங்க. அதுனால தான்..

*டாக்டர்:-* அதுனால என்னங்க? சட்டமெல்லாம் நம்பள என்னங்க பண்ண முடியும்? எதுக்கும் மருந்து சாப்பிடறப்போ அது வேணாங்க! (மெதுவாக) அதனாலதான் இந்த ஆளுக்கு பாக்றதெல்லாம் ரெண்டு ரெண்டாத் தெரியுதோ என்னமோ?

*நர்ஸ்:-* டாக்டர்! அந்தப்பதிமூணாம் நம்பர் பேஷண்ட் நெலமை ரொம்ப கிரிட்டிக்கலா இருக்கு.... பல்சே இல்லே!

*டாக்டர்:-* இஸ் இட்?... நான் வரேன்... (அரசியல்வாதியிடம்) அப்போ நீங்க கிளம்புங்க! ஒங்களுக்கு வேலை நிறைய இருக்கும்....

*(போகிறார்கள்)*

*டாக்டர்:-* ஒரு நிமிஷம்... நீங்க அடிக்கடி ஆஸ்பிடலுக்கு வாங்க! அது எங்களுக்கும் நல்லது... ஆனா அடுத்ததடவை வரப்போ இந்த வலதுகை வேணாங்க... அதை வீட்டுலேயே விட்டுட்டு வந்துடுங்க!

*அரசியல்:-* சரிங்க... (போகிறார்கள்)

*டாக்டர்:-* வாங்க சிஸ்டர் போகலாம்... வேறே யாராவது பேஷண்டுங்க இருக்காங்களா?

*நர்ஸ்:-* அந்த வயத்து வலி செட்டியார்தான் இருக்காரு- இன்னிக்கி எப்பிடியும் ஒங்களைப் பாத்துட்டுத்தான் போறதுங்கற முடிவோட வந்திருக்காரு!

*டாக்டர்:-* அந்த வயத்துவலி செட்டியாரா?... பிளீஸ் அவரை மட்டும் தயவு பண்ணி உள்ளே விட்டுடாதீங்க! எப்பிடியாவது சமாளிங்க! இப்ப வந்த கேசுங்களைத்தான் ஒண்ணும் பண்ண முடியாது!... ஒலக்கை மாதிரி இருக்கான் இவனுக்கெல்லாம் ஒடம்புக்கு என்ன கேடு? பதவியையும், பெயரையும் எந்த அளவுக்கு மிஸ்யூஸ்பண்ண முடியுமின்னு நல்லாக்கத்து வெச்சிருக்கானுங்க! பி.பி.ன்னு சொல்லிக்கறது ஒரு பாஷனாப்போயிடிச்சு! அளவுக்கு மீறித் தண்ணியடிச்சுப்புட்டு தலைசுத்துதுன்னு இங்கே வந்து நம்ப கழுத்தை அறுக்கறானுங்க! இவனுங்கள நாம கவனிக்கலைன்னா

நாளைக்கி சட்ட சபை, பார்லிமெண்டுன்னு நம்ப பேரை நார் நாரா இழுத்துக் கிழிச்சுப் புடுவாங்க! இவுங்களை எல்லாம் கட்டி அழுகணும்னு நம்ப தலை எழுத்து. வாங்க சிஸ்டர்.... நாம்ப போயி ரெண்டு பேஷண்டுகளைக் கவனிக்கலாம்.

*(காட்சி முடிவு)*

## காட்சி 8

*(கருப்பண்ணன், சின்னான் இருக்குமிடத்திற்கு டாக்டர் வருகிறார். இளைஞன் அசையாமல் அலங்கோலமாகக் கிடக்கிறான்.)*

**நர்ஸ்:-** டாக்டர்! மூணு நாலு மணி நேரத்துக்கு முன்னால வயித்துவலின்னு இந்தப் பேஷண்டை அட்மிட் பண்ணினோம்! வயித்துவலின்னு கத்தினானேன்னு ஒரு அனால்ஜின் இஞ்சக்ஷன் குடுக்கலாமின்னு எடுத்துக்கிட்டு வந்தேன்... ஒடம்பு சில்லிட்டுப் போயிருக்கு... நோ பல்ஸ் டாக்டர்.

*(டாக்டர் டெஸ்ட் செய்துவிட்டு.. கையைக் கீழே போடுகிறார்)*

**டாக்டர்:-** சிவியர் அப்பெண்டிசைடின்! பர்ஸ்ட் ஆகியிருக்கு. ஒடனே ஆப்ரேஷன் பண்ணியிருக்கணும். இவ்வளவு நேரம் என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க? ஒடனே எனக்குச் சொல்லி யனுப்பிச்சிருக்க வேணாம்? ஒங்களோட carelessனால ஆஸ்பிடலுக்கு கெட்டபேரு!

*(ஸ்டெதஸ்கோப்பை மடக்கி எடுத்துக்கொண்டு கருப்பண்ணனிடம் திரும்பி)*

ஏன்யா ஒனக்குப் புத்திவேணாம்? இவ்வளவு சீரியஸ் ஆனதுக்கப்பறம் இங்கே கொண்டு வரது? அப்பறம் ஆஸ்பத்திரிக் காரங்க சரியா கவனிக்கலைன்னு எங்களைத் திட்டறது... I can't do any thing, Let them take the body!

*(டாக்டர் நர்ஸ் விவாதம்)*

**டாக்டர்:-** You are so careless. If I observe, this again, I will see that you will be discharged from service.

*(டாக்டர் போகிறார்.)*

நர்ஸ்:- (வார்டுபாயிடம்) பாத்தியாப்பா? காலங் காத்தால ஒன்னால எனக்குப் பாட்டு! இவ்வளவு சீரியஸா இருக்குன்னு மொதல்லயே எனக்குச் சொல்லியிருக்க வேணாம்?

வார்டுபாய்:- நல்லாயிருக்குதே கதே! அதுக்கு நான் என்னம்மா பண்ணுவேன்? ஒருத்தனும் கெடைக்கலேன்னா யாருடா இளிச்ச வாயன்னு பாத்துட்டு எங்கிட்டஏம்மா சத்தம் போடறே! ஒன் சோலியைப் பாத்துக்கினு போவியா?

நர்ஸ்:- சர்தான் போய்யா! இல்லாதபோனா ஒன் லட்சணம் தெரியாதாங்காட்டியும்! ஒனக்கு ரெண்டு கையும் பத்தாது, சட்டையிலே இருக்கற பாக்கெட் முச்சூடும் பத்தாது! அசந்தா அந்த பொணத்துங்கிட்டக் கூட காசு புடுங்கிடுவே!

(திட்டிக்கொண்டே போகிறாள்)

கருப்:- ஏம்பா! என்ன ஆச்சு? ஏன் எல்லோரும் ஆளுக்கு ஆள் சத்தம் போடறீங்க? எம்பேரனுக்கு என்னய்யா ஆச்சு?

வார்டுபாய்:- (அலட்சியமாக).... ம்...அவன்போயிச் சேந்துட்டான். சீக்கிரமே ஏன் கொண்டு வரலேன்னு டாக்டர் சத்தம் போடறார்.

(கருப்பண்ணனும் சின்னானும் இளைஞன்மீது விழுந்து அழுகிறார்கள்)

நர்ஸ்:- (ஒரு ரிஜிஸ்டரை எடுத்துக்கொண்டு வந்து வார்டு பாயிடம் கொடுக்கிறாள்.)இந்தாப்பா! இந்த ரிஜிஸ்டர்லே அந்த ஆளுங்கிட்டக் கையெழுத்து வாங்கிட்டு வா!

வார்டுபாய்:- இந்தாய்யா! இதுல ஒரு கையெழுத்துப் போடு!..ம் கையெழுத்துப் போடத் தெரியாதா?... சரி எடதுகைப் பெருவிரலை இப்பிடிக் கொண்டா! (பேனாவை எடுத்து மையைத் தடவி முத்திரை வாங்குகிறான்.) ம்.. ஆனது ஆயிப் போயிடிச்சு! இனிமே என்ன செய்யறது?... ஏம்பா, பாடிய இப்பவே எடுத்துக் கிட்டுப் போறியா இல்லெ நாளைக்கி எடுத்துக்கறியா? எனக்கு டூட்டி முடிஞ்சு போச்சு! சீக்கிரம் போகணும். இப்ப இல்லேன்னா கெடங் குக்குல போட்டிடுவோம். அப்பறம் பாடி எப்பக் கெடைக்குமின்னு சொல்ல முடியாது... இங்கே வா! கையில எவ்வளவு பணம் வச்சிருக்கே? எனக்கு நேரம் ஆயிடிச்சி! சீக்கிரம் குடு!

கருப்:- (ஆவேசத்துடன்) டேய்! என்ன பொளைப்புடா பொளைக்கறீங்க? நானும் போனாப்போகுது, போனாபோகுதுன்னு

பாத்துக்கிட்டே இருக்கேன். நீங்கபாட்டுக்கு பேசிக்கிட்டே போறீங்களே? ஒரு பொட்டுமருந்து குடுக்காம இவன இப்பிடியே கத்திக் கத்தி சாக அடிச்சுப்பிட்டு இப்பத் தூக்கு தூக்குங்கறிங்களே! தூ... நீங்கள்ளாம் மனுசங்க தானா? ஒங்களுக்கெல்லாம் மனுசத் தன்மையே இல்லாம போயிடிச்சா! அட! ஒருத்தரைக் காப்பாத்தறதும், இல்லாததும் நம்பகையிலே இல்லே! இருந்தாலும் இங்க கொண்டு வந்தா காப்பாத்த ஏதாவது முயற்சியாவது செய்வீங்கங்கற நம்பிக்கையினாலே தானேடா காசை காசுன்னு பாக்காம, குடிக்கக் காசு கூட இல்லாத நெலையிலே பொண்டாட்டி தாலியை வித்து இங்க கொண்டு வந்தோம்! இப்பிடி ஒருபொட்டு மருந்து குடுக்காம சாக அடிச்சுப் பிட்டு செத்ததும் தூக்கு தூக்குங்கறீங்களே, நீங்கள்ளாம் மனுசங்க தானா? தூ....

(அழுகிறான். கூட்டம் கூடுகிறது)

*அரசு:-* (வார்டுபாயிடம்) ஏம்பா? என்ன ஆச்சு?

**வார்டுபாய்:-** (அலட்சியமாக) அட! இந்தக் கெளவனோட பேரன் செத்துப்பூட்டான்யா! அதுக்குத்தான் இந்தக் கெளவன் என்னமோ இன்னிக்கித்தான் புதுசாச் சாவைப் பாக்கற மாதிரி கத்திக் கூச்சல் போடறான்யா!

*அரசு:-* என்னது? செத்துப்போயிட்டானா?... அதெ எவ்வளவு அலட்சியமாச் சொல்றான் பாத்திங்களாய்யா? இந்த ஆஸ்பத்ரிக்காரங்க எல்லாருமே இப்பிடித்தான். இவுனுங்களுக்கு மனுச உசுறான்னா மசிருக்குச்சமானம்... எதுக்கெடுத்தாலும் லஞ்சம்! எங்கபோனாலும் ஊழல். இப்பிடியே போனா ஊருல மழை எப்பிடியா பேயும்?

**வார்டுபாய்:-** ஆமா! இவுஹ பெரிய்ய ஒழுங்கு! பொறுப்பையும் லஞ்சத்தையும் பத்தி நீ பேச வந்துட்டியா? அய்யா நீங்க எல்லாரும் இவரோட யோக்யதையும் கொஞ்சம் கேளுங்க. ரெண்டு வருசத்துக்கு முன்னால தணிகாசலம், தணிகாசலம்னு ஒருத்தர் ஒங்க ஆபீஸிலேருந்து ரிட்டயர் ஆனாரே, நெனவு இருக்கா! நாப்பது வருசம் ஓடாஒழைச்சு ரிட்டயர் ஆனதுக்கப்பறம் பென்சன் பணத்துக்கு நடையா நடந்தாரு! முழுசாச்சம்பளம் வாங்கற போதே காலம் தள்ளமுடியாத இந்தக் காலத்துல, பென்சன் பணமும் கெடைக்காத, அந்த மனுசன் என்னய்யா பண்ணுவான்? இனிமே என் ஆயிசுல பென்சன் பணத்தை வாங்க முடியாது, இப்பிடி

வறுமையிலேயும், வியாதியிலேயும் சாகறதை விட ஒரேயடியா வெசத்தைத்தின்னு செத்துடலாமின்னு அந்த மனுசன் மூட்டைப் பூச்சி மருந்தைச் சாப்பிட்டு இந்த ஆஸ்பத்திரியிலே தான் உயிரைவுட்டான்... அது வேற யாரும் இல்லே! என் மாமன்... பொறுப்பையும் லஞ்சத்தையும் பத்திப் பெரிசாப் பேச வந்துட்டே!

*அரசு:-* அதுக்கு நாங்க என்னய்யா பண்ண முடியும்? நான் எல்லாத்தையும் ஒழுங்காத்தான் செஞ்சேன்! மேல் எடத்துலேருந்து உத்தரவு வரல்லே! எங்கியோ சில காகிதத்துல கையெழுத்து விட்டுப் போச்சுன்னு திரும்பி வந்துடிச்சி!

*வியாபாரி:-* ஆமா! இப்பிடிச் சொல்லி தப்பிச்சுக்கப் பாருங்க! அவுங்க மனுச உயிரோட பழகறாங்க. அதனால அது செத்துப் போறது ஒடனே தெரியுது? ஆனா நீங்க? காகிதத்துக் கூடப் பழகறீங்க! ஒவ்வொரு காகிதத்துக்கும் பின்னால ஒரு உயிர் இருக்குன்னு யாராவது என்னிக்காவது நெனச்சுப் பாத்திருக்கிங்களா? காகிதத்தக் கட்டி வெச்சு, கட்டிவெச்சு எத்தனை பேரோட உயிரை எடுக்கறீங்க? என்னிக்கி இந்த சிவப்பு நாடாத்தனம் ஒழியுமோ அன்னிக்கித்தான் இந்த நாடு உருப்படும்!

*அரசு:-* ஆமா! இவுஹ பெரிய்ய ஒழுங்கு? ஏன்யா வியாபாரத்துல நீ பண்ணாத அட்டகாசமா? எதுல எதைக் கலக்கனுமின்னு வெவஸ்தையே இல்லாம போயிடிச்சு! அரிசியிலே கல்லைக் கலக்கறீங்க! ரவையிலே மண்ணைக் கலக்கறீங்க! கேவலம் மண் எண்ணெய்யைக் கூட விட்டு வைக்கல்லே! அதுலேயும் கலப்படம். பட்ஜெட் வரதுக்குள்ள எது எது வெலை ஏறப் போகுதுன்னு நல்லா தெரிஞ்சுகிட்டு அதைப் பதுக்கி வெச்சுக்கிட்டு பின்னால கொள்ளை லாபம் அடிக்கறிங்க! ஒரு D.A. குடுக்கறதுன்னு அறிவிக்கறதுக்கு முன்னால மார்கட்டுல கத்தரிக்காயிலேருந்து கடலை எண்ணெய் வரைக்கும் விலை கிடுகிடுன்னு ஏறிப்போயிடுது!.. ஏன்யா? பஞ்சப் படினா என்னன்னு தெரியாத கூலி வேலைக்காரங்களையும், பாமரஜனங்களையும் பத்தி என்னிக்காவது நெனச்சுப் பாத்திருக்கீங்களா? அட! சின்ன குழந்தைங்க! அதுங்க என்னய்யா பாவம் பண்ணிச்சுங்க? அதுங்களுக்குக் குடுக்கற பால் பவுடரைப் பதுக்கி வெச்சுக் கொள்ளை லாபம் அடிக்கலே!

*வியாபாரி:-* அட சர்த்தான் போய்யா! இங்கே யாருய்யா ஒழுங்கு? நாடு போறபோக்கைப் பாத்தா எதுத்தாப்புல இருக்கற வன்லே யாரு யோக்யன், யாரு அயோக்கியன்னு சொல்ல முடியாத

அளவுக்கு ஊழல் தலைவிரிச்சு ஆடுது! அப்பப்ப இந்த அரசியல்வாதிங்க.. செலவுக்குப் பணம்வேணுமே... அதுக்காக அந்த நிதி இந்த வசூல்னு ஆளுங்கட்சியிலேருந்து எதிர்க் கட்சி வரைக்கும் எங்களைக் கசக்கிப் பிழிஞ்சா நாங்க பணத்துக்கு எங்கய்யா போறது? பொறைதயலா வெச்சு இருக்கோம், இவனுங்க கேட்டதும் ஒடனே வெட்டி எடுத்துக்கிட்டு வந்து குடுக்க? நீ எப்பிடி வேணும்னாலும் காசு சம்பாதிச்சுக்க, ஆனா எங்களுக்குக் குடுக்க வேண்டிய மாமூலை மட்டும் குடுத்திடுன்னு எங்களுக்கு வழி காமிச்சுக் கொடுத்ததே இவுனுங்கதானே?... அது போகட்டும். ஒங்க லட்சணம் என்னய்யா வாழுது? அஞ்சு வருசத்துக்கு ஒருதடவை ஒங்க கிட்டே ஒட்டுக் கேக்க வாரானுங்களே அவனுங்க அடுத்த எலக்ஷன் வர்ற வரைக்கும் அதே கட்சியிலேயேதான் இருப்பானா, வேறே கட்சிக்குப் போவானா, இல்லே! அவனே புதுசா ஒரு கட்சி ஆரம்பிப்பானான்னு நிச்சயமா யாருய்யா சொல்ல முடியும்? நாளைக்கி ஒரு பேச்சு, பொழுதுக்கு ஒரு நடிப்பு! சட்டையை மாத்திக்கற மாதிரி கட்சியை மாத்திக்கிட்டு ஜனநாயகத்தோட புனிதத் தன்மையையே கற்பழிக்க றாங்களே! நீங்களும் அதெல்லாம் பாத்துக்கிட்டு, ஒடனே மறந்துட்டு அவுங்க பேசறதுக்கெல்லாம் கையைத் தட்டிக்கிட்டு வெக்க மில்லாம வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்...

*(அரசியல்வாதி கூட்டத்தை விலக்கிக்கொண்டு இறந்து கிடக்கும் இளைஞனைப் பார்த்து கண்ணீர் வருவது போல முகத்தைத் துடைத்து கொண்டு)*

***அரசியல்:-*** ஆருயிரே! உன்னைக் கொன்று விட்டார்களா இரக்கமற்ற இந்தப் பாவிகள்? இந்த நாட்டின், வளமான, எதிர்காலப் பிரஜையினை இப்படித்தானா நடத்துவது? மக்களிடையே மனிதத் தன்மை குறைந்து கொண்டே வருகிறது என்பது வருந்தத்தக்க, வேதனைக்குரிய, வெட்கக்கேடான சூழ்நிலை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இன்றய அரசியலில், அவமானச் சின்னங்கள் உருவாகி விட்டன! இப்படிப்பட்ட ஒரு கேவலமான சூழ்நிலை உருவாகும் என்று அன்றே எங்கள் தலைவர் சொன்னார். அதற்கு உங்கள்பதில் தான் என்ன?... ஏ! பாரதமே! என்று கண் நீ விழிக்கப் போகிறாய்? நாங்கள் தேர்தலிலே போட்டியிடுகிறோம் என்று சொன்னால் அதற்கு எங்களுக்குப் பதவிமீது மோகம் என்று நீங்கள் தவறாகக் கருதக் கூடாது! உங்களைப்போல் ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி வர்க்கத்திற்கு, சமுதாயத்தின் கீழ் மட்டத்து

மக்களுக்கு உதவத்தான் நாங்கள் போட்டியிடுகிறோம் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பதவி என்பதை உங்களுக்கு உதவ நினைக்கும் எண்ணத்திற்குக் கருவியாக மட்டுமே நினைக்கிறோம்! எந்த நேரத்திலும் இந்தப் பதவியைத் தூக்கி எறிய நாங்கள் தயார்! இன்றய தினம் எங்கள் ஆட்சி மட்டும் ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்தால் இன்று இந்த மருத்துவமனையிலே நடந்துவிட்ட கண்ணீர்க் காவியம். இதோ இந்த மருத்துவ மனையிலே நடந்து முடிந்த சோக வரலாறு; இதோ இந்த மருத்துவமனையிலே ஒலித்துக் கொண்டிருக்கிறதே ஒரு அழுகை ஓசை; இதோ இந்த மருத்துவமனையிலே நடைபெற்றிருக்குமா என்று கேட்டால் நிச்சயமாக நடந்து இருக்காது என்றுதான் ஆணையிட்டுக் கூறுவேன். எனவே மக்களே! இனியாவது ஒரு ஒளிமயமான எதிர்காலம் உருவாக வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் அதற்கு எங்களை நம்புங்கள்! நம்புங்கள்....

(வார்டுபாய் சோடாவுடன் போய்க் கொண்டிருந்தவன், பேச்சைக் கேட்டுவிட்டு நிறுத்தியதும் உடைத்துக் கொடுக்கிறான்)

*வார்டுபாய்:-* ஆரம்பிச்சிட்டானில்லே இனி ஓயமாட்டானே! அடுத்த எலக்ஷன் வர்றவரைக்கும் ஓயமாட்டான். இப்பிடிப் பேசிப் பேசியே நாட்டைக் கெடுத்துப்புட்டானுங்க! எங்கியாவது எள்வு விளுந்தா இவனுங்களுக்குக் கொண்டாட்டம்! அதைப் பேசிப் பேசியே அடுத்த எலக்ஷனிலேயும் ஜெயிச்சிடுவானுங்க! அதையும் நம்பி நாமளும்தான் ஏமாந்துக்கிட்டு இருக்கோம்! அவனுங்களைச் சொல்லி என்ன குத்தம்? நமக்கு புத்தியில்லே! ம்...எரியற வூட்டுலே புடுங்கினது ஆதாயம்!

(இவர்களுக்கு நடுவில் தலையில் கையை வைத்துக்கொண்டு கருப்பண்ணன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். வெளியில்போன சின்னான் வருகிறான்).

*சின்னான்:-* மாமா! எங்கெல்லாமோ அலைஞ்சு திரிஞ்சு பாத்துட்டேன்! பொணம்னா ஒரு வண்டிக்காரனும் வரமாட்டேங் கறான்! ஒரே ஒரு டாக்ஸிக்காரன் மட்டும் வரேன்னான். அவனும் இருநூறு ரூபாய் கேக்கறான்! அவ்வளவு பணத்துக்கு எங்கமாமா போறது?

*கருப்:-* அவ்வளவு பணத்துக்கு எங்கபோறதா? இதை எடுத்துக்கிட்டு மட்டும் போயி என்ன செய்யறதாம்? அதோ தெரியுது

பாருடா சுடுகாடு! நேரா இங்கேயிருந்து எடுத்துக்கிட்டுப்போயி கொளுத்திப்புட்டுப் போகலாம் வாடா!

**சின்னான்:-** மாமா! என்ன சொல்றீங்க? அப்பிடி செஞ்சுப்பிட்டா ஊர்லே என்ன மாமா சொல்லுவாங்க? அவுங்களுக்கு நாம் என்ன பதில் சொல்றது?

**கருப்:-** அடப்போடா ஊரும் இவனும்! மனுசன் உயிரோடு இருந்தபோது காட்டின மரியாதைப் போதும்! பெரிய்ய... சடங்கு... அது ஒண்ணுதான் பாக்கி! இந்த சடங்கு சம்பிரதாயம் இதெல்லாம், காசு பணத்தோட, வசதியோட இருக்கறவுங்களுக்குத் தான்.... ஒன்னை, என்னை மாதிரி அன்னாடங் காச்சிகளுக்கு இல்லே! நமக்கு வயித்துப் பொளப்பே பெரிய சடங்குதான். டேய் இவ்வளவு நேரம் இவுங்கள்ளாம் என்னன்னமோ பேசினாங்களே ஒனக்கு ஏதாவது புரிஞ்சுதா? புரியாது! ஏன்னா நாம போக வேண்டிய தூரம் இன்னும் ரொம்ப இருக்கு! நாமள்ளாம் வாயிருந்தும் ஊமைங்க! நம்பளோட பலவீனம்தான் இவுங்களோட பலம்!..

*(என்று கருப்பண்ணன் வார்டுபாயைச் சுட்டிக்காட்டுகிறான். வார்டுபாய் டாக்டரையும், டாக்டர் நர்ஸையும், நர்ஸ் அரசு ஊழியனையும், அரசு ஊழியன் வியாபாரியையும், வியாபாரி அரசியல்வாதியையும், கடைசியாக அரசியல்வாதி மக்களையும் சுட்டிக் காட்டுகிறான்)*

காட்சி முடிவு.

## காட்சி 9

*(மேடையில் ஒளி. இளைஞன். மீண்டும் வேதாளம்)*

**வேதாளம்:-** ஏ! மனிதா! இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தினமும் நீ சந்தித்திருப்பாய்! இன்னமும் சந்திப்பாய். இதற்கெல்லாம் உன்னுடைய பதில் என்ன? ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது? இதற்கெல்லாம் யார் காரணம் என்று உடனே நீ பதில் சொல்லா விட்டால் உன் தலை சுக்கு நூறாக வெடித்து விடும்!

**இளைஞன்:-** (சிறிது நேர யோசனைக்குப்பின்) இது மிகப் பெரிய பிரச்னை! இது சமுதாயத்துல புரையோடிப்போன புண்! இவ்வளவுக்கும் காரணம் மக்களின் பொறுப்பற்ற தன்மை' அடுத்தவன் எப்படிப் போனால் என்ன, என்காரியம் எப்படியு

நடந்தே தீர வேண்டுமென்ற சுயநலம்! மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் சொன்னான்-

திட்டம்போட்டுத் திருடற கூட்டம்
திருடிக்கொண்டே இருக்குது-அதைச்
சட்டம் போட்டுத் தடுக்கற கூட்டம்
தடுத்துக்கொண்டே இருக்குது!
திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது!

சட்டம், ஒழுங்கு இதெல்லாம் மக்களை நெறிப்படுத்த ஓரளவுக்குத்தான் உதவும். ஆனால் மக்களுக்குப் பொறுப் புணர்ச்சியும், கொடுமைகளை எதிர்த்துக் குமுறும் நெஞ்சமும் இல்லாமல் போனால் எதுவும் செய்யமுடியாது.

பாதகம் செய்வோரைக் கண்டால்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!
-என்றானே மகாகவிபாரதி.

இன்றைய சமுதாயக் கொடுமைகளையும், அநீதிகளையும் கண்டு காறி உமிழவேண்டுமென்று ஒவ்வொருவரும் உமிழ ஆரம்பித்தால் இன்று சுற்றியிருக்கும் உப்புக்கடல்களைவிட உமிழ்நீர்க்குளங்களே நிரம்பி வழியும்.

மக்களுக்கு என்று பொறுப்புணர்ச்சிவரும்! அவர்கள் என்று சிந்திக்கத் தொடங்குவார்கள், சமுதாயக் கொடுமைகளைக்கண்டு கொதித்தெழுவார்கள் என்பது எனக்கு மட்டுமல்ல, எங்களைப் படைத்த கடவுளுக்கே தெரியாது!

(வேதாளம் மவுனமாக இருக்கிறது. பின்னர் மரத்தை நோக்கிப் போகிறது)

**இளைஞன்:-** நில்! எங்கே போகிறாய்?

**வேதாளம்:-** மரத்துக்கு! அதுதானே என்னோட இடம்! நீ சரியான பதிலைச் சொல்லிவிட்டாய்! உன்னோட புத்திக் கூர்மையைப் பாராட்டறேன்.

**இளைஞன்:-** உன்னோட பாராட்டு யாருக்கு வேணும்! என்னமோ சத்தியம் தவறாத வேதாளம்னு சத்தியம் பண்ணினே!

இப்ப ஓடப்பாக்கறே? ஒனக்கு நான் பதில் சொல்லியாச்சு! எனக்கு நீ கொடுக்க வேண்டிய வரம், முடியாத போனா நான் குடுக்க வேண்டிய தண்டனை இதெல்லாம் இருக்கே!

**வேதாளம்:-** ஓ! அதெல்லாம் வேற இருக்கா? வயசாயிப் போச்சு பாரு, அதான் மறந்து போச்சு! சரி சொல்லு!

**இளைஞன்:-** மூணுபிரச்னைகள் உனக்குக் குடுக்கப் போறேன். அதை நீ தீத்து வைக்கணும்.

ஒண்ணு! எனக்கு ஒரு மகன் இருக்கான். அவன் நல்லாப் படிச்சிருக்கான். எல்லாப் பாடத்துலேயும் 98 சதவிகிதம் மார்க் வாங்கியிருக்கான்! அவனுக்கு மெடிக்கல் காலேஜ் அட்மிஷனுக்காக எங்கெங்கியோ அலைஞ்சேன்! 65,000/- பணமோ, இல்லே மினிஸ்டர் சிபாரிசோ வேணுங்கறாங்க! எங்கிட்ட இரண்டுக்குமே வழியில்லே! இருந்தாலும் அதுக்கு நான் தயாரா இல்லை. ஏன்னா அது என் கொள்கைகளுக்கு எதிரானது! நீ எந்த விதமான சிபாரிசும், லஞ்சமும் குடுக்காம மெடிகல் காலேஜ் அட்மிஷன் வாங்கித்தரணும்!

இரண்டாவது:- எனக்கு ஒரு சின்ன எடம் இருக்கு! அதுல வீடுகட்டணும்னு ஆசை! எந்த விதமான அதிகாரிகளுக்கும் ஒரு பைசா லஞ்சம் குடுக்காம தாலுகா ஆபீஸ்ல ரிஜிஸ்டர் பண்ணிக் குடுக்கனும்.

மூணாவது.....

**வேதாளம்:-** போதும் போதும்.... நிறுத்து! இதெல்லாம் நடக்கற காரியமா? முக்யமா லஞ்சத்தை எப்பிடி ஒழிக்கறது?

**இளைஞன்:-** அதெல்லாம் எனக்குத் தெரியாது! நானா ஒன்கிட்ட கதை கேட்டேன். நீ கதை சொன்னே, நான் சரியான பதில் சொன்னேன். இப்போ என்னோட முறை! நீ என்னோட பிரச்சனைகளைத் தீத்து வைக்கணும்!

**வேதாளம்:-** வேறே எதுவேனும்னாலும்கேளு! இது மட்டும் என்னால முடியாது! தயவு பண்ணி ஒன்னோட எண்ணத்தை மாத்திக்கயேன்!

**இளைஞன்:-** அதெல்லாம் முடியாது. வார்த்தைனா வார்த்தை தான்! நீ என்ன சொன்னே! ஒன்னோட கேள்விகளுக்குச்சரியான பதில் சொல்லலேன்னா என் தலை வெடிக்குமின்னு சொன்னே இல்லே!

இப்ப நான் சொல்றேன், என்னோட பிரச்னைகளை ஒன்னால தீக்க முடியல்லேன்னா ஒன் தலை வெடிக்கணும்! இது மாதிரி அசட்டுத்தனமா யார் கிட்டேயும் கேள்வி கேட்டு மாட்டிக்கக் கூடாது!

**வேதாளம்:-** அய்யய்யோ தெரியாம மாட்டிக் கிட்டேனே? தயவு பண்ணி விட்டுரு. இனிமே ஒன் பக்கமே வரமாட்டேன்!

**இளைஞன்:-** வீணாப்பேச்சை வளக்காதே! பத்துலேருந்து எண்ணப் போறேன். ஒன் முடிவச் சொல்லு! இல்லே முடிவுக்குத் தயாரா இரு. எங்கே பத்து.

ஒம்பது.... எட்டு...ஏழு.....ஆறு.... அஞ்சு.... நாலு.... மூணு.... ரெண்டு.

கடைசியா சொல்லு.... என்பிரச்னைகள்ளே ரெண்டுல ஒண்ணைக் குறைச்சுக்கறேன். ஒண்ணுமட்டுமாவது முடியுமா...?

**வேதாளம்:-** கொஞ்சம் மெதுவாத்தான் எண்ணேன்! என்னால முடிஞ்சதுன்னா ஏன் இப்பிடிக் கெஞ்சறேன்!

**இளைஞன்:-** முடியாது இதுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும் ஒண்ணு...

*(தலை வெடித்து வேதாளம் இறக்கிறது)*

இருட்டு.....

திரை

△

# தூக்கம்

## கந்தர்வன்

கண்கள் இரண்டையும் உயர்த்தி உத்தரத்தையே வெகு நேரம் பார்த்தான். அம்மா சின்ன வயசில் சொல்லிக் கொடுத்தது இது.

''தூக்கம் வரவில்லையென்றால் மல்லாக்கப் படுத்து இருட்டில் உத்தரத்தை வெகு நேரம் குறு குறுவென்று பார்க்க வேண்டும்; ஒன்றையும் நினைக்கக் கூடாது. பார்க்கப் பார்க்கக் கண்ணுக்கு அயர்வு வந்து தூக்கம் சுற்றும்.'' ஒரு காலம் வரை இது பலித்தி ருக்கிறது. இப்போது அதுவும் பலிப்பதில்லை.

உத்தரத்தைக் குறுகுறுவென்று பார்க்கையில் சாட்டை சாட்டையாய்த் தொங்கும் நூலாம்படை தெரிகிறது. அடித்துச் சுத்தப்படுத்த நேரமில்லை. அதைத் தொட்டு ஒவ்வொன்றாய் நினைப்பு எங்கெங்கோ போகிறது.

''நினைப்பையெல்லாம் ஓர்மைப்படுத்தி ஒண்ணு ரெண்டு மூணு என்று பத்து வரை மனசுக்குள் சொல்லிக் கொண்டே போய் மறுபடி ஒண்ணு ரெண்டு மூணு என்று பத்துவரை வந்து இப்படியே பல தடவை சொல்லத் தூக்கம் வரும்'' என்று இன்னொரு மருந்தையும் அம்மா சொல்லியிருந்தது. ஒண்ணு ரெண்டு மூணு என்று ஆரம்பித்து நாலு வருவதற்குள் மனசு எங்கேயோ சம்பந்தமில்லாத இடத்திற்கு ஓடுகிறது.

மாதத்தில் இரண்டு மூன்று தடவையாவது இப்படி ராத்தூக்கம் நின்று போகிறது. பதினோரு மணிக்குள் தூங்கினால் தான் உண்டு. அதற்கப்புறமும் புரண்டு கொண்டிருந்தால் அந்த ராத்திரி சிவ ராத்திரி தான். சுவரடியில் கடிகாரத்தைப் பார்த்தான். ரேடிய வெளிச்சத்தில் பனிரெண்டாகிக் கொண்டிருந்தது. தூக்கம் வரவில்லையென்ற கவலை பாதி தூக்கத்தையே வராமலாக்கி விடுகிறது.

வீட்டோர சாக்கடைப் பக்கம் முனிஸிப் பாலிட்டிக்காரன் வெள்ளை மாவு தூவுவது போல் துருப்பிடித்த ஜன்னல் கம்பிகள் வழியாய் நிலா கொஞ்சம் வெளிச்சத்தைத் தூவியிருந்தது. அடித்துப் போட்டது போல்இரண்டு பிள்ளைகளுக்கப்பால் அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள். கழுத்தில் மஞ்சள் கயிறு தெரிகிறது. அவளிட மிருந்து கழுத்துச் செயினை வாங்கிப்போய் பேங்க்கில் வைத்து ஒரு வருஷம் ஆகப் போகிறது. இன்னும் ஒரு தடவை கூட வட்டி கட்டவில்லை. வந்த மூன்று நோட்டீஸ்களும் அந்த அலமாரியில். இனி ஏல நோட்டீசும் வந்து விடும்.

நோட்டு வாங்க மூன்று ரூபாய் கேட்டு அழுதழுது வீங்கித் தூங்கிவிட்டாள் மூத்தவள். மத்தியானம் வைத்த ரஸம், மத்தியானம் பொங்கிய சோறு, நாள்பட்டுப் போன ஊறுகாய். ராத்திரி சாப்பிட உட்கார்ந்த போது நாக்கை எதிலாவது சுட்டுக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

நினைப்புகள் ஒரு சீராயில்லை. ஒன்றை நினைத்துக் கொண்டிருக்கையில் இன்னொன்றுக்கு மனசு குதித்துப் போய் விடுகிறது. கையா, காலா திருகாணியா போதுமென்று நிறுத்த. இது மனசு. அதுவும் தூக்கம் வராத உடம்புக்குள் உட்கார்ந்த மனசு. பறப்பதும் பரிதாபப் படுவதும் விழுவதுமாய் அது அமர்க்களமாகிக் கொண்டிருந்தது. நெஞ்சில் நாலைந்து ஏர்கள் தொலியடித்துக் கொண்டிருந்தன.

ஒரு நாள் டாக்டரிடம் போய ராத்திரிகளில் தூக்கம் வரமாட்டேனென்கிறது என்றான். டாக்டர் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே ''முந்தியெல்லாம் தூக்கம் வரலைனா அர்த்தமிருக்கு. இப்பத்தான் கல்யாணமாயிருச்சே. ஏன் தூக்கம் வரலை'' என்றார்.

மனுசனுக்குள்ள ஆயிரம் கவலைகளைப் பத்தி ஒரு டாக்டரும் படிக்கிறதில்லை. அவர் சொன்ன அந்த ஒரு சங்கதிக்காகத் தான் மனுசன் பேயாய் அலைவதாய் டாக்டர் படித்துத் தெரிந்து வந்திருக்கிறார். உண்மையிலேயே தெரியாமல்தான் டாக்டர் அப்படிப் பேசுகிறாரா அல்லது வேண்டுமென்றே பேசுகிறாரா தெரியவில்லை.

இவன் பல முறை பார்த்திருக்கிறான். சீக்காளி ஒரு ஏழை கிளார்க்காக இருப்பான். பேண்ட் சட்டை போட்டுக்கொண்டுபோய் வயிற்றுவலியென்று சொன்னால் போதும். டாக்டர் உயர்ந்த பேச்சில்

இறங்கி விடுவார். ''ப்ரேக்ஃபாஸ்ட் என்ன சாப்பிட்டீக? காலையிலேயே நிறைய மட்டன் சாப்பிட்டீயளா?'' என்பார். இவன் காலம்பற வழக்கமாய் 'பளையது' சாப்பிடுகிற ஆளாயிருப்பான். டாக்டரிடம் விட்டுக் கொடுக்காமல் தோசை சாப்பிட்டதாகப் புளுகுவான். ஒரு அந்தஸ்துக் கொடுத்து டாக்டர் பேசிவரும் தோரணையில் சீக்காளியே தன்னை ஒரு வசதிக்காரனாக நினைக்க வைத்து விடுவார். பத்து ரூபாயாவது கறக்க வேண்டுமே.

படித்த பள்ளிக் கூடம் ஞாபகத்திற்கு வந்தது. சிகப்பும் வெள்ளையு மாய்ப் பள்ளிக்கூட வாசலுக்கு மேல் பூத்து மயக்கும். அவற்றிற்கு ஊடே ஈரப்பசையோடு நீட்ட நீட்டமாய் மங்கிய நிறத்தில் கொத்து களாய் வேறு பூத்துக் கிடக்கும். வெயிலுக்கு வதங்கி வரும் வாசம் ஒரு விதம். எது வந்தாலும் வகுப்பில் போய் உட்கார்ந்தவுடன் தூக்கம் வரும். சரித்திர வாத்தியார் ராம சுப்பிரமணியன் ஒரு நாள் தூங்கி வழிந்த பையன்களைப் பார்த்துச் சொன்னார். ''தூக்கம் ஒரு பெரிய விசயம்டா. படுத்ததும் தூங்குறானே கவலையில்லாம அவன் கடவுளைப் போல, இல்லாட்டி முட்டாளைப் போல.'' சிக்கந்தர்ங்கிற பயல் திருப்பிக் கேட்டான்.

''அப்ப நாங்கள்ளாம் முட்டாள்களாக்கும்''

தூங்குவதில் எத்தனையோ வகை. பச்சைப்புள்ளை தூக்கம், சின்னப் புள்ளை தூக்கம், வாலிபப் புள்ள தூக்கம், நடு வயசுத் தூக்கம், கெழட்டுத் தூக்கம் என்று ஒவ்வொரு வகையையும் 'வெவரிச்சுச்' சொல்வார் மணி மாமா.

சொப்பனம் இல்லாமல் தூக்கமே இல்லை என்று ஒரு விஞ்ஞானப் புத்தகத்தில் படித்தது ஞாபகம் வந்தது. இப்போ தெல்லாம் தூக்கம் கொஞ்சமாகி சொப்பனங்கள் ஜாஸ்தியாகி விட்டன. கொசமுசவென்று சொப்பனங்கள். தலை இல்லாமல் உருவம் வருகிறது. வால் முளைத்துப் பெண் வருகிறாள். நேரில் நடப்பது போல் அப்படி அப்படியே சொப்பனங்கள் வேறு. பேலன்ஸ் ஷீட்டில் ஒரு நாள் 529-ரூபாய் 15 பைசா டேலியாக வில்லை. வீட்டிற்குக் கொண்டு வந்து ராத்திரி பத்து மணி வரை பார்த்து விட்டுப் படுத்தான். விடிய விடிய 529-ரூபாய் 15 பைசாவை ஒவ்வொரு ரிஜிஸ்தரிலும் துண்டுக் காகிதங்களிலும் டிராயரிலும் தூக்கம் பூராவிலும் தேடிக் கொண்டே இருந்தது விடியற்காலை எழுந்ததும் தெரிந்தது.

ஒரு நாள் சொப்பனம் தெரியாமல் தூங்கியிருக்கிறான்

சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதிவிட்டு மதுரையில் ராத்திரி பத்தரை மணிக்கு பாஸஞ்சர் ரயிலில் ஏறினான். கிராமத்திலிருந்து மதுரைப் பக்கமெல்லாம் போய் வருகிற ஆள் மணிமாமா. ரயிலில் திருட்டுப் பயல்கள் ஜாஸ்தியாய்ப் புழங்குகிறார்கள் என்று படித்துப் படித்துச் சொல்லி அனுப்பியிருந்தார். ஐந்து ரூபாயும் டிக்கெட்டும் சட்டைப் பையில். இடது கைமாறி வலதுகை, வலதுகை மாறி இடது கை என்று சட்டைப்பையைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டே தூங்காமல் விடிகாலை மூன்று மணிக்கு ராமநாதபுரம் வந்து இறங்கியாயிற்று.

ராத்திரிக் கடைகளில் சினிமா வசன ரிக்கார்டுகள் போட்டுக் கொண்டிருந்தார்கள். கிராமத்திற்குப் போனால் இதெல்லாம் எங்கே கேட்க முடியப் போகிறதென்று ஒரு பெஞ்சில் உட்கார்ந்து விடிய விடிய வசனம் கேட்டு விட்டுக் காலையில் ஊருக்கு பஸ் ஏறினான். பஸ் படுவேகமாய்ப் போனது, சில்லென்று காலைக் காற்று வீசியது. மரங்கள் செடிகள் எல்லாம் ஓட்டம் எடுத்தன. எல்லாம் அழகாய் வேகமாயிருந்த அந்த விநாடியில் அவனுக்குவேலை கிடைத்து விடுமென்று திடீரென்று ஒரு நம்பிக்கை வந்தது. சுற்றுப்புறம் இன்னும் அழகாகவும் பஸ் இன்னும் வேகமாய்ப் போவதாகவும் நினைத்தான். மதுரை மாதிரி பெரிய பெரிய ஊர்களில் கை நிறையசம்பளம் வாங்கி வேலை செய்யப் போவதை மனசு துள்ளித் துள்ளி நினைத்தது. ஒவ்வொரு திட்டமாய்த் தீட்டித் தீட்டி முடிப்பதற்குள் ஊர் வந்து விட்டது.

குளித்துப் 'பழையது' சாப்பிட்டுப்படுத்த ஆள்தான். அம்மா தலையைத் தொட்டது போலிருந்தது. எழுந்து பார்த்தால் சாயங்காலம் ஆகியிருந்தது. படுத்து ஒரு நிமிடத்தில் எழுந்தது போலிருந்தது. துளி சொப்பனம் வந்ததாய்த் தெரியவில்லை. அப்படித் தூக்கம் இன்னும் தூங்கவில்லை.

ஒரு நாள் ஆபீஸர் ''ஏன் பங்கி அடிச்சுப் போயிருக்கிய!'' என்றார். முதல் நாள் ராத்திரி இந்த ராத்திரி போல. தூக்கம் வராமல் கிடந்து காலையில் எழுந்து அப்படியே ஆபீஸ் போனதும் முகத்தில இருந்திருக்கும். ''ராத்திரி பூரா தூக்கம் வரலை'' என்றான். ஆபீஸர் யோகாசனம் செய்யச் சொன்னார்.

பத்தடிக்குப் பத்தடி அறையில் குடித்தனம். இதில் எங்கே போய் யோகாசனம் செய்வது? அஞ்சரை மணிக்கு எழுந்திருக்க வேண்டும். கைப் பம்ப்பில் தண்ணீர் அடிக்க் வேண்டும். ரெண்டு சிறிசுகளையும் குளிக்க வைக்க வேண்டும். சைக்கிள் ஏற்றி எட்டு மணிக்கெல்லாம் கொண்டுபோய்ப் பள்ளிக்கூடத்தில் விட வேண்டும். வந்ததும் குளித்துசாப்பிட்டுக் கை காயுமுன் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆபீசுக்கு ஓட வேண்டும். ரிஜிஸ்தர்களையும் ஃபைல்களையும் கட்டிக் கொண்டு அழ வேண்டும். எந்த இடைவெளியில் எந்த இடத்தில் போய் யோகாசனம் செய்ய?

காலையில் 'வாக்கிங்' போகலாமென்று 'ஏத்ரீ' கிருஷ்ணன் சொன்னார். கை பம்ப், குழந்தைகளைக் குளிப்பாட்டுவது, பள்ளிக் கூடத்திற்குக் கூட்டிப்போவது, கடன்காரனைக் கண்டு திகில் கொண்டு ஓடுவதெல்லாம் எப்போ தீர்வது; எப்போ வாக்கிங் போவது?

போன மாதம் ஆபீஸ் வேலையாய் மெட்ராஸ் போக வேண்டி வந்தது. பாரீஸ் கார்னரிலிருந்து ஃபோர்ஷோர் எஸ்டேட்டில் இருக்கும் சிநேகிதன் வீட்டிற்கு பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தான். விடிய வேண்டிய நேரம். கடற்கரைச் சாலையில் வயிறு பெருத்த ஆள்கள் 'சொத் சொத்' தென்று நடந்து கொண்டிருந்தார்கள். வாலிபமான ஆள்கள் பல பேர் 'விறுக் விறுக்'கென்று நடந்தார்கள். கடற்காற்று புசு புசு வென்று வீசிக் கொண்டிருந்தது. பசேலென்ற கடற்கரை ரொம்ப அழகாயிருந்தது. மந்திரி ஒருவர் போலீஸ் காவலுடன் காற்றை இழுத்து அனுபவித்து நடந்துகொண்டிருந்தார். அநேகமான பேர் வெள்ளை ட்ரவுசர் வெள்ளை அரைக்கை பனியன் வெள்ளை கான்வாஸ் ஷூக்களோடு பறவைக் கூட்டம் போல் திரிந்தார்கள்.

அவர்கள் ஏறி வந்த கார்கள் சாலை எங்கும் ஆங்காங்கே நின்றுகொண்டிருந்தன. கார்களை ஓட்டி வந்த டிரைவர்கள் யாரும் வாக்கிங் போகவில்லை. கார்களின் ஓரங்களில் நிழல் விழுந்த திசைகளில் துண்டை விரித்துப் போட்டுத் தூங்கிக் கொண்டிருந் தார்கள். காசிருந்து வசதியிருந்தால்தான் வாக்கிங் கிக்கிங் எல்லாம் சாத்தியம் என்று அன்றைக்குப் புரிந்தது.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி இரண் டாகியிருந்தது.

கஷ்டத்தையும் நஷ்டத்தையுமே நினைப்பதை விட்டு மனதுக்கு சந்தோஷமானவைகளை நினைத்தால் தூக்கம் வருமா என்று நினைத்தான். கிராமம் ஞாபகத்திற்கு வந்தது.

சிங்காரம் பிள்ளை வீட்டுத் திண்ணைகள் இரண்டும் பெரிய பெரிய பொட்டல் வெளிகள் போலிருக்கும். தெருவில் பாதிக்கு மேல் ஆட்களுக்கு அங்கே தான் படுக்கை. ஒரொரு திண்ணை ஓரத்திலும் அடர்ந்த வேப்ப மரங்கள் ஒவ்வொன்று. இரண்டு ஓரங்களிலும் பயிர்க்குழி போட்ட கொல்லைகள். சுவர் மறைக்காத திண்ணைகளுக்கு மூன்று பக்கமிருந்தும் பச்சைக் காற்று விடிய விடிய வீசும். சிங்காரம் பிள்ளை வீட்டிற்குள் எந்தப் பேய் பிசாசும் அண்டாது என்பார்கள். அகால நேரங்களில் முப்பது நாற்பது பேர் விடுகிற குறட்டை சப்தத்திற்கு அஞ்சாத பேய் பிசாசும் உண்டா?

நடுச்சாமத்தில் கண்ணாயிரம் பிள்ளையின் படுக்கைகிடக்கும். நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்த ஆள் நடுச்சாமத்தில் காணாமற் போய்விடுவார். படப்புக் கொல்லை வீட்டில் அவருக்கு வைப்பாட்டி உண்டு. பொம்பிளைகள் சாணி தெளிக்க எழுந்திருக்கு முன்பாய் திரும்பி விடுவார். வெயில் வந்து வெகு நேரம் வரை தூங்கிவிட்டுக் கடைசி ஆளாய் எழுந்து போவார்.

ஊரைத் தாண்டித் தொலைவில் கண்மாய். கரையடியில் உலகம்மாள் கோவில். கோவிலை ஒட்டிக் கரைமேல் ஏழெட்டு இலுப்ப மரங்கள். ஆலமரம் அரசமரம் போல் இலுப்ப மரமும் பெரிசு பெரிசாயிருக்கும். கரை ஒரு ஆள் உயரத்திலிருக்கும். கரை மேல் நின்றால் எப்படிச் சுருள்முடி உள்ள ஆளும் காற்றுக்குத் தலையைக் கலைத்துக் கொள்ள வேண்டும். இடுப்பில் கையை வைத்துக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ள வேண்டும். பல பேர் கவனப் பிசகாயிருந்து உடுத்தியிருந்த வேட்டிகளைக் காற்றுப்போகிற திசைக்குக் கொடுத்துவிட்டு உடம்பில் துணியில்லாமல் ஓடியிருக்கிறார்கள். மத்தியான வெயிலுக்கு இலுப்ப மரத்தடிகளில் துண்டுகளை விரித்துப் பல பேர் சாமங் கொண்டாடுவார்கள்.

அய்யனார் கோவிலைச்சுற்றி கோவைச்செடிகள் ஜாஸ்தி. ஊருணி தாண்டிக் கொஞ்ச தூரம் வரை நஞ்சை. வடக்கே போகப் போகப் புஞ்சை. முதலில் நெல், அப்புறம் கேப்பை கம்பு சோளம் என்று வரிசையாய்ப் பயிர் வகை பார்த்து நடந்து அய்யனார் கோவிலுக் கருகில் போனால் ஏராளமாய்க் கோவைப் பழம் பார்க்கலாம்.

அவ்வளவு பருமனாய்க் கோவை பழுப்பது எந்த ஊரிலும் இல்லை என்று கிஷ்ணக் கோனார் ஓயாமல் சொல்வார்.

கோவில் வாசலில் கதவு கிடையாது. கல் நிலை வழுவழுவென்றிருக்கும். அதில் உட்கார்ந்தால் எட்டுத் திசையிலிருந்து வீசும் காற்றும் அந்த நிலை வழியாய்ப் போவது போலிருக்கும். எல்லாப் பயிர் வாடையும் அதிலிருக்கும். காட்டுச் செடிகள் விசேசமான வாசங்கொண்டு காற்றில் வரும். தூங்கி எழுந்து வந்தவனுக்குக்கூட அந்த சொகத்தில் மறுபடி கண்ணைச் சொக்கும்.

பரம்பரை பரம்பரையாக அந்தக் காற்றையும் மண்ணையும் விட்டுச் சீமானாகப் போவதாய் நினைத்துக் கொண்டு வேலை கிடைத்ததும் டவுனுக்கு வந்து மேலும் மேலும் சீரழிந்ததுதான் கண்டபலன். சுத்திச்சாக்கடையும் நடுவில் பத்தடிக்குப் பத்தடி வீடும் பத்தாத சம்பளமும் கைகட்டி நிற்க வேண்டிய உத்தியோகமும் கடனும் கப்பியுமாய்.... சே.... என்று வருகிறது.

ஒரு நியமம் குறையக் கூடாது. எழுந்திருப்பதிலிருந்து படுப்பது வரை எல்லாம் நேரப்படி நடக்க வேண்டும்.

நேரப்படி எழுந்திருக்காவிட்டால் முதலாளியின் சம்பாத்திய ஒழுங்கு கெட்டுப்போகும். பணக்காரர்கள் அதிகாரிகள் அவர்கள் சௌகர்யத்திற்கு -- சம்பாத்ய முறைக்கு வைத்துக் கொண்ட பழக்க வழக்கங்கள், கிளார்க், அட்டெண்டர்களுக்கும் வந்து கொன்று தின்கிறது. ஆகாசத்திற்கு ஆசை உண்டாகிப் பாதாளத்தில் வாழ்க்கையை வைத்து விட்டார்கள்.

பயிர் பச்சையைப் பார்த்து வெகு நாளாகிறது. வீட்டிலிருந்து இருபது தெருத் தாண்டிப் போனால்தான் மெயின் ரோடுவரும். கடை, ஆபீஸ், மார்க்கெட், சிநேகிதர்கள் எல்லாம் இந்தத் தெருக்களுக்குள் அடங்கி விடுகிறது. எங்கே போய் காற்று வாங்குவது? என்னவென்று சொல்லி மெயின் ரோடு போய்ப் பயிர் பச்சைகளைப் பார்ப்பது?

கடிகாரத்தைப் பார்த்தான். மணி நாலரை ஆகியிருந்தது. உடம்பு மந்தென்றிருந்தது.

மெல்ல எழுந்து அறைக்குள் அங்கும் இங்கும் நடந்தான். அவளும் பிள்ளைகளும் நல்ல தூக்கத்திலிருந்தார்கள். ஒரு யோசனையுமில்லாமல் கதவைத் திறந்தான். மெல்லச் சாத்தி வைத்துவிட்டு

நடைக்குப் போனான். அந்த ஸ்டோரில் தங்கியிருக்கும் எல்லோருடைய சைக்கிள்களிலும் தன் சைக்கிளைத் தேடிக் கண்டு பிடித்தான். முன்னும் பின்னும் அசைத்து ஒரு வழியாய் உருவி எடுத்தான்.

பொதுக் கதவைத் திறந்து சைக்கிளைப் படிகளில் இறக்கினான். வெது வெதுப்பாகக் காற்று வீசியது. கூடவே சாக்கடை வாசம் எடுத்தது. சைக்கிளில் ஏறி வேகம் வேகமாய் மிதித்தான். ஒவ்வொரு தெருவாய்த் தாண்டித் தாண்டி இருபது தெருக்களையும் கடந்து மெயின் ரோட்டுக்கு வந்தான்.

நிலவொளியில் வயல் பயிர்கள் கரு கருவென்று தெரிந்தன. சாலை ஓரத்தில் ஒரு வெள்ளைச் சேலை விரிந்து கிடப்பது போல் வாய்க்கால் தெரிந்தது. தண்ணீர் மட மடவென்று பாய்ந்து போனது. எங்கும் குளிர்ச்சி தெரிந்தது. புதரும் செடி கொடிகளுமாயிருந்த ஒரு இடத்தில் சைக்கிளை நிறுத்தினான்.

கொத்தாய்ப் புல் வளர்ந்த இடத்தில் உட்கார்ந்து வானத்தைப் பார்த்தான். துருவ நட்சத்திரம் பளீரென்று தெரிந்தது. நிலாவைச் சுற்றி மேகம் நிர்மலமாயிருந்தது. காற்றை இழுத்து இழுத்துச் சுவாசித்தான். சுவாசப் பைகளுக்குள் பயிர் வாசனையும் பச்சைக் காற்றும் போய்ப் போய் அடைவதாய் நினைத்துக் கொண்டான்.

புல் தரை மெத்தென்றிருந்தது. கையைத் தலைக்கு வைத்து மெல்லச் சாய்ந்தான். பையில் கிடந்த நாலைந்து சில்லரைக் காசுகள் புல் தரையில் விழுந்தன. தெரிந்தும் அவைகளை எடுப்பது இப்போது அவசியமில்லாத வேலை போல் தெரிந்தது.

எவ்வளவு நேரம் ஆனதென்று தெரியவில்லை. விழித்துப் பார்த்துத் தான் எங்கே இருக்கிறோம் என்பதைச் சரியான ஞாபகத்தில் கொண்டு வந்தான். சூரியன் மப்போடு வந்திருந்தான், வெயில் அவ்வளவில்லை. எழுந்து சைக்கிளில் ஏறினான். வெகு நாளாயிற்று இப்படித் தூங்கி என்று சொல்லிக் கொண்டான். ஊருக்குள் வர வர இவனுக்கு நேரம் புலப்பட ஆரம்பித்தது. கைப்பம்பில் தண்ணீர் அடித்தாளோ, பிள்ளைகள் பள்ளிக் கூடம் போனார்களோ, ஆபீஸில் பேலன்ஸ் ஷீட் இன்றைக்கு வைக்க வேண்டுமே என்கிற ஞாபகங்கள் ஒவ்வொன்றாய் வர வர சைக்கிளை வேகமாய் மிதித்தான்.

△

# சேதாரம்

## தனுஷ்கோடி ராமசாமி

'சீதை'ன்னா பேரு அவளுக்குத்தான் செல்லும். சிரிச்சா முகம் பொன் சிந்தும்; வாய் முத்து உதிர்க்கும். சீதேவி மாதரியே அழகாக இருப்பாள்.

சீதை ஐந்தாவது படிக்கும் போதிருந்தே கௌசல்யா டீச்சர் லீவிலே ஊருக்கு வந்துவிட்டால் அவங்க வீட்டிலேயேதான் கிடப்பாள். அவங்க சாட்சியாபுரம் கான்வென்ட் ஹையர் செக்கண்டரி ஸ்கூலில் பி.எட். டீச்சராக வேலை பார்க்கிறாங்க.

அந்த டீச்சருக்கு எல்லா வேலைகளையும் பிரியமாக ஓடி ஓடி செய்வாள். அவங்க நாயக்கமார். நாயக்கமார் தெருவுக்கு அதிகமா இந்தத் தெருபிள்ளைகள் யாரும் போகமாட்டாங்க... ஆனால் சீதை அங்கேயேதான் கிடப்பாள். ராத்திரித்தான் வீடு திரும்புவாள்.

அந்த டீச்சர் ஊருக்குப்போன பிறகு கூட அவங்களைப் பற்றித்தான் தங்கச்சி ராமுத்தாயிடம் பேசுவாள். அடுத்த லீவிலே அவங்க வர்ற வரைக்கும் இந்த லீவிலே அவங்க சொன்ன கதைகளை யே திருப்பித் திருப்பி சொல்லிக்கிட்டிருப்பாள். அடுத்த லீவுக்கு வந்துட்டாங்கன்னா அப்புறம் அவங்க சொல்ற புதுக்கதைகளைச் சொல்லுவாள்.

கான்வென்ட் பெண்கள் போடற சீருடை, சடை, டீச்சர்களின் சீருடை, கொண்டை, இறை வணக்கம், இலக்கிய மன்றம், சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா, ஆண்டுவிழா, பாட்டு வகுப்பு, தையல் வகுப்பு, எல்லாரும் வரிசையாய்க் கோயிலுக்குப் போவது, சாப்பாடு, அந்நேரம் சொல்ற ஸ்தோத்திரம், அவங்க சாப்பிடற முறை, தட்டுக் கழுவற ஒழுங்கு, தட்டுகளை வைக்கிற அழகு, அங்குள்ள பூக்கள் சொரியும் பன்னீர்ப் பூமரங்கள், இரவில் தூங்கிக் காலையில் விழித்துக் குதிக்கும் தூங்கு மூஞ்சி மரங்கள்.... இப்படி...

''அக்காள் சொல்லும் போதே இவ்வளவு அழகாக இருக்கே...? இதை அந்த கௌசல்யா டீச்சரே சொன்னால் எப்படி இருக்கும்...? அதைவிட நேரில் பார்த்தால் எப்படி இருக்கும்?'' - இப்படி ராமுத்தாய் அந்தக் காலத்தில் ஏங்குவாள்.

கௌசல்யா டீச்சர் சொன்ன யோசனைகளை வைத்தே சீதை எத்தனையோ திட்டங்கள் போட்டாள்....

'எட்டாவது நம்மூர்ல முடிச்ச உடனே பூனாவரத்தில் ஒன்பதாவது வகுப்பில் சேரணும். மூணு மைல் தூரம் தான். தினம் தினம் மதியச் சோறு கொண்டுட்டுப் போய் படிச்சிட்டு வந்திரலாம். புஸ்தகங்கள் ளாம் ஸ்காலர்ஷிப்லே கிடைத்துவிடும். அங்கே பத்தாவது முடிச்சிட்டு பதினோராவது வகுப்பு படிக்க கௌசல்யா டீச்சர் ஸ்கூலுக்குப் போகணும். பத்திலே நிறைய மார்க் வாங்கிட்டால் இலவச ஆஸ்டல்லே அந்த டீச்சர் இடம் வாங்கிக் குடுத்திடறேன்னு சொல்லியிருக்காங்க... அங்கேயும் ஸ்காலர்ஷிப்லே புஸ்தகங்கள் நோட்டுக்கள்ளாம் கெடச்சிரும்...

காலேஜ்லேயும் ஸ்காலர்ஷிப் வாங்கியே படிச்சிரலாம். முதல்லே சேரும் போது ஐநூறு ரூபாய் செலவாகுமாம்... அதை மட்டும் ஐயா குடுத்திட்டாப் போதுமாம். அப்புறம் அவங்கள மாதரியே பி.எட். டீச்சராக வந்திரலாம்.

அந்த டீச்சர் ரொம்ப நல்லவங்க... ரொம்ப பிரியமாக இருப்பாங்க.... ஐயாவாலே பணம் கடன் வாங்க முடியாட்டக் கூட அவங்களே எல்லா உதவிகளையும் செய்திருவாங்க.... அப்படி ஒரு நல்ல மனசு கௌசல்யா டீச்சருக்கு...?

--இப்படி சீதை கனவுகளாக கண்டுக்கிட்டிருந்தாள். அவள் கனவுகளை ராமுத்தாயிடம் சொல்லி அவளையும் துணைக்கு அழைத்துக் கொள்வாள்.

கனவுகள் காணும் அக்காள் சீதை இல்லாமல் நூறு பிள்ளை களோடு இடிச்சு நெருக்கிக்கிட்டு தீப்பெட்டி ஆபீஸ் பஸ்ஸிலே போனாலும் ஏதோ தனியாக தீஞ்சு போன காட்டிலே போகிற மாதிரி ராமுத்தாய்க்கு இருந்தது. தீப்பெட்டி ஆபீஸில் வேலை செய்யறதும் 'வெருக்கு' 'வெருக்கு'ன்னு இருந்தது.

☆

எட்டு வரைக்கும் எல்லா வகுப்பிலேயும் அக்காள்தான் படிப்பிலே ஃபஸ்ட். இன்ஸ்பெக்டர் வந்த அன்று 'சார்' கேட்ட கேள்விகளுக்கு அவள் 'டாண்' 'டாண்' ன்னு பதில் சொன்னாளாம். பிறகு இன்ஸ்பெக்டரே கேள்வி கேட்க ஆரம்பிச்சாராம். எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரியாமல் போன கேள்விகளுக்கெல்லாம் கூட அக்காள் பதில் சொல்லிட்டாளாம். கடைசியிலே இன்ஸ்பெக்டருக்கும் அவளுக்கும் போட்டி மாதரி வந்திருச்சாம். அவர் மறிச்சு மறிச்சு கேள்வி கேட்டாராம். அக்காள் கவனமாப் பதில் சொல்லிக்கிட்டே வந்தாளாம்.

மணியடிச்சு பள்ளிக்கூடம் முடிந்த பின்னாடியும் இன்ஸ்பெக்டர் கேள்வி கேட்டுக்கிட்டே இருந்தாராம். மற்ற ஆசிரியர்கள், பிள்ளைகள் எல்லாம் வெளியில் நின்று வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தாங்களாம்.

கடைசியிலே ஏதோ ஒரு கேள்வியைக் கேட்டதுக்கு அக்காள் யோசித்து பதில் சொல்லிட்டாளாம். இன்ஸ்பெக்டர் அது தப்புன்னு சொல்லிட்டு வேறு ஒரு விடையைச் சொன்னாராம். இவள் அழுத்திட்டாளாம். இன்ஸ்பெக்டர் சிரிச்சுக்கிட்டே, 'பரவாயில்லம்மா... உட்காரு'ன்னு எவ்வளவோ சொல்லிப்பாத்தாராம். இவள் கண்ணீர் வடிச்சுக்கிட்டே நின்னாளாம்... ''அவள் சொன்ன விடை சரிதான் சார்''ன்னு சொல்லி இன்ஸ்பெக்டர்கிட்டே 'சார்' புஸ்தகத்தை எடுத்துக்கிட்டுப் போய் காட்டினாராம். இன்ஸ்பெக்டர் புஸ்தகத்தைப் பார்த்துட்டு 'கட' 'கட'ன்னு சிரிச்சிட்டாராம். ''நீ சொன்ன விடைதான் சரி''ன்னு அவர் சொன்னவுடனே, வெளிலேருந்த பையன்கள்ளாம் 'டப' 'டப' ன்னு கை தட்டிட்டாங்களாம். சாரும் வகுப்பிலேருந்த ஆம்பளைப் பிள்ளைகளும் பொம்பளப் பிள்ளைகளும் வெளியிலே நின்னுக்கிட்டிருந்த சார்மார்களும் 'கல' 'கல'ன்னு சிரிச்சாங்களாம்.

''இந்த சின்ன கிராமத்திலே இவ்வளவு புத்திசாலித்தனமான பொம்பளப் புள்ளையப் பார்த்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்''னு சொல்லிக்கிட்டே ''உன் பேரு என்னம்மா?''ன்னு கேட்டாராம்.

''சீதை''ன்னு அக்காள் கூச்சத்தோடு சொன்னாளாம்.

''பொருத்தமான பேரும்மா.... சீதைகளாலும் ராமர்களாலும் தான் புதிய இந்தியாவை உருவாக்க முடியும்...''னு கையெடுத்துக் கும்பிட்டுக்கிட்டே வகுப்பை விட்டு வெளியே போனாராம்...

ராமுத்தாயிக்கு எப்பொழுதும் அக்காளைப் பற்றிய நினைவுகளே வந்து கொண்டிருந்தது.

ரெண்டு மூணு வருஷமாக மழையில்லை, கிணற்றில் வேறு சரியாகத் தண்ணீர் இல்லை. வெள்ளாமை விளைச்சலும் சரியில்லை. ஒரு தடவை காலேஜ்ஜிலே படிக்கற அண்ணனுக்கு பீஸ் கட்டறதுக்கு கஷ்டமாக இருந்தப்போ காளைமாடுகள் ரெண்டிலே ஒன்றை ஐயா விற்றுவிட்டார். ஒரு மாடே போதும்னு அந்த மாமா துரைப்பாண்டியனோடு கூட்டுமாடு சேர்த்து வேலை செய்ய ஆரம்பித்தார். வீட்டுக் கஷ்டத்தினாலே ஐயா அக்காள் படிப்பை நிறுத்தி தீப்பெட்டி ஆபீஸ் வேலைக்கு அனுப்பி விட்டார்.

சீதைக்கு படிப்பை நிறுத்தரதிலே கொஞ்சங் கூட சம்மதம் இல்லை. ஆனால் வேறு வழியில்லைங்கறதையும் தெரிஞ்சுக் கிட்டாள்.

வேலைக்குச் சேர்ந்து நாலு மாதத்தில் மூணு ஆபீஸுக்கு மாறினாள். நாலாவது ஆபீஸிலேதான் கடைசி வரை நிலைத்து வேலை செய்தாள். அதற்குக் காரணம் கோபால்தான்.

தீப்பெட்டி ஆபீஸுக்கு வேலைக்கு வர்ற பெண்கள்ளாம் பெரிய முதலாளி, சின்ன முதலாளி, கணக்குப் பிள்ளைகள்.... எல்லாப் பயல்களுக்கும் எல்லாத்துக்கும் உடன் படணும்னு அலைறாங்க...

கோபால் ரொம்ப நல்லவன். அசிங்கமே இல்லாத ஆம்பளை. எல்லார் கிட்டையும் சிரிச்ச மொகத்தோட பேசுவான். எல்லாப் பெண்களும் அவனை 'அண்ணாச்சி'ன்னு தான் கூப்பிடுவாங்க... கூப்பிடுவாங்கன்னா அப்படித்தான் அவனும் கூடப்பிறந்த அண்ணனாகத்தான் எல்லாப் பிள்ளைகளுக்கும் இருப்பான்.

அவன் கூட வேலை செய்யறது எல்லாப் பிள்ளைகளுக்கும் பிடிக்கும். சிரிக்கும் படியாத்தான் பேசுவான். ஆனால் மற்றவங்களை மாதிரி பேச்சிலே அசிங்கமே இருக்காது.

வீட்டில் கஷ்டம் அதிகமாகி விட்டதால் ராமுத்தாயும் சீதையோடு தீப்பெட்டி ஆபீஸுக்குப் போனாள்.

கோபால் ராமுத்தாயைப் பார்க்கறதே ரொம்பப் பிரியமாக இருக்கும். 'வாப்பா' போப்பா'ன்னுதான் பேசுவான்.

அப்புறம் சீதை, கோபால் பற்றிக் கதை சொல்றதே இல்லை.

ஆனால் மனசுக்குள்ளே அவன்மேலே ரொம்பப் பிரியமாக இருக்கிறாள் என்பது ராமுத்தாயிக்குத் தெரிந்தது.

ஒரு நாள் முதலாளி கோபாலை ஆபீஸ் ரூமுக்குக் கூப்பிட்டு ரெண்டு வேட்டி, ரெண்டுபாலிஷ்டர் சட்டைத்துணி, நூறு ரூபாய் குடுத்தாராம்.இவன் 'எதுக்கு மொதலாளி வேண்டாம்'னு மறுத்தானாம். 'தீபாவளி போனஸ்'னு மொதலாளி சொன்னாராம். 'எல்லாருக்கும் குடுக்கும் போது வாங்கிக்கிடறேன்'னு இவன் எவ்வளவோ சொன்னானாம். 'உன்னுடைய நாணயம், நல்ல மனுஷத்தனம், விசுவாசத்துக்காகத் தான்' அப்படின்னு எவ்வளவோ குழைவாக முதலாளி பேசினாராம். இவன் அதையெல்லாம் வாங்கிட்ட பின்னாடி ப்யர்மேன் வேலையிலிருந்து மேஸ்த்திரியாப் போடறதாச் சொன்னாராம்... அப்புறம் மெள்ள சீதையை ஒரு நாளைக்கு தனக்கு ஏற்பாடு பண்ணிட்டா இன்னும் எவ்வளவோ சலுகை செய்யறதாக முதலாளி சொன்னவுடனே.... ரூபா, வேட்டி துணிகளை எல்லாம் அவன் மொகத்திலே வீசி எறிஞ்சு, ஓங்கி அவன் கன்னத்திலே அறைஞ்சு கழுத்தப் புடுச்சு நெரிச்சுட்டானாம்.

போலீஸ் அவனைப் பிடிச்சுட்டுப் போயிருச்சு. சீதை வந்து ''ராமுத்தாயி தூக்குச் சட்டிகளை கொண்டுக்கிட்டு நீ போ. நான் அப்புறமாக டவுண் பஸ்ஸிலே வர்ரேன்''ட்டு போனவள் தான். திரும்பி வரவே இல்லை.

ஐயா ஊர்லே ஆளுகளைக் கூட்டிக்கிட்டு மச்சான் ஊருக்கு போய்ட்டு திரும்பி வரும் போதே தலைய முழுகிட்டுத்தான் வந்தார்.

அம்மா அழுதாள்... அழுதாள்... இப்படின்னு சொல்ல முடியாது. 'நம்மளப் பொறுத்தவரை அவள் செத்துப் போய்ட்டாள். எல்லாரும் தலை முழுகிறணும்'னு ஐயா கண்டிப்பாச் சொல்லிட்டார்.

தம்பி தங்கச்சிக்கெல்லாம் அம்மா தலையில் எண்ணெயைத் தேய்ச்சு முழுகாட்டினாள். ராமுத்தாய் 'தலைய முழுக முடியாது'ன்னு அழுதாள். அம்மா துடுப்பை எடுத்து அடிச்சு அவள் தலையிலேயும் எண்ணெயைத் தேய்ச்சு முழுகாட்டினாள்.

''நீ வேலைக்குப் போய் எங்களைக் காப்பாத்தினது போதும்''னு ராமுத்தாயை நிறுத்திட்டாங்க. ஆனால் வீட்டிலேருக்கற வறுமையினாலே வேறு ஒரு தீப்பெட்டி ஆபீஸ் மேஸ்த்திரிகிட்ட பேசி பத்தாவது நாள்லே வேலைக்கு அனுப்பிட்டாங்க....

ராமுத்தாய் கிராப் தலையோடு திரிந்த காலத்திலிருந்து தலை சீவினது, பவுடர் போட்டு விட்டது... எல்லாம் சீதைதான். பல் தேய்க்கறதுக்கு, பாவாடை மாத்தறதுக்கு, சாந்துப்பொட்டு வைக்கறதுக்கு எல்லாம் சொல்லிக் குடுத்தது சீதைதான். சுருக்கமாகச் சொன்னால் ராமுத்தாயிக்கு விபரம் தெரிஞ்சதிலிருந்து அவளுக்கு அம்மாவாய்.... குருவாய், உயிர்த்தோழியாய்,. இருந்தது எல்லாம் அக்காள்தான். அந்த அக்காவை ராமுத்தாய் எப்படி மறப்பாள்...? அவளப் பிரிஞ்சு மூணு மாதம் ஆச்சு.

தினமும் அக்காவை நினைத்து நினைத்து ராமுத்தாய் அழுவாள். ராத்திரியிலே தூக்கம் வராது. அழுதுகிட்டே படுத்திருப்பாள். தூக்கத்திலே, 'அக்காள் பக்கத்திலே ஒக்காந்துக்கிட்டு தீப்பெட்டி ஆபீஸ் பஸ்லே வீடு திரும்பற மாதிரி., பாயிலே பக்கத்திலே படுத்துக்கிட்டு இருட்டிலே ரெண்டுபேரும் பேசிக்கிட்டு இருக்கிற மாதிரி..., முதலாளி கெணத்து பம்பு செட்டிலே துணிகளை துவைத்து குளிக்கிற மாதிரி..., கன்னத்திலே குழிவிழ அக்காள் சிரிக்கிற மாதிரி... கனவு கனவாய் வரும்.

☆

அன்று சனிக்கிழமை, போட்ட சம்பளத்தை வாங்கி சேவு, கருப்பட்டிப் பலகாரம், ரெண்டு அழகான ரிப்பன் வாங்கிக் கொண்டு ராமுத்தாய் சீதை ஊருக்குப் போனாள்.

அக்காவும் மச்சானும் வீட்டில் இல்லை. மாமா மட்டும் வயிற்றுக் கடுப்போடு எலும்புத் தோலுமாக முடக்கிக் கிடந்தார். ராமுத்தாயை விசாரிச்சு தெரிந்து கொண்ட போது சந்தோஷத்திலும் துக்கத்திலும் கண் கலங்கினார்.

''மழை தண்ணி இல்லாததாலே ரெண்டு பிள்ளைகளுக்கும் வேலை இல்லை'' அவருடைய குரல் கிணத்துக்குள்ளே இருந்து பேசற மாதிரி இருந்தது. ''வேலி வெறகு வெட்டிக் கஞ்சி குடிச்சிக்கிட்டு எனக்கும் ஊத்துதுக....'' அவர் சொல்லி வரும் போதே கண்ணீர் ஒழுகியது. ''சீல் தூருக்கு போயிருக்குதுக.. வர்ற நேரம்தான்''ன்னு சொல்லிக்கிட்டே கிளம்பினார். எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் கடைக்குப் போய் கலர் வாங்கி வந்து குடிக்கக் கொடுத்தார்.

பொழுதடைய அக்காவும் மச்சானும் வந்தார்கள். பார்த்த உடனே ''ராமுத்தாயி''ன்னு சீதை ஓடிவந்து கட்டிப் பிடித்தாள்.

''எப்படா வந்தே...?''ன்னு மச்சான் வாயெல்லாம் பல்லாக நின்றார்.

அக்காள் கட்டிப் பிடித்துக்கொண்டே அழுதாள். ''ஏ..யக்கா..''ன்னு ராமுத்தாயும் தேம்பித் தேம்பி அழுதாள்.

கோபால் அசையாமல் பார்த்து நின்னுக்கிட்டிருந்தான், ரெண்டு பேரும் ரொம்ப மெலிஞ்சு கருப்பாக இருந்தாங்க... மச்சான் சட்டை போடலை. தலையிலே துண்டாலே தலைப்பாகை கட்டிக் கைலியை மடிச்சுக் கட்டியிருந்தார். பார்க்கப் பாவமாக இருந்தது... அக்காள் ஓடாக மெலிஞ்சு இருந்தாள். காரை எலும்பெல்லாம் தெண்ணிக்கிட்டு தெரிஞ்சது. கன்னத்து எலும்பு துருத்திக்கிட்டு இருந்தது. வெளிறிப்போன நைலக்ஸ் சேலையைக் கட்டியிருந்தாள். அவள் தலை எண்ணெய்ப் பிறப்பைப் பார்த்து ரொம்ப நாள் ஆகியிருந்தது.

''சீதே... கம்பை அப்பதையே இடிச்சு வச்சுட்டேன்மா. காரிப் போகப் போகுது... சட்டுன்னு தீப்பத்த வச்சு ஓலையிலே போடும்மா''ன்னு மாமா சொன்னார்.

அக்காள் வீட்டுக்குள்ளே ஓடிப்போய் ஒரு பையும் பாட்டிலும் எடுத்துக்கிட்டு வந்து மச்சான் கையிலே கொடுத்து ''மல்லிக்குப் போய் ஒரு கிலோ அரிசி, கால் கிலோ உருளைக்கிழங்கு, நூறு துவரம் பருப்பு, நூறு தக்காளி, ரெண்டு முருங்கக்காய், பத்துப் பைசாவுக்கு பச்ச மிளகா.., நூறு பாமாயில் வாங்கிக்கிட்டு கொஞ்சம் கருவேப்பிலை கேட்டு வாங்கிக்கிட்டு, சட்டுன்னு வாங்க''ன்னு அனுப்பினாள்.

''யக்கா... பொழுதடைஞ்சப் பெறகு மச்சானை மல்லிக்கு அனுப்ப வேண்டாம்... நீ கம்மஞ் சோத்தக் காச்சு. நான் சும்மா... சாப்பிட்டுக்கிடுறேன்''னு எவ்வளவோ சொல்லியும் அவள் காதிலே போட்டுக்கிடவே இல்லை. ''நீ சும்மா இரு தாயி'' ன்னு மச்சானை வேகமாக அனுப்பினாள்.

''அண்ணன் கருப்பசாமிகிட்ட கொஞ்சம் சைக்கிள் கேளுங்க... எங் கொழுந்தியா ஊர்லேருந்து வந்திருக்காள்... கொஞ்சம் மல்லி வரைப் போய் அரிசி வாங்கிட்டு வரணும்னு கேளுங்க... அந்தண்ணன்

குடுக்கும்; வாங்கிட்டு ஒரு வீச்சுலே போய்ட்டு ஓடியாங்க'' ன்னு அனுப்பி வைத்தாள்.

ராத்திரி முழுவதும் மூணுபேரும் தூங்கவே இல்லை. விடிய விடிய பேசிக்கிட்டே இருந்தாங்க.

காலையிலே ராமுத்தாயிக்கு எண்ணெய் தேய்ச்சு தலைவாரி அவள் வாங்கிட்டுவந்த ரிப்பன்லே ஒண்ணக்கட்டி பூ வைத்து விட்டாள் சீதை. அங்கே யாருடைய தோட்டத்திலோ கொய்யா போட்டிருக்காங்களாம். அங்கே இருந்து பத்து இருபது கொய்யாப் பழங்களை கோபால் வாங்கி வந்தான்.

பழங்களை பையில் போட்டுக்கிட்டே, ''ஐயாவுக்கு என்மேல உள்ள கோபம் எப்பத்தான் தீருமோ''ன்னு சீதை பெருமூச்சு விட்டாள். புறப்படாமல் கூரை முகட்டைப்பார்த்துக்கிட்டே இருந்துட்டு பையை எடுக்கக் குனிந்தபொழுது ''அவர்தலை குனியற மாதிரி நான் ஒண்ணுந் தப்பு செஞ்சுறலே''ன்னு வெடிச்சு வந்த வேதனையை அடக்கி குமுறிக்கிட்டே சீதை சொன்னாள்.

''யக்கா நீ எப்பவுமே தப்பு செய்ய மாட்டேக்கா...''ன்னு ராமுத்தாய் கட்டிப் பிடித்தாள். ''யக்கா உனக்கு நெனவிருக்கா... 'நீ சொன்ன விடைதான் ரைட்டு... நான் சொன்னது தப்பு'ன்னு இன்ஸ்பெக்டரே சொன்னாரே...''

ரெண்டு பேரும் தழுவி அழுதுக்கிட்டிருந்தாங்க. ''சீதா கார் பத்தரை மணிக்கு... இத விட்டுட்டா சாயங்காலம் தான்'' என்றான் கோபால். மூன்றுபேரும் கிளம்பினார்கள். வழிநெடுக தம்பி தங்கச்சிகளைப் பற்றி... அம்மா பற்றியே சீதை கேட்டுக் கொண்டு வந்தாள். ஒவ்வொருவர் நினைவிலேயும் கண் கலங்கினாள்.

காமாட்சியம்மன் கோவில் வெறிச்சோடிக் கிடந்தது. அங்கிருந்து சீதை திரும்பி விடவேண்டும். கோபால் ராமுத்தாயைக் கொண்டு போய் கார் ஏத்தி விட்டுட்டு திரும்பணும்.

மூன்றுபேரும் தயங்கி நின்றார்கள். சீதை முந்தானைச் சேலையை எடுத்து கண்ணையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு ராமுத்தாயை ஆசையோடு பார்த்தாள். ''நாங்க ஓடக்கரை, கம்மாக் கரைன்னு அலைஞ்சு வேலி வெறகு வெட்டிப் பெழைச்சாலும் சந்தோஷமாத்தான் இருக்கோம்... எனக்கு அவுக ஒரு குறையும் வைக்கலை''ன்னு சொல்லி வரும்போது அவளுக்குக் குரல்

தழுதழுத்தது. கண்கள் மீண்டும் கலங்கியது. கோபாலும் கலங்கினான்.

''ஆனால்... என்னமோ பெறந்த மண்ணப் பார்க்கணும்.. பெத்தவங்களப் பார்க்கணும்... கூடப் பெறந்தவங்களப் பார்க்கணும்னு... ரொம்ப... ஆசையா... இருக்கு....

''நம்ம பிள்ளையார்கோயில்... ஊர்த்தண்ணிக் கெணறு... நம்ம ஊர் ஆலமரம்..., கம்மா..., மதினி குருவம்மா. சின்னாத்தா வெயிலு வந்தாள்... சின்னையா... அக்காள் வீரம்மா... மச்சான், நம்ம வீட்டு நாயி...எல்லாத்தையும் பார்க்கணும்னு ஆசையா இருக்கு... நம்ம ஊருக்கு வரணும் போல இருக்கு''. சீதை வாயிலிருந்து சொற்கள் வர்றதுக்கு முன்னாடி பலத்த அழுகை வந்து விட்டது.

மூன்று பேரும் அமைதியானார்கள்.

''இதையெல்லாம் நெனச்சு நெனச்சுத்தான் எனக்கு அழுகையா இருக்கு... ஐயா வீட்டுக்கு வந்து சருவப்பானை... குடம்., குண்டாச்சட்டி வட்லு, செம்பு வாங்கிட்டு வந்திரணும்னு எனக்கு ஆசையில்லை'' நின்னுக்கிட்டே அழுதாள். திறந்த வெளியிலே இப்படி அக்கா அனாதையாகி அழுகறது ராமுத்தாய்க்கு கஷ்டமாக இருந்தது... 'அக்காள் பாவம்'

''சீதா... வீட்டுக்குப் போத்தா... வீட்டுக்குப் போ...''ன்னு மச்சான் அக்காள் கண்ணீரை ஆதரவாகத் தொடச்சு அனுப்பி வைத்தார்.

ஊர்லே ஐயாவும் அம்மாவும் ராமுத்தாயை எதிர் பார்த்துக் காத்திருந்தார்கள். ராமுத்தாய் வந்தவுடன் ஐயா அவளைச் சாட்டைக் கம்பை எடுத்து அடித்து நொறுக்கினார். 'நான் செஞ்சது தப்புத்தான்.. இனி மேல் இப்படிச் செய்ய மாட்டேன்னு சொல்லு'ன்னு சொல்லிக் கிட்டே அடி அடின்னு அடித்தார். சாட்டைக் கம்பு சல்லி சல்லியாகச் சிதறியதே தவிர அவள் ''ஏ ... யய்யா.... அக்கா நல்லவயா.. அக்கா ஒரு தப்புஞ் செய்யலையா....ன்னு சொல்றதத் தவிர வேற சொல்லவே இல்லை.

ஐயா ரொம்ப மானஸ்தர்; ரோஷக்காரர். ''இந்தச் சின்னப் பொட்டக் கழுதைக்கு எவ்வளவு ராங்கித்தனமுன்னு பாரேன்...'' ன்னு உள்ளுக்குள் உடைந்து கொதிப்படைந்தார். வால் கயிற்றை

எடுத்து ராமுத்தாயை தூணில் புடுச்சுக் கட்டிட்டு ஊனு கம்பை தேடி எடுத்துக்கிட்டு ஓடி வந்தார்.

அம்மா ஓடி, ''அவளக் கொன்றாதீங்க... உங்களுக்குள்ள ரோஷமும் மானமும் வீரமும் தானே... உங்க பிள்ளைகளுக்கும் இருக்கும். அவளைக் கொன்றாதீங்க...''ன்னு மல்லுக் கட்டிக் கிட்டிருந்தாள்.

ஊரே கூடி விட்டது. ''ஏ...யைய்யா அக்கா நல்லவயா... அவ ஒரு தப்பும் பண்ணலையா... அவள ஊருக்கு கூட்டிட்டு வாய்யா...''ன்னு ஊரே வெடிக்கிற மாதரி ஓலமிட்டுக் கொண்டிருந்தாள் ராமுத்தாய்.

☆

கொள்ளி ஓடையிலே ஊரேகூடி இருக்கிறது. ஒரே மௌனம். எவ்வளவு பரபரப்பு இருந்தாலும் அப்படியொரு நிசப்தம்.

கொள்ளி ஓடையிலே கூட்டம்னா யாரோ தூக்குப் போட்டோ, கிணற்றில் விழுந்தோ, மருந்தக் குடிச்சோ செத்துட்டாங்கன்னு அர்த்தம். சாதாரணமாகச் செத்தவங்களை எல்லாம் சுடுகாட்டிலே தான் புதைப்பாங்க... ஆனால் இது மாதிரி சாவுக்காரங்களை கொள்ளி ஓடையிலே போட்டுத்தான் பொசுக்குவாங்க...

வேலைகள் வேகமாக நடந்து கொண்டிருந்தன. சிப்பிப்பாறை வரிசைப் பனைப் பக்கமாக இருந்து அலறல் சத்தம் கேட்டது. ஊர்முகம் சிப்பிப் பாறையைப் பார்த்தது. அலறல் பெருகி அலை அடித்தது. மார்பிலே அடிச்சிக்கிட்டு வர்ற ஒரு பொம்பளையும், ஒரு ஆம்பளையும் தெரிந்தது.

''சீதையும் அவள் மாப்பிள்ளையும் வாராங்க... ஏய் கொஞ்சம் மண்பூசறத நிறுத்தப்பா...'' பல குரல்கள் ஆணையிட்டன.

நிறை கர்ப்பிணியாக சீதை கூட்டத்தை நெருங்கிய பொழுது கூட்டத்தினர் மனம் பதை பதைத்தது. அவள் புருஷனைப் பலர் கூர்ந்து பார்த்தனர். அம்மா ஓடிப்போய் அவளைக் கட்டிப்பிடித்து ஓலமிட்டாள்...

''எல்லாப்புள்ளைகளும் நூறு ரூபா அட்வான்ஸ் வாங்கிட்டு வந்திருக்கே. நீ என்னடி அம்பது ரூபாதான் குடுத்தாங்கன்னு

ஈாதிக்கிற... ஒழுங்கா உண்மையைச் சொல்லிருன்னு எவ்வளவோ கேட்டுப் பார்த்தேனே. சொல்ல மாட்டேன்டாளே... உங்க ஐயா வந்து இன்னைக்கு ஒன்னக் கொண்ணு தூக்கப்போறாருன்னு சொன்னேன்... நம்ம ஐயா வந்து நம்மளக் கொல்ல வேண்டாம்.. நாம்ளே செத்துப் போவோம்னு எம்மக போயிட்டாளே...''

''ஏ... ராமுத்தாயி... ஏ...ராமுத்தாயி...எஞ்செல்லம்.. எஞ்செல்லம்.. அறிவு மாணிக்கமே.. அறிவு மாணிக்கமே''ன்னு மார்பிலே மார்பிலே அடிச்சிக்கிட்டுக் கதறினாள் சீதை.

''ஏய்... நெற வயித்துப் புள்ளக்காரி. இப்படித்தானா நெஞ்சிலே நெஞ்சிலே... போட்டு விளமெடுத்துப் போய் அடிப்ப''ன்னு ஒருத்தி அவள் கைகள் ரெண்டையும் பிடித்துக் கொண்டாள்.

''நான் வேண்டவே வேண்டாம்ணனே...திரும்பக் கொண்டுட்டுப் போயிருண்ணனே.... அவதலைமேலே சத்தியம் பண்ணிட்டாளே, கைத்தறியிலே மச்சானுக்கும் அக்காளுக்கும் கடன்லே வேட்டி, சேலை எடுத்துக்கிட்டு அக்கா ஊருக்குப் போய்ட்டு வந்திருன்னு ஐயா சொன்னாருன்னு சத்தியம் பண்ணிட்டாளே.''

''தீபாவளிச் செலவுக்கு இருபதுரூபாயும் ஸ்ரீவில்லிப்புத்தூர் கவர்மென்ட் ஆஸ்பத்திரியிலே பிரசவம்பார்க்கறதுக்கு முப்பது ரூபாயும் செலவழிச்சிக்கிடட்டும்னு ஐயா அம்பது ரூபா குடுக்கச் சொன்னாருன்னு சொல்லிட்டாளே...''

''ஏ... தாயி ஆறு மாதத்துக்கு முன்னாடி இங்கே வந்ததுக்கே.. ஐயா உன்னை தூண்லே கட்டி வச்சு அடிச்சாரே... வேண்டாந்தாயி, இங்கே வந்ததே தெரியாதபடி ஒடனே கிளம்பிருன்னு எவ்வளவோ கெஞ்சினனே.... பாதகத்தி ஐயாதான் குடுத்திட்டு வரச் சொன்னா ருன்னு சாதிச்சிட்டாளே...

''ஏ...தாயி எங்களை எல்லாம் விட்டுட்டு இப்படிக் கொள்ளி ஓடையிலே போகத்தான் அப்படிச் சாதிச்சயா...?''

ராமுத்தாயின் தற்கொலைக்கான காரணம் வெளியாகி விட்டது. கூட்டத்திலிருந்தவர்களின் முகத்தில் அற்பபிரகாசம். கசமுசா பேச்சுக்கள் அங்கும்....இங்கும்.

''விடிஞ்சா... தீபாவளி...! விடிஞ்சா... ஒன்னப் பொசுக்கின தீயாத்த வச்சுட்டேயே... தாயி...! எங்களுக்கு என்னைக்கு தீபாவளி

வரும்? எங்க வயித்திலே... எரியுற தீ... என்னைக்கு ஆறும்?'' அந்தச் சீதையின் இந்த கர்ண கொடூரமான ஓலத்தில் அனைவரும் கசிந்தனர்.

''என் கட்டித் தங்கத்தை முழுசா சேதாரமாக்கிட்டேனே . என் கட்டித் தங்கத்தை... முழுசா... சேதார மாக்கிட்டே....னே'' அம்மா ஐயா கால்களில் வீழ்ந்து கதறிக் கொண்டிருந்தாள்.

மேலே சட்டையில்லாமல் ஒட்டி உலர்ந்த உடம்பில் மடிச்சுக் கட்டின வேட்டியிலேயும், முதுகிலேயும் தொளி வெட்டின சேற்றோடு, மார்பில் கைகளைச் சேர்த்துக்கட்டி, வடக்கே வானத்தில் எதையோ தேடிக் கொண்டிருந்த மானஸ்தர் ஐயாவின் உடம்பு குனிந்து குனிந்து பின் விறைத்து விறைத்து நிமிர்ந்து கொண்டிருந்தது.

△

# இமைகளுக்கு நடுவே முள்

## ராம்

''இந்தாங்க, நீங்க இதுவரை எனக்கு எழுதின லெட்டர்ஸ், இதோ நீங்க தந்த பிறந்தநாள் ப்ரெசென்ட்டேசன். நீங்க தந்த புக்ஸ், சாவிக் கொத்து...''

''இன்னைக்கோட என்னை மறந்துடுங்க. இனிமே நீங்க யாரோ, நான் யாரோ. திரும்ப என்னைப் பார்க்கவோ, பேசவோ வேண்டாம். குட்பை''

கடிதங்கள், புத்தகங்கள் எல்லாவற்றையும் அவன் எதிரே போட்டாள். அவனுக்கு இடம் தராமல் பேசினாள். விருட்டென்று எழுந்து போய் விட்டாள். அவன், அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். கடிதமொன்று காற்றில் படபடத்து நகர, சட்டென அதைப் பிடித்துக் கொண்டான். ஒவ்வொரு கடிதமாய் எடுத்து அடுக்கினான். புத்தகங்களை ஒழுங்காய்த் தோள் பையில் வைத்தான். மண்ணில் சிதறிக் கிடந்த எல்லாவற்றையும் பையில் எடுத்துப் போட்டுக் கொண்டான். பையைத் தலைக்கு வைத்து, இரு கைகளையும் கட்டி, நெற்றியில் வைத்தபடி அப்படியே மணலில் கண்மூடிக் கிடந்தான். அலையோசை கேட்டுக் கொண்டிருந்தது. மனதுள் அதுவரையும் கருப்பு, வெள்ளை ஓவியம் தெரிந்தது. நிலவொளி முகத்தில் பட்டபோது எழுந்து வீட்டுக்கு நடந்தான்.

அன்றிலிருந்து இப்போதெல்லாம் அவன் இரவில் கிட்டத்தட்ட தூங்குவதேயில்லை. மொட்டைமாடியும் இரவும்தான் காதலி, சிநேகிதம், எல்லாம். வானத்தை அவன் பூரணமாய் நேசித்தான் மொட்டை மாடியில் சுவரையொட்டிப் படுக்கை விரித்து வானத்தையே இரவு முழுவதும் பார்த்துக் கொண்டிருப்பான். ஒவ்வொரு நட்சத்திரமாய் கோர்த்து அவள் பெயரை எழுத்துக் கூட்டிப் படிப்பான். மேகங்களெல்லாம் பூச்செண்டு, அவள் கழற்றி எறியும் ஆடை, கூந்தல் வழியும் அவள் முகம். அவள், அவளன்றி

வேறில்லை. ஓ, இரவுதான் எவ்வளவு இதமானது. உலகம் தூங்கும் போதுதான் அழகு விழித்துக் கொள்கிறது. இரவில் தூங்குபவர் களெல்லாம் கண்ணில்லாதவர்கள், பாவிகள், சபிக்கப்பட்டவர்கள்.

இரவோடு இணைந்து இசை இருக்கிறது. நுட்பமான காதுக்குத்தான் கேட்கும். நிசப்தத்திற்கு அந்த இசையில் பெரும் பங்குண்டு. ஒரு அதி உன்னத மிருதங்கக் கலைஞனின் துரிதகதி வாசிப்பில் சட்டென்று, உயிரைக் கவ்வும் ஒரு கணநிசப்தம் விழுமே- அதைப்போன்ற நிசப்தம். இந்த இசைக்குத் தொட்டுக் கொள்ள, சில சமயங்களில் காஸெட்டில் அர்த்தமும் நுணுக்கமும் தெரியாத - ஆனால் ஆத்மாவை உருக்கும் ஹிந்துஸ்தானி போட்டு விடிய விடியக் கேட்பான்.

ஒருநாள் இரவு. திடீரென்று அவள் இப்போது தூங்கிக் கொண்டிருப்பாளா, இல்லை தன்னைப்போல் தூக்கம் வராமல், தெருவையொட்டிய தன் அறை ஜன்னல் வழியே வானத்தையும், நிலவையும் பார்த்துக் கொண்டிருப்பாளா என்று அவன் நினைக்கத் தொடங்கினான். சற்று நேரத்தில் அவன் முற்றிலும் அமைதியிழந்து போனான். உடனே அவள் வீடுவரை போய்ப் பார்க்க வேண்டும் என்ற அலைக்கலிப்பை அவனால் தவிர்க்க முடியவில்லை. அம்மாவிடம் சாக்குச் சொல்லிவிட்டு அவள் வீட்டை நோக்கி நடந்தான்.

இந்தத் தெருமுனையில்தான் எத்தனை முறை காத்து நின்றிருப் பான். இந்தக் கடைசிவீட்டில் அவன் நண்பனிருந்தது வசதியாய்ப் போயிற்று. காலையில் கல்லூரிக்குப் போகும் போது அவளைப் பார்க்காவிட்டால் அவனால் சாப்பிட, தூங்க, சுவாசிக்கக் கூட முடியாது. அவள் வரும் நேரம் காத்து நிற்பான். அவள் வீட்டிலிருந்து தெருவைமிதித்ததும் நண்பனுக்காக காத்திருந்த பாவனையெல்லாம் பறக்க - அவளை எதிர்நோக்கி நடப்பான். அவளை நெருங்கும் போது அவன் கண்ணும், உதடும் தன்னைமீறி மெல்லியதாகச் சிரிக்கும். ஆனால் தனிமையில் இவனையே விழுங்குகிறாற் போல பார்க்கும் கண்கள் பார்த்தும் பாராதது போல் போகும். இவன் தன்னிதழ் பொருத்தி முத்தம் பதித்திருக்கும் அந்த இதழ்கள் சிறு சுளிப்பு கூட இன்றிப் போகும். இவனுக்கு ஆச்சரியமாயிருக்கும். தன்னையே முழுமையாய் இவனிடம் அர்ப்பணித்திருக்கும் அவள், எப்படி முற்றிலும் மாறான, அறிமுகமில்லை என்பதான ஒரு தோரணையை மேற்கொள்ள முடியும்? ஒருமுறை அவளிடம்

அதைக் கேட்டான். ''அதெப்பிடி உன்னால என்னப் பார்க்கும்போது எந்த மாறுதலுமில்லாம இருக்க முடியுது. நீ நிச்சயமாய் வருவன்னு தெரிஞ்சிருந்தாலும் உன்ன பார்த்த வினாடி மனசு 'பக்பக்'ன்னு அடிக்குது. முகமே மாறிப் போகுது. நீ மட்டும் எப்படி சின்ன சந்தோஷத்தையோ ஆச்சரியத்தையோ கூட காட்டாம இருக்க?'' அவள் மெல்லிய குரலில் தலைகுனிந்து சொன்னாள்: ''என் மனசுல நீங்க எப்பவும் எங்கூட இருக்கறதாவே நினைப்பு. சாப்பிடும் போது என்னோட தட்டிலியே நீங்களும் சாப்பிடறிங்க. காலேஜ்ல என் பக்கத்தில நீங்கதான் உட்கார்ந்திருக்கீங்க. கடைக்கு, கோவிலுக்கு, சினிமாவுக்கு எங்க போனாலும் நீங்ககூடவே வறீங்க. தூங்கும் போது பக்கத்தில உட்கார்ந்து என்னையே பார்த்துக்கிட்டிருக்கீங்க. அதனால உங்களப் பார்க்கும்போது எனக்கு எந்த மாறுதலும் தெரியறதில்லை'' அவன் அன்றிரவு தூங்கவில்லை. ஆனால் அன்றைக்கும், இன்றைக்கும் எவ்வளவு வித்தியாசம்.

அவன், அவள் வீட்டை இப்போது நெருங்கியிருந்தான். அவள் அறையை உற்றுப்பார்த்தான். ஜன்னல் சாத்தியிருந்தது. அவனால் மேலே நடக்க முடியவில்லை. வாசலில் மங்கலாய்த் தெரிந்த கோலத்தைப் பார்த்தான். அவள்தான் போட்டிருப்பாள். அவள் மனதைப்போலவே நிறைய வளைவும் நெளிவும் உள்ள, ஆனால் அழகிய கோலம். மூங்கில் வேலிக்குள்ளிருந்து பன்னீர்ப் புஷ்பங்கள் சொரிந்திருந்தது. அவள் பாதங்களுக்கு இயற்கை தேவதை செய்திருக்கும் புஷ்பாராதனை. அவன் குனிந்து ஒரே ஒரு பூவை எடுத்துச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

அவனுக்குச் சட்டென்று அந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

அவனுக்கு மல்லிகைப்பூ என்றால் ரொம்ப பிடிக்கும். மல்லிகை வைத்திருக்கும் எல்லாப் பெண்களுமே அழகாயிருப்பதாய்ப் படும். அதற்காகவே அவள் அடிக்கடி மல்லிகை வைத்துக் கொள்வாள். ஆனால் அவர்கள் பொதுவாக கல்லூரி முடிந்தபின்தான் தனியாக சந்திக்க முடியும். அப்போது பூ வாடியிருக்கும். அதனால் அதை அகற்றியிருப்பாள். அவனுக்கு ரொம்ப நாளாக ஆசை. அவள் கூந்தல் மல்லிகையிலிருந்து வரும் வாசத்தை முகர்ந்தபடி அவளுடன் நடக்க வேண்டும். அவனுக்காக எப்படியோ ஒரு நாள் மாலையில் புத்தம் புதுப் பூச் சூடிவந்தாள். மணலில் உட்கார்ந்தவுடன் அவள் தலையிலிருந்து பூப்பறித்தான். அது இதழ் உதிர்ந்து, கசங்கி கையில் கிடைத்தபோது ஏக்கத்துடன் அதைப்பார்த்தான். அவள் சிரித்தபடி

முழுசாய் சில பூக்களை எடுத்துத் தந்தபோது, கண்ணில் ஒற்றி சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டான். அந்தப் பூக்கள் இன்னும் அவள் தந்த ''மில்ஸ் & பூன்'ல் சருகாய் இருக்கிறது. அவன் வீடு வந்தவுடன் அந்தப் பன்னீர்ப் புஷ்பத்தையும் அந்தப் பக்கத்திலேயே வைத்தான்.

ஒருநாள் பக்கத்து வீட்டு நண்பர்கள் சினிமாவுக்கு இரவுக் காட்சிக்கு அழைக்க, ஒரு இரவு வித்தியாசமாகக் கழியட்டுமே என்றுஅவனும் ஒப்புக்கொண்டான். நேரமிருக்கவே வெளியே பேசிக் கொண்டிருந்தார்கள். ஏதோ உணர்வில் திரும்பியபோது, அதுவரை அவனைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். டிக்கட் வாங்கிக் கொண்டு வந்த அப்பாவுடன் அவளும், அம்மாவும் தியேட்டருக்குள் போனார்கள். அவனுக்கு முற்றிலும் எதிர்பாராமல் அவளைப் பார்த்தது நல்ல சகுனமாகப்பட்டது. இன்னொரு மனதில் அது முற்றிலும் எதிர் பாராத நிகழ்வு இல்லை என்பதாகவும் பட்டது. இந்த வேதனை நிறைந்த நாட்கள் இன்றுடன் முடியப்போவதாய்த் திடீரெனத் தோன்றிய உற்சாக உள்ளுணர்வு சொல்லியது.

படத்திலும் நாயகி, நாயகனை தவறாகப் புரிந்துக் கொண்டாள். அவனிடமிருந்து முற்றிலும் ஒதுங்கிப் போனாள். எனினும் அவனை மறக்கவொட்டாது கனவிலும் சோகப்பட்டாள். இவள் கவலை யறிந்து நாயகியைத் தோழிகள் உல்லாசப்பயணம் அழைத்துப் போனார்கள். நதிக்கரையில எல்லோரும் அமர்ந்திருக்கும்போது ஒரு காகம் நாயகியருகே வந்திறங்குகிறது. நாயகி காகத்தையே உற்று நோக்குகிறாள். முழுத்திரையையும் காகம் ஆக்ரமிக்க, பின்னணியில் மெதுவாக ஜானகி 'ஹம்' செய்ய, காகம் கொஞ்சம் கொஞ்சமாய் மங்க அந்த இடத்தில் சற்று கருமையான நாயகன் முகம் தோன்ற, மிக சோகமான குரலில், உன்னத வயலின் இழைப்புடன் ஜானகி ''காக்கைச் சிறகினிலே நந்தலாலா, நின்றன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா'' என்று பாடுகிறார். காமெராவும், இயக்குநரும், இசையும் சேர்ந்து ஒரு உன்னதக் காட்சியை அரங்கேற்றிக் கொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் நாயகி முகம் எந்த உணர்ச்சியும் காட்டாது, இறுகிப் போயிருக்க, கண்ணீர் அனிச்சையாய் வழிந்து கொண்டிருக்க, சுட்டுவிரலை நீட்டி, நின்று எரியும் தீபத்தைத் தொட்ட போது ''தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா'' என்று ஜானகி

பாடுகிறார். அந்த நொடியில், படம் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்குப் பட்டென்று ஒரு உண்மை உறைத்தது. அவளும் தன் காதலனைப் பிரிந்து திருப்தியாகவும், சந்தோஷமாகவும் இருந்து விட முடியாது. பெண்களுக்கேயுரிய பிரசித்தி பெற்ற வீம்பினால் விலகியிருந்தாலும், தன்னையே வருத்திக் கொண்டும், துன்புறுத்திக் கொண்டும், இறகினும் மெல்லிய அசைவுக்குக்காத்திருந்து காதலனுடன் இணைவார்கள். அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

இடைவேளையின்போது அவள் அப்பா முதலில் எழுந்து போக, அவள் ஏதாவது வாங்கும் பொருட்டுக் கூட்டத்துடன் சேர்ந்து கடை நோக்கி நடந்தாள். அவள் அறிய அருகே அவனும் நடந்தான். வாசல்பக்கம் கூட்டமாயிருக்க அந்தக் கூட்டம் தந்த மறைவில் மெதுவாய் அவள் கையைத் தொட்டான். பட்டெனத் திரும்பி அவனை ஒரு வினாடி முறைத்து 'யூ ராஸ்கல்' என்றாள். சுற்றியிருந்த வர்களில் ஒருவர் 'என்ன மிஸ்?' என்று கேட்க, ஒருவன் அவன் சட்டையைப் பிடிக்க, இதைக் கவனித்த நண்பர்கள் அசம்பாவிதம் நடக்காமல் தடுக்க, அவன் மட்டும் தியேட்டரை விட்டு வெளியே வந்து நடந்தான்.

இரவில் தனிமையில் நடப்பது எவ்வளவு இனிமையானது. வாழ்க்கை முழுதும் இப்படியே நடந்து கொண்டிருக்கலாம். அவன் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். அவன் ஒவ்வொன்றாய்க் கோர்த்து அவள் பெயர் எழுதும் நட்சத்திரக் கூட்டம் சிரித்தது. எல்லா மேகங்களும் ஒரே திசையில் பறந்து கொண்டிருக்க, அதிசயமாய் எதிர்த்திசையில் ஒரே ஒரு மேகம்மட்டும் வர, உற்றுப்பார்த்தான்; இரவுப்பறவைகள். பறவைகளே, பறவைகளே! ஆசீர்வதிக்கப்பட்ட பிறவிகளே! என்னையும் அழைத்துச் செல்லுங்கள். ஏன் என்று கேட்கமாட்டேன், எங்கேயென்று கேட்கமாட்டேன். உங்கள் சிறகுகள் அபூர்வமான வரம். அந்த சிறகைப் போன்ற மெல்லிய வாழ்க்கை வேண்டும். வானத்தில் மறுகோடியில் அவை மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது இரவுகள் இப்படிக்கழிந்து கொண்டிருந்தன. பகலில் கல்லூரி. மாலையில் அவளுடன் இணைந்து சந்தோஷமாக இருந்த இடங்களுக்கு அவன் மட்டும் தனிமைப்பயணம். அந்த இடங்களில் அவளுடன் முன்பு உட்கார்ந்திருந்த அதே இடத்திலேயே உட்கார்ந்து, அன்று அவர்கள் பேசியதை, சிரித்ததை நடந்து கொண்டதை மனதில்மறுபடியும் நடத்திப் பார்ப்பான்.

'வாக்-மென்'ல் பாட்டுக் கேட்பான். ''மலரே மலரே தெரியாதோ, மனதின் நிலைமை புரியாதோ, எனை நீ அறிவாய், உனை நான் அறிவேன்''. அவளுக்கு மிகவும்பிடித்த பாட்டு. அடிக்கடி பாடுவாள். நினைத்தாற் போலிருந்து பாடுவாள். தனிமை சுதந்தரத்தில் அவன் தோளில் சாய்ந்துபாடுவாள். 'ஏன் இவ்வளவு தாமதம்? என்று கேட்கும்போது பாடுவாள். சந்தோஷமாய் இருக்கும்போது பாடுவாள். வருத்தமாயிருக்கும் போதும் அதே பாட்டு. பாடிப்பாடியே உருக்கினாள், உருகினாள். இதோ இங்கேயே ஒருநாள் பாடியிருக்கிறாள். இப்போது எங்கே போயிற்று 'உன்னைநான் அறிவேன்' என்றுலயித்துப் பாடிய பாடலின் அர்த்தம். அவனால் அதற்குமேல் அங்கிருக்க முடியவில்லை. அவன் வீடு நோக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினான். சாலையில் எதிர்வந்த பெண்கள் எல்லோரும் அவனைக் கடக்கும் வரை பார்த்தார்கள். இது அவனுக்கு சகஜமாயிருந்தது. எல்லாப் பெண்களும் அவனை அன்புடன் பார்க்கிறார்கள். அவனிடம் ஏதோ ஒன்று அவர்களை ஈர்க்கிறது. எனவே தங்கள் கண்ணில் ஆதரவு காட்டுகிறார்கள். சோகமான கண்களுக்கு பெண்கள் அடிமை போலும்.

தான் இப்போதெல்லாம் நிதானப் பட்டிருப்பதை அவன் உணர்ந்தான். 'பைக்' மெதுவாகத்தான் ஓடுகிறது. குரல் தாழ்ந்து தான் வருகிறது. 'ஸ்டீரியோ' சப்தம் பிடிக்கவில்லை. தனக்காக மட்டும் காதில் ரகசியமாய் இசைக்கும் 'வாக்-மென்' பிடிக்கிறது. கல்லூரியில் ஆர்ப்பாட்டம் இல்லை, அமர்க்களம் இல்லை. அமைதி எவ்வளவு ஆழமானது. எல்லோரும் சொல்வது போல் அவன் நிரம்ப மாறி யிருந்தான். ஆனால் இந்த மாறுதல்கூட மகிழ்ச்சிதான். சோகத்திலும் ஒரு சுகமிருக்கிறது. உண்மையில் இது சோகமா? சுகமா?சமயங் களில் அவனுக்கு தான் மீண்டும் அவளுடன் இணைய வேண்டுமா என்று கூடத் தோன்றியது. இந்த அடிமன வாழ்வு அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது. தனக்கென ஒரு தனி உலகம், தனிவாழ்வு. காதல் தோல்வி உண்மையில் சாபமா? வரமா?

ஒரு நாள் வழக்கம்போல் தன் தனிமையுலகில் சஞ்சரித்துவிட்டு தாமதமாய் வீடு திரும்பினான். பசியில்லை என்று சொல்லி தன்னறைக்குப் போனான். மேஜையின் மீது அவனுக்கு வந்திருந்த கடிதம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அசுவாரசியமாய் கையிலெடுத்தான். திடீரென இதயத்துள் பத்திருபது அரேபியக் குதிரைகள் 'தடதட' வெனப் பாய்ந்தோடியது. அவள் கையெழுத்து.

நடுங்கும் விரலால் பிரித்தான். அன்புள்ள என்றெல்லாம் துவங்காது மொட்டையாய் இருந்தது. ''உங்கள் நினைவை அறவே அழித்து விட்டாலும், நீங்கள் பரிசு தந்த பேனா ஒன்று தங்கி முள்ளாய் உறுத்திக் கொண்டிருக்கிறது. நாளை, வழக்கமான இடத்தில், நேரத்தில் வந்து பேனாவை வாங்கிச் செல்லுங்கள்''. அவனுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. கடிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென அவனுள் ஏதோ பொறி தட்டியது. எல்லாம் வெட்ட வெளிச்சமானது. புரிந்து போனது.

அவன் அவள் குறிப்பிட்ட இடத்தில் காத்து நிற்பான். அவள் வேண்டுமென்றே தாமதமாய் வருவாள். வந்தவுடன், பேசாமல் அந்தப் பேனாவை நீட்டுவாள். அவன் கைகட்டி மௌனமாய் நிற்பான். அவள் கோபமாய், ''இத திருப்பி வாங்கிக்கங்க, உங்கள்ட்ட பேசவே பிடிக்கலை'' என்பாள். அதற்கும் அவன் மௌனமா நிற்பான். ''ச்சீ'' என்பாள். ''உங்கள பார்க்கவே பிடிக்கலை'' என்பாள். நாலைந்து வினாடிக்கு ஒருமுறை இமையை இமைத்துக் கொண்டு அவன் அமைதியாய் அவளைப் பார்த்தவாறே இருப்பான். ''உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா... ஐயோ, நான் சரியான பைத்தியம். திரும்பத் திரும்ப பழசையே நெனைச்சிட்டு, பேசிட்டு... சீக்கிரம் இத வாங்கிக்கங்க, நான் போகணும்'' என்பாள். அவன் இவ்வளவு நேரம் பேசாமலிருந்ததால் கரகரப்பான குரலைச் சரிசெய்து ''வாங்கிக்கறேன், ஆனா இவ்வளவு ஆனதக்கப்புறம் எனக்கும் நீ எழுதின கடிதம், மற்ற பரிசு எல்லாத்தையும் கொடுத்திட ணும்னு தோணுது. பைல எல்லாத்தையும் கொண்டு வந்திருக்கேன். ஆனா தெருவுல இதெல்லாம் வேண்டாம்...எதிர்ப்புறம் கைகாட்டி அதோ நாம முதல் தடவையா சேர்ந்துபோன ஹோட்டலுக்குப் போவோம். எல்லாத்தையும் அங்க முடிச்சுப்போம்'' என்பான். அவள் வேறுவழியில்லாமல் வருவதுபோல் வருவாள். ஏ.ஸி. அறை தனிமையிலும் பக்கத்தில் உட்காராமல் எதிர் இருக்கையில் அமர்வாள். உடனே பேனாவை எடுத்து நீட்டுவாள். அவன், அவள் கையையும் சேர்த்துப் பிடிப்பான். மௌனமாய்த் தலைகுனிவாள். கையைப் பிடித்தவாறே அவள் பக்கத்தில் வந்து உட்காருவான். ''இப்போ சொல்லு பார்க்கலாம், 'ராஸ்கல்னு' என்பான். பற்றியிருக்கும் அவன் கையில் முதல் கண்ணீர்த் துளி விழும். சரி, சரி அழாதே, இனிமே சண்டை போடாம சந்தோஷமா இருப்போம்'' என்பான். அவள் அவனைப் பார்த்து அழுகையினூடே சிரிப்பாள்.

△

# சார்ல் போதலேர்

## (1821-67)

முருகுசுந்தரம்

எட்கார் ஆலன்போ என்ற அமெரிக்க எழுத்தாளரின் படைப்பின் மீது போதலேருக்கு அளவு கடந்த ஈடுபாடு உண்டு. இலக்கியத் துறையில் அவரைத் தம் குருவாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டார் போதலேர். அதோடு நின்றிருந்தால் பரவாயில்லை; அவருடைய பழக்கங்களையும் ஏற்றுக் கொண்டார்.

ஆலன்போ ஓர் அபின் பிரியர்; போதலேர் கஞ்சாப் பிரியர். அபினும் கஞ்சாவும், பயன்படுத்துபவரைத் தூக்கத்தில் ஆழ்த்துவதில்லை; அவர்கள் உள்ளத்தில் ஒருவிதக் கிளர்ச்சியை ஏற்படுத்தி, விரும்பி ஏற்றுக் கொண்ட ஒரு கனவு நிலைக்கு அவர்களை ஆட்படுத்துகின்றன. அவற்றைப் பயன் படுத்தியவுடன், அவர்கள் உள்ளம் எந்தப் போக்கில் பயணம் செய்ய விரும்புகிறதோ, அந்தப் போக்கிற்கு அவர்களை எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் செலுத்துகின்றன.

கஞ்சா மயக்கம் வழங்கும் குழப்பமான அற்புதம் பற்றிப் போதலேர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

''கஞ்சாப் போதையின் துவக்கத்தில், வழக்கத்திற்கு மாறான வண்ணத்தின் ஆதிக்கம் நமக்குப் புலப்படும். கண்ணைப் பறிக்கும் ஒளியுடம்போடு காட்சி தரும் மோகினிப் பெண்கள், நீலவானை விடத் தெளிவான - ஆழமான விழிகளால் நம்மை உற்றுப் பார்ப்பார்கள். அப்போது ஏற்படும் இனம் புரியாத க்ஷண நேர மன நிலைகளில் நம் வாழ்க்கையின் ஆழ அகலங்களும், நெளிவு சுளிவுகளும், அற்புதங்களும் நம் கண் முன் பளிச்சிடும். நம் கண்ணுக்கு முதன் முதலில் எந்தப் பொருள் தென்படுகிறதோ, அதுவே நம் அறிவை நடத்திச் செல்லும் குறியீடாக அமையும். தெளிந்த நீர் நிலைகளும், நிலைக் கண்ணாடிகளும் கனவுலகத்தை நமக்குத் திறந்து விடும்;

சோக மயமான ஒரு பேரின்பத்தில் நம் உள்ளம் ஆழ்ந்து, எல்லையற்ற காட்சிகளில் திளைக்கும்''.

இத்தகைய அனுபவத்தில் திளைத்து மிகவும் நூதனமாக உணர்ச்சி வெளிப்பாடுகளுடன் கூடிய அரிய கவிதைகளைப் படைத்த கவிஞர் போதலேர் மட்டும் அல்லர்; வேறு பலரும் இருந்திருக்கின்றனர். மகாகவி பாரதியாருக்கும் கஞ்சாப் பழக்கம் உண்டு; குயில் பாட்டும் இந்த அடிப்படையில, அவர் விரும்பி ஏற்றுக் கொண்ட கனவுநிலைக் கற்பனைதான். கோலரிட்ஜின் 'குப்ளாய்கானையும்' இந்த வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம்.

☆

பியர் சார்ல் போதலேர் (Baudelaire Pierre Charles) 1821ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினரின் மகனாகப் பாரிசில் பிறந்தார். இவர் சிறுவனாக இருக்கும் போதே தந்தை இறந்தார்; தாய் ஓர் இராணுவ அதிகாரியை மறுமணம் செய்து கொண்டார். போதலேர் பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்டு சட்டக் கல்லூரியில் நுழைந்தார்.

வீட்டுக்கடங்காத பிள்ளையாக இருந்த இவரை கப்பலேற்றிக் கல்கத்தாவுக்கு அனுப்பினர் பெற்றோர். ஆனால் நடுவழியில் மொரீஷியஸ் தீவில் இறங்கிக் கொண்டார். வெப்ப மண்டலத்தில் இருந்த மொரீஷியஸ் தீவில் சிலகாலம் தங்கியிருந்து வெது வெதுப்பான அனுபவங்களோடு பாரீஸ் திரும்பினார் போதலேர்.

சுதந்தரமான பணவசதியோடு இருந்த போதலேர், பாரீசின் நவநாகரிகக் கேந்திரமான 'லத்தீன் குவார்ட்டர்ஸ்' என்ற பகுதியில், கட்டுப்பாடற்ற உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டார். நீக்ரோக் கலப்பு இனக்காரிகை, கருப்புரதி ழான் துய்வால் (Black Venus Jeanne Duvel) என்பவள் இவருக்கு நிரந்தரக் காதலியாகக் கிடைத்தாள். சீமாட்டி சாபாத்தியர் என்ற நடிகையிடமும் அவருக்குத் தொடர்பிருந்தது. போதலேரின் சொர்க்க நரகக் கற்பனைகள், இவ்விருவர் மீதும் அவர் கொண்ட காதற் சுழியிலேயே சுழன்றடிக் கின்றன.

இளமையில் அவர் விரும்பி ஏற்றுக் கொண்ட கொள்கை 'டாண்டியிசம்'. தன் விருப்பப்படி வாழ்தல், தன் முனைப்போடு

முதன்மையாக இருத்தல், நட்பு, நாடு, குடும்பம் என்ற பற்றுக்களை அறுத்துச் சுதந்தர மனிதனாக வாழ்தல், பிரபுக்களை வெறுத்தல் என்பன டாண்டியிசத்தின் கொள்கைகள்.

'பசி, இன்பம், அன்புக்கினிய தாய் ஆகிய எல்லாவற்றுக்கும் மேலாக நான் நேசிப்பது இலக்கியமே' என்று குறிப்பிடும் போதலேர் 'கலை கலைக்காகவே!' என்ற கொள்கை உடையவர். ரொமாண்டிக் கவிஞர்கள் விரும்பிப் போற்றும் 'பொங்கி வரும் மனவெழுச்சிக் கொள்கையை' (Spontaneous overflow of powerful feelings) இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. கலைக்கு ஒரு தெய்வீக மரியாதையும் இவரிடத்தில் கிடையாது.

'அழகு, அறம், கலையாவும் செயற்கையானவை; அவை கலைஞன் அல்லது கவிஞனின் திட்டமிட்ட சிந்தனையிலிருந்து தோன்றுபவை. கவிதையை எந்தவிதப் பிரசாரத்துக்கும் பயன் படுத்தக்கூடாது. அழகின் மீது அடங்காக் காதல் கொள்ளுதலும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் அழைப்புகளுக்கு அடிபணிதலும் தவிர்க்க முடியாதவை என்ற காரணத்தால், கலைஞனும், கவிஞனும் தாம் மேற்கொண்ட படைப்புப் பணிக்கு நிரந்தர அடிமை' - என்ற சிந்தனைப் போக்குடையவர் போதலேர்.

'கவிதையின் கருப்பொருள் உயர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும் என்ற கருத்தில் போதலேருக்கு உடன்பாடு கிடையாது. அன்றாட வாழ்க்கையில் தட்டுப்படும் சாதாரணப் பொருள்களும் இழிந்த பொருள்களுமே அழகானவை என்றும், அப்பொருள்களை அழகிய சொல்லோவியத்தால் அலங்கரிப்பதே மேலான கவிதை உத்தி (Grand style of poetry) என்றும் குறிப்பிட்டார். ஏழை, குடிகாரன், தெருப் பிச்சைக்காரன், விபசாரி, அபலை ஆகியோரும், பழி, பாவம், தீவினை, பொல்லாங்கு ஆகியவையும் அவர் விரும்பி ஏற்றுக்கொண்ட கருப்பொருள்கள். இக்கொள்கைக்கு அவர் பாடியுள்ள 'சூரியன்' என்ற கவிதை சிறந்த எடுத்துக்காட்டு. மேற்கு வாயிலில் படியும் மாலைச் சூரியனின் வர்ண ஜாலத்தால் உலகின் சாதாரணப் பொருள்களும் எப்படிப் பேரழகு பூணுகின்றன என்பதை அப்பாட்டில் சிறப்பித்துப் பாடுகிறார். இத்தகைய ரசவாதத்தை ஏற்படுத்தக் கவிஞனானவன் மப்புமந்தாரமற்ற மேல்வானத்துக்குத் தன் ஒளி படைத்த கண்ணை உயர்த்தவேண்டும். அப்போது பொருளற்ற அற்பப் பொருள்களும் நுட்பமான பொருள் விளக்கம் பெறும்' என்று கூறுகிறார் போதலேர். போதலேரின்

இக்கொள்கையை 'மாநகர்க் கொள்கை' (The religious Intoxication of great cities) என்று திறனாய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

மேலை நாட்டுக் கலை இலக்கியப் போக்கை அடியோடு மாற்றியமைத்த ஆற்றல்மிக்க இயக்கங்களான சர்ரியலிசம், சிம்பாலிசம் ஆகியவற்றின் ஊற்றுக்கண்ணே போதலேர்தான் என்பது எல்லாரும் ஏற்றுக் கொண்ட உண்மை. அவருடைய கவிதை நூலான 'நச்சுப் பூக்கள்' (Les Fleurs du Mal) 1857 ஆம் ஆண்டு முதன் முதலாக வெளியிடப்பட்டது. 'அதில் தெய்வ நிந்தனை காணப்படுகிறது' என்று கூறிச் சமயவாதிகள் கண்டனக் குரல் எழுப்பினர். படிப்பவர் உள்ளத்தில் கீழ்த்தரமான உணர்ச்சிகளை அவர் கவிதைகள் தூண்டுவதாகக் குற்றம் சாட்டி, பிரெஞ்சு அரசாங்கம் 300 பிராங்க் அவருக்கு அபராதம் விதித்தது.

தனக்குப்பின் வந்த சந்ததியினரிடையே நச்சப்பூக்களைப்போல் அபரிமிதமான செல்வாக்குப் பெற்ற வேறு கவிதை நூல் மேலை நாட்டில் எதுவுமில்லை என்று சொல்லலாம். மேலைநாட்டில் கவிதைப் புதுமையே (Modernism in poetry) இந்நூலில் இருந்துதான் தொடங்குகிறது.

புதுக் கவிஞர்களின் முன் மாதிரியே (Archetype) போதலேர்தான். புதுக்கவிஞர்களின் பண்புகளாக வரையறுக்கப்பட்ட தனிமை, எதிர்ப்புணர்ச்சி, மனச் சஞ்சலம், தன்னையே அழித்துக் கொள்ளும் ஆத்திர உணர்ச்சி யாவும் போதலேரிடமிருந்து பெற்றவையே. பிறர் தூற்றும்படி புரட்சிகரமாக வாழ்ந்த போதலேருடைய வாழ்க்கையின் அடிக்குறிப்பு பற்றிய வரலாறே (History of foot notes) புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி பற்றிய வரலாறாகும் என்று மேலை நாட்டுத் திறனாய்வாளர் குறிப்பிடுவது பொருத்தமே.

'கற்பனை என்பது அறிவியல் அடிப்படையில் அமைந்த பேராற்றல். பேரண்டத்தின் ஒழுங்கையும், இயக்கத்தையும் (Universal Analogy) கற்பனை ஆற்றலால் தான் உணர முடியும்' என்று போதலேர் குறிப்பிட்டார். ஸ்வீடன் பர்க்கும், ஆலன்போவும் இதே கொள்கையுடையவர்கள்.

போதலேர் ஓர் ஐயுறவாளர் (Sceptic), கற்பனை ஒரு பேராற்றல் என்று குறிப்பிட்டாலும், அது கை கொடுத்து உதவாத சில நேரங்களில் அதன்மீது அவருக்கு ஐயுறவு ஏற்பட்டது. அந்த நேரங்களில் கற்பனைக்கு ஊக்கம் கொடுப்பதற்காக மதுவையும்

கஞ்சாவையும் நாடினார். அவற்றின் தூண்டுதலால் ஒரு செயற்கைச் சொர்க்கத்தை அவரே படைத்துக் கொண்டு அதில் திளைத்தார்.

போதலேர் கடவுட்பற்றோ, மதப்பற்றோ இல்லாதவர். என்றாலும் அவர் உள்ளத்தில் படிந்துவிட்ட சமயக் கருத்துக்கள் சிலவற்றை அவரால் அடியோடு உதறமுடியவில்லை. கிறித்தவ சமயக் கொள்கைப்படி, மனிதன் பாவியாகவே இருக்கிறான் என்ற உணர்வும், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்வதற்குமுன் வாழ்ந்த 'ஏதேன்' என்ற சொர்க்கத்தை மனிதன் மீண்டும் அடைய முடியாது என்ற உணர்வும், இவ்வுலகின் துன்பமாகிய கோரப்பிடியிலிருந்து விடுபடமுடியாது என்ற உணர்வும் போதலேரை ஆட்டிப் படைக்கின்றன. இத்துன்ப உல்கின் பிடியிலிருந்து விடுபட்டுத் தன் ஆன்மாவைப் பரவசப்படுத்துவதற்காக, அவரே படைத்துக் கொண்டதுதான் 'செயற்கைச் சொர்க்கம்...!'

போதலேரின் நச்சுப் பூக்கள், மூன்று கொத்தாக மலர்ந்திருக் கின்றன. முதல் கொத்து அவர் உளச் சோர்வையும், இரண்டாவது கொத்து பாரிஸ் நகரக் காட்சிகளையும், மூன்றாவது கொத்து செயற்கைச் சொர்க்கத்தை நோக்கிய அவர் பயணத்தையும் விவரிக்கின்றன. இளமையில் கட்டுப்பாடின்றி வாழ்ந்த தம் இழிந்த வாழ்க்கையைப் பலபாடல்களில் அவர் திரும்பிப் பார்த்து உளச் சோர்வு கொள்கிறார். தம்மை வாட்டும் உளச் சோர்வில் அழுந்திப் போவதா அல்லது செயற்கைச் சொர்க்கத்தில் பறப்பதா என்ற ஊசலாட்டம் பலபாடல்களில் கற்பனை நயத்தோடு எடுத்துரைக்கப் படுகின்றது. பல பாடல்களில் செயற்கைச் சொர்க்கத்தில் அவர் அடையும் பரவச நிலை பேசப்படுகிறது. பெண்ணால் பெறும் ஐம்புலன் இன்பத்தைக் கற்பனை செய்யாமல், ஒலி, ஒளி, மணம் இவற்றால் பெறும் இன்பங்களையே கற்பனை செய்கிறார் போதலேர். அவருடைய சொர்க்கத்தில் வரும் அடிமைகளும் ஏவலர்களும் நிர்வாணமாகக் காட்சி தருகின்றனர். அவர்களுடைய நிர்வாணம், இவ்வுலக நாகரிகத்தின் தீக்கரங்களால் தீண்டப்படாத தூய்மையின் உருவகம்.

செயற்கைச் சொர்க்கத்தில் போதலேர் அடிக்கடி திளைத்துப் பரவசப்பட்டாலும், சாவைப்பற்றிய எண்ணம் அவர் உள்ளத்தை விட்டு நீங்கவில்லை. நச்சுப்பூக்களில் இறுதியில் உள்ள பயணம் என்ற பாட்டில் தாம் கடலின் அலைவயிற்றில் ஆழ்ந்துவிட விருப்பம் தெரிவிக்கிறார். தாம் சென்றடைய விரும்பும் குறிக்கோள்

சொர்க்கமாக இருந்தாலும் சரி; நரகமாக இருந்தாலும் சரி, இனந்தெரியாத ஒன்றன் ஆழத்தில் தாம் மூழ்கிவிட விரும்புகிறார். 'ஏழையின் சாவு' - என்ற பாடலில் சாவை மகிழ்ச்சி தரும் இன்ப உணர்வோடு வரவேற்றுப் பாடுகிறார்.

சாவே!
தெய்வீகப் பெரும் புகழே!
தேடலுக்குப் புலப்படாத
கற்பனைக் களஞ்சியமே!
ஏழை விரும்பும் போது
எடுத்துச் செலவிடும்
பரம்பரைச் சொத்தே!
புரிந்து கொள்ள முடியாத
வானுலகின் வாயிற் கதவே!

-என்று சாவைத் தன் சங்கீத வரிகளால் அலங்கரிக்கிறார்.

செயற்கைச் சொர்க்கத்துப் பரவச நிலையைக் கூட மரணத் துன்பத்தைக் கலந்துதான் அனுபவித்தார். சிதிரியாப் பயணம் (சிதிரியா-கிரேக்கக் காதல் தேவதை வீனஸ் வீற்றிருக்கும் தீவு) என்ற கவிதையில், காதல் தீவே அவருக்குக் கறைபடிந்து காட்சி யளிக்கிறது.

வானம் -
தெளிந்த அழகோடு
காட்சியளிக்கிறது.
கடலும் -
ஆழ்ந்த அமைதியுடன்
படுத்திருக்கிறது.
ஆனால்--
எங்கும் இருள்;
திட்டுத் திட்டான
ரத்தக் கறைகள்!
என் இதயம்--
ஒரு முரட்டுக் காகிதத்தில்
சுருட்டப் பட்டுப்
புதைந்து கிடப்பதாக
எனக்குள் ஓர் உருவகம்!

ஓ வீனஸே!
உன் காதல் தீவில்
ஒரு கற்பனைத்
தூக்கு மரத்தில்
என் உருவம்
தொங்கிக் கொண்டிருக்கிறது.
ஆண்டவனே!
என் உடம்பையும்
இதயத்தையும்
வெறுப்பில்லாமல் பார்க்க
எனக்கு ஆற்றலைக் கொடு--

என்று வேண்டுகிறார் போதலேர்.

அவர் எழுதியுள்ள கடற்பறவை (Albeatross) என்ற பாடல் அவருடைய அவஸ்தையின் குறியீடாகவும், நச்சுப் பூக்களின் மையக் கருத்தாகவும் அமைந்துள்ளது. ஆல்பட்ராஸ் என்ற கடற்பறவை மிக நீண்ட இறக்கைகளை உடையது. அதை 'வான மண்டலத்தரசன்' (The Prince of the clouds) என்று குறிப்பிடுவர். வானத்தை அனாயாசமாக அளக்க உதவும் அப்பெரிய சிறகுகளே, பூமியை அடைந்ததும் அதற்குப் பெரிய சுமையாக மாறி விடுகின்றன. அவற்றைத் தூக்கிக் கொண்டு அப்பறவையால் அடியெடுத்து நடக்க முடிவதில்லை.

போதலேர் தமது ஆற்றல் மிக்க கற்பனையின் உதவியோடு சொர்க்க மண்டலத்தில் பறந்தாலும், இவ்வுலகப் பற்றும், சிற்றின்ப இச்சையும் தம்மைப் பிணித்து முடக்கி விடுவதாக எண்ணி வருந்து கிறார்; தாம் ஆழ்ந்திருக்கும் துன்பக் கடலிலிருந்து மீட்சியே கிடையாது என்ற வருத்தம் அடிக்கடி அவரிடம் மேலோங்கி நிற்பதுண்டு.

பாரிஸ் நகரம் --
மாறிக் கொண்டிருக்கிறது.
என்னை அழுத்தும்
துயரச் சுமை
சிறுது கூட அசையவில்லை

-என்று அவருடைய துயரப் பெருமூச்சு ஒரு பாடலில் கேட்கிறது. மற்றொரு பாடலில்,

என் துயரமே!
அறிவோடு நடந்து கொள்.
அமைதியாக இரு!
இரவின் கொடுமைக் கஞ்சி
நீ கதறுகிறாய்;
இரவு விழுந்து விட்டது
இதோ, விடியல் தலை தூக்குகிறது.

-என்று ஞானி போல் தமக்குத் தாமே ஆறுதல் கூறிக் கொள்கிறார்.

என்றாலும் அவர் வாழ்வில் மிஞ்சியது ஏமாற்றமே. அவர் எழுதியுள்ள உரைப்பாடல்களில், வாழ்வின் இறுதியில் அவர் கொண்ட சலிப்பும், ஏமாற்றமும் உருக்கமாகப் பேசப்படுகின்றன.

சில சமயங்களில் என்னை ஒரு ஞானியென்று நான் முட்டாள் தனமாக நினைத்துக் கொள்வதுண்டு. ஒரு மருத்துவனுக்கு இருப்பது போல், அருளுள்ளம் என்னிடத்தில் அமைய வேண்டும் என்று நான் அவாவுவதுண்டு; அப்பேறு எனக்குக் கிடைக்கப் போவதில்லை. இவ்வஞ்சக உலகில் என்னை நானே தொலைத்து விட்டு, மக்கட் கூட்டத்தின் புறங்கையால் இடித்துத் தள்ளப்பட்டு அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன். என் கடந்த கால நினைவுகளின் ஆழத்தை அடிக்கடி எட்டிப் பார்த்து, நான் மிகவும் களைத்துப் போய் விட்டேன். ஏமாற்றமும், கசப்புணர்ச்சியும், துன்பமா-மீட்சியா என்று உணரமுடியாத குழப்பமுமே, எனக்கு மிஞ்சியவை என்று புலம்புகிறார் போதலேர்.

மேகத்தின் உச்சியில் பறப்பதற்கு உதவிய பெரிய சிறகுகளின் சுமை, பூமியில் கடற்பறவையைச் செயலற்றதாக்குவது போல், கற்பனைச் சொர்க்கத்தில் பறப்பதற்கு உதவியாக இருந்த இவரது சிறகுகளே (கஞ்சா, அளவற்ற மதுப்பழக்கம்) கடைசி நாட்களில் இவரை முடக்கிப் போட்டு விட்டன. பக்கவாதம், இவரை முடக்கிப் போட்டுவிட்டன. பக்கவாதம், இவரைப் படுக்கையில் தள்ளி விட்டது. 'சிபிலிஸ்' இவரைச் சிதைத்துவிட்டது.

நீண்ட நாள் கஞ்சாப் பழக்கத்தின் கடைசி மைல்கள், தலைசுற்றலும் (vertigo) பைத்தியமும் தான். தன்கடைசி நிலையைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'இன்பமும் அதிர்ச்சியும் கொண்ட இழுப்பு நோய் (Hysteria) எனக்குப் பழக்கமாகிப் போய்விட்டது. தொடர்ந்த தலை சுற்றலால் நான் அவதிப்பட்டுக்

கொண்டிருக்கிறேன். 23-1-1862 ஆம் நாளாகிய இன்று, எதிர்பாராத ஓர் எச்சரிக்கை எனக்குக் கிட்டியது. பறந்து செல்லும் பைத்தியச் சிறகு வீச்சின் காற்று, என் மீது படிந்து சென்றதை நான் உணர்ந்தேன்' என்று குறிப்பிடுகிறார்.

தன் பெயரைக் கூட நினைவு கூர முடியாத நிலையிலும், நிலைக் கண்ணாடியில் தன் சொந்த முகத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியாத நிலையிலும், புறக்கணிப்புக்கு ஆளாகி, ஆதரவற்றுத் தமது கடைசி நாட்களைப் பாரிசில் கழித்தார். மிகச் சிறந்த கவிஞரான போதலேரைப் புகழ் பெற்ற பிரெஞ்சு இலக்கியக் கழகம் (French Acadamy) உறுப்பினராக ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. அந்த வேதனையைத் தாளாத அவர், பாரிசை விட்டு நீங்கி பெல்ஜியத்தில் சொற்பொழிவுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அலைச்சல் அவர் உடல் நிலையை மிகவும் பாதித்தது; 1867 இல் பாரிஸ் மருத்துவமனையொன்றில் உயிர் துறந்தார்.

தாம் செய்யும் எந்தப் பணியையும், செப்பமாகவும், திருத்த மாகவும் செய்ய வேண்டும் என்ற கொள்கையுடையவர் போதலேர். நிறைய எழுதுவதை அவர் விரும்பவில்லை. ஒன்று செய்தாலும், ஒப்பற்றதாக இருக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். நச்சுப் பூக்களை 1850 இல் தொடங்கினார். அதன் குறைகளைக் களைந்து, பத்தாண்டுகள் திருத்தம் செய்து, மேன் மேலும் அழகு படுத்தினார். 1861 இல் அதன் இறுதி வடிவம் உருப்பெற்றது.

போதலேரின் படைப்புக்கள் பற்றி ஆர்தர் சைமன்ஸ் என்ற திறனாய்வாளர், தாம் எழுதியுள்ள 'இலக்கியத்தில் குறியீட்டு இயக்கம்' (The symbolist movement in literature) என்ற நூலில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

''ஒரே ஒரு கவிதை நூலை எழுதுவதில் போதலேர் தமது வாழ்க்கை முழுவதையும் செலவிட்டார்; அதன் பிறகுதான் பிரெஞ்சு மொழியில் உயர்ந்த கவிதைகள் எல்லாம் தோற்றமெடுத்தன.

ஓர் உரைநடை நூல் எழுதினார்; அந்த உரைநடை அழகுக் கலையாக (Fine Art) மதிக்கப்படுகிறது.

ஒரு திறனாய்வு எழுதினார்; அவர் வாழ்ந்த காலத்தில் தோன்றிய திறனாய்வு நூல்களில் இதுவே உயர்ந்ததும், உண்மையானதும், நுட்பம் மிக்கதும் ஆகும்.

ஒரு மொழிபெயர்ப்புச் செய்தார்; அது மூலத்தை விடச் சிறப்பானது என்கிறார்.

போதலேர் எழுதியுள்ள உரைப்பாக்கள் (Splaen de Paris) ஐம்பது இருக்கும். அவை எதுகையோ, இசையொழுங்கோ இல்லாமல் எழுதப்பட்டவை; உள்ளத்தின் உணர்ச்சிகளுக்கேற்ற ஓசையொழுங் கும், தன்னை மறந்த சிந்தனையின் அலைவீச்சும் கொண்டவை; யாரும் எளிதில் பின்பற்ற முடியாதபடி கலை நுணுக்கமும், வேலைப் பாடும் மிக்கவை; உரைப்பாக்கள் வரலாற்றில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவை; சில பண்புகளில் ஒப்பற்றவை; இலக்கியச் சோதனை முயற்சியில் பாராட்டத்தக்க அரிய வெற்றி.

திலாக் ரிக்ஸ் என்ற ஓவியர் பற்றியும், தாமியர், மானெட், ஃப்ளாபர்ட், வேக்னர் என்ற எழுத்தாளர்கள் பற்றியும் அவர் எழுதியுள்ள கட்டுரைகள், திறனாய்வுக் கலை வளர்ச்சி பெறாத காலத்தில் எழுதப்பட்டவை. அக்கட்டுரைகளைப் பெரும் இலக்கியச் சாதனையாகப் பிற்கால அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

அமெரிக்க எழுத்தாளர் ஆலன் போவின் கதைகளைப் போதலேர் பிரெஞ்சில் மொழி பெயர்த்திருக்கிறார். மூலத்தின் சிறப்புக் குன்றாமலும், மூலத்தை விடச் சிறந்த கலையம்சத்துடனும் அது செய்யப்பட்டிருப்பதாக எல்லாரும் குறிப்பிடுகின்றனர். அமெரிக்க மக்களிடையே இந்த மொழி பெயர்ப்புக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

1865 ஆம் ஆண்டில் தமது படைப்புக்கள் பற்றித் தம் தாயிடம் குறிப்பிடும் போது 'என் படைப்பின் அளவு சிறியதாக இருக்கலாம்; ஆனால் அச் சிறிய படைப்பு, என் துயரம் மிக்க கடின உழைப்பின் வெளிப்பாடு' என்று கூறியிருக்கிறார்.

1920-ஆம் ஆண்டில் ஆந்திரே கைட் என்ற அறிஞர் போதலேரைப் பற்றிப் பத்திரிகையில் குறிப்பிடும் போது 'அவருடைய ஒவ்வொரு முயற்சியும்', அவர் ஆன்மாவின் பரிதவிப்பாகவும், ஒப்பற்ற போராட்டமாகவும் அமைந்துள்ளது' என்று கூறியுள்ளார்.

படித்தவர் உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்கும்படி, எட்கார் ஆலன்போவைப் பற்றிப் போதலேர் உணர்ச்சி பூர்வமாக ஒரு கருத்தை வெளியிட்டார். 'இன்று நம் மகிழ்ச்சிக்கு ஊற்றாக இருப்பது (அவர் படைப்பு) எதுவோ, அதுவே அவரைக் கொன்றுவிட்டது' என்றார். அந்தக் கருத்து போதலேருக்கும் பொருந்தும்.

△

# கதைப் பாடல்களும் துன்பியலும்

அ. மார்க்ஸ்

'கட்ட பொம்மு கதை, கான் சாகிபு சண்டை, ஐவர் ராசாக்கள் கதை, பூலுத்தேவன் சிந்து, சிவகங்கைக் கும்மி, தேசிங்கு ராசன் கதை, முத்துப்பட்டன் கதை, மதுரை வீரன் கதை, நல்லதங்காள் கதை, காத்தவராயன் கதை போன்ற நாட்டார் கதைப் பாடல்கள் அனைத்தும் துன்பியல் இலக்கியங்களாகவே அமைந்துள்ளன. பிற பாரம்பரிய மிக்க மொழிகளுடன் ஒப்பிடும் போது துன்பியல் இலக்கியங்கள் குறைவாக உள்ள தமிழில் இந்நாட்டார் இலக்கியங்கள் யாவும் துன்பியல் வகைப்பட்டதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. துன்பியலுக்கும் கதைப் பாடலுக்குமிடையே யான தொடர்பையும் துன்பியல் நாயகன் (tragic hero) பற்றிய நாட்டார் கண்ணோட்டத்தையும் புரிந்து கொள்வது நாட்டார் உளவியலை ஆய்வு செய்பவர்களுக்கு அவசியமாகும்.

ஐரோப்பியத் துன்பியல் இலக்கியப் பாரம்பரியத்தை ஆராய்ந்த வர்கள் வெவ்வேறு கால கட்டங்களில் எழுந்த துன்பியல் இலக்கியங்களும் வெவ்வேறு வகையான துன்பியல் பற்றிய கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பதையும், வெவ்வேறு கருத்து நிலைக்கட்டுமானத்தில் (Ideological structure) பொருந்தும் தன்மையுடையதாக உள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளனர் (Auner Zis, Foundations of Marxist Aesthetics, Moscow, 1977). பண்டைய கிரேக்கத் துன்பியல் இலக்கியங்களின் முக்கிய காரணியாக விதியும், நவ செவ்வியல் (Neo classical) துன்பியல் இலக்கியங்களில் காதல்-கடமை போன்றவற்றின் மோதல்கள் மைய பிரச்சினை யாகவும், அற்புதரசனைத் துன்பியல் இலக்கியங்களில் உன்னதக் குறிக்கோள்களுக்கும் அடிப்படை எதார்த்தங்களுக்குமிடையே யான இடைவெளிகளே ஆதாரப் பிரச்சினையாகவும் அமைந்தது எனவும் கூறுவர்.

ஒவ்வொரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட வகையான துன்பியல் கண்ணோட்டங்கள் இலக்கியப் படைப்பின் ஆதார அம்சங்களாக விளங்கின என்பதால் துன்பியலுக்கும் வரலாற்றுக்குமுள்ள தொடர்பு பற்றிய சிந்தனை நம் முன் எழுகின்றது.

மனித சமூக வரலாறு என்பது முன்னோக்கி வளர்ந்து வந்துள்ளதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். பல்வேறு வகையான வரலாற்றுக் கட்டங்களினூடே நடை போட்டு மனிதன் இன்றைய வரலாற்றுச் சூழலை எட்டியுள்ளான். இந்த வரலாற்று வளர்ச்சிப் போக்கென்பது இடையீடில்லாத படிப்படியான பரிணாம வளர்ச்சிப் போக்காகவும் பண்பியல் மாற்றங்களை உருவாக்கும் பாய்ச்சலுடன் கூடிய புரட்சிகர மாற்றங்களாகவும் அமைந்திருந்தது என்பர். பரிணாம வளர்ச்சிப் போக்கில் வளர்ந்து வருகிற சமூக சக்திகள், விழுமியங்கள் (Values) ஆகியவற்றிற்கும் நிலவுகிற அமைப்பு, மதிப்பீடுகள் ஆகியவற்றிற்கும் இடையிலான மோதல்களும் படிப்படியாக வளர்ந்து முற்றி நெருக்கடிகள் உருவாகின்றன இப்போது பழைய அமைப்பும், விழுமியங்களும் கடுமையாக கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன.

அடிப்படைப் பொருளாயத உறவுகட்கும் சமூக விழுமியங்கட்கு மிடையேயான உறவுகளை ஆராய்வதற்கு இது ஏற்ற சந்தர்ப்பமன்று. எனினும் தனி மனித விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற் பட்டு சமூக விழுமியங்கள் அவ்வக் காலத்தில் உருவாகின்றன என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. ஆனால் அதே சமயத்தில் சமூக விழுமியங்களும், ஒழுங்குகளும் தனி மனித செயற்பாடுகளை நிர்ணயிக்கின்றன. ஆனால் நாம் மேற்குறிப்பிட்ட வரலாற்று உருவாக்கத்தின் நெருக்கடியான புள்ளிகளில் நிலவுகிற சமூக விழுமியங்களும் தனி மனிதனின் சமூக நடவடிக்கைகளும் எதிர் எதிராகின்றன. இந்த நிலை துன்பியலுடன் மிக நெருக்கமான தொடர்புடையதாகின்றது.

வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் வளர்ந்து வருகிற புதிய சக்திகள் புதிய புரட்சிகரமான விழுமியங்களின் தேவையை உணர்கின்றன. ஆனால் அவற்றைச் சமூகத் தொழிற்பாட்டுடன் இணைக்க முயலும் போது நிலவுகிற அமைப்புடன் அவை மோதநேரிடுகின்றது. இதனால் தான், ''வரலாற்று ரீதியாக அவசியமான எடுகோளுக்கும் அதனை நடைமுறைப் படுத்துவதிலுள்ள சாத்தியமின்மைக்குமுள்ள மோதலே துன்பியல்'' என்பார் பேராசான் ஏங்கல்ஸ். (Engles, Letter to F.Lassalle).

ஆனாலும் இது ஸ்தூலமான தனிமனித நடவடிக்கைகளின் மூலமாகவே வெளிப்படுகின்றது. நிலவும் அமைப்பிற்கெதிராகவே ஒரு துன்பியல் நாயகன் தோன்றுகிறான். அவன் தனது நடவடிக்கையின் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தை உணராது போனாலும், தனது சொந்த நலன்களையே முன்னெடுத்துச் செல்வதாகத் தோன்றினாலும் அவனது நடவடிக்கையின் புறவயமான வரலாற்று முக்கியத்துவமே அவனின் அக வயமான விருப்புடன் இணைகிறது. அதனாலேயே அவன் மக்கள் மத்தியில் இடம் பெற்றவனாகிறான்; நிலைத்து நிற்கிறான். அவனது கதை இலக்கியமாக்கப் படும்போது அது குறிப்பிடத்தக்க துன்பியற் படைப்பாக இலக்கிய வரலாற்றில் இடம் பெறுகின்றது.

மாறாக எல்லா மரணங்களும், சோகங்களும் துன்பியல் இலக்கியங்களாக மாறுவதில்லை; மக்கள் மனத்தில் ஊடுருவி இடம் பெறுவதில்லை. வரலாற்று முக்கியத்துவத்துடன் இணையாத மரணங்கள், தியாகங்கள் முதலியவை துப்பறியும் கதைகளில் நிகழ்த்தப்படும் கொலைகளைப் போல வெறும் பய உணர்ச்சியை ஊட்டுவதற்கு வேண்டுமானால் பயன்படுமேயொழிய மனித மனத்தின் வேர்களை ஊடுருவப் பயன்படா. நவீன தமிழ் நாவல்கள், தமிழ் சினிமாக்கள் ஆகியவற்றை மனத்தில் அசைபோட்டுப் பார்த்தோமானால் இந்த உண்மையை மிகத் தெளிவாக உணரலாம்.

இதே காரணத்தினால்தான் துன்பியல் நாயகன் என்பவன் தனது தனி நபர்ப் பண்புகளைப் பொறுத்திராது மக்கள் மனத்தில் இடம் பெறுகின்றான். அவன் எதற்காகப் போராடி மடிகிறானோ அதன் வரலாற்று முக்கியத்துவத்தாலேயே அவன் மதிக்கப் படுகிறான். அதனால் தான் கொள்ளை அடித்துக் கொடுமைகள் புரிந்தவனாக இருந்தாலும் கான்சாகிபும், கட்டபொம்மனும் தங்கள் மேலாதிக்க எதிர்ப்பு வரலாற்று முக்கியத்துவத்தின் அடிப்படையில் துன்பியல் நாயகர்களாக உயர்கின்றனர்.

எனினும் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே இத்தகைய புதிய சக்திகளின் பிரதிநிதிகள் மட்டுமே துன்பியல் நாயகர்களாக உயர்கிறார்கள் என்பதில்லை. புதிய வளர்ச்சியைக் கணக்கிலெடுக்காத பழமையின் செயற்பாடுகள் கூட சில சந்தர்ப்பங்களில் துன்பியலில் முடியலாம். இதன் பொருள் வரலாற்று நியாயமாகத் தோன்றியுள்ள புதுமையின் செயற்பாடுகளுக்கெதிராக பழமையைத் தக்க வைக்கும் நோக்குடன் அதனால் லாபமடையும் சக்திகள்

மோதலுண்டு தோல்வியுறுவதும் துன்பியலாக முடியும் என்பதல்ல. அவை துன்பியலாக அமையவே முடியாது. ஆனால் வளர்ந்து விட்ட புதிய சக்திகளின் முக்கியத்துவத்தை உணராது பழமையின் பிரதிநிதியாக இருந்து அதனை உளப் பூர்வமாக நியாயமாகக் கருதிக் காப்பாற்ற முயன்று தோல்வியுறும் அவலம் துன்பியலாக அமையலாம். இதனை ''வரலாற்றுப்பிழை (Historical Error) என்பார் பேராசான் மார்க்ஸ் (Introduction to the contribution to the critique of Hegel's philosophy of law) இவ்வாறு துன்பியல் இருவகைப் பட்டதாகிறது. (See Tatayana Lyupimova's article in contemporary Aesthetics Moscow. 1984)

1) புதிய வளர்ச்சியைக் கணக்கிலெடுக்காத பழமையின் செயற் பாடுகள் துன்பியலில் முடியலாம். எடுத்துக்காட்டு, ஷேக்ஸ்பியரின் லியர்மன்னன்.

2) பழமை வலுவாக உள்ள போது அதன் மதிப்பீடுகளுக்கெதிரான புதுமையின் சமூக நடவடிக்கைகள் தோல்வியில் முடியலாம். இது துன்பியலில் முடியும்.

அடித்தட்டு மக்கள் எப்போதும் வளர்ந்து வரும் புதிய சக்திகளுக்குச் சார்பானவர்களாகவே இருப்பதன் விளைவாக அவர்களின் இலக்கிய வெளிப்பாடாகிய கதைப் பாடல்கள் (முக்கியமாகச் சமூகக் கதைப் பாடல்கள்) இந்த வகைப் பட்டதாகவே அமைந்துள்ளன.

மொத்தத்தில் வரலாற்றின் நெருக்கடியான சந்தர்ப்பங்களின் முரண்பாடுகளையும், மோதலையும், சமூக அழுத்தத்தையும் அழகியலாக வடித்தெடுப்பதே துன்பியல் என்பதில் ஐயமில்லை. இந்த நோக்கில் தான் துன்பியலின் பாடுபொருள் வரலாறே என்பர். மனித வாழ்க்கையின் மேன்மையும் அதன் உன்னதங்களை எட்டு வதற்கான தியாகத்தின் உயர்வும் எக்காலத்திலும் இவற்றின் சாரமா கின்றன. அதனால்தான் ஒரு கால கட்டத்தியத்தின் துன்பியல் இலக்கியங்கள் இன்னொரு காலகட்டத்திலும் மனித மனத்தைத் தொடுவதாக அமைகின்றன.

நாட்டார் கதைப் பாடல்கள் அனைத்தும் 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்கிற முடிவுக்கு ஆராய்ச்சியாளர் கள் வந்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில்தான் இங்கு நிலவுடமை உற்பத்தி முறை காலனிய - நிலவுடமை உற்பத்தி முறையாக

வடிவெடுத்தது. இதன் விளைவான நிலவுடமைச் சிதறலில் பழைய நிலவுடமைச் சமூக மதிப்பீடுகள் கேள்விக்குள்ளாக்கப்பட்ட கால கட்டத்திய நாட்டார் இலக்கிய வெளிப்பாடே கதைப் பாடல்கள் என நிறுவுகிற அறிஞர் கேசவனின் கருத்து (கதைப்பாடல்களும் சமூகமும்-தோழமை வெளியீடு) ஏற்புடையது. சாதி, பெண்ணடிமை போன்ற நிலவுடமை மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் சகதிகளும், சுரண்டல் மேலாதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த உள்ளூர் ஆதிக்க சகதிகளும் வலு குறைவானவர்களாக இருந்தாலும் அன்றைய வரலாற்றுக் கடமையைப் புரிந்தவர்கள் என்பதால் அவர்களின் மரணங்களும் வீழ்ச்சிகளும் வெறும் தற்செயல் நிகழ்ச்சி களாக அமையாமல் வரலாற்றுமுக்கியத்துவத்துடன் கூடிய துன்பியல் நிகழ்ச்சிகளாக அமைந்தன. இதற்கு முன்பு கூட சாதி மீறிய திருமணங்கள் மரணத்தில் முடிந்திருக்கலாம்; வேற்றரசர்களுடன் போரிட்டு மன்னர்கள் மடிந்திருக்கலாம். எனினும் அவை தற்செயல் மரணங்களாகத்தான் அமைந்திருக்குமேயொழிய தற்செயலானது, அவசியத்துடன் பொருந்துகிற துன்பியல் இலக்கியத் தகுதி பெறும் மரணங்களாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இக்கதைப் பாடல்களில் துன்பியற் செறிவைக் குறைக்கின்ற சமரசப் போக்குகளும் வெளிப்படுகின்றன என்பதையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். கட்டபொம்மனைப் புகழும் அதே கதைப்பாடல் வெள்ளைக்காரனையும் புகழ்கிறது. கான்சாகிபைப் புகழும் அதே பாடல் அவன் வீழ்ச்சிக்குக் காரணமான தாண்டவராய முதலி, ஆற்காட்டு நவாப் ஆகியோரை யும் புகழ்கிறது. மதுரை வீரன், காத்தவராயன் போன்றோருக்கு உயர் குடிப் பிறப்பு விருத்தாந்தங்கள் கூறி சாதி எதிர்ப்பு மழுங்கடிக்கப் படுகிறது. பார்ப்பனர்களை முரண்பாடில்லாமல் அனைத்துக் கதைப் பாடல்களும் வெறுப்புடன் அனுகினாலும் பார்ப்பன - நிலப்பிரபுத் துவ மதிப்பீடுகளாகிய உடன்கட்டை ஏறுதல் போன்றவை விதந்து போற்றப்படுகின்றன.

ஆளும்வர்க்க விழுமியங்கள் நாட்டார் விழுமியங்களில் ஊடுருவு வதின் விளை பொருளாகவே இதனை நாம் காண வேண்டும். கதைப் பாடல்களின் உற்பத்தி முறை (Literary Mode of production), வினியோகம், நாட்டார் கருத்து நிலை (Folk ideology) ஆகியவற்றின் அடிப்படையில் நாம் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

கதைப் பாடல்களுக்கும் இதர நாட்டார் தனிப்பாடல்களுக்கு மிடையில் உற்பத்தி முறையில் வேறுபாடுண்டு. இயல்பான சமூக நடைமுறைகளில் தங்கள் ஆதங்கத்தைத் தயக்கமின்றி தனிப்பாடல் களில் கிராமப்புற அடித்தட்டு வர்க்கம் வெளிப்படுத்துகிறது. ஆனால் புலமை சார்ந்த கிராமப்புறப் புலவர் ஒருவரால் கிராமப்புற ஆளும் வர்க்கம் உள்ளிட்ட கிராமப்புற நுகர்வோர் முன் நிகழ்த்தும் நோக்குடன் கதைப் பாடல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் விளைவே துன்பியலின் செறிவைக் குறைக்கும் சமரசப் போக்குக் களாகும்.

△

கோ. கேசவனின் ''கதைப் பாடல்களும் சமூகமும்'' என்னும் நூலுக்கு முன்னுரை எழுதுவதற்குக் கதைப் பாடல்கள் அனைத்தையும் பயின்றபோது இக்கட்டுரையை எழுத நேர்ந்தது. இக்கட்டுரைச் செய்தி அந்நூலில் விரிவாக ஆராயப்படுகிறது.

# புதுக்கோட்டைப் புரட்சியாளன் வீரவெங்கண்ணன்

மீ. மனோகரன்

புதுக்கோட்டைத் தனியரசின் வரலாற்றை எழுதியுள்ள எந்த ஆசிரியரும் வீரப்பேராற்றல் மிக்க வெங்கண்ணன் தலைமையில் அரசுக்கு எதிராக ஏற்பட்ட எழுச்சியைப் பற்றி சிறிதளவாவது குறிப்பிடத் தவறுவதில்லை. அவ்வெழுச்சியை ''வெங்கண்ணன் சேர்வைகாரர் கலகம்'' என்று அவ்வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர்.

அந்த எழுச்சி எப்போது ஏற்பட்டது? ஏற்படுவதற்குப் பின்னணி யான காரணங்கள் யாவை? யார் அந்த வெங்கண்ணன் சேர்வைகாரர்? அவர் முன்னோர் யார்? - என்றெல்லாம் வினாக்கள் எழத்தான் செய்யும்! ஏனெனில் வெங்கண்ணன் சேர்வைகாரர் போன்ற வீரத் தலைவர்கள் மீது வரலாற்று வெளிச்சம் இதுவரை பாய்ச்சப் பட்டதில்லை. அதற்குக் காரணம், வட்டார வரலாறு பற்றி இன்றளவும் நம் நாட்டில் அக்கறை காட்டப்படாதது தான்.

புதுக்கோட்டை வட்டார வரலாற்றினை அறிந்து கொண்டாலே வெங்கண்ணர் வெள்ளையர் படையை எதிர்த்துப் புரிந்த வெஞ்சமர் வெறும் கலகம் அல்ல; ஆட்சியாளருக்குக் கலக்கம் தந்த எழுச்சி என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தொண்டைமான் நாடு என வழங்கிய புதுக்கோட்டைப் பகுதி சோழ நாட்டில் ஒரு பகுதியும் பாண்டிய நாட்டில் ஒரு பகுதியுமாக அமையப் பெற்றது. புதுக்கோட்டை மாவட்டத்தின் ஊடாக ஓடும் வெள்ளாறே சோழ பாண்டிய நாடுகளின் எல்லைக் கோடாக இருந்துள்ளது.

வெள்ளாற்றுக்கு வடக்கில் இருப்பது கோனாடு என்றும் தெற்கில் இருப்பது கானாடு என்றும் பெயர் வழங்கி வந்துள்ளது. கோனாட்டில் பிரான்மலை, பொன்னமராவதி, காரையூர், நெலிய

மங்கலம், அன்னவாசல் முதலியவை அடங்குவனவாம். கானாட்டில் ஆலங்குடி, திருமெய்யம், விராச்சிலை, காளையார் கோவில் முதலியன அடங்குவனவாம்.

புதுக்கோட்டையை ஆண்ட அரசமரபினர்கள் ஆதியில் தொண்டை மண்டலத்திலிருந்து வந்ததால் தொண்டைமான் என்று தம் பெயரில் சேர்த்துக் கொண்டுள்ளனர். யானையை அடக்குவதில் வல்லவர்களான தொண்டை மண்டலத்துக் கள்ளர் மரபினர் முதலில் திருச்சிக்கு அடுத்த அன்பிலில் வந்து குடியேறினார்கள். சோழ அரசனின் பிரதிநிதியாக ஆண்டிருக்கிறார்கள். அங்கிருந்து புதுக்கோட்டைப் பகுதிக்கு வந்தார்கள்.

அன்பிலில் இருந்து கள்ளரில் ஒரு பிரிவு அறந்தாங்கியில் குடியேறியது. இந்த அறந்தாங்கித் தொண்டமான்கள் 15ஆம் நூற்றாண்டில் வெங்கடாசலப் பல்லவராயர் தொடங்கி பொன்னமரா வதியைச் செல்வாக்குடன் ஆண்டு வந்திருக்கிறார்கள். இவர்களுள் 50 ஆண்டு காலம் புகழோடு ஆண்ட பொன்னம்பலத் தொண்டமான் குறிப்பிடத்தக்கவர்.

இன்னொரு பிரிவு வைத்தூர் வந்து பெருங்களூரில் தங்கி பல்லவ ராயர் என்றும் பல்லவராயத் தொண்டமான் என்றும் பெயர் கொண்டு 14 முதல் 17 ஆம் நூற்றாண்டுவரை ஆட்சி புரிந்தவர்கள். இவர்களே புதுக்கோட்டையைப் புகழுடன், வெள்ளையர் ஆதிக்கம் வருமுன், ஆண்ட பரம்பரையினர். பிரிடீசாரின் ஆளுகையில் தனியரசு ஆண்ட ராயத் தொண்டமான்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமில்லை. முன்னவர் பல்லவராயத் தொண்டமான்கள், பின்னவர் ராயத் தொண்டமான்கள்.

வைத்தூர்ப் பல்லவராயர்கள் பெருங்களூரிலிருந்து முன்னேறி, கவினாடு, குளவாய்ப்பட்டி - இங்கெல்லாம் குடியேறி, குடுமியா மலைக்குப் பரவினார்கள். பின்னர் கலசமங்கலம், சிங்கமங்கலம் என்ற இரண்டு சிறு கிராமங்கள் இருந்த இடத்தில் கோட்டை ஒன்று புதிதாகக் கட்டினார்கள். அதுவே புதுக்கோட்டை எனப் பெயர் பெற்று தலைநகரமாயிற்று. (மானாமதுரைக்கருகில் உள்ள தென்னவராயன் புதுக்கோட்டையினின்றும் வேறுபடுத்திக்காட்ட இவ்வூரைத் தொண்டமான் புதுக்கோட்டை என்பர்).

புதுக்கோட்டையை நிறுவிய வைத்தூர்ப் பல்லவராயரின் முன்னோன் ஒரு சேர்வை என்று நெல்சனைச் சான்று காட்டி

வரலாற்று வல்லுநர் இராபர்ட் சியூவெல் (Robert Sewell) குறிப்பிட்டுள்ளார். இந்தப் பல்லவராயருள் தொடக்ககால அரசன் பெயர் திருமலைப்பல்லவராயர். கடைசியாக ஆண்டவர் பெயர் செவந்தெழுந்த பல்லவராயர்.

''மாதாம் படியுண்டு மெய்சிவந்
தான் குழல் வைத்திசைத்துச்
சேதாம்ப லங்கனி வாய்சிவந்
தான் செம் மலர்த்திருவின்
சூதாந் தனந்தைத் துரஞ்சிவந்
தானைவர் தூது சென்று
பாதாம் புயஞ்சிவந் தான்மல்லைப் பல்லவனே.''

என்று பாடலொன்றில் சிறப்பிக்கப்படும் இவன் முழுப்பெயர் முகுந்த செவந்தெழுந்த பல்லவராயர் என்பதாகும்.

''பாடுந் தமிழ்க்குச் சிவந்தெழுந்
தான் மல்லைப் பல்லவர்கோன்
காடுஞ் செடியுந் திரியா
திரட்டைக்கடுக்கன் செய்து
போடும் பொழுதென்ன
பூட்டக மோவற்பப் புல்லரைக்கொண்
டாடும் பொழுதிரு
கன்னத்திலே நின்றடிக்கின்றவே''

-எனும் பாடலில் போற்றப்பட்டுள்ளது போலவே செந்தமிழ்ப் புலவர் பலரை ஆதரித்தவன் இச்செவந் தெழுந்தான். புலவர் ஒருவரால் ''சிவந்தெழுந்த பல்லவனுலா'' என்றொரு சிற்றிலக்கியம் இவர் மீது பாடப்பட்டுள்ளது.

இவரது ஆளுகைக்குட்பட்ட நம்புகுழி எனும் ஊரில் செட்டிமார் பலர் வசித்து வந்தனர். அவ்வூர்த் தெருக்களில் பிற ஆடவர் அனுமதிக்கப் படுவதில்லை. பெண்கள் கோஷாப் பெண்கள் போல வாழ்ந்து வந்தனர்.

''குளக்காவி மலர்த்தொடையான் சிவந்தெழுந்த
பல்லவனைக் கூடா நாளில்
இளக்கார மோபிரிந்த வாறுகண்டோ
நானேழை யென்று தானோ
உளக்காத துண்டுகோல் பனிநீர்நெய்

யானுறங்கு மூச னல்ல
விளக்காக வெனைத்திரியா விடியுமட்டு
மெரித்தனையே வெண்ணிலாவே''

-என்று விரகதாபத்தால் வெண்ணிலாவைச் சாடும் நாயகியரின் காவிய நாயகனாக வர்ணிக்கப்பட்ட செவந்தெழுந்தான் அவ்வூர் வழியே வேட்டைக்குச் சென்றார். பிற ஆடவரைப் பார்க்க அனுமதிக்கப் படாதிருந்த அப்பெண்கள் அழகிய மன்னரை ஆவலோடு பார்த்ததால் தம் குலத்திற்கு இழுக்கு நேர்ந்து விட்டது எனக்கருதி நம்புகுழி செட்டிகுல ஆடவர் அனைவரும் தம் பெண்டிரை நெருப்புக் குழியில் தள்ளிவிட்டு தாங்கள் நம்பு குழியை விட்டே போய்விட்டனர் என்று ''புதுக்கோட்டை இராஜ்ஜியச் சரித்திரம்'' தெரிவிக்கிறது.

இந்தச் செவந்தெழுந்த பல்லவராயர் தன்னுடைய சொந்தப்பகுதி யைத் தவிர, கிழவன் சேதுபதி (1974-1710) யின் பிரதிநிதியாக அப்போது சேது நாட்டைச் சேர்ந்திருந்த கீழாநிலை, திருமெய்யம் ஆகியவற்றையும் ஆண்டுவந்தார்.

புதுக்கோட்டையிலிருந்து பல்லவராயர் ஆளுகின்ற காலத்தில் தொண்டைமண்டலத்திலிருந்து கரம்பக்குடியில் வந்து தங்கிய ஒரு கள்ளர் பிரிவு 1650-இல் இருந்து சிறு பகுதியை ஆண்டு வந்தது. பல்லவராயர் கை ஓங்கியிருந்தமட்டும் இவர்களின் பெயர் வெளி உலகுக்குத் தெரியவில்லை. இவர்களின் புகழ் பாடுவது, 1750-இல் வெங்கண்ணா எனும் தெலுங்குக் கவிஞர் எழுதிய ''தொண்டைமான் வம்சாவளி.'' வரலாற்று அடிப்படையில் அறியப்படும் இந்தப் பிரிவின் முதன் அரசன் ரகுநாத ராயத்தொண்டமான்.

இந்த இராயத் தொண்டமானும் அவர் தம்பி நமனத் தொண்ட மானும் கிழவன் சேதுபதிக்குப் படை நடத்தி உதவி புரிந்து அவன் அன்பைப் பெற்றிருந்தனர். வேட்டைக்கு வந்த காலத்தில் தொண்ட மானின் தங்கையைக் கண்டு காதல் கொண்ட சேதுபதி அவளை மண முடித்தார்! தொண்டமான் மைத்துனரானதன் மூலம் சேதுபதிக்கு இன்னும் நெருக்கமாகி விட்டார். இந்நிலையில், செவந்தெழுந்த பல்லவராயரின் அரசியல் போக்கில் மாறுதல் ஏற்பட்டு வருவதாக வும் அவர் தஞ்சை அரசர் பக்கம் சாய்வதாகவும் சேதுபதி செவிகளுக்கு ஒரு செய்தி எட்டிற்று. அரசியல் குறித்து ஆலோசனை நடத்தத் தம்மை காளையார்கோயிலில் வந்து சந்திக்குமாறு சேதுபதி யிடமிருந்து செவந்தெழுந்த பல்லவராயருக்கு ஓலை பறந்தது.

கிழவன் சேதுபதி காளையார் கோயில் வந்து சேர்ந்தார். ஆனால் செவந்தெழுந்த பல்லவராயரோ இன்னும் வந்தபடில்லை. அவர் வரும் வழியில் கண்ட தேவி என்னும் ஊரில் தங்கி ஆலய வழிபாடு செய்ததனால் வரச் சுணங்கி விட்டார். பொறுமையிழந்த சேதுபதி சினந்தெழுந்து 'செவந்தெழுந்தானைக் கட்டிவா' என்று தன் மகனுக்கு ஆணை பிறப்பித்தார். சேதுபதி மைந்தனால் இழுத்து வரப்பட்ட செவந்தெழுந்த பல்லவராயரின் அரசு பறிக்கப்பட்டது. அப்பகுதி கிழவன் சேதுபதியால் இரகுநாதராயத் தொண்டமானுக்கு வழங்கப்பட்டது. செவந்தெழுந்தார் சில நாட்களில் உயிர் துறந்தார். ஆக திருமெய்யம் உள்பட புதுக்கோட்டைப் பகுதி முழுமையும் இரகுநாத ராயத் தொண்டைமான் வசமாயிற்று. அவர் முதல் தொடங்கி பத்து தொண்டமான்கள் பிரிட்டீசு அரசில் தனியரசு ஆட்சி செலுத்தியுள்ளனர்.

ஆட்சி உரிமை இழந்த பல்லவராயரின் வழி வந்தோர் சிலர் ராயத் தொண்டமான்களிடம் படைத்தளபதிகளாக இருந்துள்ளனர். எடுத்துக்காட்டாக வாட்போர்ப்படைப் பிரிவுக்குத் தளபதியாக பெரும் பல்லவராயர் என்பவர் இருந்திருக்கிறார்.

தொண்டமான் படையில் ஒரு படைப்பிரிவின் தலைவராகப் பணி புரிந்த நம் வெங்கண்ணன் சேர்வைக்காரரையும், (பல்லவராயரின் முன்னோர் ஒரு சேர்வை என்பதால்) பல்லவராயர் வழி வந்தவர் என்று கருத இடமுள்ளது.

புதுக்கோட்டைத் தொண்டமான் அரசின் படை அமைப்பில் படைத் தளபதியை பவுஜ்தார் (Fauzdar) எனவும், படைப் பிரிவுத் தலைவரை சர்தார் (Sardar) அல்லது சேர்வைகாரர் (Servakar) எனவும் படைவீரர்களை அமரக்காரர் (Amarakkar) எனவும் மற்ற ஊழியர்களை ஊழியக்காரர் (Uliyakar) எனவும் பெயரிட்டிருந்தனர்.

வெங்கண்ணன் சேர்வைக்காரர் ஆரம்பத்தில் ஒரு சாதாரண ஊழியக்காரர்தான். நாளடைவில் அவரது வீரப் பேராற்றலினால் ஒரு சேர்வைகாரர் அளவுக்குப் பதவி உயர்வு பெற்றார்.

ராயத்தொண்டமான் வரிசையில் ஆறாமவரான ரகுநாதத் தொண்டமான் (1825-39) ஆட்சியில் நிலவரி ஒழிக்கப்பட்டது. அவர் 1839-ல் காலமான போது அவரது மைந்தர் இராமச்சந்திரத் தொண்டமானுக்கு வயது ஒன்பது. அப்போதே அரசுப்பட்டங்கட்டப்பட்டு விட்டபோதிலும் நேரடியாக ஆட்சிப் பொறுப்பேற்றது, 1844-ல்

தான். ஏற்கெனவே நிலவரி எடுக்கப்பட்டதாலோ வேறு நிர்வாகக் குறைபாடுகளினாலோ நாட்டுப் பொருளாதார நிலை சீர் கேடடைந்து 1853 அளவில் பயங்கரமான நிலை தலை தூக்கிற்று.

நாட்டுமக்கள் மிகுதியும் அதிருப்தியுற்றிருந்தனர். அவர்களுக்கு எதிராக அரசு தன் படை பலத்தை ஏவ முற்பட்டிருந்தது. அப்போது தங்களை வழி நடத்த யாராவது வரமாட்டார்களா என்றிருந்த மக்களுக்கு வெங்கண்ணன் சேர்வைகாரர் ஒரு விடிவெள்ளியாகத் தென்பட்டார்.

மக்களின் துயரைப் துடைப்பதற்குப் பதிலாக மக்களை ஒடுக்குவதற்கே அரசு படையைப் பயன்படுத்த முற்பட்டது.

வெங்கண்ணன் சேர்வைகாரர் படைப்பிரிவில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி படையினரில் ஒரு பகுதியை, அதிருப்தி யுற்று கிளர்ச்சி செய்யும் மக்களுக்கு, ஆதரவாகத் திருப்பினார். அமரக்காரர்களை படைப்பணிக்குச் செல்லாதபடி தூண்டினார். அவர்களை அரசு ஆணைக்குக் கட்டுப்படாதபடி செய்யுமளவு அவர்களைத் திருப்பினார்.

''விவசாயிகளே, அரசுக்கு வரி கொடாதீர்! நிலம் என்னவோ அரசுக்குரியதுதான். விளைவிப்பது நீங்களல்லவோ! நீங்கள் விளைவிக்கிற நெல்லை நீங்களே எடுத்துச் செல்ல இவர்களென்ன தடை சொல்வது?'' என்று விழிப்பூட்டினார்.

கிளர்ச்சிக்காரர்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்தது. தொண்ட மான் தன் படையினால் இவர்களை அடக்க முடியாது என்று கண்டு கொண்டார். நவீன ஆயுதங்களும் பெரும் படையும் கொண்ட பிரிட்டீசு அரசிற்கு அவசரக் கடிதம் அனுப்பினார்.

1854 மத்தியில் பிரிட்டீசு இராணுவம் புதுக்கோட்டையில் வந்து இறங்கிற்று. வெள்ளையர் படைவருகிறது என்றுவெங்கண்ணர் அஞ்சவில்லை. இறுதிவரை போராடினார். கடைசியில் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. எழுச்சி அப்போதைக்கு ஓய்ந்தது.

வெங்கண்ணரை அடக்க அந்நியரான வெள்ளையர் படையை புதுக்கோட்டை அரசு அழைத்தது. விளைவு?

ஆங்கிலேய இராணுவத்தினர் புதுக்கோட்டையில் தொண்டமான் செலவில் நிரந்தர விருந்தினராக நிறுத்தி வைக்கப்பட்டனர். அது

மட்டுமா? தொண்டமான் மன்னரின் அதிகாரங்கள் ஆங்கில அரசால் குறைக்கப் பட்டன.

ஆனால் தளபதி வெங்கண்ணர் என்றும் நம் கண்ணில் புகழ் குன்றா வீரராகக் காட்சிதருகிறார்.

**ஆதாரங்கள்:**


1) கே. இராமசுவாமி அய்யர் எழுதிய புதுக்கோட்டை இராஜ்ஜியச் சரித்திரம்.

2) பேராசிரியர் மு. இராகவையங்கார் திரட்டிய தனிப்பாடல் களின் தொகுப்பு - ''பெருந்தொகை.''

3) கலைக்களஞ்சியம் - தொகுதி 7

4) Nelson "The Madura Country"

5) Robert Sewell, "A Sketch of the Dynasties Southern India"

6) K.R. Venkatarama Ayyar "Manual of Pudukkottai State"

7) S. Radha Krishna Ayyar "A General History of the Pudukkottai State."


△

# காதலுக்குப் பல முகங்கள்

ஹெலன் ஷெப்பீல்டு
தமிழில்: தமிழ்நாடன்

காதலுக்கு
பல முகங்கள்
வெட்கத்தோடு வளரும்
வசந்த காலப் பூக்கள் போல
ஓடையிலே கூடுகிற
சிறிய நீர்த்திவலைகள் போல
எண்ணற்றவை
கவனமாக அவற்றுள்ளே
நோக்கினால்
உனது முகத்தையே
காணலாம் நீ.

நான் பால்யமாய்
இருந்தபோது
காதலின் முகம்
புதிதாக
வாலிபத்தின்
பனிமூட்டத்தோடு
அதிசயங்கள் நிரம்பி
சரியாக - எனது முகம்
போலவே இருந்தது.

நான் இளமையாய்
இருந்தபோது
செம்பழுப்புக் கூந்தல்
ஒளிரும் கற்றையாய்
எனது வெல்வெட்
தோள்களின் மீது
சொரிய
காதலின் முகம் எனது
முகம் போலவே
இருந்தது சரியாய்.
நாம் பதினேழு
வயதாயிருந்த போது
அங்கே வார்த்தைகள் இல்லை.

அந்தப்புன்னகைக்கும்
கோடையில்
ஒருநாள் ஒரு குன்றின் மீது
ஏறினோம்
நமது காதலைப் போலவே
இளமையும் பசுமையும்
நிறைந்திருந்த
ஒரு மரத்தின் கீழே
அமர்ந்தோம்.
போதுப்பூக்கள்;
செங்காய்ப் பழங்கள்;
அவை, நமக்குத்
தீர்க்கதரிசியாகவும்

வழிகாட்டியாகவும்
இருந்தன.

சூரியன் சுட்ட
பழம்பாறைகளைப் போல
நிழல்களைப்
பிரதிபலித்தவாறு
நெருக்கமாய், மௌனமாய்
நாம் அமர்ந்த போது
சூரியன் அகன்றான்.
வானத்தில் காலத்தின்
பயணத்தைக்
கண்டு கொண்டிருந்தோம்.

நீ - நீதான் என்பதும்
நான் - நான்தான்
என்பதும் மறந்து
ஒரு திருப்தியில் நான்
கண்ணயர்ந்த போது
முன்னர் ஒரு பொழுதும்
காதலில் வீழாத
எனது உதடுகளில்
காற்றுப் போலும்
மென்மையான
உனது முத்தம் இருந்தது.

உன்னைக் காதலித்தாக
வேண்டிய வழிகள்
எனது விழிகளின் பின்னால்
உருப்பெற்றன.
விதையிலிருந்து
ஆசையின் சுகந்த
நந்தவனமாய்
அவை வளருவதைக்
கண்டேன் நான்.

பிறகு,
மெத்தென்ற உனது விரல்கள்
எனது சதைக்குள் காதலை
விதைத்தது
ஏதோ - நான் மண்ணால்
ஆக்கப்பட்டது போல,
அங்கே நீ ஒரு அன்பான
உழவனைப் போல
அமைதியான, வலிய, உனது
பழுப்புநிறக் கைகள்
நமது வாய்கள் சம்பாதித்த
லாபத்தை
காரியப்படுத்த புதிய
வழிகளை அறிந்திருந்தன.

எனது ரத்தத்திற்குப்
பாடுவதற்குக் கற்பித்தாய் நீ.

உனது ஸ்பரிசத்திற்கு
அடியிலே
எனது தோல்
சும்மாயிருந்தது.
இடையே இருந்த
துன்பம்தரும் போர்வை
கரடுமுரடான தனது
பிடிமானத்தை உதறிவிட்டு,
என்னை விடுதலை செய்தது.
தேம்பும் இன்பத்தில்
என்னைப் பிடித்தாய் நீ
பிறகு, சிரித்தோம்,
குதித்தோம்.
ஒண்டி விளையாடினாய் நீ.
நான் பெண்ணாயிருந்தேன்.
நீ ஆணாயிருந்தாய்.

நமது காதலின் முழுமையான

வட்டத்தை
நாம் கண்டுவிட்டபோது
என்றென்றும்
அது நீடிக்கும் என்றும்
மீண்டும் ஒருபோதும்
தனிமையில் இரோம் என்றும்
அறிந்தபோது
நாம் எழுந்தோம்,
கையோடு கை இணைத்துப்
புல் வெளிலே நடந்தோம்.
ஒரு நீரோடையில்
ஒருவரை ஒருவர்
குளிப்பாட்டினோம்.
பிறகு, சேற்றின் மீது
விழுந்தோம்.
நிரம்பவே கொடுத்தாயிற்று
என்ற
ஆச்சரியத்துடன்,
மீண்டும் காதல்
கொண்டோம்.

நம்மீது ஒளிர்ந்த
சூரியனைப் போல
வெப்பமும்
பொன்னிறமுமான
ஒரு கோடைப்பருவக்
காதல் நமது.

குளிர்காலம் வந்தது.
உடன்போர் வந்தது.
அது நம்மைச் சில்லிட
வைத்தது
நமது சௌந்தர்யக்கனவு
உறைந்து போயிற்று.
அந்நிய ஆசியக்
கடற்கரைகளிலிருந்து
அதனை சூடாக்கமுடியவில்லை.
நம்மால்
நாம் முயற்சித்தும் கூட.

பிறகு,
ஒரு சகதி தோய்ந்த
அழுக்கு நாளில்
அவர்கள் சொன்னார்கள்
''நீ இறந்து போனாய்'' என்று.

## 2

காதலுக்குப்
பல முகங்கள்

இலையுதிர் காலத்தில்
பொன் நிறமாய் மாறும்
இலைகள்
அல்லது
பூமியில் வளரும் புல்லின்
இதழ்கள்
எத்தனையோ அத்தனை.

அன்போடு, இவற்றுள்ளே
நோக்கினால்
உனது முகத்தையே
காணலாம் நீ

அக்டோபர் மாதம்
ஒன்றாய் அமர்ந்து
பேசிக்கொண்டிருந்தோம்
நதிக்கரை மீது

இந்த நதி
இத்தனை வேகமாக எங்கே

போகிறது?
எதற்காகப் போகிறது?
நிலையற்ற அந்தக் கடலை
சந்திப்பதற்காக
தனது வடநிலக்
குளிர்த்தொடக்கங்களை
எவ்வாறு உதறியது?

இரவு வந்தது;
அந்த இரவு, நீ
புனிதமாகவும்
கண்ணியமாகவும்
இருக்கக்கண்டது.

மகிழ்ச்சிக் களிப்பினால்
உனது விழிகண்ணாடியானது!
அதிலே
எனது ஆத்மா
பிரதிபலித்தது.
உனது கரங்களில்
காதலை உணர்ந்தேன்நான்.

எனது கூந்தலுக்குள்,
அதன் ஒவ்வொரு தனித்தனி
இழையையும்
அறிந்து கொள்ளும்
பாவனையில்
உனது இதயத்தைச்
சுற்றிப் பட்டுநூல்போல்
அவற்றைக்
கட்டுகிற மாதிரி
உனது கைவிரல்கள்
அலைந்தன.
புனிதக் காதலின்
மாந்ரீகத்தை
ஒரு பழம் பூசாரி பாடுவது
போல
நீ முணுமுணுத்தாய்.
ஒரு ரகசிய கீதம்
என் குருதியின் ஊடே
வளையமிட்டது.

யாராக இருந்தாய் நீ?
உலகம் தோன்றுவதற்கு
முன்பு
அப்போதுதான் படிந்த
பனிபோலும் புதியதாக
உனது காலடிப் பதிவுக்காக
நான் காத்திருந்ததற்கு முன்பு
எனக்கு நீ
என்னவாக இருந்தாய்?
தூய வெள்ளி போல
நீ ஒரு புதிய சித்திரம்
செதுக்குவாய் என்று
உனக்காக மட்டுமே
காத்திருந்தேன் நான்.

உன்னை அர்ச்சனை செய்ய
என்னிடம் இருந்த காதற்
பூவை
முளைவராத ஒரு விதைக்குள்
பாதுகாத்து
வைத்திருந்தேனே-
அப்போது என்னைக்
காதலித்தாயா நீ....?

கடைசியில்
நட்சத்திரங்கள்
உறைந்து போய்
பாதை அடைபட காலம்
நின்று விடுமே
அப்போதும் என்னைக்

காதலிப்பாயா நீ...?

எனது குருதி இசைத்தது:
''ஆம்''

ஒரு போதும் பிரிந்திருக்க
முடியாத
நமது கைகள் தொட்டன;
பூட்டிக்கொண்டன.

உடனே
பரிச்சயமான இனிய
தோட்டத்தைவிட்டு
உலகத்தின் படைப்பை
நோக்கி
ஆதாமை ஏவாள்
வழிநடத்தியது போல
உன்னை நான் அழைத்துப்
போவதை உணர்ந்தேன்.

நீயும் கூட
அதை உணர்ந்தாய்;
மகிழ்ந்தாய்.

எதைச் செய்யவும்
துணிந்தோம்.
செய்தோம்.
வைகறைக் கீதத்தில் மீண்டும்
பிறந்திட விரும்பினோம்
அந்திப்பொழுதின்
மெல்லிசை வேளையில்
கொஞ்சம் செத்துப் போகவும்
ஒப்பினோம்.

நம்மிடம் அதிகமாக இருக்கும்
எதையும் -

அதை, மீண்டும்
நிரப்பிவிடுவோம் என்று
அறிந்து கொண்டு
ஊதாரித்தனமாக
செலவிடத் துணிந்தோம்.

ஆழ்ந்த இரவு
நம்மை இணையாகக் கண்டது
தலையணையில்.
ஆனால்
காதல் என்பது ஒரு விழா.
நாட்களின் குறிப்பேடு அல்ல.

காலம் தாட்சண்யமற்றது.
இறுதியில், அது
நெருப்புப் போலும்
தாபத்தைத்
தோற்கடித்து விடுகிறது.

வாழ்க்கை
இழுத்து மூடப்பட்டு
நாம் தூசிகளாகி
விடுகிறபோது
அங்கே, ஏதேனும் இருக்குமா
நமக்கு?
சொர்க்கம் காத்திருக்குமா
நமக்கு?

நிஜமாக
நான் அக்கறைப்படவில்லை
மனித வாழ்வு முழுவதும்
நான் உன்னோடு வருவேன்
அது போதுமானது.

ஆகாசத்திலிருந்து
சத்தியங்கள்

எனக்கு வேண்டாம்.
எனது காதல்
இங்கே
உனது உறங்கும்
விழிகளுக்குள்ளே
இருக்கிறது.

ஆதலால்,
நாம் புறப்பட்டோம்
தலையூற்றிலிருந்து
வெளிப்பட்ட
இரண்டு நதிகளைப் போல
நீ உனது, பணியைத் தொடர
நான், நான் ஒரு பெண்-
என்ன செய்ய முடியும்
என்னால்?
காதலிக்க முயன்றேன் நான்.

3

காதலுக்குப்
பல முகங்கள்
ஜுன் மாதத்தில்
மல்பெரி மரங்களை
முற்றுகையிடும்
புறாக்களைப் போல
கடலைத் தகர்க்கும்
வெள்ளி மீன்கள் போல
எண்ணற்றவை
அன்போடு அவற்றுள்ளே
நோக்கினால்
உனது முகத்தையே
காணலாம் நீ.

நிறைவேறாத தாயன்பின்
துடிப்புகள் சில
எனது மலட்டுக்
கருவறையில் இருந்து
கட்டவிழ்ந்து
எனது குருதியோடே
அருவியானது
நீ என்னவன்
ஆக்கப்பட்டாய்
(கவனி,
உன்னவள் ஆனேன்
என்று நான் சொல்லவில்லை)

தாயன்போடு,
உனதுடலை திக்குமுக்காடச்
செய்தேன்
எல்லாவற்றிற்கும் மேலாக
எனது மார்பையே
விரும்பி எதிர் கொண்டாய்
பயன்படுத்திய உனது
தோட்டத்திலிருந்து
உன்னால் வளர்க்கப்பட்டு
நீ பறிக்கும் ஒரு
ரோஜாப்பூவாக
இருப்பதற்கு ஏங்கினேன்.

ஆனால்,
என்னை மாத்திரம் அல்ல
எனது சகோதரிகளையும்
சேர்த்து
எடுத்துக் கொள்ளுகிற
ஆசையை
உனது பதினாலு வயது
முதலே
நீ நங்கூரம் இட்டிருந்ததை
அறிந்தேன்.

உனது விழிகள்

மகிழ்ச்சிக் களிப்பினால்
கண்ணாடிகளாயின.
அதிலே
எனது ஆத்மா
பிரதிபலித்தது

உனது விரல்கள்
கனன்று படர்ந்த போது
மிருதுவான எனது பகுதிகள்
தீப்பிடிக்க உணர்ந்தேன்.
உன்னை அடைந்தேன்.

உனது நாக்கு என் காதுகளை
ஆராய்ந்தது
எனது மூச்சைத் திருடியது
எனது அதரங்களே
என் கையை
எதிர்கொள்ளுமாறு
என்னை நொறுங்க
இறுக்கினாய்
துணுக்குற்றுப்
பின்வாங்கினேன்.
''நிறுத்தாதே!''
முணுமுணுத்தாய் நீ

இரத்தத்தாகங்கொண்ட
வாட்கள் போல
கூர் நகங்களில் உன்னைப்
பற்றினேன்.

எனது உயிரை,
உன் ஆண்மை துளைப்பதை
வலியோடு கலந்த ஆசை
அலையில் உணர்ந்தேன்.
நீ போய்விட்டாய்.

நாடித்துடிப்பு
மீண்டும் துடிப்பதற்காக,
எனது உயிர் காத்திருக்கிற
போது
பலவீனமான எனது
மூளைக்குள்
பிம்பங்கள் படையெடுத்தன.

அவளிடம் என்ன கண்டாய்?
என்னிடம் காணாத எதை
அவளிடம் தேடிக்
கண்டுபிடித்தாய்?

அவள் நிலா;
அவளின் கையிலிருந்து
நமது மூளைக்குள் பித்தம்
பொழிகிறது

உனது துரோகத்தால்
நான் பைத்தியம் ஆனேன்
வேறொருத்தியை
ஏற்றுக்கொண்ட
உனது காம வெப்பத்தில்
எரிந்து
தாவிப்படரும் பொறாமைத்
தீயில் முழுகினேன்.

இந்தக் கற்பிதம்,
ஒரு நோய்போல் என்னைப்
பீடித்தது.
பிரமையிலிருந்து நுரைத்த
கசப்பு ஒழுகி
மூடுபனியாய் எனது
தொண்டையை அடைக்கிறது
எழுந்து, ஒரு மாத்திரை
உட்கொண்டு

(இன்றிரவு இதுநான்காவது)
விழிகளை மூடினேன்.

நிச்சயம் வரும் தூக்கம்,
அல்லது சாவு. ஏதோ ஒன்று
நன்றாய் வரட்டும் இதற்கு
மேலே-
மரணம் அங்கே இல்லை
என்னை வரவேற்பதற்கு
மாறாக,
தூக்கம், சின்ன சாவு
காத்திருந்தது.

நான் வெறுப்பது
காதலைத்தான்
அவனையோ அவளையோ
அல்ல.

ஒரு துன்ப சாகரத்தை
மிதக்க விடுகிற
காதலைத்தான் வெறுக்கிறேன்

அறையிடம்
முணுமுணுத்தேன்.
அறை கேட்க மறுத்தது
எனது புகாரை
எதிரொலிக்கவில்லை அது.
சுவர்கள் அந்த அழுகையை,
இதற்கு முன்னும்
கேட்டிருந்தன.
வெறுப்பு, காதலுக்கு
விஷமுறிப்பான் ஆகாது
என்று அவற்றுக்குத் தெரியும்.

நான் எழ வேண்டும்
வீம்புநடை நடக்கும்
ஒவ்வொரு வெற்று நாளையும்
தனித்தனியே சந்தித்து
தூரத்துரத்தவேண்டும்.

நேரம் நிஜமானது
காதல்தான் பொய்யானது.

## 4

காதலுக்குப்
பல முகங்கள்
கடல்மீது வட்டமிடும்
கடற் பறவைகள்
அல்லது
வசந்த காலப் பூக்களின்
தூசு படிந்த தலைகள்
எத்தனையோ அத்தனை
அக்கறையோடு அவற்றுள்ளே
நோக்கினால்
உனது முகத்தையே
காணலாம் நீ.

வறண்ட மேற்குக் காற்றில்
நீ குதிரைச்சவாரி செய்து
கொண்டிருந்ததை
நான் பார்த்தேன்
ஒரு "கௌபாய்"
தொப்பியை
அணிந்திருந்தாய்.
நீ நிஜம்தான் என்றறிய
எனக்கு சிரிப்பு வந்தது.

எவ்வளவு நிஜம்,
சீக்கிரமாக நான்
கண்டு பிடித்து விட்டேன்

வெண்கலமாக, மண்நிறமாக
அதே நேரம் மெலிவாக,
உறுதியாக, உயரமாக
ஆகாயத்திலிருந்து விழுந்த
ஒரு துண்டு போலும்
அவ்வளவு நீலநிறக்
கண்களோடு
இருந்தாய்.

ஒரு வைகறையில்
நீலச்சிவப்பு மரங்களூடே
பிரம்மாண்டமான
காட்சிகளைக் காண
என்னை அழைத்துச்
சென்றாய்
தேவதைகளுக்கோ அல்லது
காதற்சுரங் கொண்ட
காதலர் மகிழவோ
உரித்தானவை அவை.
குதிரையோடு ஆற்றைக்
கடப்பதற்கும்
பாறை உருண்டு விழும்போது
பயப்படாமல் இருப்பதற்கும்
கற்றுக் கொடுத்தாய் நீ.

இணையாக நாம் சவாரி
செய்த
ஒவ்வொரு காலையிலும்,
மதியத்திலும் இரவிலும்
உன்னுடைய நளினமான
ஏதோ ஒன்றை
எனக்குத் தந்தாய்
உனது பரிசுகள்
முடிவில்லாதவை..

காற்றாலும் வானத்தாலும்
பயிற்சி தரப்பட்ட
காட்டுமிராண்டிக்
காதலன் நீ
ஒரு நெருப்புக்கு
உயிரூட்டினாய்.

உன்னை அணிந்து
கொள்கிறேன்
உனது அடிமை நான்
காதல் ஆட்டம்
துவக்கப்படுவது,
என்னிடத்திலிருந்தல்ல.

பெண் பாத்திரம் எனது
ஆட்படுத்த முயற்சிக்காமல்
ஆட்கொள்ளப்படு
வதற்காகக்
காத்திருக்க வேண்டும் நான்

எனது மார்பின் மீது
உனது கைகளைக் குறுக்கே
போடுகிறாய்
உறக்கத்தில்
என்னைச் சுற்றி
இறுக்குகிறாய்
ஒரு குழந்தை தனதுதாயிடம்
அன்பு செலுத்துவது போல
எவ்வளவு தூய்மையாக
உன்னால் காதலிக்க முடியும்
என்று
நான் நினைவுபடுத்தப்
படுகிறேன்.

கன்னிமை
ஏதோ ஒன்றாய்
எனக்கு நின்றது

இதுவே முதல்முறை.

எனது ஆத்மா
ஊமையாய்க் கதறுகிறது.

''நான் காத்திருப்பதற்காக
நீ ஒருவன் இருப்பாயென்று
அறியாமல் போனேனே!''
எனது மௌன அழுகையைச்
செவியுற்றது போல
நீ முத்தமிடுகிறாய்:
என்னால் திருப்பித்தர
முடியவில்லை.

நான் அறிந்து செய்யாத
ஒரு குற்றத்திற்காக
மன்னிப்பு இறைஞ்சுகிறேன்.

அகலக் குறைவான
உனது படுக்கையில் விலகி
அமர்ந்து
சொன்னாய்:

''ஒரு மணமகளுக்கு
இது மிகச் சிறியது
இதை மாற்றிவிடப்
பார்க்கிறேன்
நாளைக்கு''

என் இதயம்
தொண்டைக்குழிக்குத் தாவி
பின், திரும்ப வீழ்ந்தது.

''மணமகளா....?
புதிய படுக்கையா?...''

நான் கனம் ஆனேன்
என் முகத்தின் ஆவலை
வாசித்தாய் நீ...
உன் விழிகளில்
வலி நிரம்புவது கண்டேன்
எனக்கோ கண்ணீர்
வெள்ளம்.

ஓ!
உன்னைக் குறைவாகக்
காதலிக்க
இயலுமானால்
உன்னை அதிகம்
மகிழ்விக்க
வேறு, ஒருவழியைக்
காண்பேன்
எனக்கு வேறு வாய்ப்பு
இல்லை.

நீயே
எனது உணவு
எனது பானகம்
எனது பூமி
எனது வானம்
ஆதலால்,
எனது ஏழைவிழிகள்
சிவப்பாகப் போகவிட்டேன்

அழுதேன்
மணமகள்
ஆம் மணமகள்தான்
பின் எனக்கு
வேறென்ன நீ...?

துயரத்தால்,
அழுதுதீர்த்தேன், வீழ்ந்தேன்,

''காதலில் தோற்றவள் நான்
புனிதத்தை இழந்தவள்
நான்....''
மீண்டும் ஒரு மணமகள்
ஆக முடியாது.

எனது கண்ணீரை உலர்த்தி
எனது கூந்தலை அமர்த்தி
வார்த்தையற்ற
பணிவிடையால்
காதல் பேசி
உன் கை வருடியபோது
முன் ஒரு போதும்
அத்தகைய மென்மையை
அறிந்ததில்லை நான்.

உன்னைப் பார்த்தேன்
நீ புன்னகைக்கக் கண்டேன்

''நாளை, நான் ஒரு
படுக்கையை
வாங்கி விடுவேன்''

இந்த ஆறுவார்த்தைகள்
தான்
நீ சொன்னது எல்லாம்.

## 5

காதலுக்குப்
பல முகங்கள்

நகரங்களின் தெருக்களில்
நடமாடுகிற ஏழைகள்
அல்லது

வான மண்டலத்திற்கு
ஒளியூட்டுகிற
தூசி மணிகள்
எத்தனையோ அத்தனை
நிதானமாய், அவற்றுள்ளே
நோக்கினால்
உனது முகத்தையே
காணலாம் நீ.

எனது கூந்தலுக்குள்
நீ முணுமுணுப்பது
கேட்கிறேன்.
''உனது தேன்
கண்களுக்கு
வெதுவெதுப்பூட்டுகிற
நிஜத்தங்கமே
மணக்கும் இந்தப்
பட்டுக் கற்றையிலும்
பூசப்பட்டிருக்கிறது''
விழிகளை மூடுகிறேன்
நீலநரம்பு இமை
ஒவ்வொன்றையும்
நீ முத்தமிடுகிறாய்.

என்னையே நான்
நன்றாகக் காதலிக்குமாறு
செய்கிறாய் நீ
உன்னைக் காதலிக்கும்
பொருட்டு.

''சிறகுத் தூண்கள்
உனது தோள்கள்
நிச்சயமாக வேறெதுவும்
தண்ணீர் போலும்
இவ்வளவு
மழமழப்பானதாக

இல்லை
அதன் கீழே எழுகிறத்
திண்டுகளைத் தவிர''
உனது தலை,
மெதுவாக, ஒரு காரியமாகக்
கீழிறங்குகிறது
அப்போது ஒவ்வொரு
வார்த்தையும்
முத்தங்களால்
அடிக்கோடிடப்படுகிறது.

ஊர்கிற உனது விரல்கள்
ரோஜாக் காம்புகளை மெல்ல
நெருடுகிறபோது
எனது பட்டுக்கூந்தல்
மறக்கப்பட்டு விடுகிறது.

''ஜெரேனியம் பூவிதழ்
போல
இந்தப் பவழக் குமிழ்கள்
உனது கோளங்களின்
தந்த வெண்மைக்கு
மேலே ஏறுகின்றன.''

காதல்
வேகமாகக் கொத்தியது
எனது புலன்கள்
தீவிரப்பட்டன
மறக்கப்பட்ட ஒரு மார்பு
காத்திருக்கும் உனது
வாயைக் கண்டுகொண்டு
இயல்புணர்வோடு எழுகிறது.

பிரியமான வாத்தியத்திடம்
விருப்பமாகிற
இசைக்கலைஞனைப் போல
ஒரு அதிசயமான
முன்னுரையை
எனது உந்தி உயரும்
இடத்தில்
மீட்டுகிறாய் நீ.

மகிழ்ச்சியின் இசிவினால்
நடுங்கினேன் நான்.

உனது தலை நிமிர்கிறது
உனது நா நாபிச்சுழியை
வருணிக்கிறது.

''கொத்துமுத்தங்களால்
அணி செய்யப்பட
வேண்டிய
ஒரு முத்துச்சங்கு இது.''

சூடான உனது அதரம்
பிடரியிலிருந்து
முதுகுத்தண்டின், இனிய
கடைசி நுனிவரை
முதுகெலும்பு
ஒவ்வொன்றிலும்
அடையாளம் பதிக்கிறது.

அங்கே,
இச்சைமிக்க உனது
சேட்டைகளுக்காக
ஜோடி ஆட்டுக்குட்டிகள்
குதிக்கின்றன.

அது பிரியமான சித்ரவதை
சொர்க்கத்தின் கீழே
நான் எனது
சித்ரவதைக்காரனை

விரும்புகிறேன்
நீ எனக்கு வேண்டும்
தேவையினால்.

எனது தேவை நீ
அதனால் மருந்திடப்பட்டேன்
உன் பெயரைக் கூவினேன்

வேறெது காதலாய்
இருக்க முடியும் -
சொர்க்க மகிழ்ச்சி
அலைகளின் மேலே
என்னை வீசியெறிந்த
இதுவல்லாமல்?

அலைகளைப் படிப்பதற்கு
கற்றுக்கொண்டுவிட்டேன்.
வந்த வழியே
அமைதியாகப் போவேன்.
உனது பெயரைத் திருப்பிக்
கொடுத்துவிட்டு -
எதுவும் கேட்காமல்.

△

# புதுக்கவிதைக்கு இசையமைக்க முடியுமா?

## -அப்துல்ரகுமானுடன் ஒரு பேட்டி

ராஜகுமாரன்

கவிஞர் அப்துல் ரகுமானை நேரில் கண்ட போது நான் மனதில் உருவகப்படுத்தி வைத்திருந்ததில் இருந்து மாறுபட்டு இருந்தார். புதுக்கவிதைகளுடன் ஐந்தாண்டுகளுக்குமேல் தொடர்பு இருந்தாலும், புதுக்கவிதைக்கு அணி செய்த கவிஞர்களின் பெயர்களை உறவினர்கள் போல் எத்தனையோமுறை நினைத்தும் பேசியும் வந்தபோதிலும், ஒரு புதுக்கவிஞரை நான் நேருக்கு நேர் சந்திப்பது இதுதான் முதல் தடவை.

புதுக்கவிஞர்களை அவர்களுடைய கவிதைகளைப் போலவே இளமையானவர்களாய் மனம் கற்பனை செய்து வைத்திருந்ததற்கு மாறாக கவிஞர் அப்துல் ரகுமான் ஒரு தமிழ்ப் பேராசிரியராய், வயதில் மூத்தவராய் இருந்தார்.

நிதானமான பேச்சு. அறிவில், அனுபவத்தில் நிறைகுடம் என்பது கொஞ்ச நேரம் அவருடன் பேசியதுமே புரிந்து போகிறது. கவிஞர் களும் கலைஞர்களும் காட்டிக் கொள்ளும் பந்தாக்கள் எதுவும் இல்லை. அதற்காக இவரா இத்தனை சாதனைகளைப் படைத்தார் என்றும் எண்ணிவிட முடியாதவாறு பேராசிரியத்தன்மை எப்போதும் இவரை தொடர்ந்து கொண்டுள்ளது.

கவிஞர் அப்துல் ரகுமான் மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் படித்துப்பட்டம் பெற்றவர். கவிஞர் மீரா இவரது கல்லூரி நண்பர். கவிஞர் அப்துல் ரகுமான் வாணியம்பாடியில் உள்ள கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

கவியரங்குகளில் இவர் காலடி எடுத்து வைத்த பிறகு தான் அவை புது உருவம் பெற்றன. ஆரம்பத்தில் இவர் மரபுக் கவிதைதான் எழுதி

வந்தார். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் முதன்முதலில் புதுக்கவிதையைப் பார்த்துவிட்டு என்ன இதுவா கவிதை என்று புறக்கணித்து மரபுக் கவிதையை வேகமாக எழுதியவர். ஆனால் மேல்நாட்டுப் புதுக்கவிதைகளைப் படித்த பிறகு தாமாகவே மனம் மாறி புதுக்கவிதையில் தீவிரமாக ஈடுபட்டார்.

தமிழ்நாடு என்ற பத்திரிகையில் 'மண்' என்ற தலைப்பில் இவர் முதன்முதலாக எழுதிய புதுக்கவிதை வெளிவந்தது. அறிஞர் அண்ணாதுரை அதைப் பலமுறை படித்துச் சுவைத்து பாராட்டினாராம்.

சர்ரியலிசம் பற்றி தமிழில் பலர் எழுதி இருக்கிறார்கள். ஆனால் அதைத் தம் கவிதைகளில் கையாண்டு வெற்றி கண்டிருக்கிறார் கவிஞர் அப்துல் ரகுமான்.

கல்லூரியில் படிக்கும்போதே சர்ரியலிச உத்திகளை மரபுக் கவிதைகளில் புகுத்தி எழுதிப் பார்த்தவர். அப்துல் ரகுமானின் கவிதைகள் சோதனை முயற்சிகளின் வெற்றிக் கனிகளே.

மரபுக் கவிதையின் இலக்கணங்கள் தெரியாததாலோ அல்லது மரபுக் கவிதையில் தனது கருத்துக்களைச் சொல்ல இயலாமல் போனதாலோ கவிஞர் அப்துல் ரகுமான் புதுக்கவிதையை நோக்கி வரவில்லை.

மாறாக புதுப்புது சோதனை முயற்சிகளில் இறங்கும் இவரது ஆர்வமே புதுக்கவிதைக்கு இவரைச் சொந்தமாக்கியது. மலேசியாவில் புதுக்கவிதையின் வேகத்தில் சிறிது தளர்ச்சி ஏற்பட்டுள்ள காலம் இது.

கவிஞரின் வருகை புத்துணர்ச்சியை அளித்து மலேசியத் தமிழ் புதுக்கவிதைத்துறை இன்னொரு காலக்கட்டத்தில் அடியெடுத்து வைக்க உதவும் என்று நம்புகிறேன்.

☆

*ராஜ:* இலக்கணம் இல்லாத கவிதைதான் புதுக்கவிதை என்று சிலர் நினைக்கிறார்கள். இது பற்றி...

**ரகுமான்:** உதாரணமாக வீடுகளை எடுத்துக் கொள்வோம். எல்லா வீடுகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பெரிய குடும்பங்களுக்கான வீடுகளில் அதிக அறைகள் இருக்கும். எல்லா வசதிகளும் இருக்கும்.

பிரமசாரிகளுக்காக கட்டப்படும் வீடுகளில் சமையல் அறை இருப்பதில்லை. மற்ற எல்லா வசதிகளும் இருக்கும்.

சமையல் அறைகளும் கூடங்களும் இருந்தால்தான் வீடு, மற்றது எல்லாம் வீடு இல்லை என்று சொல்ல முடியுமா? ஒவ்வொன்றும் அதன் அளவில் வீடுதான். அதற்கென்று தனி இலக்கணம் இருக்கிறது. அதே மாதிரி தான் புதுக்கவிதையம். அதற்கென்று வடிவம் இருக்கிறது. வரையறை இருக்கிறது.

ராஜ: வால்ட் விட்மன்தான் புதுக்கவிதையின் தந்தை என்று கூறுகிறார்களே....

ரகுமான்: அது தவறான கருத்து. அமெரிக்காவில் எடகர் ஆலன்போ என்ற ஒரு பெரும் எழுத்தாளர் இருந்தார். இலக்கியத்தில் பல துறைகளில் முன்னோடி அவர். துப்பறியும் கதையை முதன் முதலில் எழுதியவர் அவர்தான். ஒருமுறை அவர் 'ரேவன்' என்ற ஒரு கவிதையை எழுதினார்.

கவிதை இலக்கணங்களுக்கு அப்பாற்பட்டு குறியீட்டுமுறையில் அந்தக் கவிதை அமைந்திருந்தது.

அந்தக் கவிதையை எப்படி எழுதினேன் என்று எட்கர் ஆலன்போ ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அந்த கவிதையை விட அந்தக் கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது.

அக்கட்டுரையைப் படித்த போதெலேர் என்ற பிரஞ்சு எழுத்தாளர் அந்த கட்டுரையில் மனதைப் பறிகொடுத்தார்.

போதெலேர் அதை பிரஞ்சில் மொழி பெயர்த்து வெளியிட்டாா. அந்த பாணியில் பிரஞ்சில் எழுத ஆரம்பித்தார். இரண்டு விசயங்கள் இதில் இணைகிறது.

ஒன்று பாணி. சிம்பல் எனப்படும் குறியீட்டை வைத்து எழுதும் பாணி.

இதற்கு முன்பு,. சுவீடன்பர்க் ஒரு பெரிய தத்துவஞானி, ஒரு தத்துவத்தை உருவாக்கியிருக்கிறார். இந்த உலகத்தில் இருக்கும் எல்லாப் பொருள்களுமே ஒரு மூல மாதிரியிலிருந்து உருவானவை ான்பது தான் அவரது தத்துவம்.

எல்லாப் பொருள்களுக்குமே ஓர் அழகான மூல மாதிரி இருக்கிறது என்ற சுவீடன்பர்க்கின் இந்தத் தத்துவம் ஏற்கனவே பரவி இருக்கிறது.

உதாரணமாகப் பூவை எடுத்துக் கொண்டால் பல்வேறு பூக்கள் இருக்கின்றன. ரோஜா, மல்லிகை, முல்லை என்று இருக்கிறது. ஆனால் பூ என்பதற்கு ஒரு மூலமாதிரி இருக்கிறது. அதனால்தான் இந்த வேறுபாடு தெரிகிறது. பூக்களின் எல்லாத் தன்மைகளும் அடங்கிய ஒன்று இருக்க வேண்டும். அது போன்ற முழுமையான (ஐடியல்) உலகம் என்று சுவீடன்பர்க் கூறுகிறார்.

இந்தத் தத்துவம் இக்கவிஞர்களை மிகவும் ஈர்க்கிறது. அதை அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள்.

இதைச் சொல்வதற்கு மரபு அவர்களுக்கு இடம் கொடுக்க வில்லை. இதற்காக ஃபிரீவெர்ஸ் என்ற வடிவத்தை அவர்கள் கையாளுகிறார்கள். இது உருவான பிறகு 'மலார்மே' என்ற மாபெரும் கவிஞர் தோன்றுகிறான்.

அவன்தான் இந்தக் குறியீட்டு இயக்கத்தை செறிவுபடைத்ததாக ஆக்கி மிக உயர்ந்த இடத்துக்குக் கொண்டு போகிறார்.

பிறகு பால் வெலரி, வெர்லேன் வருகிறார்கள். இவர்கள் நால்வரும் குறியீட்டுஇயக்கத்தைச் சேர்ந்த பெருங்கவிஞர்கள். இவர்கள்தான் புதுக்கவிதையைத் தொடங்கி வைத்தவர்கள்.

இதற்கு இன்னொரு காரணமும் சொல்கிறார்கள்.

இசைதான் மிகவும் குறியீட்டு ஆற்றலைக்கொண்டது என்பது அவர்கள் கருத்து. அது உண்மையும் கூட.

ஏனென்றால் இசை சொற்கள் இல்லாதது. இசை ஒரு மனிதனைக் கிளர்ச்சி அடையச் செய்யும் அளவுக்கு வேறு எதுவும் செய்ய முடியாது.

இந்த நிலையைக் கவிதை எட்ட வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

மொழியில் ஏற்கெனவே அர்த்தம் இருப்பதாய் குறிப்பாகச் சொல்ல முடியவில்லை. எளிய இசையை நோக்கிப்போக விரும்பி னார்கள். இசையை நோக்கிப் போக வேண்டுமானால் கவிதையில் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட சந்தங்களாக இருப்பது தடங்கலாக இருக்கிறது. இதையெல்லாம் காரணமாக வைத்துதான் ஃபிரீவெர்சுக்குச் (சுதந்திரக் கவிதை) செல்கிறார்கள்.

வெவ்வேறு விதமான ஓசைகளை உண்டாக்குவது, அதன் மூலம் சில கருத்துக்களை குறிப்பாக (சஜ்ஜஸ்டிவாக) சொல்வது என்று புதுக்கவிதை இயக்கம் உருவாகிறது.

இது ஜெர்மனியில் பரவிய பிறகுதான் இங்கிலாந்துக்கு மிகவும் காலந் தாழ்த்தி வருகிறது.

இதுதான் புதுக்கவிதையின் துறை.

வால்ட் விட்மன் எழுதியது வசன கவிதை. அதனுடைய பாதிப்பு புதுக்கவிதை இலக்கியத்தில் ஏற்படவில்லை. அது வால்ட் விட்மனுடனேயே நிற்கிறது. அது தவறான எடுத்துக்காட்டு என்றே டி.எஸ்.எலியட் கூறுகிறார்.

புதியபாணி. ஆனால் வசன கவிதை. வசனம்தான். வெறும் வசனம்தான். ஃபிரீவெர்ஸ்.

ஃபிரீவெர்ஸ், நியூவெர்ஸ் என்று அப்போதே இரண்டாகப் பிரித்து விடுகிறார்கள்.

ஷேக்ஸ்பியர் எழுதுவது பிளேங் வெர்ஸ். அவருடைய கவிதைகளில் சந்தம் இருக்கும். ஆனால் எதுகை மோனை இருக்காது.

ஃபிரீவெர்ஸ் என்பது வசன கவிதை. இதில் சந்தமும் இருக்காது.

நியூவெர்ஸ் என்பது தான் புதுக்கவிதை. இதில் சந்தம் இருக்கும். ஆனால் இந்த சந்தம் பலவகையான நுட்பங்களைக் கொண்டது.

ஓர் உதாரணம் சொல்கிறேன். உரையாடல் சந்தம் என்பது (ஸ்பீச்ரிதும்) எப்படி புதுக்கவிதையின் வரிகளைப் பிரிப்பது என்பது இதில் அடங்கும்.

எப்படி வரி பிரிப்பது. சும்மா வரியைப் பிரித்துப் போட்டு விடுவதா? இல்லை.

பேசும்போது சில சொற்களுக்கு அழுத்தம் கொடுத்துப் பேசுகிறோம்.

சில இடத்தில் நிறுத்துகிறோம். சில இடத்தில் மீண்டும் சொல்கிறோம். குரல் ஏற்ற இறக்கம் காட்டுகிறோம். இதுதான் உணர்ச்சியை உண்டாக்குகிறது.

வெறும் கட்டுரையில் வரும் வசனம் இருக்கிறதே, அதில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகியவற்றைக் கொண்ட வரிகள் இருக்கும்.

புதுக்கவிதையில் இந்த எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் தர்க்க ரீதியான வாக்கிய அமைப்பு எல்லாம் இருக்காது. இதைப் போய் எப்படி வசனம் என்று சொல்வது. உரைநடைக்கு என்று தனி இலக்கணம் இருக்கிறது.

இதுதான் புதுக்கவிதையையும் உரைநடையையும் வேறுபடுத்து கிறது.

பேசுகிற மாதிரி 'அங்கே பார்த்தேன். என்ன ஆச்சரியம்' என்று சொல்லுகிறோம். இதில் கட்டுரை அமைப்பு இல்லை. இதைத்தான் நாம் புதுக்கவிதையில் பின்பற்றுகிறோம்.

'அங்கே பார்த்தேன்' என்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்காக ஒரு வரியாகப் பிரிக்கிறோம்.

என்ன ஆச்சரியம் என்பதற்கு அழுத்தம் கொடுக்க இன்னொரு வரியாகப் பிரிக்கிறோம்.

இவ்வாறு பிரித்து எழுதுவதை பேச்சுச் சந்தம் என்று சொல்கிறோம். அதே மாதிரி குரல் ஏற்ற இறக்கத்துக்கு ஏற்ற மாதிரி யும் பிரித்துக் கொள்ளலாம். அல்லது வேறு ஏதாவது குறிப்பாய் சொல்ல விரும்பினால் அதற்கேற்றவாறு பிரிக்கலாம்.

சில குறிப்பிட்ட ஓசைகளினால் சில உணர்ச்சிகளை உண்டாக்க விரும்பினால் அந்த ஓசைக்கேற்ற சொற்களாய் பொறுக்கிப் போட்டுக் கொள்ளலாம். இதுபோல் பல நுட்பங்களைப் புதுக்கவிதையில் செய்ய வேண்டியிருக்கிறது.

அப்படிச் செய்தால்தான் அது புதுக்கவிதையாகிறது.

ராஜு: உரைநடையை கவிதை நடையில் எழுதினால் அது வசன கவிதையாகி விடுகிறது. எதுகை மோனை இல்லாமல் சந்தத்துடன் எழுதினால் ஷேக்ஸ்பியரின் பிளேங் வெர்சாக அமைந்துவிடுகிறது.

ரகுமான்: ஆமாம். பிளேங் வெர்ஸ் என்பது செந்தொடை என்று நமது பழைய இலக்கணத்திலேயே இருக்கிறது, ஆசிரியப்பாவில் எதுகைமோனை இல்லாமல் எழுதினால் செந்தொடை.

ராஜ: புதுக்கவிதையில்....

ரகுமான்: நுட்பம் அதிகமாக இருக்கும். இந்த புதுக்கவிதை இயக்கம் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆங்கிலத்துக்குப் பரவியது. ந.பிச்சமூர்த்தி (தமிழில் முதன் முதலாக புதுக்கவிதை முயற்சியில் ஈடுபட்டவர்) தற்செயலாக புதுக்கவிதை பற்றி அறிந்து அதன் தாக்கத்துக்கு ஆளானார். பிச்சமூர்த்தியிடம் வால்ட் விட்மனின் பாதிப்பு அதிகமாக இருந்தது.

அதனால்தான் அவருடைய புதுக்கவிதை சரியாக அமையவில்லை. அவருக்குப் பின்னால் வந்த புதுக்கவிதைகளின் ஆழமோ நுணுக்கமோ பிச்சமூர்த்தியிடம் இருக்கவில்லை. காரணம் அவருக்கு வழிகாட்டியாக இருந்தவர் வால்ட் விட்மன்.

ஆரம்ப காலமாக இருந்ததால் பிச்சமூர்த்தியின் முயற்சி நமக்கும் புதிதாக இருந்தது.

இருக்கின்ற கருத்துக்கு மாறானதாக அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக புதுக்கவிதை வளர்ந்தது. உலகப் போருக்குப் பிறகு வெறுப்பு விரக்தியைக் காட்டுவதாக இருந்தது.

இந்த உணர்வுகளை எழுத்து பத்திரிகையில் எழுதியவர்கள் அப்படியே இறக்கி வைத்தார்கள். அதுதான் தவறாகப் போய்விட்டது. ஏனென்றால் ஐரோப்பியர்களின் பாதிப்புகள் வேறு. அவர்கள் அளவுக்கு நாம் பாதிக்கப்படாத நிலையில் அந்த உணர்வுகளைக் காட்டுவது பொருத்தம் இல்லையே.

அதனால் 'எழுத்து' ஏட்டின் முயற்சிகள் தனித்து வேரூன்ற முடியாமல் போய்விட்டது. ஆனால் மறுபடி (தமிழக) வானம்பாடி காலத்தில் வசன கவிதை உருவம் அதிகமாக வர ஆரம்பித்தது. ஏனென்றால் அவர்களுக்குப் புதுக்கவிதைபற்றி அதிகமாகத் தெரியாது. வானம்பாடி குழுவில் இருந்த எல்லா கவிஞர்களுக்கும் சேர்த்துதான் கூறுகிறேன். இப்போது ஓரிருவர் புதுக்கவிதை எழுதுகிறார்களே தவிர தொடக்க காலத்தில் வசன கவிதைதான் எழுதினார்கள்.

ராஜ: அப்படி என்றால் புதுக்கவிதைக்கு சுமார் 150 ஆண்டுகால வரலாறு இருக்கிறது. புதுக்கவிதை என்றவுடன் தமிழில் உருவான காலத்தை மட்டும் வைத்துக் கொண்டு பேசக் கூடாது... இல்லையா?

ரகுமான்: ஆமாம். நாவல் என்றால் அப்படித்தானே பேசுகிறோம்.

*ராஜ:* இத்தனை ஆண்டுகால அனுபவத்தை வைத்து புதுக்கவிதைக்கு இலக்கணம் ஏதும் வகுக்க முடியுமா? அந்த மாதிரி யான முயற்சிகள் நடந்துள்ளதா?

*ரகுமான்:* முடியும். 'எழுத்து' காலத்தில் இருந்தே அத்தகைய முயற்சிகள் நடந்துள்ளன. ஆனால் திட்டவட்டமாக வரையறுத்து பெரிய புத்தகமாக வரவில்லை.

*ராஜ:* புதுக்கவிதை என்ற பெயர் எப்படி வந்தது?

*ரகுமான்:* வரலாற்று ரீதியில் பார்த்தால் முதன் முதலில் பிரெஞ்சில் தோன்றியபோது புதுக்கவிதை என்று பெயர் வைக்கப் படவில்லை. எஸ்ரா பவுண்ட் போன்றவர்களின் காலத்தில்தான் நியூவெர்ஸ் என்ற பெயர் உருவாகியது. அதுதான் பின்னால் புதுக் கவிதையாக பெயராகிவிட்டது. தமிழில் இது புதிதாக இருக்கிறது. மரபுக்கு மாறாக இருக்கிறது என்பதால் க.நா.சுப்ரமணியம்தான் புதுக்கவிதை என்று சொல்ல ஆரம்பித்தார். ஆனால் பல பேர் பல பெயர்கள் வைத்தார்கள் அதெல்லாம் நிலைக்கவில்லை.

*ராஜ:* புதுக்கவிதை என்ற பெயர் இன்னும் 500 ஆண்டு கழித்தும் தொடர்ந்து இருக்க முடியுமா?

*ரகுமான்:* இருக்கும்... சிறுவயதில் பாப்பா என்று பெயர் வைத்து அழைத்துவிட்டால் பின்னால் எவ்வளவு பெரியவளாக வளர்ந்தாலும் பாப்பா தானே, அது மாதிரிதான்.

*ராஜ:* பாரதி, பாரதிதாசன் போன்றவர்கள் கவிதை உலகில் பெரும் சாதனை புரிந்திருக்கிறார்கள். புதுக்கவிதை தமிழகத்தில் தலையெடுத்து 25 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. புதிய முயற்சி என்ற வகையில் பெரும் வரவேற்பையும் பரபரப்பையும் பெற்றுவிட்ட போதிலும் பாரதி, பாரதிதாசன் அள்வுக்கு அல்லது மற்றமொழிகளுடன் போட்டியிடும் அளவுக்கு காவியமோ, சாதனையோ ஏற்பட்டுள்ளது என்று நினைக்கிறீர்களா?

*ரகுமான்:* பாரதியும் பாரதிதாசனும் பெயர் பிரபலமானதற்கு அவர்களுடைய கவிதைகள் மட்டுமே காரணம் அல்ல. இரண்டு பேரின் காலத்திலும் மக்கள் உணர்ச்சிபூர்வமாக ஈடுபடுகின்ற பெரும் இயக்கங்கள் நடைபெற்றன. பாரதியார் காலத்தில் சுதந்திரப் போராட்டமும் பாரதிதாசன் காலத்தில் திராவிட இயக்கமும் நடைபெற்றன. அவர்கள் தங்கள் படைப்பாற்றலுடன் மக்களின்

போராட்டத்தைப் பற்றி எழுதினார்கள். இதுதான் அவர்கள் கவிதை பிரபலமானதற்கு அடிப்படைக் காரணம்.

புதுக்கவிதையின் காலத்தில் அத்தகைய போராட்டம் இல்லை. இருந்திருந்தால் இப்போது எழுதப்படுகிற கவிதை உடனே நாடு முழுதும் பரவும்.

விடுதலையின் விளைவுகளை, சமுதாயத்தை, அரசியலை விமர்சிப்பதுதான் இப்போது புதுக்கவிதை செய்யக்கூடியது. அதை புதுக்கவிஞர்கள் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். பாரதி, பாரதிதாசன் செய்யாமல் விட்டதை அவர்கள் செய்து வருகிறார்கள்.

காவியம் என்று சொன்னீர்கள்.

காவியத்துக்கு எதிரானது புதுக்கவிதை. அவ்வப்போது ஏற்படுகிற உணர்ச்சிக் கொந்தளிப்பைச் செய்வதுதான் புதுக்கவிதை. உட்கார்ந்து பெரும் காவியம் எழுதுவதே செயற்கைதான். இது காவியக்காலம் அல்ல. அமைதியாக உட்கார்ந்து காவியம் படிக்கிற மனநிலை உள்ள சமுதாயம் இது இல்லை.

காவியம் உருவாவதற்கு இப்போது வாய்ப்பே இல்லை. புதுக்கவிதையின் இயல்பே இதற்கு எதிரானது. சிலர் முயற்சி செய்து வருகிறார்கள். குறுங் காவியம் படைக்க முயன்று வருகிறார்கள். ஆனால் புதுக்கவிதையின் அடிப்படைத் தத்துவத்துக்கு அது எதிரானது.

ராஜ: இப்போது தமிழகத்தில் உள்ள புதுக் கவிஞர்களைப்பற்றி எதுவும் சொல்ல முடியுமா?

ரகுமான்: சமகாலத்து கவிஞர்கள் பற்றி கருத்துரைப்பது அவ்வளவு சரியல்ல. ஆனால் எனக்கென்று ஒரு கருத்து இருக்கிறது அல்லவா?

என்னைப் பொறுத்தவரையில் கவிதையில் அதிக நுட்பம் இருக்க வேண்டும் என்று கவனம் செலுத்துவேன். புதுக்கவிதை என்று தீவிரமாக யோசித்து எழுதுபவர்கள் என்று சொல்வது என்றால் மூன்று பேரைத்தான் சொல்லலாம். அபி, தர்மு சிவராமன், ஞானக் கூத்தன். புதுக்கவிதை என்ற முறையில் செறிவாகப் படைப்பவர்கள் இவர்கள்தான். இதில் என்னையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மற்றவர்கள் எல்லாம் வசன கவிதைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். சிற்பி, மீரா, புவியரசு, மேத்தா, காமராசன், இவர்களுடைய கவிதைகளில் சில புதுக்கவிதையாக அமைந்திருக்கும். ஆனால் பொதுவாகப் பார்க்கும் போது வசன கவிதை பாணியில் எழுதுகிறார்கள்.

*ராஜ:* வைரமுத்துவுக்கு இதில் எந்த இடத்தைக் கொடுக்கலாம்?

*ரகுமான்:* வசன கவிதை எழுதுபவர்களின் பட்டியலில் மிகவும் லேட்டாக வந்து சேர்ந்தவர் வைரமுத்து. சினிமாவில் இடம் பெற்றதால் அவர் பெயர் பரவி விட்டது. இலக்கியத்துறை மட்டும் என்று எடுத்துக்கொண்டால் இந்த பாணியில் நிறையப் பேர் ஏற்கெனவே எழுதிவிட்டார்கள்.

*ராஜ:* வைரமுத்துவின் சொல்லாற்றல், கையாளும் முறை வித்தியாசமாக இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

*ரகுமான்:* இல்லை. எல்லாம் புதுக்கவிதையாளர் செய்ததுதான்

*ராஜ:* புதுக்கவிதைக்கு இசை அமைக்க முடியுமா?

*ரகுமான்:* இசைக்கே மாறானது அல்லவா? எதையும் சாராமல் தனியாக சுதந்திரமாக நிற்கவேண்டும் என்பதற்காகத்தானே ஃபிரீவெர்ஸ் என்று வைத்தார்கள்.

*ராஜ:* நீங்கள் மீரா போன்றவர்கள் திரைப்பட உலகத்தில் ஈடுபாடு காட்டாதது ஏன்?

*ரகுமான்:* திரைபடத்தில் நுழைய வேண்டும் என்று சிலருக்கு நோக்கம் உண்டு. எனக்கும் மீராவுக்கும் அந்த எண்ணம் இல்லை. கண்ணதாசன் பட உலகுக்கு வருவதற்கு முன்பே எனக்கு வாய்ப்பு வந்தது.

தை பிறந்தால் வழி பிறக்கும் படத்தைத் தயாரித்த ஏ.கே.வேலன் அந்த வாய்ப்பை அளித்தார். மறைமலை அடிகள் வில்லுப்பாட்டு என்று ஒன்று போட்டோம். நான்தான் எழுதினேன். பாட்டைப் பார்த்துவிட்டு சென்னைக்கு என்னை வரச் சொன்னார். ஆனால் சினிமா மோகம் எனக்கு இருக்கவில்லை.

△

நன்றி: தமிழ்ஓசை
26-2-84.

# புரட்சிக் கவிஞன் லாங்ஸ்டன் ஹியூஸ்

**என். கலைதாசன்**

வெள்ளை முதலாளியின் சொல்லொண்ணாக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவன் அமெரிக்க நீக்ரோ. அவன்பாடு பெரிது; பெற்ற கூலி சிறிது. எதிர்த்துப் பேசினால் சவுக்கடி. இட்ட பணியிலிருந்து தப்பி ஓட முயற்சித்தால் சவுக்கடி. வெள்ளையனுக்கு ஒதுங்காமல் வீதியில் நடந்தால் சவுக்கடி. இந்த அநீதியை, அக்கிரமத்தை எதிர்த்துக் குரல் கொடுக்க அன்றைய நீக்ரோவுக்குத் துணிவில்லை. ஆனால் மாற்றானைப் போல் தானும் மனிதனாக வாழ வேண்டும், வெள்ளையனைப் போல் முதல்தரக் குடிமகனாக, சுதந்திரக் குடிமகனாக, அமெரிக்க மண்ணில் நடமாடவேண்டும் என்ற உள்ளுணர்வு அவனிடம் ஓங்கியிருந்தது.

நீக்ரோ மக்களின் இந்த உணர்வுக்கு உருக்கொடுத்து அதை வெளிப்படுத்திய பெருமை கார்வே, புக்கர் டி. வாஷிங்டன், டுபாஸ் போன்ற நீக்ரோ அறிஞர்களைச் சாரும். அந்த வரிசையில் இடம்பெற்றவன் லாங்ஸ்டன் ஹியூஸ். அமெரிக்க இலக்கிய வானில் சுடர்விட்டு எரியும் விண்மீன் லாங்ஸ்டன் ஹியூஸ் . நீக்ரோக்களின் கலாச்சாரத்தை உருவாக்கிய பேரறிஞன். தன் கவிதையால், கதையால் அமெரிக்க நீக்ரோக்கள் அன்றாட வாழ்க்கையில் எதிர் கொள்ளுகின்ற துயரங்களை ஆவேசத்தோடு எழுதினான். சிந்துகின்ற இரத்தத்தில், வியர்வையில் நீக்ரோ மக்கள் வாழ்க்கை கரைந்து கொண்டிருக்கின்ற இழிவை, நீக்ரோமக்களின் இதயத்துடிப்பைப் படம் பிடித்துக் காட்டினான்.

ஹார்லெம் -- இது அமெரிக்காவில் கருப்பர்களின் குடியிருப்பு. நீக்ரோக்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட புண்ணியபூமி. இங்கு நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலவு போல அவதரித்த லாங்ஸ்டன் ஹியூஸ், அடிமைத்தளையால் கட்டுண்டு வீழ்ந்து கிடந்த அமெரிக்க

நீக்ரோக்களின் உள்ளத்தில் வெறி ஏற்றிக் காட்டாற்று வெள்ளமாய்க் கவிதைகள் பாடினான். கருப்பென்றால் அழகென்றும், கருமையில் தான் வலிமையெனறும் பாமாலை புனைந்தான். அநீதியைத் தன் கவிதையில் சாடினான். அவலங்களைப் பாடினான்.

லாங்ஸ்டன் ஹியூஸ் போர்க் குணம் படைத்தவன். பேனா முனையில் போராடும் சொல்லேர் உழவன். அமெரிக்க நீக்ரோக்கள் அனுபவித்த சமூக அநீதியை, பொருளாதார ஏற்றத் தாழ்வைத் தன் கவிதைகளில் சித்தரித்தான். அமெரிக்கரின் இன விரோதக் கோட்பாட்டை மிகக் கடுமையாகச் சாடினான். கருப்பர்களின் தனித் தன்மையை, கலாச்சாரத்தை, இன உணர்வைப் போற்றுகிறான். நீக்ரோ மக்களது உள்ளத்தில் மறைந்து கிடக்கும் கலைஉணர்வை, ஆற்றலை அவர்களே உணரும்படி செய்தான். பசியை அறிந்தவன் பாதுகாப்பை அறியாதவன். கொடுமையை அனுபவித்தவன் நீக்ரோ மக்களுக்கு வெள்ளை முதலாளி இழைத்த கொடுமையை கருப்பர் அனுபவித்த இழிவை, அவர்களது சமூகப் பொருளாதாரத் தாழ் நிலையை உணர்ந்தவன். அந்நிய மண்ணில் அநீதியைப் பொறுத்துக் கொண்டு பகைச் சூழ்நிலையில் வாழ்ந்த நீக்ரோ மக்களது மன உறுதியைப் பாடினான். மக்களின் வறுமையை, அச்ச உணர்வை, காவலர் இழைத்த அடக்கு முறையை, துயரத்தின் காரணமாக உடலை விற்க முன்வந்த நீக்ரோ மகளிரின் இழிநிலையைப் பாடினான்.

தன் கவிதையால் நீக்ரோக்களின் இரத்த நாளங்களில் சூடு ஏற்றினான். ஒளி பொருந்திய தாயகமாம் ஆப்ரிக்க நாட்டிற்குத் தப்பிச் செல்ல இயலாது, அமெரிக்க நகரங்களில் கைதிபோல் அடைபட்டு உணர்ச்சியற்ற மரக் கட்டையாய் உழைத்து உருக்குலைந்த நீக்ரோ மக்களை எண்ணி இதயம் குமுறினான்.

வெள்ளையன் வீட்டிலே உணவைப் பரிமாறியபின் தன் இனத்தவர் கொல்லைப்புறம் சென்று குந்திக் கிடக்கும் நிலைமை மாறி, வெள்ளையனோடு ஒரே இருக்கையில் அமர்ந்து உணவு உண்ணும் நாள் வெகு தூரத்தில் இல்லை என உணர்ந்தான். வெள்ளையன் தன் போக்கை மாற்றிக் கொள்ளாதவரை, அவனது வன்முறையை வன்முறையால் எதிர்த்து நில் என்றான். தன் இனத்தைப் பாடிய கவிஞன், உலக உழைப்பாளியைப் பாடும் வர்க்கக் கவிஞனாக மாறினான். உழைக்கும் வர்க்கத்தைப் பாடினான். உலகத் தொழிலாளர்கள் ஒன்று படுக என பாடினான்

தன் இனத்தவர் மீது வெள்ளையன் அதிகாரம் செலுத்துவதை அடியோடு வெறுத்தான். வெள்ளையன் மீது தனக்குள்ள வெறுப்பை வெளிப்படையாக எழுதினான். நிறத்தின் காரணமாக திரைப்பட அரங்கிற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவன் பட்ட தொல்லையும், துயரமும் இனவெறிக் கோட்பாட்டைச் சுட்டெரிக்கும் எரிமலையாக வெடித்தது.

நான் ஒரு நீக்ரோ.

காரிருளின் கருமை நிறம் படைத்தவன்
காரிருள் கண்டமாம் ஆப்ரிக்கா நிறத்தினன்.

நான் ஒரு அடிமை.

சீசரின் வீட்டு வாயிலைச் சுத்தம் செய்கின்றேன்.
செல்வக் கோமான் வாஷிங்டனின் காலனியைத்
துடைக்கிறேன்.

நான் ஒரு தொழிலாளி.

பிரமிட் எழுந்தது என் கரத்தால்
பிரமாண்டமான கட்டிடங்கள் எழுந்தது
நான் சுமந்த சாந்துக் கலவையால்.

நான் ஒரு பாடகன்.

துயருற்ற என் இனத்தவர் துன்பத்தைத்
துன்பியல் பாடலாகப் பாடினேன்.

நான் ஒரு பழிவாங்கப் பட்டவன்.

காங்கோகாரன் என் கரங்களை வெட்டிவிட்டான்
பெல்ஜியக் காரன் என்னை மிச்சிகள் ஆற்றில் மூழ்கடிக்கச்
செய்தான்.

உழைக்கும் வர்க்கமாம் கருப்பர் இனத்தைச் சுரண்டி வாழ்பவன் வெள்ளை முதலாளி. நீக்ரோ மனிதனாக நடத்தப் படுவதில்லை. மாட்டு மந்தையென நடத்தப் படுகின்றான். உழுது பயிரிட்டு உழைப்பவன் நீக்ரோ. ஆனால் அறுவடைக் காலத்தில் விளைச்சல் வெள்ளையன் கையில்.

இதோ, ஒரு நீக்ரோக்கள் கூட்டம்
மந்தையென வயலுக்குள் விரட்டப் படுகிறது

பருத்தியை விளைவிக்கப் பாடுபடுகின்றனர்
உழுகின்றனர், விதைக்கின்றனர்,அறுவடையும்செய்கின்றனர்
பருத்தி முதிர்ந்ததும் பணி முடிகிறது
முதலாளி வந்து மொத்தத்தை எடுத்ததும்
எங்களுக்குரியது ஏதும் இல்லையே!

பல்லாண்டு கடந்தாலும்
பட்டினியில் தள்ளப்பட்டு
பரிதவிக்கும் நாங்கள்
பருத்தியை விளைவிக்க
வயலுக்குள் விரட்டப்பட்ட
நீக்ரோக்கள் கூட்டம்.

பதை பதைக்கும் வெயிலில் பருத்தியை விளைவித்துப் பஞ்சப் பராரியாய் பட்டினியில் வாடும் ஏழை நீக்ரோக்களின் நிலையறிந்து கண்ணீர் சிந்துகின்றான் ஹியூஸ். பகட்டான பட்டாடை அணியும் முதலாளி ஒரு பக்கம். ஒரு முழத் துணியில்லாமல் கையது கொண்டு மெய்யது போர்த்திக் கண்ணீர் விடும் ஏழைகள் ஒரு பக்கம். ஹியூஸின் நெஞ்சு விம்மி வெடித்ததால் வேதனைக் கவிதை பிறக்கிறது.

ஏழை மக்களைச் சுரண்டுகின்ற பணக்கார வர்க்கத்தை ஒரு கை பார்க்கின்றான் கவிஞன். பணமுதலையைப் பார்த்துக் கொக்கரிக்கின்றான் கவிஞன்.

உறுதியாக, நீ யாரென எனக்குத் தெரியும்
நீ, ஒரு வெள்ளையன்
நான், ஒரு நீக்ரோ
நீ நல்ல பணிகளை உனக்கென்று எடுத்துக்கொண்டாய்
குப்பைத் தொட்டியை, சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்யும்
நாற்றமெடுக்கும் பணிகளை எங்களுக்குக் கொடுத்துள்ளாய்
நீ கடற்கரை மாளிகையில்
உல்லாச வாழ்க்கை நடத்துகிறாய்
எங்களுக்குச் சேரியில், சந்துபொந்துகளில்
குடியிருப்புக் கொடுத்துள்ளாய்.
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
உன்னுடைய பெயர்
மு...த....லா....ளி....யா?
ஹா! நீ என்றுமே வெள்ளையன் தானா?

நீக்ரோக்களின் வறுமையை எண்ணி இதயம் துடிக்கிறான் கவிஞன். இந்தப் பஞ்சைகள் மீது நமக்குப் பரிதாபம் ஏற்படுகின்றது.

*கொப்பரையைப் பார்க்கின்றேன். காலியாக இருக்கிறது.*
*ரொட்டிப் பெட்டியைப் பார்க்கின்றேன். காலியாக இருக்கிறது*
*அங்கே ஒட்டிக் கொண்டிருக்கின்ற ஈயைத்தவிர வேறொன்று மில்லை*
*உலை வைக்கலாம். ஆனால் அடுப்பெரிக்க விறகு இல்லை*
*சுற்றிலும் பார்க்கின்றேன்*
*துணிப்பெட்டி இருந்த இடம் காலியாக இருக்கிறது*
*துணி தொங்கும் கயிறு வெறுமனே இருக்கிறது.*

காலை முதல் பாடுபட்டுக் கதிர் அறுத்துக் கஞ்சியின்றி வாடுவோரைப் பாடுகின்றான் ஹியூஸ். இரவு வருகிறது. வயிறு காய்கின்றது. வறுமைத் தீயில் குளிர்காய்கின்றான் ஏழை நீக்ரோ,

குடும்பமே வறுமையில் வாடுகின்றது. ஆனால் அரசு வாளா விருக்கின்றது. மக்கள் கண்ணீரை அரசு துடைக்கவில்லை.

*கஞ்சித் தொட்டி காலி*
*தட்டுமுட்டுச் சாமான்களில்லை*
*அப்பா, இங்கே என்ன விஷயம்?*
*ரூஸ்வெல்டிற்காகக் காத்திருக்கிறோம், மகனே*
*ரூஸ்வெல்டிற்காகக் காத்திருக்கிறோம்.*

*வீட்டு வாடகை கொடுக்கவில்லை*
*மின் விளக்கு எரியவில்லை*
*அம்மா, இது என்னம்மா?*
*ரூஸ்வெல்டிற்காகக் காத்திருக்கிறோம், மகனே*
*ரூஸ்வெல்டிற்காகக் காத்திருக்கிறோம்.*

*தங்கைக்குக் காய்ச்சல்*
*டாக்டர் வரமாட்டார்*
*அவருக்குப் பணம் கொடுக்க*
*எங்களால் இயலாது*
*அப்பா அம்மா காத்திருக்கின்றனர்*
*ரூஸ்வெல்டிற்காகக் காத்திருக்கின்றனர்*
*ரூஸ்வெல்டிற்காகக் காத்திருக்கின்றனர்.*

ஒரு நாள்
வீட்டை விட்டு வெளியேற்றப் பட்டோம்
குளிர் காற்று அடிக்கின்றது
போவதற்கு இடமில்லை
பொங்கி எழுந்தார் அப்பா.
பொறுக்கமுடியாது ரூஸ்வெல்ட்
பொறுக்கமுடியாது ரூஸ்வெல்ட்

வேலை கிடைக்கவில்லை
எலும்புத் துண்டு கிடைக்கவில்லை
மக்களெல்லாம் பட்டினியால்
ரூஸ்வெல்ட்
உன் வார்த்தையை நம்ப முடியாது
நீ என்ன சொல்கிறாய்?

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவனைப் பார்த்து, வேலை கொடு, சோறு கொடு என்று கூறுவது போல் இருக்கிறது. அரசாங்கத்தின் அலட்சியப் போக்கைக் கண்டனம் செய்யும் ஹியூஸின் கம்பீரமான குரலை இங்கு கேட்கின்றோம்.

சட்டத்தின் முன் அனைவரும் ஒன்று என்ற சமநீதி நீக்ரோ மக்களுக்கு மறுக்கப்படுகின்றது. ஒரு குற்றமும் செய்யாத அப்பாவி நீக்ரோ மக்களை அடித்துச் சித்ரவதை செய்யும் போலீஸ் கொடுமையைக் கவிஞன் கடுமையாக விமர்சிக்கின்றான்.

சுற்றிலும் பார்க்கின்றேன்
சட்டத்தின் பாதுகாவலன்
அதோ, வருகின்றான்.
என்னை நோக்கி வருகின்றான்
அடித்துக் கொல்லுவான் என்னை.
ஆண்டவனே, அந்த மனிதனிடமிருந்து
என்னைக் காப்பாற்று,
என்னை அவன் சட்டினியாக்க விடாமல்.
என்னைப் பாதுகாக்க ஆண்டவன் ஓடிவரவில்லை.
சட்டத்தின் பாதுகாவலன் என்னை
நையப் புடைக்கின்றான்.
எனக்கு ஒன்றும் புரியவில்லை
போலீஸின் மிருகத்தனத்திலிருந்து
என்னை ஏன் ஆண்டவன் காப்பாற்றவில்லை?

நான் ஏழை, நான் நீக்ரோ
எதிர்த்து அடிக்க எனக்கு ஆயுதமில்லை.

போலீஸ்காரனிடமிருந்து தப்பிவாழ ஆண்டவனை வேண்டு கின்றான். அபயக் குரலுக்கு ஆண்டவன் செவிசாய்க்கவில்லை. ஆண்டவன் வரமாட்டான். ஏன்? ஆண்டவனும் ஒரு வெள்ளை நிறக் கடவுள்தானே?

ஆண்டவனும் ஒரு சுரண்டும் முதலாளி என்ற எண்ணம் கவிஞனுக்குப் பிறக்கின்றது. பணம் படைத்தோருக்கே ஆண்டவன் உலகத்தைப் படைத்துள்ளான். ஆண்டவன் பாரபட்சமுள்ளவன் என்று ஆண்டவனையே கவிஞன் சாடுகின்றான். பசியால் கண்ணீர் வடித்து ஆண்டவனை வேண்டும் குழந்தையைப் பார்த்து ஆண்டவனே கூறுகின்றார்.

பசியோடிருக்கும் குழந்தையே
உனக்காக இந்த உலகத்தை நான் படைக்கவில்லை.
ரயில் ரோடு கம்பெனியில் நீ சேர் வாங்கவில்லை
கார்பொரேஷனில் நீ முதலீடு செய்யவில்லை
ஸ்டாண்டர்டு எண்ணெய்க் கம்பெனியில் உனது
பங்கீட்டு மூலதனம் எங்கே?
நான் உலகத்தைப் படைத்தது
இன்றைய பணக்காரர்களுக்கும்
நாளைய பணக்காரர்களுக்கும்
உனக்காக அல்ல
பசியால் வாடும் குழந்தையே!

நீக்ரோ மக்களை துன்பத்திலிருந்து கிருத்துவினால் மீட்க இயலாது. கிறிஸ்துவ பாதிரிமார்கள் புளுகர்கள், பொய்யர்கள்.

கிறிஸ்துவ மதத்தின் கோட்பாடுகள் காற்றிலே பறக்கின்றன. ஏசு கிறிஸ்து மறுபடியும் மனிதனாக, நீக்ரோவாக இவ்வுலகில் பிறப்பா ரேயானால் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்ல சிறிதும் அஞ்சாத கிறிஸ்தவர்கள் இன்றைய கிறிஸ்தவர்கள்.

மறுபடியும் உலகில் நீக்ரோவாக
ஏசு பிறப்பது நல்லதல்ல.
அமெரிக்காவில் ஏராளமான தேவாலயங்கள்
அங்கெல்லாம் ஏசுபிரான் பிரார்த்தனை செய்ய இயலாது.
இறையுணர்வு மிக்க நீக்ரோக்கள் கூட

அந்தத் தேவாலயங்களுக்குச் செல்ல அனுமதி மறுப்பு.
அங்கெல்லாம் போற்றப்படுவது கிறிஸ்துவம் அல்ல
வெள்ளை இனம்.
இப்படிச் சொல்.
ஏசுவே, நீ அங்கு சிலுவையில் அறைந்து
கொல்லப்படுவாய்.

ஏசுபிரான் வகுத்த வழியிலிருந்து உலகம் விலகிச் சென்று விட்டது. நிறவெறிக் கோட்பாட்டின் மூலம் கிறிஸ்துவ மதத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் போலிப் பாதிரிகள் இன்று தேவாலயங்களில் கோலோச்சுகின்றனர்.

வறுமையை, நிறவெறியை உலகத்திலிருந்து விரட்ட கிறிஸ்துவ மதம் தவறிவிட்டது. அவர் வாழ்ந்த காலத்தில் ஏசுபிரான் அற்புதங்கள் நிகழ்த்தி இருப்பார். அது உண்மை. ஆனால் இறை உணர்வு அற்ற இன்றைய சமுதாயத்தில், வியாபார நோக்கம் கொண்டு இயங்கும் இன்றைய சமுதாயத்தில் மறுபடியும் அற்புதங்கள் நடத்த ஏசுவினால் இயலாது. இந்த உலகத்தைவிட்டு ''போ'' ''போ'' என்று ஏசுவைப் பார்த்துக் கவிஞன் கூறுகிறான்:

ஏசுவே, நீ என் வார்த்தைக்குச் செவிமடுப்பாயாக.
நீ வாழ்ந்த நாட்களில் அற்புதங்கள் செய்தாய்.
நான் கணக்கிடுகிறேன்.
ஆனால் அந்த நாள் இன்று போய்விட்டது.
அவர்கள் உன்னைப்பற்றிக் கதை ஜோடித்து
அதற்கு பைபிள் என்று பெயரிட்டனர்.
அந்த பைபிள் இன்று செத்துவிட்டது.
போப்பாண்டவர்களும் போதர்களும்
பெரும் பணம் சம்பாதித்துவிட்டனர்.
மன்னர்களுக்கும், தளபதிகட்கும்
கொள்ளையருக்கும், கொலைகாரர்கட்கும்
உன்னை விற்றுவிட்டனர்.
உன்னை அடகு வைத்து விட்டனர்.
போய்விடு.
ஏசுவே, கிறிஸ்துவே, தேவனே, தெய்வமே, ஜிகோவாவே
இங்கிருந்து இப்பொழுதே போய்விடு
வழிவிடு, மதச்சார்பற்ற புதிய நண்பனுக்கு வழிவிடு
அந்தப் புதிய நண்பன் பெயர்

மார்க்ஸ், கம்யூனிஸ்ட், லெனின், விவசாயி,
ஸ்டாலின், தொழிலாளி, நான்

.....................................

தேவனே, முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இராதே
நீ செல்லும் பொழுது தயவு கூர்ந்து
தூயோன் காந்தியை, தூயோன் போப்பாலை
அழைத்துச் சென்றுவிடு.

பண வெறிபிடித்த இந்த உலகத்தில் பொறுமைக்கு, கருணைக்கு, அறநெறிக்கு இடமில்லை. ஆதலின் அஹிம்சாமூர்த்தி காந்தியையும், கருணாமூர்த்தி போப்பாலையும் அழைத்துச் சென்றுவிடு. வர்க்கப் புரட்சி தான் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வினை உடைத்தெறியும். உழைக்கும் வர்க்கத்தின் விடிவெள்ளி மார்க்ஸ். நாளைய உலகம் உழைப்போர் உலகம்.

மக்கள் புரட்சிதான் சமுதாயத்தில் மாற்றத்தை மறுமலர்ச்சியை உருவாக்க இயலும் என்ற எண்ணங் கொண்டவன் ஹியூஸ். மக்கள் சக்தி ஒன்று திரண்டு உருவானால்தான் புரட்சி வெடிக்கும். பொது உடைமைச் சமுதாயம் மலரும். மக்கள் சக்தியைக் கவிஞன் வரவேற்கின்றான்:

அச்சமற்ற மக்கள் சக்தியே
வருக!
இரும்பு, எஃகு, தங்கச் சுரங்கத்தில்
ஏகபோக உரிமை கொண்டாடும்
இந்த மனிதனுக்கு எதிராக
உன் கரங்களை உயர்த்திடு.
ஆயிரம் ஆண்டுகளாக
உன்னை அடிமையாக விலைக்கு வாங்கி விற்பனை செய்யும்
இந்த மனிதனுக்கு எதிராக
உன் கரங்களை உயர்த்திடு.
அச்சமற்ற மக்கள் சக்தியே
வருக!
அவன் அங்கங்களை நொறுக்கி தவிடு பொடியாக்கு
அவன் குரல்வளையைக் கிழித்தெறி
இன்றே
இந்த ஆண்டே
அவன் வாழ்க்கைக்கு ஒரு முடிவுகட்டு.

கொள்ளைலாபம் அடிக்கும் முதலாளியைப் பார்த்துக் கொக்கரிக்கின்றான் கவிஞன். அவன் எழுத்தில் கோபக் கனல் வீசுகின்றது. குண்டாந்தடிகள் தாக்கிய போதும் குண்டுகள் நெஞ்சைப் பிளந்தபோதும் அஞ்சாத மக்கள்சாதி மக்கள் சக்தி. மக்களின் புரட்சி மூலம் தான் இன்றைய சமுதாயத்தில் நிலவுகின்ற சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகட்கு சாவுமணி அடிக்க இயலும் என்ற உறுதியான எண்ணம் படைத்தவன் ஹியூஸ். புரட்சியை வரவேற்கின்றான்.

புரட்சியே! காலை வணக்கம்
என்னுடைய நண்பர்களில்
நீதான் மிக உயர்ந்தவன்
...........................
புரட்சியே, சிறிது செவி கொடு
நாங்கள் ஒன்று பட்டவர்கள்
அனைத்தும் எங்களுக்குச் சொந்தமே
தொழிற்கூடங்கள், வெடிமருந்துப் பட்டறைகள், வீடுகள்,
கப்பல்கள்,
புகை வண்டிப்பாதைகள்,
காடுகள், கழனிகள், கனி உதிர்ச் சோலைகள்
எல்லாம் உழைப்பவர் உடைமையே.

△

# ஏழு கவிதைகள்

## ஆறு கவிஞர்கள்

### நெருங்குவது

நெருங்காதிருப்பதன் விளைவு
நெருங்கியிருக்கிறோம் என்று
நினைப்பது

ஒரொரு சமயம்
பின்வாசல் வழி
கற்பனை வந்து
உண்மையைச் சொல்லிப்
போகும்
நாம் நெருங்கியதில்லை
அவரவர் இருப்பில்
அவரவர் இருக்க
நெருங்குவதெப்படி?
இருப்பை நீத்து நெருங்குவ
தென்றால்
அவரவர் என்பதில்லாமல்
யார் யார் நெருங்கியது?

நெருங்கியவர் இல்லாது
நெருக்கம் என்ன,

நாம் நெருங்கியதில்லை

-அபி.

△

### சொல்லாதிருத்தலும் எளிது

சொல்வதற்கென்று ஒன்று
சொல்லும் போது கமழும்

சில நாள் கழித்து --
தெருவில் போவோரைப்
பரட்டையாய் வழிமறிக்கும்

பனியிரவில்
ஊர்நெடுகப் புலம்பி உறங்கும்

எப்பொழுதும்
எதன் ஓரத்திலும் நின்று
ஒட்டுக் கேட்கும்.

கூர்ந்து விழும்
பார்வைகளை நழுவி
திடுக்கிட
இல்லாததாகும்
இருத்தலின் நிறைவு என

பேசப்படுவதில் சிக்காமல்
பின்னல்களைப் போட்டு
விட்டுப் போகும்

சொல்வதற்கென்று ஒன்று
சொல்லுதல் யார்க்கும் எளிது
சொல்லாதிருத்தலும் எளிது

-அபி

△

## மிச்சம்

உறவுக்கு வர்ணங்கள்
பூச முயன்றேன் - பின்பு
ஒன்றுமே செய்யாமல்
விட்டு விட்டேன்

நினைவுகளைத் தரம் பிரிக்கச்
சித்தங் கொண்டேன் - அதில்
தெளிவொன்றும்
தோன்றாமல்
செய்கை மறந்தேன்

விழிப்பிற்கும் துயிலுக்கும்
இடையில் நொந்தேன் - வரும்
உறக்கத்தில் நானும் சில
கனவுகள் நெய்தேன்
கனவுகள் அறுந்து விழக்
கண்கள் விழித்தேன்
காலத்தின் எரிச்சல் மட்டும்
கண்ணில் மிச்சம்.

- தி. சந்தானம்

△

## நட்சத்திரங்களைக் காணலை

கடற்கரை மணலில்
உன்மடி மீது
தலைவைத்துப்
படுத்திருந்த போது,
என் கண்களில் தெரிந்தது,
வானம் அல்ல,
எதிர் காலம்.

உன் மயக்கும் கண்களும்
சிரிக்கும் இதழ்களும்
விளைத்த கனவுகள்
எங்கோ போயின.

என்னை உன்னிடத்தில்
பிடித்துத் தள்ளிய
மாயக் கவர்ச்சி
மறைந்து போனது

காதலோடு
களிப்புற்று வாழ
வேலை முக்கியம்
சோறும்.

உன்மடி மீது
தலைவைத்துப்
படுத்திருந்தபோது,
என் கண்களில் தெரிந்தது,
வானம் தான்.

நட்சத்திரங்களைத் தான்
காணலை.

புதிய ஜீவா.

△

## கவிதை - 'தரிசனம்'

நிற்காதே
நட
நீண்ட வரிசை
பின்னால் நிற்கிறது.
நட
மூச்சு முட்டினால்
பரவாயில்லை
வரிசையில் விலகாதே
புல்லுருவிகள்
ஊடுருவுவார்கள்.
முக்கியமானவர்கள்
பின்னே நிற்கிறார்கள்.
நட.

முன் நபரை
மிதிப்பது தவறல்ல
கால்பட்டதாக
நினைத்துக் கொள்வார்
நட.

வெயில்
கால்வலி
வியர்வை நாற்றம்
தும்மலில் விழும் எச்சில்
எதுவும் பொருட்டல்ல

பெண்களும் குழந்தைகளும்
கடைசியில் நிற்கிறார்கள்.
நட.

நடந்துகொண்டே தரிசி.
-விக்கிரகம்
இல்லை
-கடைக்கண்பார்வை
இல்லையில்லை
-மூலஸ்தானம்
வேண்டாம்
எதையுமே பார்க்க
வேண்டாம்
நட.
வரிசையில்
நின்றாலே போதும்
தரிசித்ததாய்த்தான்
அர்த்தம்.

இதையெல்லாம் விட
அடிவாரத்தில் - உன்
கால் கழுவிவிட
ஆட்கள் நிற்கிறார்கள்
நட நட.

-பிரக்ஞைராதாகிருஷ்ணன்

△

## சின்னக் குழந்தை

சின்னக் குழந்தை - நீ
சின்னக் குழந்தை
ஒருகையில் டப்பாவும்
ஒருகையில் ரொட்டியும்
வைத்திருக்கும் நீ
சின்னக் குழந்தை - நீ
சின்னக் குழந்தை.

உனக்குத்தேவை டப்பாதான்
எனக்குத் தெரியும்
உனக்குத்தேவை டப்பாதான்
ரொட்டியை வைத்துவிடு
டப்பாவை தட்டு.

'டம்டம்'
சப்தம் வருகிறதா
சிரி.... சிரி.
நீ சிரிப்பாய்
எனக்குத் தெரியும்
நீ சிரிப்பாய்.

சின்னக்குழந்தை - நீ
சின்னக்குழந்தை.

நான் பெரியவன்
உன்னைவிடப் பெரியவன்.
உனக்குத் தெரியும்
நான் பெரியவன் --
சின்னக் குழந்தை - நீ
சின்னக்குழந்தை.

அங்குமிங்கும் பார்க்காதே
மீண்டும் டப்பாவைத் தட்டு
'டம்டம் டம்டம்'
சத்தம் வருகிறதல்லவா
சிரி...சிரி.

என்ன ....?
ரொட்டியைப் பார்க்கிறாயா..?
அதைக் க்காக்காய் கொண்டு
போய்விட்டது.

அழாதே.
அழாதே.
டப்பாவைத் தட்டு
டம்டம் டம்டம்
சிரி .... சிரி.
சிரிப்பாய் --நீ சிரிப்பாய்
எனக்குத் தெரியும்.
நீ சிரிப்பாய்.

சின்னக் குழந்தை -- நீ
சின்னக்குழந்தை.

-ம. காமுத்துரை.

△

## ஃபிப்ரவரி '30

அன்று காலை
எனக்கு
ஆச்சரியமாய்
விடிந்தது

ஆபீஸ் போகிற
அவசரமின்றி
பஸ்ஸைப் பிடிக்கிற
பரபரப்பின்றி..
☆

அந்நாளில்
அநேக ஆச்சரியங்கள்--
சண்டைக்கு வராத
மனைவி,

அழாத குழந்தை,
குறை சொல்லாத
வீட்டுப் பெரியவர்,
முன்னால் விரட்டாத
கண்டக்டர்,
எரிந்து விழாத
மேனேஜர்,
முகஞ் சுளிக்காத
நான்!
☆

வானம்

மேற்கே விடிந்த
அந்த நாளில்,

மக்களெல்லாரும்
உதடுகளாலன்றி
மனங்களால்
உரையாடினார்கள்.
துப்பாக்கிகள்
விரல்களாலேயே
சுட்டுத் தள்ளப்பட்டன.
☆

அதிசயமாய் அன்று
எங்கள்
அரசியல்வாதிகளுக்குத்
தொண்டை
கட்டிக்கொண்டது

சினிமாத் தியேட்டர்
மூட்டைப் பூச்சிகள்
உண்ணாவிரதமிருந்தன
கல்லூரி மாணவர்கள்
காதலிக்காமல்
கல்லெறியாமல்
கையை உயர்த்திக்
குரல் கொடுக்காமல்
ஆசிரியருக்குப் பணிந்து
வகுப்புக்குள் போனார்கள்.
☆

அதியற்புதமான
அன்றைக்குத் தான்
எங்கள்
பத்திரிகைகளில்
கவிதைகளே இல்லை.
வெள்ளைச் சுவர்களில்
'நோட்டீஸ் ஒட்டுங்கள்'
விளம்பரங்கள்
அன்று தான்
தங்கள் சரக்குகள்
மட்டமானவை என
ஒத்துக் கொண்டன.

ரேடியோவில்
வானிலை அறிக்கைப்படி
மழை பெய்தது
☆

பசியும்
பயமும்
நோயும்
கவலையும்
அகராதிக்குள்
அடங்கிப் போயின

நீதி மன்றங்கள்
வெறிச் சோடிக்
கிடந்தன

கோவில்களில்
சிலைகளுக்குப் பதிலாக
மனிதர்கள்
குடியேறியதும்
அன்றைக்குத்தான்.

பிரம்மன்.

△